T-UN-366

# தமிழ் நாடகக் கலைமணிகள்



சட்டாம்பிள்ளை வெங்கட்ராமன்

T-UN-366

# தமிழ் நாடகக் கலைமணிகள்

ஆசிரியர் : சட்டாம்பிள்ளை வெங்கட்ராமன்

தொகுப்பாசிரியர் : அறந்தைமணியன்

தமிழ்நாடு இயல்இசை நாடக மன்றத்தின் நிதி உதவி பெற்று
வெளியிடப்பட்டது.

© உரிமை ஆசிரியருக்கே

வெளியிட்டோர் : விஜயலட்சுமி பப்ளிஷர்ஸ்
10, நைனியப்பன் தெரு
சோமு முதலி காலனி
சென்னை - 600 028

அச்சிட்டோர் : 'ரெக்ஸ் பிரிண்டர்ஸ்'
மயிலாப்பூர், சென்னை-600 004

விலை : ரூபாய். 33/-

Copies can be had from :
VIJAYALAKSHMI PUBLISHERS
10, Nainiappan Street,
Somu Mudali Colony,
Madras - 600 028

## உள்ளே......................


| | | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | வாழ்த்துரை | .. |
| 2. | தொகுப்புரை | .. 1 |
| 3. | ஆசிரியர் முன்னுரை | .. 5 |
| 4. | சமஸ்கிருத நாடகங்கள் | .. 17 |
| 5. | தமிழ் நாடகக் கலை | .. 26 |
| | —கலைமணிகள்— | |
| 6. | தமிழக முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர் அவர்கள் | .. 35 |
| 7. | தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் | .. 41 |
| 8. | ஏகை சிவசண்முகம் பிள்ளை | .. 45 |
| 9. | 'தசாவதாரம்'—சி. கன்னையா | .. 51 |
| 10. | பம்மல் சம்பந்த முதலியார் | .. 57 |
| 11. | பாலாமணி அம்மையார் | .. 63 |
| 12. | எஸ்.ஜி. கிட்டப்பா | .. 69 |
| 13. | காதர்பாட்சா | .. 73 |
| 14. | எஸ்.எஸ். விஸ்வநாததாஸ் | .. 77 |
| 15. | கலைவாணர் என்.எஸ்.கே.—டி.ஏ. மதுரம் | .. 83 |
| 16. | எம்.எஸ். முத்துகிருஷ்ணன் | .. 89 |
| 17. | கே. சாரங்கபாணி | .. 95 |
| 18. | கே.ஆர். ராமசாமி | .. 97 |
| 19. | எஸ்.வி. சுப்பையா | .. 103 |
| 20. | சி.வி.வி. பந்துலு | .. 134 |
| 21. | எம்.கே. தியாகராஜ பாகவதர் | .. 134 |
| 22. | கே.பி. சுந்தராம்பாள் | .. 135 |
| 23. | எஸ்.வி. சகஸ்ரநாமம் | .. 137 |

| | | | பக்கம் எண் |
|---|---|---|---|
| 24. | தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலர் | .. | 140 |
| 25. | ''வைரம்'' அருணுசலம் செட்டியார் | .. | 141 |
| 26. | கே.பி. கேசவன் | .. | 144 |
| 27. | காளி என். ரத்தினம் | .. | 145 |
| 28. | டி.கே.எஸ். சகோதரர்கள் | .. | 147 |
| 29. | கே.எஸ். அனந்தநாராயணன் | .. | 149 |
| 30. | சந்திரபாபு | .. | 153 |
| 31. | ஆர். முத்துராமன் | .. | 159 |
| 32. | டணுல் தங்கவேலு | .. | 163 |
| 33. | இணைப்பு — I | .. | 177 |
| 34. | இணைப்பு — II | .. | 184 |
| 35. | முடிவுரை | .. | 187 |
| 36. | BIBLIOGRAPHY | .. | 192 |

❀❀❀❀

## காணிக்கை

**தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் மாண்புமிகு டாக்டர் திரு எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்களுக்கு இந்நூல் காணிக்கை**



# வாழ்த்துரை

## பாரதி கலைஞன் எஸ். வி. சகஸ்ரநாமம்

1936 லிருந்து 1981 வரை, முதலில் சிறுவர் குழுக்களிலும் பிறகு அன்று நடந்து வந்த தனி நாடகங்களிலும் பங்கு கொண்டு வந்தவர் கலைஞர் சட்டாம்பிள்ளை வெங்கட்ராமன். அவர் தனது அனுபவங்களில், சந்தித்துள்ள நாடகக் கலைஞர் களைப் பற்றிய வரலாற்றை, தனக்குத் தெரிந்த அளவில், ''சபாநாயகன்'' என்ற நாடகத் துறைக்குத் தொண்டாற்றி வந்த பத்திரிகை வாயிலாக தொடர்ச்சியாக எழுதிக்கொண்டு வந்தார்.

இதன் மூலமாக ஓரளவு அன்று நடந்து வந்துள்ள நாடகங்கள் பற்றியும், காலத்துக்கேற்றபடி கலையுலகில் ஏற்பட்டுள்ள மாறுதல்களையும் விவரமாக எழுதியிருக்கிறார்.

பல தனிப்பட்ட நாடகக்கலைஞர்கள் அவர்களுடன் கதா நாயகிகளாகப் பங்கேற்று நடித்துள்ளவர்கள், நகைச்சுவை பாத்திரங்களில் நடித்த பிரபல கலைஞர்கள் பற்றியும், தவிர, இவர்களுக்கு பின்னணியில் முக்யமான இசைக்கருவியான ஆர்மோன்யம், பின்பாட்டும், மிருதங்கம், தபலா, டோலக் வாசித்துள்ளவர்கள் பற்றியும் சட்டாம்பிள்ளை எழுதியுள்ள கலை வரலாறு இதன் மூலம் நாம் அறிய முடிகிறது.

இம்மாதிரிப்பட்ட கலைஞர்களின் வாழ்க்கையோடு ஒன்றாக இணைந்து நெருங்கிப் பழகியவர்களுக்குத்தான் இம் மாதிரிப்பட்டவர்களின் வாழ்க்கையையும், கலை வரலாறுகளைப் பற்றியும் நாம் உண்மையான விபரங்களை அறிய முடியுமே தவிர, மற்றும் ஏதாவது அவர்களைத் தெரிந்தவர்கள் என்றோ, அவர்கள் நாடகங்களைக் கண்டு களித்திருக்கிறோமென்று சொல்லிக்கொண்டு சிலர் இவர்கள் கலை வரலாறுகளைப் பற்றிக் கூறிய எழுத்துக்களோ, மேடையில் பேசப்படும் பேச்சுக் களாலோ, பேசுபவர்கள், எழுதுபவர்கள் கற்பனையாகக் கூறியவற்றைத்தான் கேட்கவும் படிக்கவும் இயலும்.

வெங்கட்ராமனைப் பொருத்த வரையில் மேலே கூறப் பட்ட கலைஞர்களோடு தானும் பங்கேற்று நடித்தும் நெருங்கிப் பழகியதால் அவர்களின் பழக்க வழக்கங்களையும்

நன்ருக உணர்ந்து ரஸித்துள்ளவர். ஆகவே இவர் கூறும் வரலாற்றில் உண்மை நிச்சயமாக இருக்கிறது என்பதில் எனக்குச் சிறிதும் ஐயப்பாடில்லை.

இதன் மூலம் இன்றுள்ள பல கலைஞர்களுக்கு நாடக வரலாறு எப்படியெல்லாம் மாறுதலடைந்து வளர்ச்சி பெற்றது என்பது பற்றியும் அதன் தேக்கநிலை பற்றிய உண்மை வரலாறுகளையும் அறிந்து கொள்ள உதவிகரமாயிருக்கும் என்ற எண்ணத்தில் இவற்றையெல்லாம் தொடுத்து நூல் வடிவமாக உருவாக்கியுள்ளார்.

என்னைப் பொறுத்த வரையில் நிரந்தர குழுக்கள் பற்றித் தான் ஓரளவு தெரிந்து கொண்டிருக்கிறேனே தவிர, தனிப்பட்ட நாடக அனுபவங்கள், அந்தக் கலைஞர்களைப் பற்றிய வரலாறுகளையும் நான் அறிந்தவனில்லை. இந்த நூலின் மூலம் அதையும் அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டியது.

இப்படிப்பட்ட கலைஞர்கள் வரலாற்றை எழுதி நூல் வடிவமாக அளித்துள்ள சட்டாம்பிள்ளை வெங்கட்ராமனை நான் மனதாரப் பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!

❋❋❋❋

# தொகுப்புரை

"நாடகமே உலகம், மாந்தரெல்லாம் நடிகர்கள்..." என்ருன் ஆங்கில நாடக ஆசிரியன் வில்லியம் ஷேக்ஸ்பியர்!

நடிப்பு என்பது நாம் தாயின் கருவிலிருந்து வெளிவந்த உடனேயே தொடங்கிவிடுகிறது.! முகம் பார்த்துச் சிரிக்கும் குழந்தை, நிலாவைப் பிடிக்கத் துடிக்கும் ஆவல், சாய்ந் தாடம்மா, கைவீசம்மா என்று பாடும் தாயின் குரலுக்குக் குதியாட்டம் போடுவது, கண்ணுமூச்சி விளையாடுவது வரை எல்லாமே நாடகம்தான்!

பள்ளிச் சிறுவர்கள் ''அப்பா-அம்மா'' விளையாட்டு விளையாடுவது, பள்ளி விழாக்களில் பலர் காண நடிப்பது, பின்னர் வளர்ந்ததும் கல்லூரியிலும், வெளியிலும் தொழில் முறையல்லாத நாடகங்களில் நடிப்பது, என்று, இந்த 'பால பாடம்' தொடர்கிறது!

பலர் தொழில் முறை நடிகர்களாக நாடகமேடைக்குப் போக இன்று தயங்கிறுலும் 'அமெச்சூர்' நடிகர்களாகவாவது நடித்துப் புகழ் பெறவேண்டுமென இத்துறைக்கு வரத்தயா ராக இருப்பதிலிருந்தே, நாடகத்திற்கு என்றுமே அழி வில்லையென்பதை நாம் உணரமுடியும்.

எத்தனையோ திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ் ச்சிகள், வீடியோ காசெட்டுகள் என்று அறிவியல் முன் னேற்றத்தின் காரணமாக பொழுதுபோக்கு அம்சங்கள் ஏராளமாக வளர்ந்திருக்கும் இந்நாளிலும், அமெரிக்க நாட்டில் நியூயார்க் நகரில் உள்ள 'பிராட்வே' என்ற வீதி யில் நிரவி நிற்கும் ஏராளமான நாடக அரங்குகளில் இன்றும் தினசரி கூட்டம் குறையாத காட்சிகளாக நாடகங்கள் நடத் தப்பட்டுத்தான் வருகின்றன! சோவியத் நாட்டிலும் அவ் வாறே, ஜப்பானிலும்தான்!

இன்னும் சொல்லப்போனுல், திரைப்படம் கண்டு பிடிக்கப்பட்டு பிரபலமான ஆரம்பநாட்களில், நாடக நடிகர் கள் - அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் - திரைப்படங் களில் நடிப்பதைக் கேவலமாக எண்ணி மறுத்து வந்ததாக சரித்திரம் கூறுகிறது.

(பின்னுல், மௌனப்பட சகாப்தம் முடிவுற்று பேசும் படங்கள் வர ஆரம்பித்தபோது, உலகெங்கும் நாடக நடிகர்கள்தான் திரையுலகை முழுதுமாக ஆக்கிரமித்துக் கொண்டனர்).

இயலும், இசையும் சேர்ந்ததுதான் நாடகம். பரத முனி எழுதிய ''நாட்டிய சாஸ்திரம்'' என்ற நூல்கூட ''நாட்டியம்'' என்று குறிப்பிடுவது ''நாட்டிய நாடகம்'' தான்! நடனத்தை ''நிருத்தியம்'' என்று குறிப்பிடுகிறது இந்த நூல்.

எப்படி அந்நாளைய இலக்கியங்கள், கவிதை வடிவில் இருந்தனவோ, அப்படியே அந்நாளைய நாடகங்கள், நாட்டிய நாடகங்களாகத்தான் இருந்திருக்கின்றன! சமஸ்கிருத நாடகங்கள் எல்லாமே அனேகமாக காவிய நடையில் தான் இருந்திருக்கின்றன. அனேகமாக சென்ற நூற்ருண்டுவரை இந்த நிலைதான்! நாடகங்களில், எந்த மொழியைச் சேர்ந்தவையாக இருந்தாலும், உரையாடல்கள் பேச்சு நடையில் அறிமுகப்படுத்தப்பட்டது சமீபகாலங்களில்தான் நடந்திருக்க வேண்டும்!

தமிழில் உரைநடையில் நாடகங்கள் எழுதப்பட்டது சென்ற நூற்ருண்டின் இறுதியிலும், இந்த நூற்ருண்டின் ஆரம்ப ஆண்டுகளிலும்தான். ''மனேன்மணியம்'' எழுதிய சுந்தரம் பிள்ளையுடன் ஆரம்பித்த இந்தப் பாரம்பரியம், பரிதிமாற் கலைஞர், ஏகை சிவசண்முகம் பிள்ளை, எம்.எஸ். முத்துக்கிருஷ்ணன், சங்கரதாஸ் சுவாமிகள், மதுரபாஸ்கர தாஸ், பம்மல் சம்மந்த முதலியார் என்று வளர்ந்து இன்றைய அமெச்சூர் நாடக எழுத்தாளர் வரை வளர்ந்திருக்கிறது.

அதேபோல், நடிகர்கள் என்று எடுத்துக் கொண்டால் இந்த நூற்ருண்டின் ஆரம்பகட்டத்திலிருந்து, நூற்றுக் கணக்கான நடிக, நடிகையர், தமிழ் நாடகங்களில் 'ஒலி பெருக்கி' யில்லாத, மின் விளக்குகள் இல்லாத மேடைகளில் உரக்கப்பாடி நடித்து இக்கலை வளர உதவியிருக்கின்றனர். முழுக்க முழுக்க ஆண்களே நடிக்கும் குழுக்களும், பெண்கள் மட்டும் நடிக்கும் குழுக்களும், பையன்கள் மட்டுமே நடிக்கும் 'பாய்ஸ்' நாடகக் குழுக்களும், நடிக நடிகையர் சேர்ந்து நடிக்கும் 'ஸ்பெஷல்' நாடகக் குழுக்களும் இயங்கி வந்திருக்கின்றன. இவர்கள் அத்தனை பேருமே தொழில்

முறை நாடக, நடிகையர்தான் 1930 வரை! அதற்குப் பிறகுதான் பம்மல் சம்மந்த முதலியார், எஃப். ஜி. நடேச ஐயர், வி,சி. கோபால ரத்தினம் போன்ற பெரும்பணியில் இருந்து கொண்டே பொழுதுபோக்காக மேடையில் நடித்து வந்த 'அமெச்சூர்' நடிகர்களும் புகழ்பெற ஆரம்பித்தனர்.

1931 ஆம் ஆண்டு தமிழில் 'பேசும் படங்கள்' வெளி வரத் தொடங்கியதும், அன்றையப் பிரபல மேடை நடிக, நடிகையர் திரைப்படங்களிலும் நடித்துப் புகழ் பெற்றனர்.

இத்தகைய பாரம்பரியத்தில் வந்தவர்தான் திரு. காரைக்குடி நடேசன் வெங்கட்ராமன். ''தூக்குத்தூக்கி'' படத்தில் 'சட்டாம்பிள்ளை' என்ற பாத்திரமேற்றுப் புகழ் பெற்றதால் ''சட்டாம்பிள்ளை வெங்கட்ராமன்'' என்றால் தான் இன்று அவரை எல்லோருக்கும் தெரியும்! தமது பத்தா வது வயதிலிருந்து மேடை நாடகங்களில் நடிக்கத் தொடங்கி, பின், 'சதிமுரளி' என்ற படத்திலிருந்து திரையுலகிலும் பிரவேசித்து, இன்றுவரை பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட முறை மேடையிலும், கிட்டத்தட்ட தொண்ணூறு படங் களிலும் நடித்து அனுபவ முதிர்ச்சி பெற்றவர் திரு. 'சட்டாம்பிள்ளை'!

தமது இந்த ஐம்பத்திரண்டு ஆண்டுகட்கும் மேற்பட்ட கலை உலகத் தொடர்பில், எண்ணற்ற நாடக ஆசிரியர் களிடம் பயிற்சிபெற்று, அவர்களின் பல நாடகங்களில் நடித்து, நூற்றுக்கணக்கான நடிக, நடிகையருடன் பழகி, தாம் சேகரித்த வரலாறுகளையும். வாழ்க்கைச் சம்பவங் களையும் தமது அபார நினைவாற்றலின் காரணமாக, பசு மரத்தாணி போல மனத்தில் பதிய வைத்துக்கொண்டிருப் பவர்! இந்த நினைவுகளையும், வாழ்க்கைக் குறிப்புக்களையும் வரலாற்று உண்மைகளையும், 1982-83 ஆம் ஆண்டுகளில் இரண்டு ஏடுகளில் தொடர் கட்டுரைகளாக எழுதி வந்தார்.

''சபாநாயகன்'' மாத இதழில் ''1936 முதல் 1981 வரை கலைஉலகம்'' என்ற தலைப்பிலும் ''மலர்ந்த ரோஜா' நாளிதழில் ''நெஞ்சின் அலைகள்' என்ற தலைப்பிலும் வெளி வந்த அக்கட்டுரைகளை நான் தொடர்ந்து படித்துவந்தேன். அவற்றில் புதைந்து கிடந்த பல அரிய செய்திகளை ஒரு நூல் வடிவாக வெளியிட்டால், வருங்கால சந்ததியினருக் கும், எதிர்கால கலையுலக வரலாற்றாசிரியர்களுக்கும் மிகவும் உதவிகரமாக இருக்கும் என்ற கருத்தை நான் வெளியிட் டேன்.

அப்படி ஒரு நூல் வெளியிட 'நீங்களே ஏன் உதவக் கூடாது?'' என்று என்னையே திருப்பிக்கேட்ட திரு. 'சட்டாம் பிள்ளை' அவர்கள் அக்கட்டுரைகளை ஒரே நூல் வடிவாகத் தொகுக்கும் இந்த அரிய பணியையும் மனமுவந்து என்னிடமே அளித்தார். அதன் விளைவே இந்த நூல்!

இந்நூலில் முதலில் பல பொதுவான வரலாற்று உண்மைகளும், தமிழ் மற்றும் சமஸ்கிருத நாடகங்களின் தோற்றமும் வளர்ச்சியும் விவரிக்கப்படுகின்றன. தொடர்ந்து தமிழ் நாடக மற்றும் திரையுலகில் பிரகாசித்த பல கலையுலகக் கண்மணிகளை, அவர்களுடன் தமக்கிருந்த தொடர்புகளை விவரித்திருக்கிருர் திரு. 'சட்டாம்பிள்ளை'.

இந்த அரிய முயற்சிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் நிதி உதவி செய்ய முன்வந்த தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கும், அதன் நிர்வாகிகளுக்கும் ஆசிரியர் சார்பிலும், என் சார்பிலும் இருகரம் கூப்பி நன்றி கூறுகிறேன்.

தொகுக்கும் பெருமையை தேடியளித்த ஆசிரியருக்கு இன்னெரு முறை நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்

''தமிழ் நாடகக் கலைமணிகள்'' எனும் இந்நூல், மூத்த தலைமுறையினருக்கு மகிழ்வையும், இளைய தலைமுறையினர் கலையுலக முன்னேர்களைப் பற்றி பல அரிய செய்திகளை அறிந்து கொள்ளும் வாய்ப்பையும், எதிர்கால ஆய்வாளருக்கு உதவியையும் நல்கும் என நான் நம்புகிறேன்.

சென்னை

**அறந்தை மணியன்**
(தொகுப்பாசிரியர்)

# ஆசிரியர் முன்னுரை

அடியேன் 1925ம் ஆண்டு காரைக்குடியில் பிறந்து 1934 முதல் 1935 வரை திரு.சுந்தரபாகவதர் அவர்களிடம் சங்கீதம் பயின்றேன். 1935 ஏப்ரல் மாதம் அடியேனின் கலைப் பிரவேசம் நிகழ்ந்தது.

சிறுவயல் என்ற கிராமம் இராமனுதபுரம் மாவட்டத்தில் உள்ளது. அங்கு பல தலைமுறையாக நடந்து கொண்டு வரும் மஞ்சவிரட்டு அதாவது காளை மாட்டுக்கு வெள்ளி மணி கட்டி அதைத் திறந்து விடுவார்கள். அந்த மாட்டைப் பிடித்து நிறுத்தி அதன் மணியையும் ஒரு வேட்டியையும் எடுத்துக் கொள்ளலாம். ஆனுல் அந்த மாடுகள் திமிர் பிடித்த மாடுகள். பிடிப்பது என்பது உயிருக்கே ஆபத்து. அதை தைரியசாலிகள் பிடித்து நிறுத்துவார்கள். அதற்குப் பெயர்தான் மஞ்சவிரட்டு. அன்றுதான் அந்த கிராமத்தில் பல ஆயிரம் பேர்கள் கூடுவார்கள்.

அன்று அந்த ஊரில் ''பவளக்கொடி'' ஸ்பெஷல் நாடகம் நடந்தது. நான் நன்ருக பாடுவேன். அதை வைத்து என்னை அந்த நாடகத்தில் புலந்திரன் வேடம் போட்டு அரங்கேற்றம் செய்தார் திரு எம்.கே. தியாகராஜ பாகவதர் அவர்கள். அவருடைய நல்ல மனசு அன்று ஒரு பட்டு வேட்டியும் ஒரு பட்டு துண்டும் சில ஆபரணங்களும் அவரே போட்டு விட்டு மேடையில் ஏற்றி விட்டார்கள். எனக்கு நல்ல பெயர்.

ஸ்பெஷல் நாடகம் என்ருல் அடிக்கடி ஒத்திகை பார்க்கும் நாடகம் இல்லை. மதுரையில் இருந்து அர்ச்சுனன் வருவான். கோவையில் இருந்து கிருஷ்ணன் வருவான். திருச்சியில் இருந்து அல்லி வருவாள். வாத்தியக்காரர்கள் பல ஊர்களில் இருந்து வருவார்கள். ஒத்திகை இல்லாமல் நாடகம் நல்லவிதமாக நடந்து முடியும். இப்போது நடக்கும் நாடகங்கள் 100 நாள் நடித்திருப்பார்கள். ஆனுல் நாடகத்து அன்றும் கூட ஒத்திகை பார்க்கிருர்கள். ஸ்பெஷல் நாடகத்தில் திடீரென்று பல கேள்விகள் கேட்பார்கள். அதற்கு பதில் சொல்ல வேண்டும்.

உதாரணமாக பபூன் வேடம் போடும் சங்கர ஐயர் அவர்கள் சொன்ன வசனம் ''1000 யானை; 1000 ஒட்டகம் பூர்ணகும்பத்துடன் 10,000 வீரர்களுடன் கிருஷ்ணனை வர வேற்க கோட்டை வாயிலில் காத்துக் கொண்டு இருக்கிறார் கள்.'' என்றார். நாடகம் முடிந்து ஜனங்கள் இருந்த இடத்திலிருந்து எழுந்திருக்கவில்லை. திரு. கிளவுன்சுந்தரம் மேடைக்கு வந்து, ''நாடகம் முடிந்துவிட்டது, போய் வாருங்கள்'' என்று சொன்னார். ஆனால் ஜனங்கள் ஒரே குரலில் ''1000 யானைகளையும், 1000 ஒட்டகங்களையும், 10,000 வீரர்களையும் காட்டினால்தான் எழுந்திருப்போம்'' என்று அடம் பிடித்து எழுந்திருக்க மறுத்தார்கள். பிறகு திரு.சுந்தரம் அவர்கள், ''வசனம்தான் பேசினேமே தவிர எல்லாம் காட்ட இயலாது'' என்று ஜனங்கள் மத்தியில் சொல்லி சில காமெடி பாட்டுகளை பாடி மகிழ்வித்தார். ஒரு குரல் வந்தது. ''தேசிய பாட்டு ஒன்று பாடு'' என்று. உடனே அவர் பஞ்சாப் படுகொலை பற்றிப் பாட நாடகம் இனிதே முடிந்தது.

புதுக் கோட்டையில் இதே பவளக்கொடி நாடகம் நடந் தது. என்னை திரு.எஸ்.வி.சுப்பையா பாகவதர், எம்.கே.டி. இருவரும் வாழ்த்தினார்கள்.

அதன் பிறகு திரு. ராமையா அவர்கள் உதவியுடன் பல தலைமுறையாக நாடகக் கலையை வளர்த்து தற்சமயமும் வளர்த்துக் கொண்டு இருக்கிற மதுரை நகரை வந்து அடைந்தேன். காக்கா தோப்புத் தெருவில் ஒரு அறையில் வசித்துக் கொண்டு இருந்த நேரத்தில் ராஜபார்ட் திரு. நாகராஜ பாகவதர் அவர்களிடம் நாடகக் கலையும் சங்கீதமும் பயின்றேன். ஸ்ரீவள்ளி, சத்தியவான் சாவித்திரி, கோவலன், தூக்குதூக்கி, சீமந்தனி, ஹரிச்சந்திரா, நந்தனார் போன்ற தவத்திரு சுவாமி சங்கரதாஸ் நாடகங்களை சொல்லிக் கொடுத்து அவர் என்னை மேடை ஏற்றினார். அப்போது மாமேதைகளாகிய பி.எஸ். கோவிந்தன், சி.எஸ். ஜெய ராமன், எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி, வி.ஏ. செல்லப்பா, டபிள்யூ. எஸ். ராமநாதன், எஸ். எஸ். மணி பாகவதர், டி. ஆர். மகாலிங்கம், பபூன் சண்முகம், கண்ணாடி ராஜு, ஸ்ரீராமுலு, ஏ. எஸ். ராஜம்மாள், கே. கே. பார்வதி, என்.எம்.சுந்தரி, பி.எஸ். சிவபாக்கியம், பி.ஆர். மங்களம் காதர் பாட்ஷா, எஸ்.வி. வாசுதேவ நாயர் போன்றவர்கள் ஸ்பெஷல் நாடக உலகில் கொடி கட்டிப் பறந்த நேரத்தில் நானும் இவர்களுடன் நடித்துக் கொண்டு வந்தேன்.

ஒரு சமயம் 'சத்தியவான் சாவித்திரி' நாடகம் சிங்கா நல்லூரில் நடந்தது. அதில் சத்தியவானக திரு. முத்துச்சாமி அவர்கள் நடித்தார். நான் நாரதராக நடித்தேன். அந்த நாடகத்தில் டோப் ராமசாமி பிள்ளை எமனுக நடித்தார்கள். நான் சிறு பையன் ஆனதால் அவரிடம் சென்று ''அண்ணு! நான் சின்னவன். ஏதாவது தப்பு செய்தால் சரி செய்து கொள்ளுங்கள்'' என்று வேண்டிக் கொண்டேன். அவர் சரி என்று சொல்லிவிடவே நான் 'எண்ட்ரன்ஸ்' பாட்டு ஒன்று ராமாயணத்தில் உள்ளதை பாடி வந்தேன். அதை வைத்து எமன் வேடம் போட்டவர், ''நாரதா! இது எந்த நாடகத்தில் உள்ளது. இதை சத்தியவான் சாவித்திரியில் பாடுகிருய்'' என்று என்னைப் பேசி மடக்கினர். நான் பதில் சொல்ல ஆரம்பித்தேன்:

''எமதர்மா! ஒவ்வொரு பாட்டுக்கும் விளக்கம் சொல்லிக் கொண்டு போனுல் சத்தியவானின் உயிரை பாசக்கயிற்றினல் பிடித்துக்கொண்டு போகிற வரைதான் நாடகம் நடைபெறும். பிறகு சத்தியவான் சாவித்திரி நாடகத்தின் மங்களமான முடிவு பார்க்க முடியாது''! என்று நான் பதில் சொல்லி, ''எமதர்மராஜனே! தாங்கள் முதன் முதலாக விண்டலமும் மண்டலமும் என்ற பாட்டை பாடினீர்களே! அது ஜனங்களுக்கு புரிந்ததா என்று கேட்டு விட்டு வருகிறேன்.'' என்று சொல்லி, நான் மேடையில் இருந்தவாறு ஜனங்களைப் பார்த்து 'எமதர்மராஜன் முதன் முதல் விண்டலமும் மண்டலமும்' என்ற பாட்டு பாடினுரே அது உங்களுக்கு வார்த்தைகள் புரியும்படி பாடினுரா?'' என்று கேள்வி கேட்டேன். ஜனங்களின் மத்தியில் இருந்து வந்த பதில், ''புரியவில்லை! புரியவில்லை! எமதர்மா, போ உள்ளே'' என்ற குரல்கள் நீண்ட நேரம் ஒலித்துக்கொண்டு இருந்தன. எமதர்மனும் உள்ளே சென்று விட்டார். முன் படுதா விடப்பட்டது. ''நாரதா! ஒரு பாட்டுப் பாடு'' என்று ஜனங்கள் சத்தம் போட்டார்கள். 4 கட்டை ஸ்ருதியில் ''சம்போ மஹா தேவா'' என்ற பாட்டை ஸ்வரம் போட்டு பாடி ஜனங்களிடம் கைதட்டலைப்பெற்றுக் கொண்டு உள்ளே வந்துவிட்டேன்.

திரு.டோப் ராமசாமிபிள்ளை மீண்டும் மேடைக்கு வரமுடியாதபடி சூழ்நிலை உருவாகிவிட்டது, ஜனங்களின் மத்தியில்! அந்த நாடகத்தில் விதுஷகனுக திரு. எம்.ஆர். சந்தானம் அவர்கள் நடித்தார். (அதாவது, 'பன்னீர் புஷ்பங்கள்' என்ற படத்தின் இயக்குனர்களாகிய 'பாரதிவாசு'

அதில் பாரதியின் தகப்பனுர்தான் இந்த எம்.ஆர்.சந்தானம் அவர்கள்.) பாசமலர் என்ற படத்தை எடுத்து வெளியிட்ட வர். அவரிடம், ராமசமி பிள்ளே போய், ''இந்த பையன் என்னே மேடைக்குப் போக விடாமல் ஜனங்களே குழப்பி விட்டான்.'' என்ருர்! திரு. எம்.ஆர். சந்தானம் சொன்னுர்; நீர் அவனே மேடையில் கேள்விகள் கேட்டு திக்கு முக்காட வைத்தீர்! அவன் ஜனங்களிடம் போய் சொல்லி உம்மை மேடைக்கு வர விடாமல் செய்து விட்டான். அவன்தான் உம்மிடம் வந்து, 'நான் சின்னப் பையன். மேலும் சத்திய வான் சாவித்திரி பாடம் சரியாக பண்ணவில்லே. கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக் கொள்ளுங்கள்'' என்று சொன்னுனே!' அதை மதிக்காமல் நீர் நடந்து கொண்டீர்கள். அவன் உம்மை வாரி விட்டான். சரி!சரி! மேடையில் போய் அவனே மிஞ்சி பாட்டுக்களேப் ஃபிற்கா போட்டு பாடும்'' என்று அவருக்கு யோசனே சொன்னுர். திரு. ராமசாமி பிள்ளேயும் மேடைக்கு வந்து ''பஹதூர் பகவத் சிங்கம்'' என்ற பாட்டை ஃபிற்கா போட்டு பாடினுர். முன் வரிசையில் அமர்ந்திருந்த ஒரு குழந்தை, போட்ட ஃபிற்காவை கேட்டுவீச்சென்று அழ ஆரம்பித்தது. பிள்ளேயின் தகப்பனுர் எழுந்திருந்து, ''ஃபிற்கா போட்டதுபோதும். போடா உள்ளே! பிள்ளே பயப்படுது'' என்ருர். அவருடன் ஜனங்களும் சேர்ந்து கொண்டு, ''உள்ளே போ! உள்ளே போ!'' என்று கத்தி ஞர்கள். எமன் உள்ளே வந்து திரு. சந்தானத்தை பார்த்து ''நீ சொன்னுமாதிரி ஃபிற்கா போட்டு பாடினேன். உள்ளே போ என்று சொல்லிவிட்டான்'' என்ருர். அதற்கு சந்தானம் பதில் சொன்னுர்; ''ஃபிற்கா போட்டு பாடுன்னு சொன்னுல், புள்ளே பயப்படற மாதிரியா ஃபிற்கா போடுவது! போங்காணும்'' என்ருர். அன்று நாடகம் இனிதே முடிந்தது.

காலே வண்டியில் மதுரைக்குப் புறப்பட்டேன். பிறகு ஒரு வாரம் கழித்து திண்டுக்கல்லில் 'ஸ்ரீவள்ளி' நாடகம் நடைபெற்றது. திரு. வி.ஏ. செல்லப்பா—முருகர். டி பி. ராஜலெட்சுமி—வள்ளி, வி.ஏ. செல்லப்பாவின் தம்பி—ஹார் மோனியம், கோடையிடி கோவிந்தன் — தபலா, நான் நாரதராக வேஷம் போட்டேன். நல்ல கூட்டம். திரு. செல்லப்பா அவர்கள் முதல் பாட்டாக ''கிருப காவல நன்னனேமி'' என்ற தியாகராஜ கீர்த்தனேப் பாட்டை பாடி முடிப்பதற்கு 40 நிமிஷம் ஆகிவிட்டது.

கழுகாசலசீனில் நான் முருகனை சந்திக்க வேண்டும். முதல் பாட்டாக ''தாயிரங்காவிடில் சேய் உயிர் வாழுமோ! சகல உயிர்க்கும் தாயல்லவோ! நீ இரங்காவிடில் புகலேது!'' என்ற பாபநாச சிவன் கீர்த்தனையை பாடிக் கொண்டு மேடைக்கு வந்தேன். பிறகு நாரதருக்கும் முருகனுக்கும் தர்க்கம் நடந்தது. அதில் திரு. வி.ஏ. செல்லப்பா அவர்களுடன் நன்ருகப் பாடி கைதட்டல் கிடைத்தது வள்ளியான திருமதி டி.பி. ராஜலட்சுமி அவர்களுக்கும் எனக்கும் தர்க்கப் பாட்டுகள் தொடர்ந்தன.

(பாட்டு)

நாரதர்: வண்டு விழி கண்டு மொழி மாதே நீ வாழ்ந்திருக்கும்
நாடெது சொல் கோதே.

வள்ளி: தென்றலோடுங் கொண்டல் நாடும்பேரு— இந்த
தேசமெங்கும் போற்றுவார் சிற்றூறு.

(இந்த தர்க்கப்பாடல் முடிந்து) 'வேடவர் குல மங்கையே! மங்களம் உண்டாகட்டும்,' என்றேன். ''ஆம் சுவாமி! எந்த குலத்தில் பிறந்தால் என்ன? எங்கு பிறந்தாலென்ன! தங்களுடைய கேள்வி ஜாதிச் சண்டையை மூட்டி விடுவதுபோல் இருக்கிறதே'' என்று வள்ளிநாடகத்தில் இல்லாத வசனத்தை பேசினுள். அந்த வம்புகளுக்கெல்லாம் நான் போகமாட்டேன். ''வள்ளி உனக்கு சின்ன வயது. 16-17 தான் இருக்கும்! நல்ல அழகு! இப்போது தான் பருவமாகியிருக்கிருய்'' என்றேன். ஜனங்கள் சிரித்து கைதட்டி விட்டார்கள். காரணம் திருமதி டி.பி. ராஜலக்ஷ்மி அம்மாளின் வயது 40 இருக்கலாம். ஆகையால் சிரித்து விட்டார்கள். பிறகு திருமதி டி.ஆர்.பி. அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார்கள். ''நாரதரே! ஆம்பலும் பாசியும் அடர்ந்த குளத்தின் அருகில் நின்ருல்கூட உள்இருக்கும் ஜலம் கண்களுக்கு தெரியவில்லை, ஏன்? என்ருர்கள்.

நான் சற்று யோசித்து, ''பாசியை அகற்றினுல் ஜலம் தானுகவே தெரியும். அதுபோல மாயை என்னும் பாசியை அகற்றினுல் முருகனை கண்டிப்பாக காணலாம்'' என்றேன். என்னை விடவில்லை அம்மையார் அவர்கள், ''நாரதரே கொலை! களவு! கள்! காமம்! பொய்! என்னும் பஞ்சமா பாதகத்தில் உலகில் தலைவிரித்து ஆடுவது எது?'' என்று ஒரு கேள்வியைப் போட்டார்கள். ''கொலை குற்றத்திற்கு மரண தண்டனையும் ஆயுள் தண்டனையும் காத்துக்

கொண்டு இருக்கும். களவுக்கு ஆறுமாத தண்டனை அல்லது ஒரு வருட தண்டனை! கள்ளுக்கு மருத்துவர் நினைத்தால் அதை நிறுத்தி விடலாம்! காமத்தின் முடிவில் வியாதி பதில் சொல்லும்! ஆனால் பொய் சொல்வதற்குத்தான் தண்டனையே இல்லை. உலகத்தில் பொய்தான் அதிகம் பேசுகிறார்கள். அதுதான் தலைவிரித்து ஆடுகிறது.'' என்று சொன்னேன். நான் சொன்ன விளக்கத்தைக் கேட்ட ஜனங்கள் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள். மீண்டும் பாட ஆரம்பித்தேன். அன்று நாடகம் விறுவிறுப்பாக அமைந்தது.

நாரதர்: பருவ காலத்தை வீணாய் பாழாக்கலாகுமோ? பெண்ணே?

வள்ளி: மருவும் தலைவிதியை மாற்ற யெவராலாகும் முனியே?

தர்க்கப் பாடல் முடிந்து நாடகம் இரவு மூன்று மணிக்கு முடிந்தது. காலை வண்டிக்கு மீண்டும் மதுரை வந்தடைந்தேன். மதுரையை விட்டு மீண்டும் காரைக்குடி வந்து சேர்ந்தேன். என்னை பள்ளியில் சேர்த்து விட்டார்கள். நான்காம் வகுப்பில் பரீட்சையில் நான் தேறவில்லை. பள்ளியில் இருந்து என்னை வீட்டுக்கும் அனுப்பவில்லை. காரணம் பாரதி பாட்டு போட்டியில் அந்த பள்ளியின் சார்பில் நான் கலந்து கொண்டு பாரதியாரின் பாடல்களை பாடினேன்.

இந்தப் போட்டி இராமனாதபுரம் ஜில்லாவுக்காக நடத்தப்பட்டது. அதில் இரண்டாவது பரிசு பெற்றேன். பள்ளிக்கு நல்ல பெயர். ஆகையால் நான் பரீட்சையில் தேறாவிட்டாலும் பள்ளியில் இருந்து விலக்கவில்லை. தக்களி போட்டியில் முதல்வனாக வந்தேன். நடிப்புப் போட்டியில் முதல்வனாக வந்தேன். பள்ளிக்குப் போவதாக சொல்லி விளையாட்டில் அதிக அக்கறை காட்டினேன் காரைக்குடியில் பள்ளியில் படித்த பழைய மாணவர்கள் எல்லோரும் சேர்ந்து காங்கிரஸ் தியாகி திரு. சத்திய மூர்த்தியின் தலைமையில் 'தாசில்தார் பார்ஸ்' நாடகம் நடைபெற்றது. அதில் முக்கிய பாத்திரமாகிய சமையல் சுப்பன் வேஷம் போட்டு நல்ல பெயர் எடுத்தேன். நாடகம் முடிந்து திரு. சத்தியமூர்த்தியிடம் அறிமுகப்படுத்தினார்கள். திரு. சத்தியமூர்த்தி அவர்கள் என்னைக் கூப்பிட்டு ''என்ன படிக்கிறாய்?'' என்று கேட்டார். ''நான் பள்ளிக்குப் போவதில்லை

எனவே படிக்கவில்லை'' என்றேன். மறுகணம் ஒரு அறை விழுந்தது, என் கன்னத்தில்! அதை என் வாழ்க்கையில் மறக்கமுடியாது. 'படித்து விட்டு நடி!' என்று அறிவுரை வழங்கினர். அவர் அன்று சொன்னதை இன்றும் நினைத்துப் பார்க்கிறேன். படிக்கவில்லையே என்று பள்ளிக்கு போவதை நிறுத்திவிட்டேன். ஆனால் பள்ளியில் என்பெயரை அவர்கள் நீக்கவில்லை. 1936 டிசம்பரில் ஒரு நாள் அந்த ஊர் பிரமுகர் திரு. மானகிரி லட்மணசெட்டியாரிடம் கொண்டு போய் என் தகப்பனர் என்னை விட்டுவிட்டார்கள். செட்டியாரும் நானும் சென்னைக்கு புறப்பட்டோம்.! அதே வண்டியில் (இன்றைய டப்பிங் ஆசிரியர்) கே. தேவநாராய ணனும் வந்தார்.

சென்னை வந்து சேர்ந்தோம்; லாயிட்ஸ் ரோட்டில் உள்ள (தற்சமயம் வக்கீல் சேஷாத்திரி வீடு) பங்களாவில் தான் கம்பெனி வீடு. கம்பெனியின் பெயர் ராஜகோபால் டாக்கீஸ்! படத்தின் பெயர் ''கிருஷ்ணன் தூது''. இயக் குனர் திரு. ஆர்.பிரகாஷ். இவரின் தகப்பனர் வெங்கையா இவர்தான் சென்னையில் முதன்முதலில் சினிமா தியேட்டர் கட்டினர். (கெயிட்டி, கிரவுன், ராக்ஸி) திரு. பிரகாஷ் அவர்கள் பேசாத படங்களில் நடித்திருக்கிறர்கள். லண்டன் சென்று சினிமா துறையில் பயிற்சி பெற்று வந்தவர்.

'கிருஷ்ணன் தூது' படத்தில் நடித்த நடிகர்கள், சிறு களத்தூர் சாமா, விசலூர் சுப்பிரமணிய பாகவதர், கொத்த மங்கலம் ராமு, சாண்டோ நடேசபிள்ளை, திருவேங்கடம் குஞ்சிதபாதம்பிள்ளை, தேவநாராயணன், எம்.ஆர். வாசு வாம்பாள், எம்.என்.விஜயா, பசுபலேடி கண்ணும்பா, (தமிழில் இந்த அம்மையாருக்கு 'கிருஷ்ணன் தூது'தான் முதல்படம்) ஓம்பத்திவேல் ருக்மணி, (ஏ.வி.எம். ராஜனின் தாயார்) என்.எஸ். கிருஷ்ணன், டி.எஸ். துரைராஜ். திரு. என்.எஸ்.கே. அவர்கள் தட்சயக்ஞம் என்ற படத்தை முடித்துக்கொண்டு வந்தார்கள். நாங்கள் எல்லாம் கம் பெனி வீட்டில் தங்கியிருந்தோம். ஆனல் திரு. என்.எஸ்.கே அவர்கள் கோபாலபுரத்தில் 17 ரூபாய் வாடகையில் ஒரு அறையில் தங்கி இருந்தார்கள். இவரிடம்தான் என்னை அனுப்பிவைத்தார் திரு. லெட்சுமணன் செட்டியார்.

நான் திரு. என்.எஸ்.கே.யுடன் இருந்து அவருக்கு வேண்டிய பணிகளை செய்து வந்தேன். ''கிருஷ்ணன்தூது'' படத்தில் நடிக்கத்தான் திரு.டி.எஸ்.துரைராஜ் அவர்களை

தந்தி கொடுத்து வரவழைத்தார். அப்போது டி.ஏ.மதுரம் அம்மையாருடன் கல்யாணம் ஆகவில்லை. என்.எஸ்.கே மதுரத்தை கல்யாணம் செய்துகொள்ள ஏற்பாடுகளை திரு. செட்டியார் அவர்கள் செய்தார்கள். செய்த முயற்சி வெற்றி அடைந்தது. கல்யாணமும் நடந்தது. மேளதாளத்துடன் சாப்பாடு, பந்தல்போட்டு வேத மந்திரம் சொல்லி தாலி கட்டி அல்ல. 'கி' என்ற மோதிரத்தை மதுரம் அம்மையார் அணிந்து கொண்டார்கள். 'ம' என்ற மோதிரத்தை திரு.என்.எஸ்.கே அணிந்து கொண்டார்கள்.

ஸ்டுடியோ மோஷன் பிக்சர்ஸ் (பிறகு ஜெமினியாக மாறியது) கேமராமென் சைய்லன்போஸ் அப்போது கமால் கோஷ் உதவியாளராக பணிபுரிந்தார். சவுண்ட் பி.கே. விஸ்வநாத்திடம் அப்போது பூபதி மைக் சிஸ்டம் ஒன்று இருந்தது. பாடலும் படமும் ஒரே நேரத்தில் எடுப்பார்கள் வாத்தியக்காரர்கள் ஒரு டிராலியில் உட்கார்ந்து வாசிப்பார்கள் சூட்டிங் நடக்கும்போது! (இதன் பெயர்தான் பூபதி மைக் சிஸ்டம்).

அப்போது ஒரு தெலுங்கு படமும் எடுக்கப்பட்டு வந்தது. பெயர் : 'மாலபில்லா' ராமபிரம்மம் அதற்கு இயக்குனர்; எங்கள் கம்பெனியின் பின் வீட்டில்தான் கொலம்பியா கம்பெனிக்காரர்கள் திரு. ராஜா சாண்டோ டைரக்ஷனில் ''விஷ்ணுலீலா'' படம் எடுத்துக்கொண்டு இருந்தார்கள். அப்போது மோத்திபாபு என்ற வடநாட்டுக்காரர்தான் இசை அமைப்பாளராக இருந்தார். அவரிடம்தான் ராஜேஸ்வரராவ் பியானோ வாசித்துக் கொண்டு இருந்தார். ஆர்.சுதர்சனம் ஹார்மோனியம் வாசித்தார். இவர்கள் பின் பெரிய இசை அமைப்பாளராக பெயரும் புகழும் எடுத்தார்கள். அப்போதைய இயக்குனர்கள், ராஜா சாண்டோ எச்.எம்.ரெட்டி, ராம பிரும்மம், ராஜாசந்திரசேகர், பிரேம் சேத்னு சி.வி. ராமன் ஆர். பத்மனுபன், நந்தலால்ஷா, ஆர். பிரகாஷ், பி.என்.ராவ், கே.சுப்பிரமணியம், தமிழ்நாடு டாக்கீஸ் சுந்தர்ராஜன், ஒய்.வி.ராவ். இவர்கள் தவிர பல வெற்றிப்படங்களை எடுத்தவர்கள்; ராம்குமார், டி.ஆர் சுந்தரம்: முருகதாஸர், சாச்சி.

இசை அமைப்பாளர்கள்: ஜி.ராமனுதன், சர்மா பிரதர்ஸ், எஸ்.வி.வெங்கட்ராமன், மோத்திபாபு, குன்னக்குடி வெங்கட்ராமய்யர், கே.வி.நாயுடு, தபலா சின்னையா, எம்.டி பார்த்தசாரதி ஆகியோர்.

பாடலாசிரியர்கள்:லட்சுமண்தாஸ், மதுரை கருப்பையா வாத்தியார். சுந்தர வாத்தியார், பாபநாசம் சிவன் ராஜகோபால் அய்யர், நடராஜ ஆச்சாரி, கே.பி. காமாட்சி எம்.ஆர். சாமினதன், உடுமலை நாராயண கவி, கே.டி. சந்தானம், கொத்தமங்கலம் சுப்பு, தஞ்சை இராமையா தாஸ் முதலியோர்.

கதை வசனகர்த்தாக்கள் நாராயண சோமயாசுலு, இளங்கோவன், தஞ்சை லட்சுமி நாராயண பாகவதர், கே.பி காமாட்சி எம்.ஆர்.சுவாமிநாதன், டி.சி.வடிவேலு நாயக்கர் கொத்தமங்கலம் சுப்பு, தஞ்சை இராமையாதாஸ், என்.எஸ். கே. காளி என். ரத்தினம், பி.எஸ். ராமையா போன்றவர்கள்.

அப்பொழுதுதான் நவாப் ராஜமாணிக்கம் குழுவின் நாடகமாகிய ''இன்பசாகரனை'' படமாக்க ஆரம்பித்தார்கள். கம்பெனி வீட்டில் (தற்சமயம் காளிமார்க் இருக்கும் இடம்) 9 மணியிலிருந்து 5 மணி வரை கால்ஷீட் சிஸ்டம் இல்லை. காலையில் 8 மணிக்கு ஆரம்பித்தால் சீன் முடியும் போதுதான் சூட்டிங் முடியும். திடீரென்று ஒருநாள் ஸ்டுடியோவில் நெருப்பு பிடித்துக் கொண்டுவிட்டது. ஆபீஸ்ரூம், எடிட்டிங்ரூம் எல்லாம் தீப்பற்றி கொழுந்துவிட்டு எரிகிறது. திரு.ராஜா சாண்டோ அவர்கள் துணிச்சலாக மாடியில் ஏறி எடிட்டிங்ரூமில் புகுந்து சில ரீல்களை வெளியே எடுத்து எறிந்தார்கள். அதில் பல நெகடிவ்கள் தப்பித்தன. திரு. ராஜா அவர்களுக்கு தீக்காயங்கள் பட்டு சில நாட்கள் அவதிப்பட்டார்.

கிருஷ்ணன் தூது, இன்பசாகரன், ஒரு இந்திப்படம் ஆகியன எரிந்துவிட்டன. 12 ஆயிரம் அடிவரை எரிந்துவிட்டதால் மறுபடியும் 'கிருஷ்ணன் தூது' படத்தை எடுக்க 6 மாதம் ஆகிவிட்டது. நான் மீண்டும் ஸ்பெஷல் நாடகங்களில் நடிக்க ஆரம்பித்துவிட்டேன்.

ஒற்றைவாடை தியேட்டரில் ''பவளக்கொடி'' நாடகம் நடைபெற்றது. 'புலியமாநகர் புலிக்குட்டி' பி.எஸ். கோவிந்தன் அர்ச்சுனனாகவும், சிதம்பரம் சிங்கக்குட்டி சி.எஸ்.ஜெயராமன் கிருஷ்ணனாகவும், எம்.என். சுந்தரி பவளக்கொடியாகவும் தோன்றினர். சி.எஸ். கோபால கிருஷ்ணன் ஹார்மோனியம், கோடையிடி கோவிந்தன் தபலா. கொட்டகை நிறைந்த காட்சி. சங்கீத மழைதான் பெய்தது அன்று நானும் நடித்தேன்.

இப்படியாகப் பலப்பல நாடகங்களிலும், பின்னுல் திரைப்படங்களிலும் நடிக்க ஆரம்பித்தேன். இன்றுவரை கிட்டத்தட்ட தொண்ணூறு படங்களில் நடித்து முடித்து விட்டேன்.

இந்த இடைப்பட்ட காலத்தில் — அதாவது 1935 முதல் 1986 வரை — நூற்றுக்கணக்கான கலையுலகக் கண்மணிகளுடன் பழகும் இனிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அவர்களில் நாடக நடிகர்கள், நாடக ஆசிரியர்கள், நாடகப்பாடலாசிரியர்கள், திரைப்பட நடிகர்கள் பலரும் அடங்குவர். பலர் இன்று அமரர்கள் ஆகிவிட்டனர். வேறுபலர் இன்றும் நம்மிடையே வாழ்ந்து வருகிறுர்கள். அவர்களுடன் பழகி நான் அறிந்து கொண்ட பல சுவையான செய்திகளையும், அவர்களைப்பற்றிப் பிறர்பேசியும், எழுதியும் வந்த விஷயங்களையும், நான் சந்திக்காத பல முன்னேடிகளைப்பற்றி என் சக நடிகர்களும், மற்ருேரும் கூறிய சேய்திகளைப்பற்றியும்,என் மனத்தில் நான் அடிக்கடி அசைபோட்டுக் கொண்டேயிருப்பேன். இந்த அரிய செய்திகளையெல்லாம் எனது காலத்திற்குப் பிறகும் வருங்கால சந்ததியினர் அறிந்துகொள்ளும் வகையில் அச்சில் வார்த்திடவேண்டுமென நான் எண்ணியிருந்ததுண்டு.

அதற்கேற்றுர்ப்போல், ''சபாநாயகன்'' மாத இதழின் ஆசிரியை திருமதி ரேணுதேவி அவர்கள் என்னை அணுகி எனது வாழ்க்கைவரலாறு மற்றும் நானறிந்த கலைஞர்களைப் பற்றிய அரிய செய்திகள் ஆகியவற்றை எழுதிக்கொடுங்கள், ''சபாநாயகன்'' இதழில் தொடராக வெளியிடலாம்'' என்று கேட்டார். அதன்படி 1982 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் ''1936 முதல் 1981 வரை கலை உலகம்'' என்ற தலைப்பில் பல மாதங்கள் தொடர்ந்து எனது கட்டுரைகள் வெளிவந்தன.

இதே காலகட்டத்தில் 'சொல்லின் செல்வர்' திரு. குமரி அனந்தன் அவர்களின் ''மலர்ந்த ரோஜா'' நாளிதழில் ''நெஞ்சின் அலைகள்'' என்ற தலைப்பில் நானறிந்த கலைஞர்களைப் பற்றிய கட்டுரையும் தொடராக வந்து கொண்டிருந்தது.

இக்கட்டுரைகளைப் படித்துவந்த என் இனிய நண்பர் திரு அறந்தை மணியன் அவர்கள், தமிழ் நாடக, திரைப்பட வரலாறுகளில் தமக்கிருந்த ஈடுபாடு மற்றும் ஆய்வுக் கண்ணேட்டம் ஆகியவற்றின் காரணமாக, எனது கட்டுரைகள்

ஒரு தனி நூலாக வெளியிடப்பட வேண்டுமென்ற தமது ஆவலை அடிக்கடி வெளிப்படுத்தி வந்தார். கட்டுரைகளை ஒழுங்குபடுத்தி நூல்வடிவாகத் தொகுத்துத் தரவும் முன் வந்தார். அவரது பெருமுயற்சியின் பயனாகத்தான் இந் நூல் உருப்பெற்றது. அவருக்கு என் நன்றியைத் தெரி வித்துக் கொள்ளுகிறேன்.

''1936 முதல் 1981 வரை கலை உலகம்'' என்ற எனது கட்டுரைத்தொடரை வெளியிட்ட ''சபாநாயகன்'' மாத இதழுக்கும், ''நெஞ்சின் அலைகள்'' என்ற பெயரில் எனது கட்டுரைத் தொடரை வெளியிட்ட ''மலர்ந்த ரோஜா'' நாளிதழுக்கும், அதன் ஆசிரியர் திரு. குமரி அனந்தன் அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக!

எல்லாவற்றிற்கும் மேலாக, நாடகம் மற்றும் இதர கலை களைப்பற்றிய ஆய்வு நூல்களுக்கு மான்யம் வழங்கும் தனது திட்டத்தின் கீழ், இந்நூலை அச்சிட நிதி உதவி வழங்கிய தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கும் அதன் தலைவர் கவிஞர் திரு வாலி அவர்களுக்கும், பொதுச்செயலாளர் திரு.வி.எஸ்.ராகவன் அவர்களுக்கும், மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கும் தமிழக அரசுக்கும் நான் பெரிதும் கடமை ப்பட்டுள்ளேன். அவர்களுக்கும் இதன் மூலம் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்

தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் மாண்புமிகு டாக்டர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களுக்கு இந்நூலை காணிக்கையாக சமர்ப்பிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

சென்னை-28. **சட்டாம்பிள்ளை வெங்கட்ராமன்**

(**குறிப்பு :** சமஸ்கிருத நாடகங்களைப் பற்றிய மேற்கண்ட வரலாற்று உண்மைகள் டாக்டர் வே. இராகவன் அவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகளிலிருந்தும் எஸ். கே. தேவசிகாமணி அவர்களின் "இந்திய வரலாறு" என்ற நூலிலிருந்தும் மற்றும் கலைமாமணி திரு. எஸ்.வி. சகஸ்ரநாமம் அவர்களின் ''நாடக வரலாறு'' என்ற நூலிலிருந்தும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.)

# சமஸ்கிருத நாடகங்கள்

அக்கால நாடக வளர்ச்சியில் சமஸ்கிருத நாடகத்திற்கு பெரும் பங்கு உண்டு. திரு பம்மல் சம்பந்த முதலியார் கூட, சமஸ்கிருத நாடகத்திலிருந்து, தமிழில் மொழி பெயர்த்து பல நாடகங்களை எழுதி, மேடையில் நடித்து இருக்கிறார்.

இலக்கியங்களை பார்த்தால் பழைய நாடகக்கலை சம்ஸ்கிருதத்தில் தான் இருக்கிறது. வேதங்களைப் பார்த்தால் கூத்தும் இசையும் பல இடங்களிலே தென்படுகிறது. இயற்கையில் நிகழ்ந்த சம்பவங்களை பின்னல் அப்படி செய்து காட்டும் போது, 'அனுகரணம்' என்பதன் மூலமாகத்தான் இந்த நடிப்புக்கலை உதயமாயிற்று. இக்கலைக்கு முதல் நூல் பரதமுனிவர் எழுதிய ''நாட்டிய சாஸ்திரம்'' உள்ளது. நாடகக் கலையில் 'இலக்கியத்தை' ரிக்வேதத்திலிருந்தும், சங்கீதத்தை 'சாம வேதத்திலிருந்தும்' அபிநயத்தை, 'யதுர் வேதத்திலிருந்தும்' சுவைகளை 'அதர்வண வேதத்திலிருந்தும்' தோன்றியது, பிரும்மனுடைய படைப்பு எனக் கூறப்படுகிறது.

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் 'பாணினி' தன்னுடைய வியாகரண சூத்திரங்களில், பண்டைய காலத்தில் கூத்துகளின் கலை விஷயமாக 'நாடக சூத்திரங்கள்' என்ற பயிற்சி நூல் கலைஞர்களுக்காக இரு முனிவர்கள் தொகுத்துள்ளதை கூறி இருக்கிறார்.

நாட்டிய சாஸ்திரப்படி பார்த்தால், திருப்பாற் கடலை கடைந்து அதிலிருந்து வரும் அமிர்தத்தை தேவ அசுரர்களுக்கு பகிர்ந்து கொடுக்கவே ஸ்ரீமன் நாராயணன் மோகினி அவதாரம் எடுத்து நாட்டியமாடி அமிர்தத்தை கொடுக்க முற்பட்டார். இந்த சம்பவத்தை வைத்துத்தான் முதல் நாடகமாக 'அமிர்த மதனன்' என்ற நாடகம் (கூத்து) நடைபெற்றுள்ளது. இரண்டாவதாக, சிவபெருமான் திரிபுரத்தையும் எரித்த கதையை நாடகமாக (கூத்தாக) நடித்தார்கள்.

இவ்விரு போராட்டமும் (அமிர்த மதனன், திரிபுராந் தஹம்) தேவ அசுரர்களின் செயலை அனுகரணம் செய்த ஆட்டம். தேவர்களின் வெற்றி விழாவை அடிப்படையாகக் கொண்ட வீரரச அமைப்புகள் முதலில் ஆடப்பட்டன. 'சம்ஹாரம்' என்று பெயர் இட்டனர். இரண்டாவதாக ஆடப்பட்ட நாடகம் (கூத்து) 'டிமம்' என்னும் பெயருடனும், மூன்ருவதாக போர்க்களத்தையும் வீரத்தையும் கொண்டதாய் வளர்ந்தது. அதன் பெயர், 'வயா யோகம்' நான்காவதாக எழுந்ததும் தேவ அசுரர் போராட்டம்தான். ஆனுல் ஒரு பெண் காரணமாக வளர்ந்த கதை, இதன் பெயர், 'ஈஹாம்ருகம்''.

ஒரு பாத்திரத்தை ஏற்றுக் கொண்டு மேம்பட நடிக்கலாம்! நகைக்கும்படியோ, பழிக்கும்படியோ, செய்யலாம். ஒரு கதையை மாற்றி நடித்தால், அது நகைச்சுவை வகை. உதாரணம், (நந்தனுர்-கிந்தநார்) நந்தன் கதையை, கிந்தனுக, மாற்றம் செய்யப்பட்டது. அந்தவகையான நாடகங்களும் ஏற்பட்டன. அதன் பெயர் 'ப்ரஹசனம்'.

மேலே குறிப்பிட்ட வகைகள் பல நடிகர்கள் ஏற்று ஆடியவை. ஒருவரோ இருவரோ சேர்ந்து ஒருவரை மிஞ்சி வார்த்தைகளை (கேள்வி பதில்) பரிமாறிக் கொள்ளும் வகையிலும் நாடகமாக (கூத்தாக) ஏற்பட்டது. இதன் பெயர் ''வீதி'' ஒரே நடிகர் பல பாத்திரங்களை ஏற்று நடித்துக் காட்டுவது, (மோனே) மிகவும் சிறப்பான வகை. கஷ்டமானதும் கூட. அது தொடர் வகையாகவும் இருந்தது அதன் பெயர் 'பாணம்''.

இதுவரை சொல்லி வந்தவைகள் சிறிய அமைப்பில் வளர்ந்த வகை நாடகங்கள், (கூத்துகள்) பல சம்பவங்களையும், பல நிகழ்ச்சிகளையும், வைத்தும், முழு நாடகங்களும் (கூத்துகளும்) நடந்தன. ஒன்று, புராணங்களில் வரும் கதை மற்ருென்று, நடந்த சரித்திரங்களை வைத்து தொகுத்த கதை.

பல பாத்திரப்படைப்புகளையும், நிகழ்ச்சிகளையும், கொண்டு முழு அமைப்பில் இரண்டு பிரிவுகள் சிறப்புற்று விளங்கின. அவைகளில் ஒன்று ''நாடகம்'' மற்ருென்று ''ப்ரகரணம்'' பௌராணிக ராஜ ரிஷிகளின் சுய சரித்திரத்தைக் கொண்டு வீர ரசத்தையும், சிங்கார ரசத்தையும் சேர்த்து, தொகுக்கப்பட்டவைதான் நாடகம் என்னும் சொல். ''இசை நாடகம்'' ''நாட்டிய நாடகம்''

'ஓரங்க நாடகம்' இப்படி வளர்ந்தது. 'ப்ரகரணம்' என்பதும் நாடகத்தை சேர்ந்ததுதான். ஒவ்வொரு மனிதர்களின் வாழ்க்கையில் நடக்கும் கதைகளையும், காதலையும் இன்ப துன்பங்களையும் சேர்த்து, வீரத்தையும், ஹாஸ்ய பகுதியையும் புகுத்தி இயற்றினார்கள். இதை ஆங்கிலத்தில் (Social Play) என்றும், நாடகத்தை (Heroic Play) என்றும் கூறினார்கள்.

சம்ஸ்கிருத இலக்கியத்தில் முதன் முதலாக நமக்கு தெரியவரும் நாடகம், கி.மு. நான்காம் நூற்றாண்டில் மௌரிய சாம்ராஜ்ய காலத்தில் மௌரிய அரசுக்கு மா மந்திரியாக பணிபுரிந்து வந்த 'ஸுபந்து' என்ற கவி எழுதியது. இது முழு நூலாகக் கிடைக்கவில்லை. சில பகுதிகளையும், சில துண்டுகளையும் மேற்கோள் காட்டித் தான் நாடகத்தை தயாரித்தார்கள். அந்த நாடகம்தான் ''உதயணன் வாஸவதத்தை'-கதை. இது நாடகத்திற்குள் நாடகம்.

மௌரிய அரண்மனையில் நடக்கும் உண்மை நிகழ்ச்சிகளையும், சம்பவங்களையும் பிணைத்து அமைத்தார் கவி ஸுபந்து. இந்த நாடகத்தின் முழு பெயர் ''வாஸவ தத்தா—நாட்டியதாரா'' இதை ஆராய்ந்து பார்த்தால் நாடகக்கலை கி.மு. நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உருவாகி இருக்க வேண்டும்.

கவி ஸுபந்துவிற்கு அடுத்து வந்த மாபெரும் கவிஞர் ''பாஸர்''. இவரும் பல நாடகங்களை எழுதியுள்ளார். அதில் உயர்ந்த ஸ்ருஷ்டிதான் ''ஸ்வப்ன—வாஸவதத்தம்'' இவரை பின்பற்றி வந்தவர்தான் ''மகாகவி காளிதாசர்'' இவர் எழுதிய நாடகங்கள் பல உள்ளன. குறிப்பாக ''சாகுந்தலம்'' ''மாளவிகாக்னிமித்திரம்'' ''விக்ரமோர்வசீயம்''

கி.பி. 7-வது நூற்றாண்டில் ஸ்ரீ ஹர்ஷமஹாராஜர் ''ப்ரியதரிசிகை'' ''ரத்னவளி'' போன்ற நாடகங்களை எழுதியுள்ளார்.

பாஸரை பின்பற்றி ''ஸொமில்லன்'' ''கவிபுத்ரன்'' என்ற இரு கவிஞர்கள் பல நாடகங்களை இயற்றியுள்ளனர். இவர்களை மஹா கவிகாளிதாசனே புகழ்ந்து பேசியுள்ளார். இவர்களது நூல்கள் கிடைக்கவில்லை என்று சான்றோர்கள் கூறுகின்றார்கள்.

மத்திய ஆசியாவிலுள்ள புதைந்துபோன பௌத்த மடத்தை தோண்டும் போது புதைபொருளில் கிடைத்த வைதான் ''சாரிபுத்ரப்ரகரணம்''. புத்தரை நாயகனுகக் கொண்டு சாந்தரஸத்தை முக்கிய சுவையாக 'அஸ்வ கோஷர்' என்ற பௌத்த கவி எழுதியதுதான் இந்த நாடகம். மதப்பிரசாரத்தை முன் வைத்து நாடகத் துறையில் கையாண்டதில் இது முதல் முயற்சியாகும். மடத்தை தோண்டும்போது ஜெர்மானிய சமஸ்கிருத அறிஞர்களால் கண்டு பிடிக்கப்பட்டது. இந்த நூல்கள் ஏன் மறைந்து போயின என்று ஆராய்ந்தால், மகாகவி காளிதாசன் தோன்றியதே. காளிதாசனுடைய நூல்கள் எல்லா மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இந்திய நாடகங்களிலேயே சிகரமாக விளங்குவது ''சாகுந் தலம்'' நாடகமாகும். இவருக்குப்பின் எழுதிய நாடக ஆசிரியர்களும், கவிஞர்களும், புலவர்களும், கூடலேயும் ஊடலேயும் இவரது வழியைத்தான் பின்பற்றி எழுதி இருக்கி ருர்கள்.

காளிதாசனின் ''சாகுந்தலம்'' எவ்வளவு தலே சிறந் ததோ அதைப்போலத்தான் ''ப்ரகரணம்'' என்ற துறை யில் சூத்ரகன் எழுதிய ''மிருச்சகடிகம்''. இது ஒரு கற் பனேக்கதை. சரித்திர வரலாற்றிலுள்ள சில நிகழ்ச்சிகளே யும், சூழ்ச்சி, பொருமை, வஞ்சகம், புகழ்ச்சி, இகழ்ச்சி, காதல், வீரம், சோகம், நகைச்சுவை ஆகியவை கலந்த, திருடன், குற்றவாளி இவர்களுடைய செய்கையை வைத்து எழுதப்பட்டதாகும்.

காளிதாசன், சூத்ரகன் இவ்விருவருக்கும் அடுத்தபடி யாக வந்தவர்தான் ''பவபூதி'' கருணேச்சுவையை எழுது வதில் இவருக்கு தனி சிறப்பு உண்டு. இவர் உத்திர-ராம சரித்திரத்தை'' நாடகமாக்கி படிப்பவர்கள் கண்ணீர் விடச் செய்திருக்கிருர். இதன் பெயர் 'மஹாவீரசரிதம்'' அடுத்து ஒரு சமூக நாடகத்தை எழுதியுள்ளார். இதன் பெயர் ''மாலதீமாதவம்'' இந்த சமூக நாடகம் மிருச்ச கடிகம் போல சிறப்புப் பெறவில்லே. ஆனுல் சமூக நாட கத்தில் இரண்டாவது அங்கம் வகித்தது.

விசாகதத்தன் என்ற கவி அரசியல் நாடகம் ஒன்றை அரங்கேற்றம் செய்தார். அதுதான் சந்திரகுப்தனேயும் சாணக்கியனேயும் வைத்து எழுதியது.

விசாகதத்தன் அரசு மரபிலே தோன்றியவர். வட மாநிலத்தை கி.பி. 7-வது நூற்றுண்டில் ஆண்டு வந்த 'ஹர்ஷவர்த்தன' மஹாராஜன் மும்மணிகளைத் தீட்டிஞர். அவை உதயணன் சரிதத்தை பின் பற்றி 'ப்ரிய தரிசிகை' 'ரத்ஞவளி' ஆகியவையாகும். சம்ஸ்கிருத அரங்குகளில் வெகு காலம் ரத்ஞவளியின் அபிநயம் நிலை பெற்று நடந்தது. ஆனுல் இவரது மூன்ருவது படைப்பான 'நாகானந்தம்' நாடகம் ஒரு புரட்சியை தூண்டிவிட்டது. இதில் பௌத்த கதையை மையமாக வைத்து சாந்தத்தை முக்கிய சுவையாக அமைத்தார்.

இவருக்குப் பின் மன்னர் வழியில் வந்தவர்தான் 'அனங்கஹர்ஷ மஹாராஜன்'. இவர் ஹர்ஷவர்த்தன மஹாராஜனையும், பாஸனையும் பின்பற்றி, தாபச வத்ச ராஜ'' என்ற நூலை இயற்றிஞர். இவர் வர்ணித்து எழுதுவதில் வல்லவராகத் திகழ்ந்தார்.

கி.பி. 9ஆம் நூற்றுண்டில் 'பட்ட நாராயணர்' என்பவர் தீட்டிய ''வேணி சம்ஹாரத்தில்'', மஹா பாரதப் போரை நாடகமாக அமைத்து பெருமை சேர்த்தார். இந்த நாடகத்தில் தான் நவரசத்தையும் புகுத்தி மக்களுக்கு அளித்தார். கி.பி. 10-வது நூற்றுண்டில் 'ராஜ சேகரன்' காளிதாசனையும், ஹர்ஷவர்த்தன ராஜனையும் பின்பற்றி 'வித்தஸால பிஞ்சிகை' 'கர்ப்பூர மஞ்சரிகை' என்ற இரு நூலை ப்ராக்ருத மொழியில் இயற்றிஞர்.

''இராம கதையை'' ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாணியில் எழுதியுள்ளார்கள். இயற்கைக்கு பொருத்த மில்லாது இருந்தால் குறைபாடுகளை நீக்கி எழுதுவது என்ற மரபாக இருந்துவந்தது. குறிப்பாக முராரி எழுதிய 'அனர்க்கராகவமும்' ராஜசேகரன் எழுதிய 'பாலராமாயணமும்' ஜெயதேவன் எழுதிய 'ப்ரசன்ன ராகவமும்', மஹாராஜா சோமவர்மன் எழுதிய ராமாப்யூதயம்' மயூ ராஜன்' எழுதிய 'உதாத்தராகவம்', ''சாலிதராமம்'' க்ருத்யா ராவணன், ஜானகிராகவம், ராகவாப்யூதயம் ஆகிய இந்த சுவடிகள் புதைந்து அழிந்தும் போயின. ராமநாடகத்தை எடுத்துக் கொண்டால் எத்தனையோ மஹான்கள் இயற்றியுள்ளார்கள்.

வால்மீகி ராமாயணம்! கம்ப ராமாயணம்! துளசி தாசர் ராமாயணம்! பவபூதி! முராரி! ராஜசேகரன்! ஜய தேவன்! யசோதவர்மன்! மயூராஜன்! இராம கதையை

வைத்து பாடலே இயற்றி பாடிய மஹான்கள் அனேகர். அதில் குறிப்பாக ஸ்ரீகபீர்தாசர், ஸ்ரீராமதாசர், ஸ்ரீராக வேந்திரர், ஸ்ரீ தியாகராஜர், அன்னமாச்சாரி, முத்துசா்மி கவிராயர், மாம்பழக் கவிராயர், அருணசலக் கவிராயர்!

இந்த இராம கதையை ஸ்பெஷல் நாடக நடிகர்கள் சங்கீத வித்வான்கள், பாய்ஸ் கம்பெனி நடிகர்கள் நாடக மாக நடத்தி பாடல்களைப் பாடி மக்கள் மத்தியில் விரிவு படுத்தினார்கள். பல பாய்ஸ் கம்பெனியில் இராமாயணத்தை பல கற்பனையில், காட்சி ஜோடனையில் அதிக செலவு செய்து இராமாயணம், சீதா கல்யாணம், ராம பட்டாபிஷேகம், ராமபக்தி, பாலராமாயணம், சீதை வனவாசம், பாதுகா பட்டாபிஷேகம், மயில் ராவணன், ராமபக்தஹனுமான், வீர ஆஞ்சனேயன், இலங்கா தகனம், இலங்கேஸ்வரன், இப்படி நாடகங்களுக்கு பெயர் சூட்டி நடத்தி பெருமை படுத்தினார்கள்.

இராமகதையை எழுதும் போதும், பேசும்போதும் சக்தி புத்திரன் எழுதிய 'ஆச்சார்ய சூடாமணியையும் உன்மாத வாசவத்தையும் நாம் மறக்கக்கூடாது. வடக்கே தற்சமயம் நடத்தப்பட்டு வரும் ''ராமலீலா' போல தொடர் இராமயண நாடகத்தின் காட்சிகளைப் பிரித்து அதற்கு பக்கபலமாக பாட்டுகளை அமைத்து வசனங்களை எழுதி பழைய நூல்களிலிருந்து பாடல்களையும், கருத்து களையும், சேர்த்துத்தான் நூல் வடிவில் இன்று நம்முன் நடமாடுகிறது. இந்த வகையான நாடகங்களை 'சாய நாடகம்' என்று அழைத்தார்கள்.

புராண நாடகங்களும், சமூக நாடகங்களும் எழுதப் பட்ட ஏடுகள் மறைந்து போயின என்று கூறுகிறார்கள். முத்ராராக்ஷஸ நாடகத்தை இயற்றிய விசாகதத்தன் அரசி யலை கருவாக வைத்து, குப்தவம்சத்தில் உதித்த இரண் டாம் விக்ரமாதித்யன் என்று புகழ் அடைந்த சந்திர குப்தனை' கதாநாயகனாக வைத்து அமைத்த நாடகம்தான் ''தேவீ சந்திரகுப்தம்''. அரண்மனையில் நிகழ்ந்த உண்மை சம்பவத்தை வைத்துத்தான் இந்த நாடகத்தை எழுதினார்.

தன்னை காதலித்த பெண்ணை தன் அண்ணன் மணந்து கொண்டு நாட்டையும், மனைவியையும் அன்னிய மன்னனி டத்தில் ஒப்படைக்க இசைந்தான். நாட்டையும், காத லித்தவளையும் மீட்க பெண்வேடம் அணிந்து கொண்டு அன்னிய நாட்டு மன்னனைக் கொன்றான்.

தன் காதலியை மணந்து கொள்ள பித்தனுய் மாறி அரண்மனையில் நுழைந்து அண்ணனைக் கொன்று வெற்றி அடைகிருன் சந்திரகுப்தன். இந்த நாடகம் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டது. இதன் ஏடுகள் நமக்கு கிடைக்காது போனது துரதிர்ஷ்டமே.

இப்படித்தான் அன்று நாடகக் கலை, நாட்டியக்கலை, இசைக்கலை, கவிஞர், புலவர், இராஜாக்கள்; ஜமீன்தார்களால் வளர்ச்சி பெற்றுள்ளது.

நடந்தவை, - நடக்க இருப்பவை இவைகளுடன் கற்பனைகளையும் கலந்து நாடகங்களையும் பாடல்களையும் இயற்றினர்கள் மேதைகள் குறிப்பாக மஹாபாரத யுத்தம் கலி பிறப்பிற்கு சுமார் 36 ஆண்டு முன் நடந்தது. கலி பிறப்பு கி.மு. 3102ஆம் ஆண்டு.

இந்த மஹா பாரதத்தை நாடகமாக்கிய பெருமை, கி.பி. 9-வது நூற்றுண்டில் வாழ்ந்த திரு பட்டநாராயணன் அவர்களைச் சாரும். இந்த கதையில் கொலை, களவு, கள், காமம், பொய் என்னும் பஞ்சமாபாதகத்தோடு சூது, வஞ்சகம், அன்பு, ஆசை இவைகளை பின்னி நாடகமாக்கியுள்ளார்.

வியாசருடைய திருத்தந்தையான ''பராசர முனிவரே'' புகழ்ந்து சொன்ன வார்த்தை ''க்ருஷ்ணத்வை பாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும், கோஹ்யந்யோ புவிமைத்ரேய மஹா பாரதக்ருத்பவேத் (விஷ்ணுபுராணம்).

(கிருஷ்ணத்வைபாயநர் என்ற பெயருடைய என் குமாரனுகிய வியாசனை; பிரபுவான நாராயணனுகவே நினை. இப்புண்ணிய பூமியில் மகாபாரதத்தை இயற்றும் பேராற்றல் வேறு யாருக்கு உண்டு.) வியாசர் எழுதிய மூலக்கருத்தைத்தான் திரு. பட்ட நாராயணன் அவர்கள் மஹா பாரதக் கதையை மக்கள் ரசிக்கும்படி நாடகமாக எழுதி நமக்கு வழங்கியுள்ளார். கதா பாத்திரங்கள் நாம் அறிந்தவையே. பஞ்சபாண்டவர்கள் ஐந்து பேர்களும் மனிதர்கள்தான். அதை ஐந்து கோசங்களாக பிரித்து எழுதினர், பட்ட நாராயணன் அவர்கள். நகுலன்—அன்னகோசம், சகாதேவன்—பிராணகோசம், அர்ச்சுனன்—மனோகோசம், பீமன்—பித்திகோசம், தருமன்—ஞானகோசம். இந்த கதையில் ஸ்ரீகிருஷ்ணன்தான் கதாநாயகன் மற்றும் பலர் கௌரவர் வரிசையில் ஒரு துணையாக நின்றவர்கள்,

பீஷ்மர் துரியோதனன், துச்சாதனன்; துரோணர்(குரு) அஸ்வத்தாமன், விதுரன், சஞ்சயன், கர்ணன், சகுனி ஆகியவர்கள் இதில் பங்கேற்கிருர்கள். இதில் சகுனிதான் வில்லன்.

கண்ணனை கதாநாயகனுக வைத்து 18 நாள் மஹா பாரத போர் நடைபெற்றுள்ளது.

மஹா பாரதக் கதையை நாடகமாக ஏன் பாய்ஸ் கம்பெனிகளில் நடத்தவில்லை யென்ருல், அந்தக் கதை சண்டை சச்சரவுகள் நிறைந்த கதை என்று நாடகம் நடத்த பயந்திருக்கலாம். மற்ருென்று அதிகமான பாத்திரப் படைப்புகள் நிறைந்துள்ள கதை.

ஒவ்வொரு காட்சிகளையும் தத்ரூபமாக காட்டுவது என்பது மிகவும் சிரமம். மேலும் ஆடை, அலங்காரங்கள், ஆள், பேர் அதிகம் தேவைப்படுகிறபடியால், யானையைக் கட்டி தீனிபோட தயாராக இல்லை அன்று பாய்ஸ் கம்பெனிகள்.

ஆனுல் இந்த துணிச்சல் அன்று திரு. சி. கன்னையாவுக்கு இருந்ததை நாம் மறக்கவும் கூடாது. மறுக்கவும் கூடாது. பாடலை மட்டும் வைத்துக் கொண்டு நாடகங்களை நடத்திய காலத்தில்தான் திரு. கன்னையா அவர்கள் லட்சக்கணக்கில் பணத்தை செலவு செய்து சீன்களையும், செட்டிங்குகளையும் வைத்து ஆடை ஆபரணங்களுக்காக பணத்தை வாரி இறைத்து பார்ப்பவர்கள் வியக்கும் தன்மையிலும், மஹா வித்வான்களும், போற்றி பாராட்டும் நாடகங்களை அமைத்தார். குறிப்பாக, ''பகவத் கீதை'' ''தசாவதாரம்'' ''ஸ்ரீ ஆண்டாள்'' ''கிருஷ்ண லீலா'' ''இராமாயணம்''. நாடகக்கலை இருக்கும் வரை அவரை நாம் பாராட்டத் தவறினுலும் மறக்காமல் இருந்தால் அதுவே போதுமானது. நாடகக்கலையை மக்கள் பார்க்கும் விதத்தில் அமைத்த பெருமை திரு. கன்னையா அவர்களைச்சாரும். திரு. கன்னையா பெயரால் ஒரு கலை அரங்கம் அமைக்கப்பட வேண்டும் என்பது என் ஆசை.

அவரைப் பின்பற்றித்தான் தமிழக நாடகங்கள் புத்துயிர் பெற்றன. அந்த நாளிலே சுகுண விலாஸ் சபையோர்கள் பம்மல் சம்மந்த முதலியார் அவர்களைக் கொண்டு மக்கள் விரும்பியபடி காட்சி ஜோடனைகளுடன்

நாடகங்களை நடத்தி நாடகக கலைக்கு ஒரு தனி மரியாதையை ஏற்படுத்தினார்கள். இன்னும் சதாவதானம் கிருஷ்ணசாமி பாவலர், கந்தசாமி முதலியார், பாலாமணி அம்மையார், கோல்டன் சாரதாம்பாள், ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி, நவாப் ராஜமாணிக்கம்பிள்ளை, டி.கே. எஸ். சகோதரர்கள் ஓ.ஏ.ஆர். வைரம் அருணசலம் செட்டியார். திருச்சி அமைச் சூர் ஆர்டிஸ்டு குழுவின் ஓ.ஆர்.பாலு (திருச்சி) டாக்டர் ராமமூர்த்தி, வி.சி. கோபாலரத்தினம், எப்.ஜி. நடேசன், (திருச்சி) என்.எஸ்.கே. இவர்கள் அத்துணை பேரும், காட்சி ஜோடனை சீன் செட்டுடன் நாடகங்களை நடத்தினார்கள்.

——❀——

# தமிழ் நாடகக் கலை

மூத்தமிழில் முதன்மையானது இயல். 'சங்கமிருந்த மதுரையையுடைய பாண்டிய மண்டலமும் 'இசை' சதிர் ஆட்டத்திற்கு (பரத நாட்டியம்) காவிரி நதி பாயும் சோழ மண்டலமும் (தஞ்சை) நாடகத்திற்கு சேர நாடும் சிறப்புடன் விளங்கி வந்துள்ளன. சிந்தனையில் நாம் வழுக்கியும் விழுவதில்லை. சிந்தித்தால் சிந்தனையில் சலனம் சேர்ப்பதுதான் இயல். இதனுடைய மூலதனம் மனம். பாடப்பாட ராகம், கேட்கக் கேட்கத் தெவிட்டாத தெள்ளமுதம் இசை; இந்த நாத ஓசையை வெளிப்படுத்துவது வாய். பார்த்தவுடன் புரிந்துகொள்ளக்கூடிய சினிமாப் படம் போல் உள்ளது நாடகம். இதனுடைய முக்கிய அங்கமாக இருப்பது இயல்'. முத்தமிழுக்கு மிக முக்கியமானவை மனம், வாக்கு, காயம். இயலை ஒட்டித்தான் இசையும் நாடகமும் வளர்ச்சி பெற முடியும்.

இசைக் கலையையும் நாட்டியக் கலையையும் தஞ்சை மண்ணில் (சோழ மண்டலத்தில்) உழுது பயிரிட்டு விளைத்து அறுவடை செய்துள்ளார்கள், மும்மூர்த்திகளான முத்துசாமி தீட்சதர், தியாகபிரும்மம். சியாமா சாஸ்திரிகள். ஆனால் நாடகக் கலை மட்டும் மதுரையை தாய் வீடாக வைத்து, ஸ்பெஷல் நாடகமும், பாய்ஸ் கம்பெனியும் வலுப்பெற்று வளர்ந்துள்ளது. மதுரையில் நாடகக் கலை ஏன் வளர்ச்சி பெற வேண்டும் என்று ஆராய்ந்தால் விடை கிடைக்கும். இயலுக்குச் சொந்தக்காரர்களே மதுரைதான். இயலை ஒட்டித்தான் இசையும் நாடகமும் வளர்ச்சி பெற முடியும் என்று சொல்லியபடி துவக்குபவர்கள் கூட 'மதுரை' என்ற வார்த்தையை முன் வைத்துதான் நாடகக் கம்பெனிகளை ஆரம்பிப்பார்கள்.

குறிப்பாக சங்கரதாஸ் சுவாமிகள் திருநெல்வேலி மாவட்டத்தில் பிறந்து மதுரையில் குடிபுகுந்து சொந்தமாக நாடகக் கம்பெனி ஒன்று ஆரம்பித்து அந்தக் கம்பெனிக்கு அவர் சூட்டிய பெயர் ''மதுரை தத்துவ மீனலோசனி வித்வ பாலசபா''. இப்படிப் பல ஆதாரங்கள் சொல்லலாம். நாடகக் கலை வளர்ந்தது மதுரை மாநகரத்தில்தான் என்று துணிந்து கூறலாம்.

'நாடகமே உலகம்' என்று ஷேக்ஸ்பியர் முன் மொழிந்தாரே அந்த வார்த்தையில்தான் எவ்வளவு பெரிய உண்மைகள் அடங்கியுள்ளன. நாடக அரங்கிலே தான் ரகம் ரகமாக எத்தனை விதமான விநோதமான நாடகங்கள், வித விதமான பாத்திர படைப்புகளுடன் அரங்கேற்றப்படுகிறது! இத்தனைக்கும் மேலாக இதனை ஆட்டிப்படைக்கும் இறைவன் இருக்கிறானே, அப்பப்பா, தன் அடியார்களை வசப் படுத்திக் கொள்ள பலரகமான நாட்டியம், நாடகம், இசை இலக்கியம் போன்றவைகளை அரங்கிலே கண்டு மகிழ்கிறான், என்று எண்ணும்போது இந்த கலைக்கு முதலுமில்லை, முடிவு மில்லை என்றுதான் நினைக்கிறேன்.

மனிதனுடைய மனதிலிருந்து ஊற்றுபோல வெளி வருகின்ற உணர்ச்சிதான் 'கலை'. அவனுடைய கற்பனைத் திறனில் உருவாகின்ற காவியப்படைப்புகள் தான் சிற்பக் கலை, ஓவியக் கலை, நாட்டியக் கலை, இசைக்கலை, நாடகக் கலை. செந்தமிழுக்கு சிலம்பை அளித்தவன்தான் சேரனின் தம்பி இளங்கோ. சிலம்பின் கதையைச் சொன்னவர் மதுரை சாத்தனார், சிலம்பை வைத்து நாடகமாக எழுதித்தந்தவர் தான் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள்.

லிண்டன் பிரபு எழுதிய நாடகத்தை அடிப்படையாக கொண்டு தமிழ் நடையில் 'மனோன்மணியம்'' என்ற நாடகத்தை தமிழ் மக்களுக்கு வழங்கியுள்ளார் பேராசிரியர் சென் சொற் புலவர் சுந்தரம் பிள்ளை அவர்கள்.

இந்த நாடகக்கலை எத்தன்மை உடையது என்று திரு. பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள் கூறி இருப்பதைப் பாருங்கள்: ''நான் இன்னொரு பிறவியை விரும்பவில்லை. கடவுளின் அருளால் நான் மறுபடியும் பிறவி எடுத்தால் அந்தக் கடவுளிடம் மூன்று வரம் கேட்பேன். 1. இப் பிறவியில் எனக்குத் தாய் தந்தையராய் இருந்தவர்களே அப்பிறவியிலும் தாய் தந்தையராய் இருக்க வேண்டும். 2. இப்பிறவியில் எனக்கு நண்பர்களாய் இருந்தவர்களே அப்பிறவியிலும் நண்பர்களாக இருக்க வேண்டும். 3. அப்பிறவியிலும் நான் ஒரு தமிழ் நாடக ஆசிரியனாகவும், விநோதத்திற்காகத் தமிழ் நாடகங்களில் நடிக்கும் நடிகனாகவும் இருக்க வேண்டும்'' இந்த மூன்று வேண்டுகோளைத்தான் அந்தக் கடவுளிடம் கோரியுள்ளார். குணம் என்னும் குன்றேறி நின்ற பெருந்தகையுடைய ஆன்மா சாந்தியடைய தமிழகத்திலுள்ள ஒவ்வோர் கலைக்கூடத்திலும்

அந்த ஜீவநதி ஒளி வீசட்டும். மேலும் மவுண்ட் ரோடில் உள்ள 'சுகுண விலாச சபையை' நிறுவி அதனுடைய வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டவர்களில் திரு. சம்பந்த முதலியார் முக்கியமானவர். அந்த கமிட்டியார் அரங்கவாயிலில் அன்னுருடைய 'சிலையை' நிறுவாமல் போனது மிகவும் வருத்தப் படக்கூடியது. கமிட்டியார் என் யோசனையை பரிசீலனை செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மின் விளக்குகள் விரிவடையாத காலம். நாடக கொட்டகைகளில் தீப்பந்தம், கியாஸ் லைட்டுகள் உபயோகப்படுத்தி வந்தார்கள். மேடையில், டிக்கெட் கொடுக்கும் இடம், உள்ளே செல்லும் நடைபாதையில் மற்றும் ஆடிட்டோரியம், மேக்கப் அறை, 7 கியாஸ் லைட்டுகள் கண்டிப்பாக இருக்கும். இரவு 10-30 மணிக்கு நாடகம் ஆரம்பமாகும். 9-30 மணி அளவில் டிக்கெட்டுகளை வழங்குவார்கள். அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடை பெறும். தகர குழாயை வைத்து தியேட்டரின் முன் நாடகம் பற்றி சொல்லிக் கொண்டு இருப்பார்கள்.

நாடகம் துவங்குமுன் அதிர் வேட்டுகள் வைப்பார்கள். அந்த சத்தம் பக்கத்து 10 கிராமங்களுக்கும் கேட்கும். அந்த கிராம மக்கள் புரிந்து கொள்வார்கள், நாடகம் ஆரம்பம் ஆகப்போகிறது என்று! மேலும் ஒரு நபர் கதர் வேட்டி கதர் சட்டை காந்திகுல்லாய் அணிந்தவாறு விளம்பரம் செய்து கொண்டு கத்துவார். எப்படி? தமுக்கு அடித்துக் கொண்டு!

கூத்து என்ற சொல் மிகப் பழமையானது. நடனம் நாடகம் இவ்விரண்டையும் இணைத்துவந்த சொல்தான் 'கூத்து' கலையிலே வல்லவர்களை 'கூத்தர்' என்றும், பெண்டிரை 'கூத்தியர்' என்றும் அழைத்தனர். கூத்தர், கூத்தியரின் திறமையை போற்றிப் பாராட்டி அன்றைய மன்னர்கள் ஊர்களுக்கே பெயர்கள் வைத்தார்கள் (குறிப்பாக) 'கூத்தா நல்லூர்', தஞ்சை மாவட்டத்தில் உள்ளது. பிற்காலத்தில் கூத்தியர்' என்ற வார்த்தை 'கூத்தியா' என்று மாற்றி அழைக்கப்பட்டது. இதன் காரணம் என்ன? எப்படி கோவலன், மாதவியை விரும்பினுனோ அதைப் போல அன்றைய மிட்டா, மிராசு, ஜமீன், மக்களும், கலையிலே உள்ள பெண்களை (கூத்தியர்) விரும்பி ஆசைப்பட்டு அவளை தன் வசப்படுத்திக்கொண்டு பொன்னையும், பொருளையும் கொட்டி அவளை ஆசை நாயகியாக வைத்துக் கொண்

டார்கள். அவர்களுடைய மனைவிமார்களும், மற்ற வர்களும் சொன்ன வார்த்தைதான் இன்றைய புழக்கத்தில் உள்ள வார்த்தை, 'கூத்தியா'! கூத்து என்ற சொல்லுக்கு 'நடனம்' 'நாடகம்' இவ்விரண்டையும்தான் குறிக்குமேதவிர வேறு அர்த்தம் இல்லை.

நாடகக்கலை இன்று நேற்று தோன்றியதில்லை. தமிழ் இலக்கிய வரலாற்றை சற்று ஆராய்ந்தால் இயல் இசை நாடக வளர்ச்சி நமக்கு தெரியவரும்.

நாடகக் கலையின் வளர்ச்சி

இயல்-இசை-நாடகம் என்று மூன்று கூருக்கி அதற்கு ''முத்தமிழ்'' என பெயர் சூட்டினார்கள் முன்னோர்கள்.

இயல் சத்து, இசை சித்து, நாடகம்-இன்பம், இறைவன் சத்து சித்து ஆனந்தம் என்ற பண்புகளையுடையவன். அதனால் தான் முத்தமிழை நாடகம் என்று கூறுகிறார்கள்.

பாளையக்காரர்கள் ஆண்ட காலத்தில் அவர்களை அண்டி யிருந்த புலவர்கள் புகழ்ச்சி பிரபந்தங்களோடு சில நாடக பிரபந்தங்களை இயற்றினார்கள். அவைகள் 'குறவஞ்சி' பள்ளு' 'நொண்டி, நாடகம்' 'யட்சகானம், கூத்து.

நாடகம் நடனம் இவ்விரண்டையுமே ''கூத்து'' என்று தான் கூறிவந்தார்கள். இசை கூத்து, தெருக் கூத்தாக பிரிந்தது. (நாடகமும், நாட்டியமும்) (நாட்டியத்தை சதிர் என்று கூறினார்கள். அதை இப்போது டான்ஸ் என்று கூறி வருகிறார்கள்) கூத்து, தெருக் கூத்து, நாடகம், டிராமா வாக மாறிவிட்டது.

சைவ வைணவ மேம் பாட்டு காலத்தில் இயலோடு இசையும் கலந்தது. தேவாரப்பதிகங்களும் ஆழ்வார் பாசுரங்களும் தோன்றின.

ஐம்பெரும் காப்பியத்தில் சிலப்பதிகாரம் மட்டும் நாடகக் காப்பியம் என்று சொல்லப்படுகிறது. அது கூட நாடகம் நடத்துவதற்கேற்றாற் போல் காட்சிகள் பிரித்து எழுதப்படவில்லை. இளங்கோ அடிகள் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த 'மகாகவி காளிதாசர்' வடமொழியில் இயற்றியுள்ள, 'சாகுந்தலம்' நடிப்பதற்கேற்ற முறையில் அமைந்துள்ள நாடக இலக்கியம். இதை 1907ம் ஆண்டு மறைமலை அடிகள் தமிழ் வடிவமாக தந்தார். வடமொழியில்தான்

உரையாடலுடன் பல நாடகங்கள் உள்ளன. ஆனல் தமிழில் எழுதி அழிந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. 19ஆம் நூற்ருண்டில் தான் பேராசிரியர் திரு. சுந்தரஞர் அவர்கள் ''மனேன்மணியம்'' என்ற நாடக இலக்கியத்தை வடித்து வழங்கினர். திரு சூர்ய நாராயண சாஸ்திரி அவர்கள், ரூபவதி, கலாவதி, போன்ற நாடகங்களை எழுதி யுள்ளார்கள். ''கண்ணகி கதை'' என்ற அம்மானைப் பாடலை வைத்துத்தான் திரு. சங்கரதாஸ் சுவாமிகள், 'கோவலன்' நாடகத்தை உருவாக்கினர்கள். அந்தக் காலத்தில்தான் திரு. சம்பந்த முதலியார் அவர்கள் 'மனேகரா' போன்ற பல நாடகங்களை எழுதி வழங்கியுள்ளார்கள்.

நாடகத்துக்கு உயிர் நாடிகளாக விளங்குபவை, பாவம், ராகம், தாளம்! பாவராக தாளத்தின் ''சம்மேளனம்தான்'' நாடகம்! சுகம்; துக்கம், வாதனே, வேதனை, மகிழ்ச்சி, இகழ்ச்சி அறிவாற்றல், அச்சம், பயம், கலந்த ஓர் அரிய கலா சாதனம் தான் ''நாடகம்''! 18-ஆம் நூற்ருண்டில் அருணுசலகவியின் ராம நாடகம் இசை நாடகமாக நடத்தப்பட்டது. 2,300 ஆண்டுகளுக்கு முன் கிரேக்க மொழியில் நாடகங்கள் நடத்தப் பட்டு வந்தன.

ஆங்கில நாடகத்தை உருவாக்கிய ஷேக்ஸ்பியர், பெர்னுட்ஷா அந்தக் கலைக்கு மெருகு கொடுத்தார்கள். இப் படித்தான் மேல்நாட்டு நாடகங்கள் வளர்ந்துள்ளன. தற் காலத்தில் புதிய முறையில் செழிப்பு அடைந்துள்ளன. நாம் இத்துறையில் பின்தங்கித்தான் இருக்கிருேம்.

அந்த நாளில் பாடலிலே தான் உரையாடல் இருக்கும். 'நல்லதங்காள்' நாடகத்தை எடுத்துக் கொள்வோம். தன் நாட்டில் பஞ்சம் வந்து விட்டதை அறிந்து தனது ஏழு குழந்தைகளையும் கூட்டிக் கொண்டு தனது தமையன் நல்லண்ணன் வீட்டிற்கு புறப்படுகிருள் நல்லதங்காள். அண்ணன் வேட்டைக்கு போய் இருப்பதால் அண்ணனின் மனைவி மூளி அலங்காரி சரியாக உபசரிக்கவில்லை. மனம் நொந்து ஊர் திரும்பினல் கணவன் முகத்தில் விழிக்க நேரிடுமே என்று எண்ணி ஏழு குழந்தைகளையும் கிணற்றிலே தள்ளி தானும் சாகிருள். இதுகதை. அவள் தன் ஊரை விட்டு புறப்படும் நேரத்தில், எதிரில், நாவிதன், விறகு, எண்ணை வந்ததால் ''சகுனம் சரியில்லை, போக வேண்டாம்'' என்கிருன் கணவன். அபசகுனங்களை மீறி போன பலனை அவள் அனுபவித்தாள். (அப்போது பாடல்) குழந்தைகள், ''அம்மா பசிக்குதே!''

என்க, ''பசித்த மக்களா கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். பழுத்த கனிகளை பொறுக்கித் தருகிறேன் மக்களா! என் மக்களா!'' என்கிருள் நல்லதங்காள்.

'வள்ளி-திருமண' நாடகத்தில், முருகனுக்கும் நாரதருக்கும் தர்க்கப் பாடலை என்ன கருத்தில் இயற்றியுள்ளார்கள் பாருங்கள்,

சுப்பி:- மார்க்கத்தில் கண்ட கனி தனக்குற்ற, சிலாக்கியமென்ன முனியே:

நார:- அதைப் பார்க்கும் பொழுதே, புலன்களுக்கெல்லாம் ருசி தருந்தீங்கனியே!

சுப்பி:- பக்ஷிகள் கண்டால் இன் நேரமதைப் பற்றி, பக்ஷித்திடாதோ சொல்வீர்.

நார:- பக்ஷிகள் கண்டால் பறந்தோடு மாகையால் பஷமுடன் செல்வீர்.

சுப்பி:- (வசனம்) நாரதா! ஒரு வேளை அது மற்றவர் கையில் அகப்படாமல் அப்படியே இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். நான் போய் பார்க்கும் போது, (பாடல்) எட்டாத கொம்பிலிருந்திடில் அக்கனியை எப்படி கொய்திடலாம்?

நார:- எட்டும் படிக்கிரு கொம்புண்டதைப் பற்றி, ஏறிப்பறித்திடலாம்.

சுப்பி:- விளைந்து முதிர்ந்த அந்தீங்கனிக்கே தேனும், மேவுங்குறிகளுண்டோ?

நார:- குளிர்ந்த முகமுண்டு, கால் கையிரண்டுண்டு, கோதில்லாக் கண்களுண்டு.

சுப்பி:- பெண்களுக்குள்ள குறியிருந்தாலது, பேசுமோ, வாய் திறந்தால்.

நார:- ராகப் பெண்களுக்கெல்லாம், சுவை தருமே அந்தப் பைங்கிளி வாய் திறந்து.

சுப்பி:- பனிமலர் சோலையிலுள்ள செழுங்கனி பைம் புனத்திலேது.

நார:- கனியென்றுரைத்தாலும் கன்னியென்ருலும் கருத்துவேருகாது.

இப்படிப் பல பாடல்கள் ஸ்பெஷல் நாடகங்களில் இன்றும் பாடி வருகிருர்கள்.

அன்றும் இன்றும் உள்ள சமூக நாடகம், புராண நாடகம் ஆகியவற்றின் தன்மையை கொஞ்சம் கவனிப் போம். ஸ, ரி, க, ம, ப, த, நி, ஸா என்று வாயால் சொல்லுவதும், எழுத்தால் எழுதுவதும் மிகவும் எளிது. அதை வாத்தியத்திலோ, அல்லது ஸ்ருதிலயத்துடன் பாடு வதோ மிகவும் கஷ்டமானது. அதைப்போலத்தான் நாட கத்தை எழுதி தயாரித்து, அரங்கேற்றம் செய்து வெற்றி அடைவது. ஒரு நாடகத்தின் அஸ்திவாரம் பலமாக இருக்க வேண்டும். பிறகு கதையின் கோர்வை நழுவாமல், வசனங்களை எளிய நடையில் கருத்துள்ளதாக எழுத வேண்டும், ஆடை, அலங்காரம், அரங்க அமைப்பு, இசை நடிப்பு இவைகளை திறமையாக அமைத்துக்காட்ட வேண்டும்.

அன்று முதல் இன்று வரை பல ஆசிரியர்கள் நாடகக் கலை வளர பாடுபட்டுள்ளார்கள் என்பதனை நாம் அறி வோம். குறிப்பாக சில ஆசிரியர்கள் எழுதிய வசனங்களை உங்கள் மத்தியில் வைக்கிறேன்.

வசனம் 1 ''ம், இவ்வளவுதானு! சாதாரண உல கத்தில் ஆண்பிள்ளைகளே பெண்களை மயக்க எத்தனிப் பார்கள். பெண்களே வலிய வந்தழைத்தால் வாது செய்து தடுப்பவருண்டோ? விஷயமறியாமல் வெறுத்து பேசுகின் றீரே! உம்மை அழைத்தேகும் சொந்த மெனக்கில்லாவிட் டால் உமது பந்துக்கள் நிறைந்திருக்கும் இந்த சபையில் பகிரங்கமாக உம்மை வந்தழைப்பேனு? ஐயோ பாவம்! அறியாத பெண்ணை விவாகம் செய்து கொண்டு அதை காக்க வேண்டாம். வாலிப சுகத்தை அனுபவிக்க வாரு மையா என்று கூப்பிட்டால் உமக்கிவ்வளவு கோபம் வருகிறதே, இதோ என்னைப் பாரும், நல்ல பருவம், அதற்கேற்ற உருவம். இருவரும் சரி ஜோடி. ஏகமுகமாக சயனத்தில் அமர்வோமானுல் ஆ! சொல்லவும் வேண் டுமோ சுகத்தை வாருமையா வாய் பேசாமல்.''

வசனம் 2 ''உன் கொலு மண்டபத்திலே மந்திரி பிரதானியரின் முழக்கமிருக்காது, மயிலாட்டமிருக்கும். மாவீர னின் நடமாட்டமிருக்காது. மான் விழியின் தேரோட்ட மிருக்கும். கப்பம் செலுத்துவோரை பற்றி பேச்சு இருக் காது, கனி இதழ்களைப் பற்றி விமர்சனம் இருக்கும். சிரிப்பு செங்கோல் பிடிக்கும்! முத்தம் தர்பார் நடத்தும்! ஆலிங்கனம் ஆட்சி புரியும்.''

வசனம் 3 ''பார்த்தால் புரிந்து கொள்ளக்கூடிய சினிமா படமல்ல அவள், படித்து தெரிந்து கொள்ள வேண்டிய தத்துவ சாஸ்திரம் அவள். கள்ள சாராய மல்ல அவள், கலை கமழும் காவியம். மாலை தொடுக் கப்பட்ட பாரிஜாத மலர் எடுத்தவளை காலமென்னும் பாம்பு தீண்டிவிட்டது. அந்த மங்கையின் ரூபத்திலே இந்த மலர்.''

வசனம் 4—

ஆண்:- கதவைத் திறந்து கொண்டு வந்த உனக்கு கண்களை திறந்து பார்க்க திடமில்லையா என்ன?

பெண்:- என் கண்கள் திறந்துதானே இருக்கின்றது.

ஆண்:- ஆம். கண்கள் திறந்துதான் இருக்கின்றன. ஆனால் தலைதான் நிமிரவில்லை போலும்.

பெண்:- அது என்னுடைய இஷ்டம்.

ஆண்:- உன் வாய்மொழியின் வசீகரமே ஒரு அலாதி தான்.

பெண்:- தாய் தந்தை இல்லாத சமயத்தில் வந்து தனிமையில் இருக்கும் ஒரு பெண்ணிடம் சரஸ வார்த்தைகள் பேசுவதில் தங்கள் போக்கும் ஒரு அலாதிதான்.

ஆண்:- சமயமறிந்து காரியத்தை சாதிப்பதுதானே தனி மனிதனின் கடமை.

பெண்:- உண்மை! சத்காரியங்களை சாதிப்பது கடமை. ஆனால் இது மடமை.

ஆண்:- இதுதான் புத்திசாலித்தனம்.

பெண்:- அன்னிய மாதரை அன்னையாக எண்ணாமல் பெண்டாள நினைப்பது பேடித்தனம்— தானாக கனியாத பழத்தை தடி கொண்டா அடித்து பழுக்க வைப்பது?

ஆண்:- வீரனாகவே வாழவிருந்த என்னை கோழை யாக்கி விட்டாயே! சிதறாத என் சிந்தையை சிரித்து, சிரித்து சிதற வைத்து விட்டாயே! பிரிய மாட்டோம் நம்மையொருத்தராலும் பிளவுபடுத்த முடியாது, என்று சொல்லிச் சொல்லி இன்று பிரிந்து விட்டாயே வானமும் காற்றும் மாறலாம். நம்முன் வளரும் காதல் மட்டும் மாறாது என என் நெஞ்சில் சாய்ந்து நெடுவானம் காட்டிச் சென்றாயே! அந்த வார்த்தைகள் எல்லாம் உணர்ச்சி வசப்பட்ட வெறும் வார்த்தைகள்தானா? மலர்ந்த தோட் டத்தில் மானாகத் திரிந்த என்னை மயானக் காட்டில் தனி மையாக்கிவிட்டாயே!

# கலைமாமணிகள்



## தமிழக முதல்வர்
## மாண்புமிகு திரு. எம்.ஜி.ஆர். அவர்கள்

உலகில் பலகோடி மக்கள் தோன்றி வாழ்கிறார்கள். எல்லோரையும் நாம் உயர்த்திப் பேசுவதில்லை. எல்லோரைப் பற்றியும் எண்ணுவதுமில்லை. ஆனால் சில வள்ளல் மஹான் களை அவர்கள் ஏழைகளாக இருந்தாலும் சரி, பணக்காரக் குடும்பத்தில் பிறந்தாலும் சரி, எப்படிப் பிறந்தாலும் நாட்டுக்கோ மொழிக்கோ, கலைத் துறைக்கோ, சிறந்த பணி ஆற்றியிருந்தால் அவர்கள் நிச்சயம் நம் உள்ளத்திலே இடம் பெற்று விடுகிறார்கள். அவர்களுடைய புகழ், பெயர் என்றும் மறைவதில்லை. அந்த முறையில் டாக்டர் புரட்சித்தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு, எம்.ஜி. இராச்சந்திரன் அவர்களின் நாமம், கலை உள்ளவரை அழியாது, மறையாது என்று நான் உறுதியாகச் சொல்வேன்!

திரு எம்.ஜி.ஆர். அவர்கள் செல்வந்தர் குடும்பத்தில் பிறந்து, பின் வறுமையை கட்டித் தழுவி வளர்ந்தார். அவருடைய அண்ணு திரு. எம்.ஜி.சக்கரபாணி அவர்களின் முயற்சியாலும் திரு, எம்.ஜி.ஆர். அவர்களின் உழைப்பாலும் நல்ல எண்ணத்தாலும் மனத்தாலும் தமிழ் மண் அவரை உயர்த்தியது. தமிழ்மொழியை வளர்க்கவும் கலையை காக்கவும் இடை விடாது பாடுபட்டு வந்தார்.

அடிமை நாடுகளில் கலை வளர்ச்சி பூரணத்துவம் பெற்றதில்லை. இந்திய நாடு அடிமைத்தளையில் சிக்கி தவித்துக் கொண்டிருக்கையில்தான், எம்.ஜி.சக்கரபாணி அவர்களும்,

எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களும் கலை உலகில் அடி எடுத்து வைத்து எத்தனையோ எதிர்ப்புகளுக்கு இடையே கலை உலகில் நிமிர்ந்த நடைபோட்டு நேர் கொண்ட பார்வையால் மக்களின் பாராட்டை பெற்றார்கள்.

1936-ல் திரைப்பட உலகில் நான் நுழைந்தேன். ராஜ கோபால் டாக்கீஸ் உரிமையாளர் திரு. மானகிரிலெட்சுமணன் செட்டியார் அவர்களின் படம், ''கிருஷ்ணன் தூது''. அந்தக் கம்பெனியில் ஆர். என். நம்பியார் அவர்கள் பணியாளராக வேலை செய்து வந்தார். இவரை 1950-ல் திரு. எம்.ஜி.ஆர். தான் ஸ்டண்டு மாஸ்டராக அறிமுகம் செய்து வைத்தார்கள். படம்: ''மர்மயோகி.''

1939-ல், 'சதிமுரளி' என்ற படத்தில் முக்கிய பாத்திரமேற்று நடித்தேன். அப்போது நான் சந்தித்த நடிகர்கள் திரு, எம். கே. ராதா அவர்கள், எல். நாராயணராவ், டி. ஆர். மஹாலிங்கம், காளி என். ரத்தினம் அவர்கள், பபூன் சங்கர அய்யர், பி.ஜி. வெங்கடேசன், எம். ஆர். சந்தானலட்சுமி, நாகர்கோயில் மஹாதேவன், எஸ். வரலட்சுமி (ஒன்பது வயது சிறுமி) அந்தப் படத்திற்கு கதை, வசனம், திரு. டி. சி. வடிவேலு நாயக்கர் அவர்கள்.

1942-ல், இராஜ—இராஜேஸ்வரி படக்கம்பெனி''யின் உரிமையாளர் திருமதி பி. கண்ணும்பா அம்மையார் அவர்கள், ஜெமினியுடன் கூட்டுச் சேர்ந்து '' ஹரிச்சந்திரா' என்னும் தமிழ் படத்தை திரு. பி.யு. சின்னப்பா, எல். நாராயணராவ், எம். ஆர். சுவாமிநாதன் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்களுடன் ஒப்பந்தத்தின் பெயரால் நானும் அசலாத்து பிள்ளையாக நடித்தேன். நடிகர் கோபாலகிருஷ்ணன் அவர்களும் என்னுடன் சேர்ந்து நடித்தார். என்னை சிபாரிசு செய்தவர், திரு. டி.சி. வடிவேலு நாயக்கர் அவர்கள்.

அப்போது நாங்கள் இன்றைய பிரபல இசை அமைப்பாளர் திரு. எம்.எஸ். விஸ்வநாதன், டான்ஸ் மாஸ்டர் கோபாலகிருஷ்ணன், மற்றொரு இசை அமைப்பாளர் அஸ்வத்தாமா ஆகியோர் திரு, எஸ்.வி. வெங்கட்ராமன் அவர்களிடம் கோரஸ் பாடிக் கொண்டிருந்தோம்.

''ஹரிச்சந்திரா'' படத்தில் நடிக்கும் போதுதான், சத்தியகீர்த்தியாக படத்தில் நடித்த, திரு. எம்.ஜி.ஆர். அவர்களை சந்தித்தேன். நல்ல சிகப்பு! கட்டுமஸ்தான

உடம்பு. தீர்க்கமான பார்வை அன்றைய பெரிய நடிகர்களிடம் நின்று கைகளை கட்டியவாறுதான் பேசுவார். புகையோ, பொடியோ, வெற்றிலையோ, இவருக்குப் பழக்கமில்லை, எல்லா நடிகர்களுடன் சேர்ந்துதான் சாப்பிடுவார். (அன்று பிரபல நடிகர்களுக்கு தனி சாப்பாடு, இடம் கொடுக்கப்பட்டது.)

கலை உலகில் அவர் விதைத்த வித்துத்தான், இன்று வளர்ந்து, செடியாகி, மரமாகி, பூத்துக் காய்த்துக் கனி தருகின்றது என்பதை கலைத் துறையிலுள்ள ஒவ்வொருவரும் உணரவேண்டுமென்பது என் எண்ணம்.

*1948, 49,* ஜுபிட்டர் பிக்சரின் உரிமையாளர் திரு. சோமசுந்தரம் அவர்கள், மூன்று ஆண்டு ஒப்பந்தத்தில் மாதச் சம்பளத்தில் என்னை சேர்த்துக் கொண்டார்கள். ''கன்னியின் காதலி'' என்ற படத்தில் முதன் முதலில் மாதுரி தேவிக்கு 'டூப்' போட்டு சண்டைக் காட்சிகள் செய்தேன். அப்போது ''மர்மயோகி'' படமும் நடந்து வருகிறது. அதில் கதாநாயகனுக நடிப்பவர் திரு. எம்.ஜி. ஆர். அவர்கள். அன்று ஸ்டண்டு செய்ய நடிகர்கள் இல்லை. சாண்டோ சின்னப்பதேவர், எம்.ஆர். சந்தனாம், சி.பி. கிட்டான், கோபால், மாதவன், ஷண்முகம், இருசப்பன் சங்கரன் இன்னும் பலர் ஸ்டண்டு நடிகராக அந்தப் படத்தில் கதாநாயகனுடன் சண்டை செய்வோம். கதாநாயகன் பக்கமிருந்து வில்லன் கூடவும் சண்டை போடுவோம்.

''மர்மயோகி'' படத்தின் மூலமாகத்தான், திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் ஆர். என். நம்பியார் அவர்களை ஸ்டண்டு மாஸ்டர் ஆக்கினுர். பின்னுல் ஸ்டண்டு நடிகர்களையும் உற்பத்தி செய்தார்.

கோவை, இராமனுதபுரத்தில்தான் ஜுபிடரின் லாட்ஜ் இருந்தது, நாங்கள் எல்லாம் அங்குதான் தங்குவது. லாட்ஜ்க்கு மூன்ருவது வீட்டில்தான் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் குடும்பத்துடன் தங்கி இருந்தார். நான் ஒய்வு நேரங்களில் திரு. எம்.ஜி.ஆர். இல்லம் சென்று கேரம் போர்ட் ஆட்டம் ஆடுவேன். அவர் நன்ருக விளையாடுவார். ஒரு காயை அடிக்கும்போது பாக்கெட்டில் மூன்று காய்கள் போடுவார். அவருடன் நான் ஆடி ஜெயித்ததே இல்லை. அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஜுபிடரில் தான் அதிகமாக கிடைத்தது.

''மர்மயோகி'' படத்திற்கு பிறகு பெரிய கதாநாயகன் அந்தஸ்தைப் பெற்றுவிட்டார் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள்.

ஜுபிடர் ஒப்பந்தம் முடிந்து சென்னையில் பல படங்களில் நான் நடித்துக் கொண்டிருக்கையில்தான் தென்னிந்திய நடிகர் சங்கம் கே. சுப்பிரமணியம் அவர்களால் துவக்கப்பட்டது. அந்த நடிகர் சங்கத்தை விரிவு படுத்தியவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள்தான். நான் பல ஆண்டுகள் செயற்குழு உறுப்பினராக இருந்தேன். அந்த சங்கத்திற்கு அவர் செய்த உதவிகளை எழுத்தால் எழுதிக் கூற முடியாது.

மார்க்கண்டேயன் ஒரே ஒரு முறைதான் எமனை எதிர்த்து வெற்றி கொண்டான். திரு. எம்.ஜி.ஆர். அவர்களோ மும்முறை எதிர்த்து எமனையும் வெல்லும் சக்தியை நான்கு கோடி தமிழ் மக்கள் இறைவனிடம் வழிபாடு செய்து பெற்றுத் தந்துள்ளார்கள். மேலும் தாயின் ஆசி பலமாக இருக்கிறது.

'நான் இருக்கப் பயமேன்' என்ற பொன் மொழியை ''சாய்பாபா'' கூறி இருக்கிறார். திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் கூறும் வார்த்தை, நான் இருக்கேன் என்ன செய்ய வேண்டும்? கவலைப்படாதே! இதுதான் அவருடைய தாரக மந்திரம்.

1956-ஆம் ஆண்டில் ''ரம்பையின் காதல்'' படப்பிடிப்பில் நானும் திரு. கே. ஏ. தங்கவேலு, திரு காக்கா இராதாகிருஷ்ணன், டாக்டர் பி. பானுமதி, திரு. டி.எஸ். பாலையா, திரு. எம்.ஆர். சுவாமினாதன் அவர்களும் கலந்து கொண்டோம். மதியம் சாப்பாட்டு வேளையில் திரு. எம்.ஆர். சுவாமினாதன் அவர்களுக்கு ஒரு சீட்டை வழங்கி உணவு பண்டக சாலைக்குச் சென்று சாப்பிடச் சொல்லிவிட்டார்கள். கையில் சீட்டை வைத்துக் கொண்டு சாப்பிடப் போகாமல் தவித்துக் கொண்டிருக்கையில், (1937-ல் ''குட்டி'' என்ற படத்தில் கலைவாணர் திரு. என்.எஸ். கிருஷ்ணன் அவர்களுடன் நானும் நடித்தேன். அந்தப் படத்தின் நகைச்சுவைகளை திரு. எம்.ஆர். சுவாமிநாதன் தான்—கதை, வசனங்களை எழுதினார். அதனால் அப்போதே அவரை நன்கு தெரிந்திருந்ததால்), அவரை அணுகி சாப்பிடக் கூப்பிட்டேன்.

கையில் வைத்திருந்த சீட்டைக் காட்டி போய் சாப்பிடச் சொல்லிவிட்டார்கள் என்று வருத்தப்பட்டார்.

உடனே நான் போய் சாப்பாடு வாங்கி வருகிறேன், நீங்கள் இங்கேயே இருங்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கையில் ''மதுரை வீரன்'' படத்தில் நடிக்க வந்திருந்த திரு. எம். ஜி.ஆர். அவர்கள் சாப்பாட்டிற்காக மேக்கப் ரூமிற்கு வரும்போது வழியில், எம்.ஆர். எஸ். அவர்களை பார்த்த வுடன் என்னையும் அவரையும் அழைத்துக் கொண்டு மேக்கப் ரூமில் எங்களுக்கும் இலைகள் போட்டு சாப்பிடச் சொன்னார்.

இலையில் சாப்பாடு போடப்பட்டது. முதலில் கீரை மட்டும் பறிமாறப்பட்டது. திரு. சுவாமிநாதன் அவர்கள் சாப்பிட முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டார். திரு. எம். ஜி.ஆர். அவர்கள் அண்ணே ஏன் சாப்பிடாமல் இருக்கி றீர்கள் என்று கேட்டார். ''ராமச்சந்திரா என்னுடைய வயிறு சரியில்லை எதைச் சாப்பிட்டாலும் ஏற்றுக் கொள்ள மறுக்கிறது' என்றார். பயப்படாதீர்கள். நான் இருக்கேன் நாளை வீட்டிற்கு வாருங்கள் டாக்டரிடம் காட்டுங்கள் உங்கள் உடம்பை, எல்லாம் சரியாகிவிடும், என்று கூறிய துடன், அண்ணனை வீட்டிற்கு அழைத்து வரும்படி என்னிடம் கூறினார்.

இன்று லாயிட்ஸ் சாலையில் உள்ள அ.தி.மு.க. அலு வலகம் அன்று நடிகர் சங்கமாக இருந்தது. மாலை, 5-மணி அளவில் திரு. சுவாமிநாதன் அவர்கள் சங்கத்திற்கு வந் தார்கள். நான் அவரை அழைத்துக் கொண்டு, திரு. எம். ஜி.ஆரின் இல்லம் அடைந்து, அவரை உள்ளே அனுப்பி விட்டு நான் நடிகர் சங்கம் திரும்பிவிட்டேன்.

திரு சுவாமினாதன் அவர்கள் திரு, எம்.ஜி.ஆர். அவர் களை பார்த்துவிட்டு என்னிடம் வந்து அவர் கூறிய வார்த் தைகள் வருமாறு: ''என் உடம்பை பத்திரமாக பார்த் துக் கொள்ளும்படி வாரி வழங்கி விட்டான் ராமச்சந்திரன் இனிமேல்தான் நான், என் உடம்பை கவனித்துக் கொள் ளப் போகிறேன் வெங்கட்ராமா'', என்று சொன்னதுடன் நில்லாமல் நீண்ட ஆயுளுடன் ராமச்சந்திரன் இருக்க வேண்டுமென்று மனதார வாழ்த்திவிட்டு விடைபெற்றுக் கொண்டார்.

வாழ்க்கையில் தான் சம்பாதித்த செல்வத்தை திரு. கன்னையா அவர்கள் தெய்வத் திருப்பணிகள் செய்தார்,

அதேபோல்தான் பாலாமணி அம்மையாரும், பின், கலைவாணர் திரு. என். எஸ். கே. அவர்களும் நண்பர்கள் கஷ்டப்படுவதை அறிந்து விட்டால் கையில் பணமில்லாவிட்டால், வெள்ளி கூஜா, வெத்திலைப் பெட்டி, தங்க நகைகளை கொடுத்து போய் வா! என்பார்; கொஞ்சநாள் கழித்து திரும்பியும் அவரைப் பார்க்க வருவார். ''நான் தான் கொடுக்கும்போதே சொன்னேனே, போய்ட்டு வா'' என்று. அப்படி ஒரு தீர்க்கதரிசி கலைவாணர் அவர்கள். அதைபின்பற்றியவர்தான் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள்.

கலைஞர், கவிஞர், அறிஞர், புலவர், கூன், குருடு, நொண்டி, ஊமை, ரத்தத்தின் ரத்தங்களுக்கெல்லாம் அறிந்தாலோ, கேட்டாலோ, சொன்னாலோ வாரி, வாரி, அள்ளிக் கொடுப்பதை நான் அறிவேன்! கொடுத்த பின்பும் போதுமா? என்ற கேள்வியைத்தான் கேட்பார். இப்படிப் பட்டவரை அறிந்து பழகிய நான் பாக்கியசாலிதான்!



**தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள்**
**(1867–1922)**

**திரு.** சங்கரதாஸ் சுவாமிகள் பல நாடகங்களை எழுதி பாடல்களை தானே இயற்றி நடித்துள்ளார். அவர் எழுதிய பாடல்களையும் வசனங்களையும் பேசிப்பாட ஆற்றலும் திறனும் வேண்டும்.

1867-ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 22-ஆம் நாள் வ.உ.சி. பாரதி, கட்டபொம்மன் ஆகியோரையும் சந்தச் சரபப்புலவர்களையும், தியாகிகளையும் தந்த திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தூத்துக்குடியிலே பரங்கியர்களை விரட்டிய வெள்ளையத்தேவன் பரம்பரையில் உதித்து வீர மறக்குடியிலே தாமோதரக் கணக்குப் பிள்ளையின் மகனுகப் பிறந்து, பழனி தண்டாயுதபாணி சுவாமிகளிடம் தமிழ் அறிவை பெருக்கிக் கொண்டு தூத்துக்குடி உப்பு பண்டக சாலையிலே சிறிதுகாலம் கணக்கராக பணிபுரிந்து பதிமூன்று பதினன்கு வயதிலே வெண்பா, கலித்துறை, இசைப்பாடல் எழுதத் துவங்கி நாடக கம்பெனிகளில் ஆசிரியராகவும், நடிகராகவும் சிறிது காலம் இருந்து இராவணன், இரணியன், எமன், சனீஸ்வரன் போன்ற பாத்திரங்களை ஏற்று நடித்த சிறப்பை பெற்றுள்ளார்கள்.

சாமி நாயுடு, அல்லி பரமேஸ்வர அய்யர், வள்ளி வைத்திய நாத அய்யர், பி.எஸ்.வேலு நாயர் போன்றோர்

நாடக அரங்கில் பயிற்சி ஆசிரியராக பணி புரிந்த நேரத்தில் தான் பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள் எழுதிய ''மனோஹரா'' நாடகத்திற்குப் பாட்டுக்களை எழுதிக் கொடுத்தார்கள்.

அதன்பிறகு, திரு. ஜெகன்னாத அய்யர் கம்பெனியில் சிறிது காலம் பயிற்சி அளித்தார். அப்போது அவரிடம் பயிற்சி பெற்ற நடிகர்கள் பி.டி. சம்பந்தம், டி,பாலசுப்பிரமணியம், டி.பி. பொன்னுசாமிபிள்ளை, எம்.எஸ், முத்துக் கிருஷ்ணன், டி.எஸ்.ராஜமாணிக்கம் பிள்ளை, எஸ்.வி. வெங்கட்ராமன், எம்.ஆர். ராதா. அதன் பிறகு 1918 ஆம் ஆண்டு "தத்துவ மீனலோசனி வித்வ பால சபா" நாடக கம்பெனியை துவக்கினார். இந்த கம்பெனியில் இருந்துதான் டி.கே.எஸ் சகோதரர்கள் நடிப்புப் பயிற்சியை பெற்றார்கள்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் நாடக மேடைகளில் வசனங்கள் பேசப்படுவதில்லை.

மாம்பழக் கவிராயர், முத்துசாமிக் கவிராயர், அருணாசலக் கவிராயர் போன்ற மேதைகள் இசை நாடகங்கள்தான் எழுதிவந்தார்கள். தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் காலத்தில் தான் வசனங்களையும் பாடலையும் இணைத்து நாடகக்கலை மறுமலர்ச்சி அடைந்தது.

ஒரு சமயம் கோவலன் நாடகத்தில் கோவலனின் மனைவி கண்ணகியின் கால் சிலம்பை விற்றுவர மதுரை சென்று வருவதாக கண்ணகியிடம் கூறுகிறான். அதற்கு கண்ணகி வாய் மொழியால் பதில் சொன்னாள்: ''மா பாவியோர் கூடி வாழும் மதுரைக்கு மன்னா நீர் போகாதீர் இன்று'' என்று கவிதை நடையில் கோவலனுக்கு உரைத்தாள். நாடகத்தை பார்த்துக் கொண்டு இருந்த மதுரை மக்கள் சும்மா விடுவார்களா? சீறி எழுந்து கூச்சலிட்டார்கள். சுவாமிகள் உடனே மேடைக்கு வந்து கவிதையில் உள்ள கருத்தினை விளக்கினார்.

'மா' என்ற சொல் திருமகளாகிய இலக்குமியையும், 'பா' என்ற சொல் மலைமகளாகிய பார்வதியையும், 'வி' என்ற சொல் கலைமகளாகிய ஸ்ரீ வித்யா தேவியையும் குறிக்கிறது. மாபாவியோர் கூடிவாழும் மதுரை என்றால் திருமகளும், கலைமகளும், மலைமகளும் சேர்ந்து வாழும் மதுரை என்று பொருள்படுகிறது. சகல செல்வமும் கொழிக்கும் மதுரையில் இச்சிலம்பை வாங்க மக்கள் இல்லை என்ற கருத்தை கவிதையில் சுட்டிக்காட்டினேனேயன்றி, மதுரையை சிறுமைப்படுத்தி எழுதவில்லை என்று சொன்ன

விளக்கத்தைக் கேட்ட ஜனத்திரள், சுவாமியின் புலமையை கண்டு பாராட்டினர்கள்.

அந்தாதி, சிந்தாமணி, சந்தம், சிந்து, கலம்பகம், சிலம்பு கடுகம், காஞ்சி, நைடதம், நன்னெறி, அறநெறி, புறநெறி பெருங்கதை, இராமாயணம், மகாபாரதம், விரலிவிடு தூது வேந்தன் விடு தூது, தத்தை தூது, தாதை தூது, நத்தை தூது, நாரை தூது, இன்னு நாற்பது, இனியவை நாற்பது, சொன்னு நாற்பது, சொல்லா நாற்பது, வெண்பா, கலிப்பா, திருப்பா ஆகிய சகல இலக்கண இலக்கியங்களையும் கற்றறிந்தவர் சுவாமிகள்.

சுவாமிகள் 1922-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ஆம் தேதி தனது பூதவுடலை பாண்டிச்சேரியில் நீத்தார்.

சுவாமிகள்தான் மறைந்துவிட்டார்கள். அவர் எழுதிய நாடகங்கள் பாடல்கள் மறையவில்லை. கோவை, புதுக்கோட்டை, மதுரை, சேலம், திண்டுக்கல், சென்னை போன்ற நகரங்களில் இன்றும் நடைபெறுகிறது.

சுவாமிகள் நாடகங்கள் மூலம் பாடல் பாடி புகழ்பெற்ற கலைஞர்கள்: பாலகுரு பிள்ளை, ராஜாஷண்முகதாஸ், விஸ்வநாததாஸ், வள்ளி வைத்தியநாத அய்யர், அரங்கசாமி நாயுடு, தாமோதரராவ், ஆரியகான செல்லப்பா, அனந்த நாராயணன், கள்ளபார்ட் நடராஜ ஆசாரி, கிருக்கு கோவிந்தசாமி, ஆஞ்சனேயர் கோவிந்தசாமி, எம்.ஜி. நடராஜபிள்ளை, டி.கே. கண்ணுப்பிள்ளை, தாணுப்புள்ளை, ஆத்மலிங்கம் பிள்ளை, ரங்கபாஷ்யம், தஞ்சை ஜெகன்னுதராவ், சீனுவாசபிள்ளை, எம்.ஜி. தேவராஜு, ஷண்முக சுந்தரப் புலவர், பழனியாபிள்ளை, சி.எஸ். சாமண்ணு, பைரவ சுந்தரம் பிள்ளை, பி.எஸ். வேலு நாயர், சொக்கலிங்க பாகவதர், எஸ்.எஸ்.மணி பாகவதர், எஸ்.வி. சுப்பையா பாகவதர், எம்.கே.தியாகராஜ பாகவதர், எஸ்.ஜி.கிட்டப்பா, மாரியப்ப சுவாமிகள், எம்.எம். சிதம்பரநாதன், சி.வி.வி. பந்தலு, வி.ஏ. செல்லப்பா, எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி, பி.பி. ரெங்காச்சாரி, பி.எஸ். கோவிந்தன், சி.எஸ் ஜெயராமன், டி.ஆர். மகாலிங்கம், எம்.எம். மாரியப்பா, உடையப்பா, எம். ஏ. மஜித், ஜாப்ஜான் பாய், என்.என்.கண்ணப்பா, பி.யு.சின்னப்பா, கொத்தமங்கலம் சீனு, டபிள்யூ.எஸ். ராமனுதன், வி.என். சுந்தரம், என்.பி. அப்துல்காதர், தேவுடு அய்யர், எஸ்.ஜி. காசி, ரத்தின வேல் பத்தர், காதர் பாஷா, வாசுதேவ நாயர் ஏ.எஸ்.ராஜப்பா, ஜி.ராமனுதன், எஸ்.எம் சுப்பையா,

எம்.ஆர்.வாசுவாம்பாள், கே.அரங்கநாயகி, டி.எஸ். மாணிக்கம், தி.க. ஷண்முகம், கே.டி. சந்தானம், என்.எஸ்.கே., காளி—என். ரெத்தினம், ஸ்ரீ கன்னையா, எஸ்.வி. வெங்கட்ராமன், பபூன் ஷண்முகம், பெரிய கருப்பையா, எல். நாராயணராவ். கிளவுன் சுந்தரம், சங்கர அய்யர், கண்ணுடி ராஜு, கிட்டு, திருவாரூர் ராமசாமி, கே.ஆர். ராமசாமி, எஸ்.டி.சுப்பையா, எம்.எஸ். குமரேசன், சக்திவேல், தங்கப்பா, நாகராஜன், மகாதேவன், போன்ற நடிகர்கள்.

சுவாமிகளின் பாடல்களைப் பாடி புகழ் அடைந்த பெண்கள்; பாலாமணி அம்மாள், டி.ஆர். முத்துலட்சுமி, டி.எம்.கமலவேணி. டி.பி. ராஜலட்சுமி, கே.பி. சுந்தராம்பாள், எம்.எஸ். விஜயாள், பி.எஸ். சிவபாக்கியம் கோல்டன் சாரதாம்பாள், பி.ஆர். மங்களம், ரத்தினுபாய் சரஸ்வதிபாய், எஸ்.பி. கமலம், பி.எஸ். வேலம்மாள், நாகரத்தினம், எஸ்.டி. சுப்புலட்சுமி, எஸ்.ஆர். ஜானகி, கே.எஸ். அங்கமுத்து, கே.எஸ். ஆதிலச்சுமி, டி.டி. ருக்மணி ஏ.எஸ்.ராஜாம்பாள், எம்.என். சுந்தரி, கே.கே. பார்வதி, குரங்குகமலம், எஸ்.எஸ்.ராஜாமணி, கே.அரங்கநாயகி, கே. பொன்னுத்தாயி, கோமளலக்ஷ்மி, கண்ணுமணி.

திரு சுவாமிகள் எழுதிய நாடகங்கள்; ஸ்ரீவள்ளி, கோவலன், மணிமேகலை, சாவித்திரி, பார்வதி கல்யாணம், பிரபுலிங்க லீலா, பவளக்கொடி, சீமந்தனி, சுலோசனுசதி, சதி அனுசுயா, அபிமன்யுசுந்தரி, பாதுகாபட்டாபிஷேகம், இலங்காதகனம், சிறுத்தொண்டர், மிருச்சகடிகம், பிரஹல்லாதா, ரோமியோவும் ஜீலியத்தும், லவகுசா, சிம்பலைன்.



**திரு. ஏகை சிவசண்முகம் பிள்ளை**

**கி. பி.** ஆயிரமாவது ஆண்டு தொடக்கத்தில் தமிழகத்தில் மாபெரும் மறுமலர்ச்சி ஏற்பட்டது. சேர, சோழ, பாண்டியர்களென்ற மூவேந்தர்களையும் மிஞ்சும் வகையில் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு பல்லவ வேந்தர்கள் சிறப்பாக ஆட்சி புரிந்து வந்தகாலமது. தமிழகத்தில் சிற்பம், சித்திரம், கூத்து, இவைகளை பெருமளவில் வளர்த்தவர்கள் பல்லவர்களேயாகும். இதற்கு பல சான்றுகள் உள்ளன:

அப்படிப்பட்ட காஞ்சியைச் சேர்ந்த செங்கற்பட்டு மாவட்டத்தில் பல துறைமுகப் பட்டணங்கள் இருந்தன. அதில் ஒரு துறைமுகப்பட்டணமாக திகழ்ந்ததுதான் தென் பட்டணத் துறைமுகம். அந்தப் பட்டணத்தில் வழி வழியாக சான்ருேர் குலத்தில் பிறந்தவரே திரு. ஏகை சிவசண்முகம் பிள்ளை அவர்கள்.

வெள்ளையர் ஏகாதிபத்யத்தை ஒழிக்க தேசபக்திக் கனலெழுப்பும் வீராவேசமான பாடல்களை எழுதி மக்களின் மனதிலிருந்து அடிமை இருளை விரட்ட காரணமாகயிருந்த, மகாகவி சுப்பிரமணிய பாரதியார், தேசியவிஞயகம் பிள்ளை, கோபாலகிருஷ்ணபாரதி, சதாவதானம் தெ. பொ. கிருஷ்ணசாமி பாவலர், தெ.பொ. மீஞக்ஷிசுந்தரம் பிள்ளை, பாஸ்கரதாஸ், கருப்பையா வாத்தியார், சுந்தரவாத்தியார், ஆகியோர் திரு. ஏகை சிவசண்முகம் பிள்ளை அவர்களின் வழி வந்தவர்களாவார்கள்.

*1900*-ஆம் ஆண்டின் துவக்கத்தில் திரு. ஏகை சிவ சண்முகம் பிள்ளை அவர்கள் தமிழில் பெரும் புலமை பெற்ற தோடு கலைத் துறையில் வல்லுநராகவும் இருந்தார். அன்று நாடகங்கள் கூத்து முறையில் நடத்திவந்தார்கள். அந்த முறையை மாற்றி, படுதாக்கள் எழுதி, உடைகளை அணி வித்து காட்சிகளை அமைத்து மக்கள் விரும்பி பார்க்கும் நிலைக்கு கொண்டு வந்தார். பல நாடக கம்பெனிகளில் ஆசிரி யராக இருந்து வந்தார்.

எண்ணங்களை எழுதுவது அல்லது பேசுவது என்பது இயற்கலை. எண்ணத்தில் இனிமையும் ஓசை நயமும் கலந்து பூவின் மணம் போல் நெஞ்சையும் உயிரையும் குளிரச் செய்வது இசைக்கலை! இவை இரண்டிற்கும் அப்பாற்பட் டவைதான் செயல்முறை, காட்சி என்பவை. எழுத்தும், பேச்சும், சொல்லும், இசையும், பாட்டுமில்லாமல் தன் உடலால் முகத்தால், கையால், கால்களால் கண்பார்வை யால், புருவத்தால், இதழ்களால், உடலில் உள்ள ஒவ் வொரு பாகத்தாலும் எண்ணங்களை அசைவால் உணர்த் தும் ஒருவகை பேராற்றலுக்குத்தான் நடிப்புக்கலை என்று பெயர் சூட்டியுள்ளார்கள்.

இவைகளை உள்ளடக்கித்தான் திரு. ஏகை சிவசண் முகம் பிள்ளை அவர்கள் பல நாடகங்கள் எழுதி தயாரித் துள்ளார். குறிப்பாக ''கண்டிராஜா'' ''சத்தியவான் சாவித்திரி'' ''ராமாயணம்,'' ''சீத்தா கல்யாணம்'' ''லங்கா தகனம்'', அல்லி அர்ஜுனா'' ஆகியவை இவர் எழுதி யவை!

இவரிடம் பயிற்சி பெற்றவர்கள்: தஞ்சை ஜெகன் னாத நாயடு, பாபுசாமிராவ், நாராயணராவ், எல். லஷ்மண ராவ், கவாய் தருமலிங்கம் பிள்ளை, அறந்தாங்கி ஆத்மலிங் கம் பிள்ளை, (கிறுக்கு) வாணக்கார கோவிந்தசாமி பிள்ளை ஜெகன்னாத ஆழ்வார், புதுவை ரத்தினசாமி நாயக்கர், பொள்ளாச்சி மாணிக்கம் பிள்ளை, மனமோஹன அரங்கசாமி நாயடு, வெங்கடாசல பாகவதர், வீராச்சாமி நாயடு, மன் னார்குடி எம்.ஆர். கோவிந்தசாமி பிள்ளை, பரசுராம பிள்ளை, கோவை சி.வி. கிட்டுப் பிள்ளை, சேலம் அருணாசல முதலி யார், பபூன் ராமசாமி முதலியார், இன்று நாம் போற்றி பாராட்டி வரும் தவத்திரு சங்கரதாஸ் சுவாமியும் இவரு டைய மாணாக்கர்தான்.

''ஆதி ஆலந்தூர் நாடக கம்பெனி'' திருநெல்வேலியில் முகாமிட்டிருந்தது. அக் கம்பெனியின் ஆசிரியராக இருந் தவர் திரு. ஏகை. சிவசண்முகம் பிள்ளை அவர்கள். சுவாமி களுக்கு அப்போது சங்கரன் என்ற பெயர். 24 வயதில் நடிகராகத்தான் கம்பெனியின் சேர்ந்தார். தமிழ்ப் பற்றுக் கொண்ட சுவாமிகள், திரு. ஏகை சிவசண்முகம் பிள்ளையிடம் நெருங்கிப் பழகி இலக்கிய இலக்கணங்களை அவரிடம் பயின் ருர். தனது புலமையை வளர்த்துக் கொண்டார். அவரை இறுதிவரை குருவாக மதித்து மரியாதை செய்து வந் தார்.

சுவாமியின் புலமையை உலகரியச் செய்தவர் திரு. எம்.ஆர். கோவிந்தசாமி பிள்ளை அவர்கள்தான். இவரும் திரு. ஏகை சிவசண்முகம் பிள்ளையிடம் பயின்றவர்தான். ''ஆதி ஆலந்தூர்'' நாடக கம்பெனியில் எம்.ஆர். கோவிந் தசாமி பிள்ளையிடம் சுவாமிகள் ஆப்த நண்பராக பழகினுர் கள்.

''ஆதி ஆலந்தூர் நாடக கம்பெனி''யில் பங்குதாரர் கள் இடையே பிளவு ஏற்பட்டு, இரண்டாக பிரிந்தது. பிரிந்தவர்கள் வெங்கடாசல முதலியார் கம்பெனி என்று பெயர் சூட்டி நாடகங்கள் நடத்தினர். முதலியாரும், திரு. ஏகை சிவசண்முகம் பிள்ளையிடம் பயின்றவர்தான்.

இந்த இரு கம்பெனிகளிலும் சேராமல் சுவாமிகள் எம்.ஆர். கோவிந்தசாமி பிள்ளையை கூட்டிச் சென்று அவ ருக்காக பல நாடகங்களை முதன் முதலில் எழுதினுர். அந்த நாடகங்களும் பாடல்களும் திரு. எம். ஆர். கோவிந்தசாமி பிள்ளையின் புகழ் தழைக்க உதவின.

சுவாமிகளின் புகழுக்கு காரணமாக விளங்கிய திரு. எம்.ஆர். கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் சில ஆண்டு களுக்கு பின் மறைந்து விடவே மன வேதனையில் நாடகங் களை தொடர்ந்து நடத்த முடியாமலும் சில நடிகர்களின் தொல்லை தாங்காமல் ஒரு பாடலை எழுதி பாடிவிட்டு சுவாமிகள் துறவறம் பூண்டார். என்ன பாடல்? ''குருத் துரோகிகள் ஆண் பெண்கள் நாடகக் கூட்டத்தில் வாழ்வ தென்ன?'' என்பதுதான்.

நாடகங்களை விடுத்து சுவாமிகள், பழனி வந்தடைந் தார். உடுமலை சரபமுத்துச்சாமி கவிராயர், தண்டபானி சுவாமிகள் தமிழ் அறிஞர் அருணுசல கவிராயர், இந்த மேதைகளைப் பற்றி ஏற்கனவே திரு, ஏகை சிவசண்முகம்

பிள்ளையிடம் தெரிந்து அறிந்துள்ளார். இவர்களை பழனியில் சந்தித்து, பல ஆண்டுகள் அவர்களுடன் தங்கி தனது அறிவையும் ஆற்றலையும் தெளிவு படித்துக் கொண்டார் சுவாமிகள். இந்தக் காலங்களில் தான், முருகனைப் பற்றிய பல பதிகங்களை இயற்றினர்.

காவி உடைதரித்து பிரம்மச்சரியம் பூண்டு தெய்வ வழிபாட்டில் கருத்தை செலுத்திக் கொண்டிருந்தவரை, பல நண்பர்கள் ஒன்று கூடி, பெரும்முயற்சியில், மீண்டும் நாடக ஆசிரியராக பணிபுரிய மதுரைக்கு அழைத்து வந்து, ''பால மீனரஞ்சனி சங்கீதசபையில்'' சேர்ந்து சில ஆண்டுகளுக்கு பிறகு, மானுமதுரை, என். பழனியாபிள்ளை அவர்களின் கம்பெனியில் ஆசிரியராக இருந்தார். இதன் பாகஸ்தர்கள், சின்னையாபிள்ளை, கருப்பைாபிள்ளை. இதன் பெயர், ''தத்துவ மீனலோசனி வித்துவ பாலசபா,'' இந்த இரு கம்பெனியிலும் இருந்தவர்கள், எம்.வி. மணி, டி. பாலசுப்பிரமணியம், பொன்னுச்சாமி பிள்ளை, எஸ்.வி. வெங்கட்ராமன், எம்.எஸ். முத்துக்கிருஷ்ணன், கே. சாரங்கபாணி, ராஜமாணிக்கம் பிள்ளை, கண்ணுச்சாமி பிள்ளை (டி.கே.எஸ். சகோதரர்களின் தந்தையார்) ''தத்துவ மீனலோசனி வித்துவ பாலசபை'' யில்தான், டி.கே. சங்கரன், முத்துசாமி, ஷண்முகம், பகவதி, ஆகியோரைச் சேர்த்தார்கள். இவர்களைத் தயார் செய்த பெருமை சுவாமிகளைத்தான் சேரும்.

கொங்குப்புலி கன்னிச்சரபம் முத்துச்சாமிக் கவிராயர், நாடக ஆசிரியராகப் பணியாற்ற வருவதற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பே நாடக நூல்களை இயற்றி நாடக ஆசிரியராகவும் இருந்தவர் திரு. ஏகை சிவசண்முகம் பிள்ளை அவர்கள், இவரிடம் பயின்ற இன்னொருவர், திரு. வாத்தியார் வீராச்சாமி நாயடு அவர்கள். பிள்ளையிடம் முறையாகப் பயின்று தமிழ் கவிதைகளை இயற்றி நாடகங்களை எழுதி பாடல்களை புனைந்து இவர் பல நடிகர்களை உருவாக்கியுள்ளார்.

திரு. வாத்தியார் வீராச்சாமியிடம் பயின்றவர்கள், கே. சீனுவாசபிள்ளை, கே.ஜி. குப்புசாமிநாயுடு, ஓரடி சுவாமினுதன், சீத்தாராமையா, பாலசுந்தரம், பபூன் ரங்கசாமி, பி.எஸ். வேலுப்பிள்ளை, பி.எஸ். வேலுநாயர், நன்னுபாய், கே.ஆர். கோமளம், பி.வடிவாம்பாள், ருக்மணி அம்மாள் ஆகியோர்.

திரு. முனுசாமி நாயடு அவர்கள் அன்று சோக நடிப்பில் வல்லவர். அவர் வாத்தியார் வீராச்சாமி நாயுடு வைக்காண, கும்பகோணம் வந்தடைந்து வாத்தியாரிடம் பயிற்சி பெற்ருர். சோக நடிப்பையே நடித்துவந்த ஜி.எஸ். முனுசாமி நாயடுவை, நகைச்சுவை நடிகராக்க வேண்டுமென்று, கும்பகோணம் உயர்நிலே பள்ளி ஆசிரியர் சிதம்பர அய்யரிடம் ''சுவடி தூக்கி'' என்ற நாடகத்தை அவரிடம் இருந்து வாங்கி, அதன் பெயரை மாற்றி ''தூக்கு தூக்கி'' என்று பெயர் வைத்து, முனுசாமி நாயடுவுக்கு ஒத்திகையில் நகைச்சுவையை எப்படி நடிக்க வேண்டுமென்று சொல்லிக் கொடுத்து, கும்பகோணத்தில் ''தூக்கு தூக்கி'' நாடகத்தை அரங்கேற்றினுர் வீராசாமி நாயுடு.

திரு ஏகை சிவசண்முகம் பிள்ளே அவர்கள் எழுதிய ராமாயண நாடகத்தை மட்டும் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் எழுதவில்லே. அன்று இருந்த பெருங்கலேஞர்களிடம் சுவாமிகள் கூறியவார்த்தை இதுதான்: ''நான் குருவாக மதிக்கின்ற ஏகை. சிவசண்முகம் பிள்ளே அவர்கள் எழுதிய ராமாயண நாடகத்தை ம்ட்டும் நான் எழுத மாட்டேன்.''

அந்த குருபக்தி இன்று கலேயுலகக் கண்மணிகளுக்கு தெரியவேண்டும் என்றுதான், சுவாமியின் முதல் மாணுக்கர்கள் இசக்கிமுத்து வாத்தியார், மாரியப்ப சுவாமிகள், எம். எம். சிதம்பர நாதன் ஆகியோரிடம் கேட்டுத் தெரிந்தவைகளே உங்கள் முன் வைத்துள்ளேன்.



**'தசாவதாரம்' திரு. சி. சின்னையா**

**1872**-ல், சென்னையில் பிறந்த திரு. சி. கன்னையா அவர்கள் சிறுவயதில் சென்னை அரசு அச்சகத்தில் 'காஸ்டிங்' வேலையில் பணி செய்து கொண்டிருந்தார். அப்போது அவருக்கு வயது பன்னிரெண்டு. அப்போது இசையிலும், நாடகத் துறையிலும் அதிகம் நாட்டம் கொண்டிருந்தார்.

செய்து கோண்டிருந்த வேலையை ராஜினாமா செய்து விட்டு திரு. நாராயணசாமி பிள்ளை அவர்களின் நாடகக் குழுவில் சேர்ந்தார். ஒன்பது ஆண்டுகள் இந்தக் கம்பெனியில் நடிகராக இருந்து நாடகங்களை நடத்தும் விதங்களையும் யுக்திகளையும் தெரிந்துகொண்டு சொந்தக் குழுவை ஆரம்பிக்க முற்பட்டார்.

கலை ஆர்வம் கொண்டவரிடமும், வசதியுள்ளவர்களிடமும், பொருள் உதவிபெற்று சீன்களையும் உடைகளையும் தயார் செய்து நாடகக் குழுவுடன் ரங்கூன் நகரம் சென்றடைந்து ''ராமாயணம்'' ''கண்டி ராஜா'' ''அரிச்சந்திரன்'' போன்ற நாடகங்களை நடத்தினர். பொன், பொருள், புகழ், இவைகளை வாரி வழங்கிய அங்கிருந்த தமிழர்கள், சென்னைக்கு வழி அனுப்பிவைத்தார்கள்.

நாடகங்களை ரங்கூனில் நடத்தும்போது ''ஸ்ரீகிருஷ்ண விநோத சபா'' என்ற பெயரில் ஆரம்பித்து, சென்னையில் நாடகம் நடத்தும்போது, ''ஸ்ரீ கன்னையா கம்பெனி'' என்று

மாற்றி திரு. ஏகை சிவசண்முகம் பிள்ளையை கம்பெனிக்கு ஆசிரியராக அமர்த்தி பல நாடகங்களை தயார் செய்து சென்னை வால்டாக்ஸ் தியேட்டரில் ஒரு வருட காலம் தொடர்ந்து நடத்தினர்.

தமிழகம் பூராவும் நல்ல பெயருடன் நாடகங்களை நடத்திக் கொண்டு வந்தார். அன்று படித்தவர்கள் எல்லாம் ஒன்று கூடி ''சுகுண விலாஸ் சபா'' என்று பெயரில் நாடகங்களை நடத்தி வந்தார்கள். குறிப்பாக, பம்மல் சம்பந்த முதலியார், கந்தசாமி முதலியார் (நடிகர் எம்.கே. ராதாவின் தந்தை) வி.சி. கோபால ரத்தினம், டி.ஸி. வடிவேலு நாயக்கர், ஈ.கிருஷ்ண அய்யர், சத்திய மூர்த்தி, சி.பி. ராமசாமி அய்யர், இவர்களுடன் திரு. கன்னையா அவர்கள் நட்பு கொண்டு இருந்தார். சுகுணவிலாச சபை அனுமதியுடன் சபையினர் நடத்திய ''வாசந்திகா'' என்ற நாடகத்தை பல ஆயிரம் ரூபாய் செலவு செய்து அரங்கேற்றம் செய்து அறிஞர்களிடமும், கலைஞர்களிடமும் பாராட்டைப் பெற்றார்.

திருவனந்தபுரத்தில் தனது குழுவுடன் நாடகங்களை ஒரு ஆண்டு நடத்திக் கொண்டிருக்கையில் திருவனந்தபுரத்து மஹாராஜா அவர்கள் திரு. கன்னையா அவர்களின் நாடகங்களைப் பார்க்க ஆசைப்பட்டு வேண்டுகோள் விடுத்தார். அந்த வேண்டுகோளை ஏற்று நாடகத்தை அரண்மனையில் நடத்திக் காட்டினர். மஹாராஜா அவர்கள், கன்னையா அவர்களுக்கு தோடாக்களையும் பரிசுகளையும் வாரி வழங்கி பாராட்டினர்.

1919-ல் சென்னை திரும்பிய கன்னையா அவர்கள் ராயல் தியேட்டரில் (சென்னை யானை கவுனி சால்ட் குவார்ட்டர்ஸ் அருகில் இருந்தது)—இங்குதான் செங்கோட்டை சகோதரர்களான, எஸ்.ஜி. அப்பாத்துரை, எஸ்.ஜி. செல்லப்பா, எஸ்.ஜி.காசி அய்யர், சுப்பையர், எஸ்.ஜி. கிட்டப்பா ஆகியவர்கள் நாடகக் குழுவில் சேர்ந்தார்கள்—ஸ்ரீ வள்ளி நாடகத்தில், எஸ்.ஜி. கிட்டப்பாவுக்கு நாரதர் வேடம் கொடுக்கப்பட்டது. முதல் நாடகத்திலேயே சங்கீத மழை பொழிந்ததாக வித்வான் மலைக்கோட்டை கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் கூறியதுடன் கிட்டப்பா சங்கீத கச்சேரி செய்ய வராமல் இருக்கவேண்டும்'' என்றார்.

லாகூரை சேர்ந்த திரு ஹுசேன் பக்ஷ் அவருடைய தம்பி இருவரையும் வரவழைத்தார்—கன்னையா. இவர்கள் இருவரும் ஓவிய வல்லுநர்கள். இவர்களிடம் நாடக காட்சி அமைப்புக்களையும் சீன் செட்டிங் எழுதுவதையும் ஒப்படைத்து மாதம் ரூ. 2000 சம்பளம் மற்றும் தங்கு வதற்கு வசதிகள் செய்து கொடுத்தார்.

''ஸ்ரீகிருஷ்ண லீலா'' ''ராமாயணம்'', ''மஹாபாரதம்' ''கண்டிராஜா'', ''ஸ்ரீ ஆண்டாள்'', ''தசாவதாரம்'' ''கந்த புராணம்'', ''நந்தனர்'', நாடகங்களை தயார் செய்து அரங் கேற்றமும் செய்தார். நாடகங்களுக்கு காட்சி அமைப்பு, சீன் செட்டிங் எவ்வளவு முக்கியமென்பதற்கு இலக்கணம் வகுத்துக் கொடுத்தவர் கன்னையா என்று நாடகம் பார்த்த வர்கள் கூறினர்கள்.

சீன் வேலைகளை கவனித்துக் கொண்டவர்கள் திரு. முத்துக் கிருஷ்ண ஆச்சாரி, திரு. வெங்கடாசல ஆச்சாரி, திரு. ஷண்முக ஆச்சாரி, சிங்காரம் பிள்ளை ஆகியோர்.

பம்பாயைச் சேர்ந்த இசை அமைப்பாளர் திரு. அமீர் அலியை மாதம் ரூ.500 கொடுத்து நாடகங்களுக்கு மெட்டு களை அமைக்க ஏற்பாடு செய்தார்.

இந்தக் கம்பெனியின் பிரதான நடிகர் திரு. சி.எஸ். சாமண்ணா அவர்கள். மற்றும் சி.வி.வி. பந்துலு, மஹாராஜ புரம் எம்.எம். கிருஷ்ணமூர்த்தி (சங்கீத பூபதி விஸ்வநாத அய்யரின் சகோதரர்) பி.பி. ரங்காச்சாரி, கே. சாரங்க பாணி, எம். எஸ் முத்துக் கிருஷ்ணன், கிட்டப்பா—சகோதரர்கள், (பெண்களை மட்டும் சேர்த்துக் கொள்ளவில்லை). குறிப்பாக திரு. கன்னையா அவர்கள் ராமாயணத்தில் சூர்ப்பனகையாக வேடம் போட்டு நடிப்பது மறக்கமுடியாத காட்சி, மற்றும் வி.ஏ. செல்லப்பா, கே.எஸ். அனந்த நாராயணன், ஆகி யோரும் பெண் வேடம் போட்டிருக்கின்றனர். நாடகக் காட்சி அமைப்புக்கு சுமார் இரண்டு லட்ச ரூபாய் வரை செலவு செய்து நாடகங்களை மேடை ஏற்றுவார் கன்னையா!

1930, 31-ல் சென்னை மாநகராட்சிக்கு ஆறு அணுவுக்கு மேல் டிக்கட் வாங்கினுல் தமாஷா வரி கட்ட வேண்டும் என்று ஆங்கில அரசு சட்டம் இயற்றினர்கள். திரு. கன்னையா அவர்கள் அந்தச் சட்டத்தை திறமையாக முறி யடித்தார். எப்படி? 5 அணு, 11 தம்படி எல்லா வகுப்பு களுக்கும் என்று விளம்பரம் செய்ததுடன் முதல், இரண்டாம்

வகுப்புகளுக்கு தலா 3 ரூபாய், எட்டணு, ரிசர்வேஷன் சார்ஜ் வசூலிக்கப்படும் என்று அன்றைய ஆங்கில அரசின் சட்டத்தை துணிச்சலுடன் எதிர்த்தார்.!

''ஸ்ரீ ஆண்டாள்'', ''தசாவதாரம்'' நாடகங்கள் பல நாள், ஏன் ஆண்டுகள் என்று சொன்னுல் அது மிகையாகாது- நடை பெற்றதின் பயனுக ராயல் தியேட்டரை நாற்பதாயிரம் ரூபாய்க்கு விலைக்கு வாங்கி ஏராள பொருட்செலவு செய்து தியேட்டரை விரிவு படுத்தினர்.

நாடகத்தில், யானை, பசு, குதிரை, போன்ற பிராணி களையும் நடிக்க வைத்தார். ''பீடி, சுருட்டு பிடிப்பவர்கள், மதுபானம் அருந்தியிருப்பவர்கள் எக்காரணம் கொண்டும் எங்கள் நாடகங்களை பார்க்க அனுமதி கிடையாது, நுழைவு சீட்டு வழங்கப்பட மாட்டாது'' என்று விளம்பரம் செய்ததுடன் பலகையிலும் எழுதி நாடக கொட்டகை வாயிலில் வைத்தார். அன்று கலை உலகில் இப்படியொரு விந்தையான மனிதரும் இருந்தாரே என்று எண்ணும் போது நாடக உலகின் பாரம்பரிய பெருமைகளை எப்படிக் காப்பாற்றிக் கொள்ள கன்னையா முயற்சிகள் செய்தார் என்பது புரியும்!

தெய்வீக காரியங்களுக்கு தான் சம்பாதித்த செல் வத்தை வாரி இறைத்துள்ளார். குறிப்பாக ஸ்ரீவில்லி புத்தூர் ஆண்டாளுக்கு 750 பவுனில் தங்கக் குடம் அளித்த துடன், பதக்கம், வைரமாலைகளையும் சாத்துப்படி செய்து ஆனந்தப்பட்டார். சிவன், வைஷ்ணவ கோயில்களுக்கும் வெள்ளியால் செய்யப்பட்ட கருடன், ரிஷபவாஹனங்களை வாங்கிக் கொடுத்து உற்சவங்கள் செய்துள்ளார். ஸ்ரீ பெரும்புதூர் ராமானுஜருக்கு வைரத்தால் செய்யப்பட்ட கடுக்கன் சாத்தி விழா எடுத்துள்ளார். திருப்பதி குடை, திருப்பதியில் 1008—சங்காபிஷேகம் செய்ய ரயிலில் போகும் பக்தர்களுக்கு பயணசீட்டுகளை வாங்கிக் கொடுத்து ஏழைகளுக்கு அன்னதானம் செய்துள்ளார்.. தன்னுடைய வீட்டில் இராமாயணம் படிக்க வைத்து பட்டாபிஷேகம் அன்று நடிகர்களுக்கும், சுமங்கலிகளுக்கும் வேட்டி புடவை வழங்குவது இவரது வழக்கமாக இருந்து வந்தது. (இவ ருடைய குருநாதர் மஹா வித்வான் திரு வசிஷ்ட பாரதி).

ஸ்ரீபகவத் கீதையை நாடகமாக நடத்த நீண்ட நாள் திட்டம் தீட்டி இருந்தார். ஒரு நாள் ஹுசேன் பக்ஷைக் கூப் பிட்டு படுதாக்களை எழுதச்சொல்லி, காட்சி அமைப்புகளை

அவரிடம் விளக்கிச் சொல்லி ஒருமாத தவணையில் செய்ய வேண்டுமென்று அன்பு உத்திரவு கொடுத்தார். 20 நாள் ராயல் தியேட்டரில் இரவு பகலாக நாடக ஒத்திகை நடந்தது. ஓய்வு இல்லாமல் அதிக அக்கறையுடன் அலைந்ததின் பயனாக உடல் நலம் பாதித்தது, படுத்த படுக்கையாக இருந்தார். மருத்துவர்கள், அவரை ஒத்திகையில் கலந்து கொள்ள தடை விதித்தார்கள். தடையை மீறி இறுதி ஒத்திகையில் கலந்து கொண்டு சில பல மாறுதல் செய்து முழுமனதுடன் நாடகம் நன்றாக அமைந்துவிட்டதாக கூறியதுடன் ''எந்த நேரத்தி லும் என்னுடைய ஆவி பிரியலாம்; அப்படி நேர்ந்துவிட்டால் நடந்து கொண்டிருக்கும் நாடகத்தை நிறுத்த வேண்டாம்'' என்று கூறிய வார்த்தைதான் இறுதி வார்த்தையாம். ''ஸ்ரீ பகவத் கீதை'' அரங்கேற்றத்தன்று சுயநினைவிழந்தார். மறு நாள் மாலை 6.45 மணி அளவில் திரு. சி. கன்னையா அவர்கள் வைகுந்த பதவியை அடைந்தார். அப்போது அவருக்கு வயது 62. ஆண்டு 1932.

இன்றைய கலைஞர்கள் திரு. கன்னையா அவர்களைப்பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்று நான், அவரைப்பற்றி பல அறிஞர்களிடமும், குறிப்பாக சி.வி. வி. பந்துலு அவர்களிடம் கேட்டு தெரிந்து எழுதியுள்ளேன்.



**நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார்**
**(1873—1964)**

**ப**ம்மல் ப. விஜயரங்க முதலியார் அவர்களுக்கும்- இரண்டாம் மனைவியான திருமதி. ப. மாணிக்க வேலு அம்மையாருக்கும் நான்காவது புத்திரனாக திருஞான சம்பந்தம் (பம்மல் சம்பந்த முதலியார்) அவர்கள், 1873-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1-ம் தேதி (ஆங்கீரச வருடம் தை மாதம் 21-ஆம் தேதி) சனிக்கிழமை தமிழ்நாடு தலைநகரான சென்னையில் நான்கு சகோதர சகோதரிகளுடன் பிறந்தார்.

தந்தையார் குழந்தைகளைக் கட்டுப்பாட்டுடன் வளர்த்ததுடன் பள்ளிப் படிப்பில் அதிக கவனம் செலுத்தி வந்திருக்கிறார்கள். பம்மல் சம்பந்தனார் 1877-ஆம் ஆண்டு திண்ணைப் பள்ளியில் தெலுங்கில் படிப்பை துவக்கி, சுமார் ஆறு மாதங்கள் வரை படித்து, பின்னர் 1879-ஆம் ஆண்டு தமிழ் மற்றும் ஆங்கிலப் பள்ளியில் முதலாம் வகுப்பில் சேர்ந்து படித்து 1880-ஆம் ஆண்டு பிராட்வேயில் உள்ள புரொபரைட்டரி ஸ்கூலில் படித்தார்.

இப்பள்ளியின் வருடாந்திரக் கொண்டாட்டத்திற்கு மாணவர்களை பச்சையப்பன் சபா மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார்கள். சம்பந்தனாரின் அண்ணனுடைய நண்பர் டபிள்யூ. ராமசுவாமி அவர்கள் மண்டபத்தில் சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினார்கள். அதைக் கேட்டுக்கொண்டிருந்த

மாணவர்கள் பலத்த கரகோஷம் செய்தார்கள். சொற்பொழிவைக் கேட்ட சம்பந்தனார், தானும் அவரைப்போல் மேடையில் பேச வேண்டும் என்று மனதில் உறுதி கொண்டார். ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியர் எழுதிய 'ஜுலியஸ் சீசர்' என்ற நாடகத்திலுள்ள ஆண்டனியின் சொற்பொழிவை மனப்பாடம் செய்து உரக்கக் கத்திப் படித்தார். சத்தத்தைக் கேட்டுவந்த தமையனர் விவரத்தைக் கேட்டறிந்து ஷேக்ஸ்பியரின் வார்த்தைகளை எப்படி பாவத்துடன் பேச வேண்டும் என்பதை சம்பந்தருக்குக் கற்றுக் கொடுத்தார். இவையே சம்பந்தனர் நடிப்பதற்குரிய அஸ்திவாரமாக அமைந்தது எனலாம்.

1882 ஆம் ஆண்டு பச்சையப்பன் கிளை பள்ளியில் சேர்ந்தார். அந்த பள்ளியில் சேருவதற்கு ஒரு பரீட்சை நடத்தினர்கள். ஆங்கிலத்தில் நல்ல மார்க் வாங்கி, கணக்கில், கோட்டை விட்டதால் மீண்டும் இரண்டாம் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, இரண்டாம் ஆண்டும் படித்தார். பழைய வாத்தியார் ஒருவர் சம்பந்தனர் பயிலும் வகுப்பிற்கு வந்து 'என்னடா சம்பந்தம், உன்னுடன் படித்த நண்பர்கள் மூன்றும் வகுப்பில் படிக்கிருர்கள். நீ ஏண்டா இரண்டாம்வகுப்பில் சேர்ந்தாய்?' என்று கேட்டவுடன் அழ ஆரம்பித்துவிட்டார். அதை ஏன் அவரே தமது வரலாற்றில் கூறுகிருர் என்று பார்த்தால் மூன்ருண்டு கழித்து மிடில் ஸ்கூல் பரிட்சை என்னும் கவர்ன்மெண்ட் பரிட்சைக்குப் போனபோது பழைய நண்பர்கள் எல்லோரும் பெயில் ஆனர்கள். ஆனல் சம்பந்தனர் மட்டும் பரிட்சையில் தேறி விட்டார். இதை அடக்கத்துடன் சொல்கிருர் ' இரண்டாம் வகுப்பில் இரண்டு ஆண்டுகள் படித்ததால்தான், பரீட்சைகளில் எளிதாக பாஸ் செய்தேன்'' என்கிருர். இங்கு படிக்கும்போதுதான் வி. வி. சீனிவாச அய்யங்கார் அவர்கள் ஆப்த நண்பராகத் திகழ்ந்தார். சம்பந்தனர், சரித்திரம், தமிழ், ஆங்கிலம், இப்படி பல பரிட்சைகளில் முதல் மாணவனாகத் திகழ்ந்து பற்பல பரிசுகள் பெற்றுள்ளார். வி. வி. சீனிவாச அய்யங்காரும் பம்மல் சம்பந்தனரும் 1884 ஆம் ஆண்டு நான்காம் வகுப்பில் தேறி 1885 ஆம் ஆண்டு மிடில் ஸ்கூல் பரிட்சையில் தேறி, 1886 பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்து, 1888 - மெட்ரிகுலேஷன் பரிட்சை எழுதித் தேறினர்கள். இதில், 1888-1889 ஆம் ஆண்டு பம்மல் சம்பந்தனர் முதல் மாணவனகத் தேறி தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு பொற்பதக்கம் பெற்ருர்.

பின்னர் பிரசிடென்சி காலேஜில் இருவரும் பி.ஏ. பட்டம் பெற்று, சட்டக் கல்லூரியில் ஒன்ருகப் படித்து பி.எல். பட்டம் பெற்றனர். 1891ல் சுகுண விலாச சபையில் இரு வரும் தொடர்பு வைத்துக் கொண்டார்கள். 1898ஆம் ஆண்டு உயர்நீதி மன்றத்தில் இவர் வழக்கறிஞராக பதிவு செய்துகொண்டார். தன்னுடைய தமையஞர் அய்யாச் சாமி முதலியார் இவர் வக்கீலாவதற்கு முன்பே உயர்நீதி மன்ற வக்கீலாக இருந்து வந்ததால் அவருடைய அறையி லேயே சம்பந்தஞர் வக்கீல் தொழிலைத் தொடங்கினுர். மாதம் ரூ.50 முதல் தொழிலைத் தொடங்கி பின்னர் படிப் படியாக மாதம் ரூ.1000 வரையில் சம்பாதித்து வந்தார். எனினும் வக்கீல் தொழிலிலிருந்து விடுபடவே அவர் பெரிதும் விரும்பினுர். அப்போதே அவருடைய ஆர்வம் முழுவதும் தமிழ்நாடகங்களில் நடித்தும் தமிழ் நாடகங் களை எழுதியும் புகழ்பெற வேண்டுமென்ற எண்ணத்தில் சட்ட நூல்களை படிக்கும் நேரங்களை விட்டுவிட்டு சுகுண விலாச சபைக்கு அதிக நேரம் ஒதுக்கினுர். சுகுண விலாச சபையில்தான் நடிப்பைப் பற்றியும் நாடகங்களை நடத்து வது பற்றியும் அடிக்கடி கலந்துபேசி மிகவும் உழைத்தார்.

பொய்யான, தப்பான நியாயமில்லாத வழக்குகளை எடுத்து நடத்துவதில்லை என்ற முடிவை, வக்கீல் தொழிலில் இருந்தவரையில் கடமை உணர்ச்சியுடன் கட்டிக் காத்தவர் பம்மல் சம்பந்தனுர்.

1924 ஆம் ஆண்டு சி.பி. ராமசாமி அய்யரின் வேண்டு கோளின்படி ஸ்மால் காஸ் கோர்ட் நீதிபதியாக சம்பந்தனுர் நியமிக்கப்பட்டார். நீதிபதியாக இருந்த காலங்களில், தன் தாய் தமக்குச் சொல்லிக் கொடுத்த தாரக மந்திரமான சத்தியம், தர்மம் இவை அவர் தீர்ப்பு கொடுப்பதற்கு முன் பாக அவருடைய மனக்கண்முன் தோன்றும்.

ஒருநாள் இரவு சம்பந்தனுர் துணைவியார் இறைவனடி சேர்ந்தார். மறுநாள் வழக்கம்போல் கோர்ட்டு நடவடிக் கையில் கலந்து கொண்டார். 11 மணி அளவில் கோர்ட் அறையில் மூத்த நீதிபதி திருவேங்கடாச்சாரியர் பம்மல் சம்பந்தனாரை துக்கம் விசாரித்துவிட்டு 'மிஸ்டர் சம் பந்தம், இன்று ஏன் கோர்ட்டுக்கு வந்தாய்?' என்று வெறுப் புடன் கேட்டார். அதற்கு அவர் கூறிய பதில், 'என்னு டைய துக்கம் என்னிடம்தான் இருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு மற்றவர்களுக்கு கஷ்டம் கொடுப்பதில் என்ன

பலன்? என்னால் வாய்தா போடுவதை நான் விரும்பவில்லை என்றார் சம்பந்தனார்.

1928 ஆம் ஆண்டு 55 வயதில் நீதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். அதே வருடம் அவருடைய ஆப்த நண்பர் வி.வி. சீனிவாச அய்யங்காரும் உயர்நீதி மன்ற நீதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். நண்பர்களின் ஒற்றுமை படிப்பிலிருந்து பதவிவரை சரி சமமாக இருந்தார்கள் என்பதைவிட வாழ்ந்து காட்டினார்கள் என்று சொல்லுவதுதான் பொருந்தும். நண்பர்களில் பலர் 'நீ ஏன் மறுபடியும் வக்கீலாக பழகலாகாது'' என்று கேட்டார்கள். அதற்கு அவர் சொன்ன பதில் ''ஒருமுறை ஜட்ஜாயிருந்த பிறகு மறுபடியும் வக்கீலாக போவதுமுறை இல்லை என்று நான் முடிவு செய்துவிட்டேன்'' என்றார்.

சிலகாலம் கோயில்களுக்கு தர்மகர்த்தாவாகப் பணி புரிந்து பழுது அடைந்த கோயில்களைப் புதுப்பித்தார்.

1891 முதல் 1936 வரை தமிழ் நாடகங்கள் பல எழுதி அவற்றில் நடித்தும் வந்திருக்கிறார். சம்பந்தனார் சுமார் 100 நாடகங்கள் எழுதியுள்ளார்.

**அவர் எழுதியுள்ள நாடக நூல்கள் :**

கீதமஞ்சரி, நாடகத் தமிழ், நாடக மேடை நினைவுகள், நாடகமேடையில் தேர்ச்சி பெறுவது எப்படி? தமிழ்பேசும் படம், 'பேசும்பட அனுபவங்கள்,' கதைகள், வியாசங்கள், முதலியன. இன்னும் மத சம்பந்தமான பல நூல்களை வெளியிட்டுள்ளார்.

**பேசும் படங்களில் சம்பந்தனாரின் பங்கு :**

1931ல் கல்கத்தாவில் இவர் எழுதிய 'சதிசுலோசனா' என்னும் நாடகம் பேசும்படமாகத் தயாரிக்கப்பட்டது. 1936 ல் 'மனோகரா' என்னும் நாடகம் பம்பாயில் பேசும் படமாக எடுக்கப்பட்டது. குறிப்பாக சம்பந்தனார் புருஷோத்தமனாக நடித்தார். ஏழு வருடம் சென்சார் போர்டு மெம்பராக இருந்திருக்கிறார். இவருடைய நாடகங்கள் பேசும்படமாக வந்திருப்பவை:— காலவரிஷி, ரத்னாவளி, மனோகரா, (இரண்டுமுறை) லீலாவதி, சுலோசனா, வேதாள உலகம், சதிசுலோசனா, சந்திரஹரி, சபாபதி பொங்கல் பண்டிகை, ராமலிங்க சுவாமிகள். இன்னும் பல சேவைகள் புரிந்திருக்கிறார்: தீண்டாமை, மதுவிலக்கு, சொற்பொழிவுகள், ரேடியோ நாடகங்கள், ரோட்டரிக்

கிளப்புகளில் பங்கு, இப்படி அடுக்கிக்கொண்டே போக லாம்.

அவருடைய 81வது பிறந்த நாளில் எல்லா நடிகர் களும் பங்குகொண்டு ஒரு பெரும் விழாவை நடத்தினுர்கள். 85 வயதில் சென்னை நகர சபை பாராட்டி மரியாதை செய் துள்ளது. சங்கீத நாடக சபை, பச்சையப்பன் கல்லூரி, சுகுண விலாச சபை, மதுவிலக்கு சங்கங்கள், கோயில்கள், இப்படிப் பல விழாக்கள் எடுத்து மரியாதை செய்தனர்

அவருக்கு மத்திய அரசு 26-1-56 ஆம் நாள் 'பத்ம பூஷண்' விருது கொடுத்துக் கௌரவித்தது. சங்கீத நாடக சங்கம் நடிப்பிற்காக பட்டம் கொடுத்துப் பாராட்டியது.

**தாய் தந்தையார் போதித்த நீதிகள் :**

1. தைரியத்தை கைவிடாதே.
2. எல்லோரையும் சந்தோஷப்படுத்தி, நீயும் சந் தோஷமாய் இரு.
3. உண்மையே எப்போதும் பேசு: அப்படிப் பேசு வதனுல் யாருக்காவது மனவருத்தம் உண்டாகும் என்று தோன்றினுல் மௌனமாக இருந்துவிடு.
4. கடுகடுத்துப் பேசாதே. இனிமையாய் பேசு.
5. உனக்கு யாராவது கெடுதல் செய்தால் அதைப் பொறுத்துக்கொள். நன்மை செய்ய முயற்சி செய்.
6. கோபத்திற்கு இடமே கொடாதே.
7. சிரித்த முகத்துடன் இரு.
8. செல்வம் வந்தால் செறுக்கடையாதே. ஏழ்மை வந்தால் தளர்ச்சி அடையாதே.
9. மனதில் ஒருவருக்கும் தீங்கு எண்ணுதே.
10. பேராசை கொள்ளாதே.
11. வருமானத்திற்கு மேல் செலவு செய்யாதே.
12. இன்று செய்ய வேண்டிய வேலைகளை இன்றே செய்து முடித்துவிடு.
13. புண்ணியம் செய். பாவம் செய்யாதே.
14. உன் காலம் நெருங்கும்போது பயமின்றி உன்னைப் படைத்தவர்கள் பாதம் போய்ச் சேரு.

*1964* ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் *24*ஆம் நாள் நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்தனுர் அவர்கள் மறைந்தார்கள். இவருடைய சேவைகளைப் பாராட்டி தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம் இவரது நினைவுநாளைக் கொண்டாடி வருகிறது.



**பாலாமணி அம்மையார்**

"எட்டையும் பெண்கள் தொடுவது தீமையென் றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்.
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற—
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்'' என்று அன்று பாரதி கவிதை நடையில் பெண்ணின் பெருமையைப் பற்றி முழக்கமிட்டான்!

சர்ச்சைகள் இருந்தன. ஆனால் இதைப்பற்றி பெரும் பிரச்சாரமோ உபன்யாசங்களோ இல்லை. அந்த நாளில் தான், நாடக இராணியாக புகழுடன் வாழ்ந்தார்கள், பாலாமணி அம்மையார் அவர்கள்.

இயல், இசை, நாடகம் இம்மூன்றும் வளர்ந்த வளர்த்த, தஞ்சை மாவட்டத்தில் உள்ள, கும்பகோணத் தில் பிறந்து வளர்ந்து, முறையாக பரத நாட்டியம், சங்கீதம், நாடகம் இவைகளை நன்கு கற்றுத் தேர்ச்சி பெற்றவர். 1887முதல் 1895 வரை 50, 60 திருமணமாகாத இளம் அழகிய பெண்களுக்கு கலைகளைக் கற்றுக் கொடுத்து அரங்கேற்றி வைத்தார். நாடகங்கள் வெற்றி நடைபோட் டதை அறிந்த அம்மையார் நாடக கம்பெனியை தொடர்ந்து நடத்தி வந்தார்.

''கலை இராணி'' என்ற பட்டத்தை மக்கள் வழங்கி யுள்ளார்கள். வயது மூப்பாக இருந்தாலும், அவரைக் காணக் கண் கோடியல்லவோ வேண்டும்! நிழலை உரித்து

நிஜத்தைக் காட்டுவது போல காணப்படுவார்கள்! சுருள் விழுந்த கரிய கூந்தல், கிளி கொத்திய பழம் போன்ற உதடு, வெண்முத்தைப் போன்ற பற்களை வெளியே காட்டாமல் நமட்டு சிரிப்பு சிரிப்பார். 'தாமரைப் பூப் பாதங்களாம் அவருக்கு!

இரக்க குணம் உள்ளவர், அனுதைப் பெண்களை ஆதரிப்பதுதான் வாழ்க்கையின் முக்கிய இலட்சியமாக கொண்டவர்.

தனவந்தர் முன்னிலையில் முதலில் சங்கீதம் பாடி நாட்டியமாடி புகழையும் பொருளையும் தேடிக் கொண் டார்.

திரு கந்தசாமி முதலியார் அவர்கள் (நடிகர், எம்.கே. ராதாவின் தந்தை) பல நாடகங்களை உருவாக்கி பயிற்சி அளித்து நாடகங்களை அரங்கேற்றம் செய்துள்ளார். கம் பெனியின் ஆசிரியர், இவர்தான்!

நகைச்சுவை நடிகர் திரு. சி.எஸ். சாமண்ணு அய்யர் அவர்கள் கம்பெனியின் நிர்வாகி, மற்றும் நடிகர்! திரு வொற்றியூர் திரு. காசிவிஸ்வநாத முதலியார், அவர்கள் எழுதிய ''டம்பாச்சாரி''யில், தவசிப் பிள்ளை, மாமா, இஞ்சினியர், புலவர், செட்டியார், ஷேக் மீரான் லெப்பை அமீனு, வக்கீல், சட்டிச்சாமி, நாரதர், அப்பர்சாமி ஆகிய பாத்திரங்களை ஏற்றவர் சாமண்ணு. இந்த நாடகம் அம்மையார் கம்பெனியில், கொட்டகை நிறைந்து மாதக் கணக்கில் நடைபெற்றது. இதில், கதாநாயகியாக, பாலாமணி அம்மாளும், கதாநாயகனுக ராஜாம்பாள் அம்மையாரும் நடிப்பார்கள்.

நாடகத்தின் வாயிலாக ஏராளமாக பொருள் சம் பாதித்து கோயில் திருப்பணிகளும் ஜாதி, மத வித்தியாசம் பாராமல், ஏழைகளுக்கு திருமணங்களையும் நடத்திவைப்பார். இன்றும் கும்பகோணம் கும்பேஸ்வரர் கோயில் கல்வெட் டில் அம்மையாரின் பெயர் உள்ளது.

தனது கம்பெனியில் நடித்துக் கொண்டிருந்த பெண் களை நல்ல மாப்பிள்ளையாகப் பார்த்து தன் சொந்தப் பணத்தில் சீர்வகைகள் கொடுத்து வசதியாக வாழ வழி வகுத்தனுப்புவார். இறுதிவரை தனக்கு என்று பொருள் சேர்த்துக் கொள்ளவில்லை.

அவர் நடத்திய நாடகங்களில் செட்டிங் போட்ட தில்லை. எல்லாம் படுதாதான்.

பாலாமணி அம்மையாரின் வீடு, ஜமீன் மாளிகை போல் இருக்கும். பணியாட்கள், நாற்பது பேர். (ஆண்களும் பெண்களும் சேர்த்து) காலை 9 மணி அளவில் ஆரம்பிக்கும் அன்னதானம் இரவு 8 மணிக்குதான் முடியும்.

நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட சாரட் வண்டியில் தான் பாலாமணி அம்மையார் போய் வருவார்.

வண்டியை சுற்றி ஜிகினு வேலைப்பாடு செய்யப்பட்ட வெல்வெட்டால் மறைக்கப்பட்டிருக்கும். வண்டி நடு ரோட்டில் போகும்போது இரு பக்கங்களிலும் திரளான மக்கள் கூடி கை ஒலி எழுப்புவார்கள். வாலிபர்கள் அம் மையாரைப் பார்த்து பெருமூச்சு விட்டதும் உண்டு.

வீட்டு வாசலில் தினசரி கூட்டம் கூடி அம்மையா ரின் வருகைக்காக பலமணி நேரம் காத்து கொண்டிருப் பார்கள். அவர் வீட்டில் பால்கனியில் அம்மையார் வந்து நின்று இருகை கூப்பி வணக்கம் செய்தபின் தான் கூட்டம் கலையும்.

பாலாமணி ஸ்பெஷல் ரயில், பாலாமணி பட்டு புடவை, பாலாமணி ஸ்பெஷல் குதிரை வண்டி—இப்படியெல்லாம் பெயர்கள் சூட்டப்பட்டதுண்டு. இரவு 9.30 மணிக்கு நாடகம் ஆரம்பம் ஆகும் நேரத்தில் திருச்சியிலிருந்தும், மாயவரத் திலிருந்தும் ரயில்கள் கும்பகோணம் வந்து நின்று காலை 3 மணிக்கு திரும்பி திருச்சிக்கும் மாயவரத்திற்கும் புறப் படும். ஸ்பெஷலாக அன்று ரயில் விடப்பட்டது, இவரது நாடகங்களுக்காகத்தான்.

ஒவ்வொரு நாளும் நாடகம் நடக்கும்போது ரசிகர்களும் தனவந்தர்களும் மெய்மறந்து பொருட்களை மேடையை நோக்கி வீசுவார்கள். பெண்கள் தாங்கள் அணிந்திருந்த நகைகளைக்கூட கழட்டி எறிவதுண்டு. நாடகத்தின் மீது அவ்வளவு பற்று அன்று இருந்தது.

ஜே.ஆர். ரங்கராஜு அவர்கள் எழுதிய நாவல் ''ராஜாம்பாள்''. இக் கதையை நாடகமாக தயாரித்து, ஒரு வாரத்தில் முதன் முதலில் அரங்கேற்றம் செய்தார் திரு. கந்தசாமி முதலியார் அவர்கள். இந்த நாடக கதா நாயகியாக மோஹனப்புன்னகையும் முல்லைச் சிரிப்பும்,

சிவந்தமேனியும், சாந்தகுணமும், குயிலின் குரல்வளமும், ஒருங்கே அமைந்துள்ள பாலாமணி அம்மையார் இராஜாம் பாளாக நடிப்பது கண்கொள்ளாக் காட்சியாம்!

திரு. கந்தசாமி முதலியார் அவர்கள் ஒரு நாவலின் கதையை நாடகமாக்கி அரங்கேற்றியது ''ராஜாம்பாள்'' மட்டும்தான்.

1910-ல் சென்னைக்கு மின்சாரம் வந்தது. அதற்கு முன்பு பெட்ரோமாக்ஸ் விளக்கை வைத்துக் கொண்டு நாடகங்களை நடத்திக் காட்டியுள்ளார்.

''தாராசசாங்கம்'' என்ற நாடகத்திற்கு அதிக வசூல் வந்தது. காரணம், நாடகத்தில் ஒரு சில நிமிடம் தாரை தன் காதலனின் வேண்டுகோளின்படி நிர்வாணமாக எண்ணெய் தேய்த்து விடவேண்டும். தாரை வேடமணிபவர் பாலாமணி அம்மையார். காதலனாக நடிப்பவர் கிருஷ்ண வேணி. விலையுயர்ந்த துணியால் உடை தைத்து இறுக்க மாக அணிந்து கொண்டு காட்சியில் எண்ணெய் தேய்ப் பதை இமை கொட்டாமல் பார்ப்பார்களாம்.

நாடகக் கலையில் உள்ளவர்களுக்கே ஒரு சாபக்கேடு! இந்த சோகப்படலம், திரு பாலாமணி அம்மையாரையும் விட்டு வைக்கவில்லை. நோய் வந்து மிகவும் கஷ்டப்பட்டு நாடகம் நிறுத்தப்பட்டு, இருந்த பொருட்கள் அனைத்தும் தீர்ந்ததும் சில உள்ளூர் தனவந்தர்களிடம் வாங்கிய கடன் களை கொடுத்து ஏமாற்றத்துடன் கும்பகோணத்தை விட்டு மதுரை வந்து உண்ண உணவு உடுக்கத்துணி இருக்க இட மில்லாது அறுபத்திரண்டு வயதில் ஒரு குடிசையில் இவரது ஆவி பிரிந்தது.

அப்போது மதுரையில் இருந்த திரு. சி. எஸ். சாமண்ணா அய்யர் அவர்கள் இதை கேள்விப்பட்டு நிதிவசூல் செய்து பூத உடலை மதுரையில் அடக்கம் செய்ததுடன் கர்மாக்களை யும் அவரே செய்தாராம்.

(இங்கு மற்றொன்றையும் நான் சொல்லக் கடமைப் பட்டுள்ளேன். திரு. சி. எஸ். சாமண்ணா அவர்களின் இறுதி முடிவும் இப்படித்தான் நடந்தது. திரு ஒவை. டி.கே. ஷண்முகம் அவர்களும், திரு. டி.என். சிவதாணு அவர்களும் சாமண்ணா அய்யரின் ஆவி பிரிந்த விஷயம் அறிந்ததும் விரைந்து சென்று சொந்த செலவில் அடக்கம் செய்ததுடன் குறிப்பேட்டில் மகன் டி.என். சிவதாணு என்று கைஒப்பம்

இட்டுள்ளார். திரு. சாமண்ணு அய்யர் வாழ்க்கையில் மிஞ்சியது ருத்திராட்சக் கொட்டை ஒன்றுதான். அதை இப்பவும் பாதுகாத்து வைத்திருக்கிறுர் திரு.டி.என். சிவதாணு அவர்கள்.)

பாலாமணி அம்மையாரின் கலைச் சேவையை பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அம்மையாரின் திரு உருவப்படத்தை திறந்து வைத்துள்ளது. நன்றி: காலம் சென்ற நடிகர் கே. சாரங்கபாணி அவர்களுக்கு, அவர் கொடுத்த குறிப்புகளுக்காக!



**எஸ். ஜி. கிட்டப்பா (1906—1933)**

**கா**லமென்னும் நந்தவனத்தில் காணக் கிடைக்காத கானக்குயில் எஸ்.ஜி.கிட்டப்பா! மின்னல் போல் தோன்றி இடிபோல் முழங்கி இசைவானத்தை பிரகாசமாக்கி மறைந்தார். அவருடைய இசை குற்றாலம் நீர்வீழ்ச்சியைக் காட்டிலும் குளுமை பொருந்தியது.

அவர் மறைந்து 50 ஆண்டுகள் ஓடிவிட்டன. அவர் மறைந்ததாக நம்பமறுக்கிறது மனது.

இரண்டு தலைமுறைக்கு முன் தமிழகத்தில் ஒரு மகான் வாழ்ந்தார். இசையினால் இறைவனைக் காண முடியும் என்று மக்களுக்கு போதித்தார். அந்த மனித தெய்வம் தான், 'தியாகப்பிரும்மம்'. வாழ்க்கையை தியாகம் செய்து பரப்ரும மத்திலே ஈடுபாடு கொண்டு அந்த பரமபக்தர் தன் வாழ் நாளில் 1000' பக்தி பாடல்களை தெலுங்கு மொழியில் இயற்றினார். அந்தப் பாடல்கள் தான் வித்வான்களுக்கு வாழ் வளித்துக் கொண்டிருக்கின்றன.

ஸ்ரீராமசந்திர மூர்த்தியைப் பற்றிப்பாடும் போதும் அவரைப்பற்றிப் பேசும் போதும் சோர்வே வந்ததில்லையாம் 'எந்தரோமகானுபாவலு—அந்தரீக்கு வந்தனமு' எவ்வளவு அடக்கமான வார்த்தை. ஒளிமயமான பஞ்சரத்தின கீர்த்தனையை நமக்கு தொகுத்தளித்துள்ளார். அந்த ரசனையை

அவருடைய ஆராதனை நடக்கும்போது சங்கீத வித்தவான்கள் பாடுவார்கள் அதை கேட்டவர்களுக்குத்தான் தெரியும்! 'பக்தி' என்னும் சொல் இருக்கும் வரை நம்பிக்கை என்ற எண்ணம் இருக்கும் வரை, இந்த கீர்த்தனைகள் அழியாத காவியமாக, கோடானு கோடி நடிகர்களுக்கும் வாழ் வளிக்கத்தவருது. ஐ.நா. சபை வரை தனது பாடலை பாடுவார்கள் என்று நினைத்தா—எழுதினர்—தியாகராஜர்?

தியாகராஜ கீர்த்தனைகளைப் பாடித்தான், எஸ்.ஜி. கிட்டப்பா சங்கீத மேதைகளிடமும் தெற்கே வடக்கே வாழும் மக்களிடத்திலும் மேலைநாட்டு இசை வல்லு நரிடமும், நன் மதிப்பை பெற்ருர். ஒரு சமயம் வித்வான் மலைக்கோட்டை சாமிபிள்ளை சொன்னராம் ''நல்ல காலம் நடிகராக போய்விட்டார் கிட்டப்பா. நாம் தப்பித்தோம் சங்கீத கச்சேரி செய்திருந்தால் நமக்கு ஒரு கச்சேரி கூட கிடைக்காது'' என்று!

வறுமை என்னும் நோய் மிகக்கொடியது. அந்த நோய் கெங்காதர அய்யரின் குடும்பத்தில் பரவியிருந்தது. அந்த நேரத்தில்தான் 10வது குழந்தையாக 1906ஆம் ஆண்டு செங்கோட்டையில் எஸ்.ஜி.கிட்டப்பா பிறந்தார். பள்ளிக் கூடம் போனது இல்லை. ஆனல் காளிதாசனுக்கு அம்பாள் சூலத்தால் நாக்கில் எழுதினளே அதைப் போல் கிட்டப் பாவுக்கு கலைவாணி அவரைத்தேடி வந்து இசையை வழங் கினள். தாய் வழியில் வந்தவர்கள் சங்கீத மேதைகள். இவரது சகோதரர்களான சுப்பையர், செல்லப்பையர், காசி அய்யர், இவர் பிறப்பதற்கு முன்பே நாடக கலையில் சங்கரதாஸ் சுவாமிகளிடம் பயிற்சியுற்றவர்கள். அப்போது அவர்களுடன் சென்று சுவாமிகளின் ஆசியை பெற்ருர். 1911ஆம் ஆண்டு; அண்ணன் நல்ல தங்காள், தம்பி கிட்டப்பா நல்ல தங்காளின் மகனுக கொட்டாம்பட்டி என்ற ஊரில் நடித்து மேடையில் கானமழை பொழிந்து விட்டாராம்.

அதன்பின் சிறுவயதிலேயே தென்னகமெங்கும் திக்விஜயம் செய்து புகழும் கிட்டியது. மலேசியா, சிங்கப்பூர், சிலோன் சென்று பல சன்மானங்களை பெற்ருர். இதன் காரண கர்த்தா சுவாமிகள் தான்.

1919, சி.கன்னையாவின் கம்பெனி இவரையும் இவரது சகோதரர்களையும் விரும்பி வரவேற்றது. கிட்டப்பா இல்லை என்ருல் கன்னையா இல்லை. கன்னையா இல்லை

என்றால் கிட்டப்பா இல்லை. இந்த நிலையில் இவர்களது புகழ் ஓங்கி இருந்தது.

சங்கீத வித்வான்கள் கிட்டப்பாவுடன் நட்பு கொள்வதை பெருமதிப்பாக கருதினார்கள். 1920 ல் ஜஸ்டிஸ் அப்துல்ரஹீம் இவருக்குப் பொன்னுடை போர்த்தி பேழை வழங்கினார்கள். அந்த வருஷம் தான் இவருக்கு உபநயனமும் நடைபெற்றது. 1924 ல் கிட்டம்மாளை கிட்டப்பா அவர்கள் திருமணம் செய்து கொண்டார். திருமணத்திற்கு அன்று இருந்த சங்கீத வித்வான்கள் அரசியல் தலைவர்கள் கனவான்கள் நேரில் வந்து வாழ்த்தினார்கள். இவருடைய பாட்டை கேட்டு லார்டு வெல்லிங்டன் துரையும் துரைசானியும் அடிக்கடி கவர்னர் மாளிகைக்கு அழைத்து சென்று விடுவார்களாம்.

1926ல் கன்னையா கம்பெனியை விட்டு விலகி ஸ்பெஷல் நாடகங்களில் நடித்து புகழின் உச்சகட்டத்தை அடைந்தார். கதரை தவிர வேறு எதையும் உடுத்த மாட்டார். தேச பக்தரும் கூட.

1927ல் கொழும்பில் நாடகம் நடந்து கொண்டு இருக்கும் போது பக்கத்து தியேட்டரில் கே.பி.சுந்தராம்பாள் நாடகம் நடைபெற்று வந்தது.

கிட்டப்பா நாடகங்களுக்கு நல்ல வசூல் ஆனதை வைத்து கே.பி. எஸ்ஸைப் பாட்டுப் போட்டியில் யாராலும் ஜெயிக்க முடியாது என்று சவால்விட்டு நோட்டீஸ் அடித்து விளம்பரம் செய்து விட்டார்கள்.

மறுவாரம் எஸ்.ஜி. கிட்டப்பா அந்த சவாலை ஏற்று கே.பி.எஸ்.சுடன் நடிப்பதற்கு ஒப்புக் கொண்டு ''சங்கீத போட்டி நடைபெறும்; காணத் தவறாதீர்கள்'' என்று நகரம் முழுவதும் விளம்பரம் செய்து விட்டார். கொட்டகை நிறைந்து டிக்கட் கிடைக்காமல் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வெளியே நின்று கொண்டு இருந்தார்களாம்.

நாடகம் ஆரம்பித்து ''ஜெய ஜெய கோகுல பாலா'' என்ற பாடல் பாடி முடிப்பதற்கு 45 நிமிடங்கள் பிடித்ததாக காசி அய்யர் தெரிவித்தார். இருவரும் தர்க்கப் பாடல் பாடி முடிந்ததும், ''எல்லோரையும் போலவே நீ! எண்ணலாகுமோடி போடி!'' என்ற பாட்டைப்பாடி நீண்ட நேரம் ரசிகர்களின் கரகோஷம் இருந்ததாம். அந்தப்

பாடலில் மயங்கியவர்தான் திருமதி கே.பி. சுந்தராம்பாள் அம்மையார். இருவருக்கும் காதல் ஏற்பட்டு கணவன் மனைவியாக இடையில் பிரியாமல் இறுதிவரை வாழ்ந்து காட்டிய கலைஉலக தம்பதிகள் இவர்கள்.

கிட்டப்பாவின் புகழ் ஓங்கி வளர்ந்து கொண்டிருக்கையில் மற்றொரு புறம் அவரது உடல்நிலை குலையத் தொடங்கியது. 1933ம் ஆண்டு நோயினால் மிகவும் பாதிக்கப்பட்டார். டாக்டர்களின் யோசனையை மீறி திருவாரூரில் நாடகம் நடந்து கொண்டிருக்கையிலே மயக்கமுற்று விழுந்து விட்டார். அதுதான் அவரது கடைசி நாடகம். அதன் பின் உடல் நிலை தேறவில்லை. 1933 டிசம்பர் மாதம் சங்கீத ஊற்று மறைந்துவிட்டது.

தமிழ் மக்களும் கலை மேதைகள் திரண்டு அஞ்சலி செய்தது. அன்றே பூவையும் பொட்டையும் அகற்றி வெள்ளை உடை உடுத்த துவங்கிய அந்த தமிழ்ப்பெண் தமிழரின் பெருமையை உயர்த்தியவர். நாடகங்களில் பிறருடன் ஸ்திரிபார்ட் போடுவதையும் நிறுத்திக்காட்டிய அந்த தமிழ் பெண் தினசரி காலை குளித்தவுடன் தன் கணவர் கிட்டப்பா படத்திற்கு, பூ, பொட்டு, கற்பூரம் ஏற்றி கும்பிடாத நாள் இல்லை. இறுதிவரை தன் கணவருக்கு திவசம் கொடுத்தவர் இந்த தமிழ்ப் பெண். இதை நான் அறிவேன், என் தந்தை காசி ஐயரின் ஆப்த நண்பர்.



**காதர் பாட்சா**

**தி**ருச்சி உறையூரில் பிறந்து வளர்ந்து சங்கீதம் பயின்று ஸ்பெஷல் நாடகங்களில் ஹார்மோனியம் வாசித்து தேச பக்தியும் தெய்வபக்தியும் கொண்டு காங்கிரஸ் இயக்கம் அப்போது நடத்தி வந்த பல போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்தான்: திரு டி.எம். காதர் அவர்கள். ஸ்பெஷல் நாடகங்களில் பல சான்றுகள் பெற்று 'சக்கரவர்த்தி' என்ற பட்டமும் பெற்றவர். வெள்ளையன் ஆட்சியை துரும்பாக மதித்தவர்.

மக்களை புரிந்து பாடும் சக்தி படைத்தவர். அவருக்கு ஒரு சமயம் சிறைத்தண்டனையுடன் அபராதமும் விதிக்கப் பட்டது.

அபராதத் தொகையை எஸ்.வி. சுப்பையா பாகவதர் அவர்கள் கட்டமுன் வந்தார்கள். வெள்ளையன் ஆட்சியில் அபராதத் தொகை கட்டினல் தேசியத்திற்கே அவமானம் என்று தொகையை கட்ட மறுத்து மேலும் ஆறு மாதங்கள் சிறையிலிருந்து புன்முறுவலுடன் விடுதலை அடைந்தவர். தேசியப் பாடல் மூலமாக மக்களை தட்டி எழுப்பிவிட்டவர்.

அந்த நாளில் பத்திரிகை பலம் இல்லை! பொதுக் கூட்டங்கள் நடக்காது, ஊர்வலங்கள் இல்லை; மகாநாடுகள் நகரங்களில் எப்போதாவது நடைபெறும். தேசியப் பற்றின் வலிமையால் நாட்டு மக்களை போராட்டங்களில்

ஈடுபடச் செய்தார். கதர், தீண்டாமை, இந்து-முஸ்லிம் ஒற்றுமை, இதை மையமாக வைத்து மேடைகளில் பாடி விடுதலை உணர்வை தூண்டியவர்.

இவரை எப்படியாவது பிடித்து ஆயுள் தண்டனை அல்லது மரண தண்டனை வாங்கிக் கொடுத்தால் தான் இவருடைய தேசிய பிரச்சாரத்தை அடக்க முடியும் என்று முடிவு கட்டி கலைவாணர் என்.எஸ்.கே.யையும் எம். கே. தியாகராஜ பாகவதரையும் எப்படிக் கொலைக்குற்றம் சாட்டி சிறையில் அடைத்தார்களோ அதைப் போலவே திரு காதர் பாட்ஷாவும் ஒரு கொலைக் குற்றத்தில் சம்பந்தப்படுத்தி சிறையில் அடைக்கப்பட்டார்.

சிறைச்சாலை அது ஒரு தனி உலகம். கைதிகளின் அங்க அடையாளங்களை பதிவு செய்து உள்ளே அனுப்புவார்கள். உணவுகள் கொடுக்கப்படும் அன்று அவருக்கு கொடுக்கப் படவில்லை. புதுக்கைதிகள் சிறைச்சாலைக்கு வந்து விட்டால் பழைய கைதிகள் அவரிடம் வந்து என்ன குற்றம் செய்தீர்கள் கொலையா? கொள்ளையா? திருடா? பிக்பாக்கெட்டா?—பல கேள்விகள் கேட்டார்கள். மௌனம் சாதித்தார். உள்ளே இவரைக் கண்டதும் ஒரு தேசிய கைதி என்ன அண்ணே மறுபடியும் உள்ளே தள்ளிட்டாங்களா? என்று கேட்டார். அப்போதுதான் அவர் பேசினார்: ''இப்போது கொலை குற்றம் சாட்டப்பட்டு உள்ளே வந்திருக்கிறேன்.'' அந்த கைதி வாயில் வந்தபடி அரசை ஏசினார். இரவு நேரம் நெருங்க ஆரம்பித்து அறைகளில் சிம்மினி விளக்கு கள் ஏற்றப்பட்டன! வெளிப்புறத்தில் ஒரு கல் தூணில் எண்ணெ லாந்தர் பொருத்தப்பட்டு இருந்தது. கைதிகள் அவரவர் கலையங்களை எடுத்துக் கொண்டு கூழ் வாங்க வரிசையாக நின்ற வண்ணம் இருந்தார்கள்.

அந்த தேகியவாதி தனக்கு கொடுத்த கூழைப் பாதி சாப்பிட்டு பாதியை காதர்பாஷாவுக்கு கொடுத்தார். அதை அவர் குடிக்க மறுத்துவிட்டார். தமாஷாக சொன்னார். பிச்சை எடுக்குமாம் பெருமாளு அதை தட்டிப் பறிக்குமாம் ஹனுமாரு என்றார்.

கழுவப்படாத அழுக்குப் படிந்த கலையம் நாற்றம் அடித்தது, தூசிபடிந்த தரையில் தன் துண்டால் விரித்துப் படுத்துக் கொண்டார். எல்லா வகையான குற்றவாளிகளும் நிறைந்த இடம் சிறைச்சாலை. உண்மையான கொலையாளியை

அவர் அங்கு சந்தித்தது உண்டு. கொலை செய்யும்போது அவர்கள் இருக்கும் நிலை வேறு, தண்டனை அடைந்தபின் இருக்கிற நிலை வேறு! உணர்ச்சி வசப்பட்டு விட்டதற்கு வருந்துவார்களாம். ஆனால் ஒரு நிரபராதி நிரந்தரக் குற்ற வாளியாக ஆக்கப்படுவதுதான் கொடுமை.

சட்டத்தில் அவனுக்கு எந்த பாதுகாப்பும் இல்லை. சட்டம் தவறானது என்று அவர் கருதவில்லை! சட்டத்தை வளைத்து விளையாடிய வெள்ளையர்களின் ஆட்சியைத்தான் தவறாக மதித்தார்.

அசல் குற்றவாளிகள் கிடைக்கவில்லை என்றால் தேசிய வாதிகளை பிடித்து குற்றவாளியாக்கி சிறையில் தள்ளுவது பொழுது போக்காக இருந்தது. அவர்களை நசுக்குவதே எண்ணமாக இருந்தது. ஒரு நாள் நீதிமன்றத்தில் ஜனத் திரள். திரு.காதர்பாஷாவுக்கு தீர்ப்பு வழங்கும் நாள் அது. கொலைக் குற்றத்தை உறுதி செய்து மரண தண்டனை விதிக் கப்பட்டது. சிரிப்போ, அழுகையோ அவருக்கு வரவில்லை தீர்ப்பைக் கேட்டு கல்லாகிவிட்டார். இது அவரது கடை சிப்பயணம். இந்தப் பயணம் அவருக்கு சம்மதமா என்றால் இல்லை. செய்யாத குற்றத்திற்கு மரண தண்டனையா என்ற கேள்வி தான் அவர் முன் நின்றது. இனி தேசீய பாடல் பாடமாட்டார். அது வெள்ளையனுக்குத்தான் வெற்றி! தூண்டில்போட்டு மீனைத்தான் பிடிக்க வேண்டும். நண்டை பிடித்துவிட்டார்கள். அடைபட்ட சிங்கம் விடுதலை கோரி மனு போடாது.

தீர்ப்பு வழங்கிய பின் ஒரு அறையில் அடைக்கப் பட்டார். ஒரு நாளைக்கு அரை மணி நேரம்தான் வெளியே கூட்டிவந்து கூட்டிப்போவார்கள். (சிறைச்சாலைக்குள்) கவர்னருக்கும் வைஸ்ராய்க்கும் இவர்கள் பால் கருணை மனு அனுப்புவார்கள். அங்கிருந்து பதில் வரும் சட்டப்படி உங்கள் கடமையைச் செய்யுங்கள் என்று! அது வந்த மூன்றாம் நாள் தூக்கிலிடுவார்கள். அந்த மூன்று நாள் அரசாங்க விடுமுறை இருந்தால் மறுநாள் தூக்கிலிடுவார் கள். இரண்டாம் நாள் டாக்டர் பரிசோதனை செய்து சான்று வழங்க வேண்டும். அன்று இரவு நல்ல சாப்பாடு கொடுப்பார்கள். இரவு அவருக்கு தூக்கம் வரவில்லை. மூன்றாம் நாள் காலை 4 மணிக்கு எழுப்பிவிட்டு வென்னீரில் குளிக்க வைத்து இருவார்டர்கள் வந்து அழைத்துப் போவார்கள். அங்கு பதிவு புத்தகத்தில் அடையாளங்களை

எழுதிக் கொண்டு இன்னுர் இன்ன காரணத்திற்காக தூக்கி விடுகிருேம் என்று பதிவு செய்து சிறை கைதியிடம் சொல்லி மேடைக்கு அழைத்துப் போய் இருகால் பெரு விரலையும் கட்டி, கை இரண்டையும் கட்டுமுன் உனக்கு என்ன வேண்டும் என்று கேட்பார்கள். கொடுக்க முடிந்ததை கொடுப்பார்கள். ஆனுல் காதர்பாட்ஷா கேட்டது தனது ஹார்மோனியப் பெட்டியை கொஞ்ச நேரம் கொடுக்கும்படி வேண்டினர். அதைக் கொடுத்தார்கள். இருடாக்டர்கள், ஜெயில் அதிகாரிகள், புடைசூழ இருந்தார்கள். அவ்வளவு தான், ஹார்மோனியத்தை வாசித்து பாட ஆரம்பித்தார்.

''சுருளிமலை மீதில் மேவும் சீலா உன்னை தோத்தரித்தேன் சுப்ரமணியவேலா'' இந்தப் பாடல் குறிப்பிட்ட நேரத்தை கடந்து 45 நிமிடங்கள் ஆகிவிட்ட படியால், திரு.டி.எம் காதர் பாட்ஷாவை தூக்கில் போடவில்லை. விடுதலை செய்தார்கள். அந்த முருகக் கடவுள் தான் காதர் பாட்ஷாவை காப்பாற்றினர். இதை இறுதி வரை சொல்லிக் கொண்டு இருந்தாராம் காதர்பாட்ஷா. வாழ்க அவர் புகழ்! கிரவுன் சுந்தரம் அவர்கள் கூறியவை. (நன்றி)



**எஸ். எஸ். விஸ்வநாததாஸ்**

நாடகக் கலை பற்றி குறிப்பிடும் போது விஸ்வநாத தாசைப்பற்றி எழுதாவிட்டால் நன்றி மறந்தவனாகி விடுவேன்.

தேசபக்தி தெய்வபக்தி நிறைந்த தேசிய வாதியாக மட்டுமல்லாது ஸ்பெஷல் நாடகங்களில் கொடிகட்டி பறந்ததுடன், தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் முக்கிய மாணவனாக திகழ்ந்தவர் எஸ்.எஸ். விஸ்வநாததாஸ் அவர்கள்.

இவருடைய நாடகங்கள் தமிழகத்தில் எங்கு நடந்தாலும் அன்றைய வெள்ளை அரசு தடை விதித்தது. ஆனால் தடையை மீறி நாடகங்களை நடத்தி பல தடவை சிறை சென்றவர் தியாகச் செம்மல் விஸ்வநாததாஸ் அவர்கள்.

அந்த நாளில் தேசீய பாடல்களை பொது மேடையிலும் நாடக மேடையிலும் மற்றவர்கள் பாட ஊக்குவித்த சிறப்பு இவரைத்தான் சாரும். இவரைக் கண்டு அன்றைய ஆங்கில ஆட்சி நடுங்கியது என்று கூடச் சொல்லலாம். 1919ல் பஞ்சாப் படுகொலையைக் கண்டித்து தியாகி பாஸ்கரதாஸ் அவர்கள் இயற்றிய பாடல்களை மேடையில் பாடி விடுதலை உணர்வை தூண்டியவர் இவர் -'பஞ்சாப் படுகொலை பாரில் கொடியது'' -'ஆடுராட்டை சுழன்று ஆடுராட்டை; ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று'' ''கதர் கப்பல் கொடி காணுதே, நம்பிக்கை கொண்டோரெல்லோரும் கை

ராட்டை சுற்றுவீர்' 'காந்தியோ பரம ஏழை சன்யாசி' ''வாராண்டா வாராண்டா வெள்ளைக்காரன்—வரட்டும் தடிப்பய தொப்பிக்காரன்'' 'பண்டித மோதிலாலை பறி கொடுத்தோமே,'' ''பகதூர் பகவத்சிங்கம்' இப்படிப் பட்ட தேசிய பாடல்களை புராண நாடகம் நடந்தாலும் பாடுவார்கள் அன்றைய கலைஞர்கள். பாடாவிட்டால் பொதுமக்களும் விடமாட்டார்கள்.

விஸ்வநாததாஸ் மதுரை ஜில்லா போர்டிலேயும் காங்கிரஸ் சார்பில் அங்கம் வகித்தார். திருமங்கலம் காங்கிரஸ் கமிட்டியில் இருந்தார்.

1918-1920-ம் ஆண்டுகளில் தேசபக்தர்கள் உடனே பாடலை இயற்றி மேடைகளில் பாடுவார்கள். அப்படி இருந்த அந்த நாளில் தேசிய உணர்ச்சிப் பாடலாசிரியர்களும் சிறைசென்றவர்களே! பாஸ்கரதாஸ், பூமிபாலகதாஸ், லட்சுமணதாஸ், சுந்தரவாத்தியார், கருப்பையா, வாத்தியார் ஆகியோர் பாடலை இயற்றவேண்டியது. கலைஞர்கள் பாடவேண்டியது, இதுவே இவர்கள் பணி. ஒவ்வொரு கலைஞரும் ஒவ்வொரு காரணத்திற்காக சிறை சென்றுள்ளார்கள். எம்.ஜி. நடராஜபிள்ளை, எஸ்.வி. சுப்பையா பாகவதர், எஸ்.வி. மணி, வாசுதேவ நாயர், கே. எஸ். தேவுடு அய்யர். காதர் பாட்சா, எஸ். எஸ். விசுவநாததாஸ் ஆகியோர் விடுதலை போராட்டத்தில் பங்கு கொண்டு உடல், பொருள், ஆவி அனைத்தையும் இழந்தவர்கள். அவர்களைப் பற்றி இந்திய விடுதலை சரித்திரத்தை புரட்டிப் பாருங்கள், அவர்களுக்கு இடமிருக்கிறதா என்று?

மேலூரில் விஸ்வநாததாசுக்கும், காதர்பாட்சாவுக்கும் இடையே பலத்த போட்டி!

மேலூரில் உள்ள ஒரு கிராமத்தில் ''வள்ளித் திருமண'' நாடகம் நடைபெற்றது. எஸ்.எஸ். விஸ்வநாததாஸ் முருகனாகவும், கமலவேணி வள்ளியாகவும் நடித்தனர். டிரியோ கருப்பைய்யாவும், டி.எம். காதர்பாஷாவும் ஆர்மோனியம்.

ஒரு நபர் கதர்வேட்டி கதர்சட்டை, காந்திக்குல்லாய் அணிந்தவாறு, கையில் தமுக்கடித்தவாறு விளம்பரம் செய்து கொண்டு கிராமம் கிராமமாய் சுற்றுவார். ''வருகிறுர் வரப்போகிறுர் வந்து விட்டார் யார்! யார்! தெரி

யுமா? ஜெகமெங்கும் புகழ் பெற்ற, வீர, தீர, பராக்கிரம ராஜாதி ராஜன் ராஜமார்த்தாண்டன், கடல் கடந்து சிங்கப்பூர் பினங்கு இலங்கை, பர்மா ஆகிய நாடுகளில் வெற்றிக்கொடி நாட்டிய சிங்கம், அநேக ராஜாக்கள் ஜமீந்தார்கள், பிரபுக்கள் ஆகியவர்களால் நன்கு மதிக்கப்பட்டுத் தங்க தோடாக்களும், சங்கிலி மெடல்களும் பெற்றவருமான கானவேலன் சங்கீத, சாதித்ய, ஞான விடுதலை வீரர் தியாகச் செம்மல் விஸ்வநாததாஸ் வந்து விட்டார். டி.எம். காதர்பாஷாவுக்கும், விஸ்வநாததாசுக்கும் தேசீய பாடல் போட்டி நடைபெறும். ஒரே ஒரு ஸ்பெஷல் நாடகம் இச்சமயம் தவறினல் மறுசமயம் வாய்ப்பு அரிது. ஏமாந்து போகாமல் முன்னிடம் தேடுங்கள். காணத் தவருதீர்கள். தரை நான்கு அணு, பெண்களுக்கு தனியிடம் உண்டு'' இப்படி விளம்பரம் செய்வார்கள்.

நாடகமும் ஆரம்பிக்கப்படும். அயன் ராஜபார்ட் மேடையில் தோன்றி பாடுவார். ''திருலோகமும் புகழும் சுந்தர, தீர, வீர சூரன் நானே'' என்று பாடும்போது ஆர்மோனியம் பின்பாட்டு ஜால்ரா, தபலா எல்லாம் அலறும்! பின் ''வந்தேன்! வந்தேன்! வந்தனம் தந்தேனே—சபையோர்க்கு, வந்தனம் தந்தோம், தந்தனம், வந்தனம் இத்தினம் வந்தனம்'' என்று பாடி சபையோர்க்கு வணக்கம் செய்து உள்ளே சென்று விடுவார் - பிறகு பபூன் வந்து பாடுவார்.

மேலூரில் விசுவநாததாஸ் கழுகாசலகாட்சியில் முருகனுக வந்து ''சம்போமகாதேவா'' என்ற பாடலை ஸ்வரம் போட்டு பாடி முடிக்க 25 நிமிடங்கள் ஆகிவிட்டன சபையிலிருந்து ஒருகுரல் ''தேசீய பாடல்களை பாடு'' என்று கூச்சல் போட்டார்கள்.

உடனே விஸ்வநாததாஸ் 'பஞ்சாப் படுகொலை பாரில் கொடியது' என்ற பாடலை பாடி பலத்த கரகோஷத்துடன் முடித்தார். உடனே டி.எம். காதர் பாஷா பாட ஆரம்பித்தார். ''வாராண்டா வாராண்டா வெள்ளைக்காரன், வரட்டும் தடிப்பய தொப்பிகாரன்'' என்று. சபையிலிருந்தவர்கள் ''விஸ்வநாததாஸ் விடாதே. நீ இன்னொரு பாடலை பாடு', என்றூர்கள் உடனே-பகதூர் பகவத்சிங்கம்'' என்ற பாடலை பாடி கை தட்டலை பெற்றூர் விஸ்வநாததாஸ். "பொட்டிக்காரரே ஐந்து கட்டை சுருதியிலே நீ ஒரு பாட்டு பாடு, விடாதே பாடு பாடு!"

என்று குரல் கொடுத்தனர். உடனே "காந்தியோ பரம ஏழை சன்யாசி, என்ற பாடலை பாடி காதர் பாஷா முடித்தார். இப்படியாக வள்ளி நாடகம் நடைபெருமல் தேசீய பாடலாக இரவு 3 மணிக்கு நாடகம் முடிவுற்றது.

ஆனுல் ஜனங்கள் வெளியே உட்கார்ந்து இருந்தார்கள். பபூன் மேடைக்கு வந்து நாடகம் முடிந்து விட்டது. நீங்கள் வீட்டுக்குப் போகலாம் என்று மக்களை நோக்கிச் சொன்ஞர். சபையிலிருந்து ஒரு கும்பல் எழுந்திருந்து ''வள்ளி கல்யாணம் எங்கப்பா? முருகனும் வள்ளியும் மாலை மாற்றிக் கொண்டால்தான் வீட்டுக்குப் போவோம் அந்த காட்சியை நடத்துங்க'' என்ருர்கள். உடனே விஸ்வநாததாஸ் மேடையில் தோன்றி 'மாலை வாங்கி வர மறந்து விட்டார்கள். மன்னித்துக் கொள்ளுங்கள்' என்று இரண்டு தேசீய பாடலை பாடி மக்களை சமாதானம் செய்து அனுப்பினுர்.

விஸ்வநாததாஸ் மேடையில் அணியும் உடைகள் பூராவும் கதர் ஆடைதான். ஒரு சமயம் மகாத்மாகாந்தியடிகள் ''காந்தியோபரம ஏழை சன்யாசி'' என்ற பாடலை கேட்டுவிட்டு பாடலாசிரியர், "என்னை சன்யாசி என்று சொல்லி இருக்கிருர்; பாராட்டுகிறேன்'' என்ருர்.

இப்படி தேச விடுதலைக்காக பாடுபட்ட கலைஞர்களின் பட்டியல் ஏராளம்.

30-12-1940 சென்னை ராயல் தியேட்டரில் (இப்போது இல்லை) ஒரே ஸ்பெஷல் நாடகம் ''வள்ளி திருமணம்'' ',30-12-1940 இரவு 10 மணிக்கு திரு. எஸ்.எஸ். விஸ்வநாததாஸ் நடிக்கும் நாடகம் நடைபெறும் காணத் தவருதீர்கள்'' என்று பல இடங்களில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டு இருந்தன

இரவு சரியாக 10 மணிக்கு நாடகம் ஆரம்பமானது. பபூன் வந்து முதலில் பாடினுர். அன்று எழுதிய பாடல்கள் இன்றும் பொருத்தமாக இருக்கின்றன ''சாதிச் சண்டை சற்றும் ஓயவில்லை. சாராயம் குடிப்போர் சண்டைகள் தாங்க முடியாத்தொல்லை'', நம்மை வெட்கி தலைகுனிய வைக்கிறது இந்த பாடல்! அன்று கொட்டகை நிறைந்து காணப்பட்டது. தலைவர்களும் தொண்டர்களும் அதிகம் காணப்பட்டார்கள். பபூனும் ஆர்மோனியக்காரரும் தேசிய பாடல்களை பாடிய வண்ணம் இருந்தார்கள். விஸ்வநாததாஸ் பவுடர் போட்டுக் கொண்டு இருக்கும் போதே நெஞ்சு வலிப்பதாக சக நடிகர்களிடம் கூறி இருக்கிருர்.

சகநடிகர்களும் 'டாக்டரை வரவழைத்துக் காட்டலாமா' என்று கேட்டார்களாம். 'வேண்டாம்' என்று சொல்லி விட்டு சோடா மட்டும் குடித்துவிட்டு கழுகாசலம் சீனுக்கு தயாராக நின்று கொண்டு இருந்தார்.

படுதா தூக்கப்பட்டதும் 'சம்போ மகாதேவ' என்ற பாடலை சுருதியுடன் பாடினார். அடுத்த பாடலை பாட வில்லை. அதற்குள் அவர் மூச்சு நின்று விட்டது. தள் ளாடித் தள்ளாடி கீழே சாய்வது போல் தெரிந்தவுடன் மேடையில் நின்று இருந்தவர்கள் ஓடிப்போய் அவரைத் தாங்கி பிடித்தனர்.

கொட்டகையில் ஒரே பரபரப்பும் கொந்தளிப்பும் ஏற் பட்டது. ஜனத்திரள் மேடையை நோக்கி வர ஆரம்பித்தது. ஆர்மோனியக்காரர் தபலா அடிப்பவர்கள், நடிகர்கள், பொதுமக்கள் எல்லாம் மேடையில் கூடிவிட்டார்கள். 'என்ன என்ன! விஸ்வநாத தாசுக்கு என்ன'' என்று கேட்ட வண்ணம் இருந்தார்கள். ஒருவர் சோடா கொண்டு வாங்கய்யா! என்கிறார். மற்றொருவர் கூட்டம் போடாதீங்க என்கிறார். டாக்டரிடம் தூக்கிட்டு போங்கய்யா சும்மா ஆளுக்காளு பேசிக்கிட்டே இருக்கீங்க என்றார் மற்றொருவர். இப்படி பல யோசனைகளை சொல்லியவாறு வீடுகளுக்கு கூட போகாமல் இருந்தார்கள்.

நாடகம் பார்க்க வந்தவர்களில் ஒரு டாக்டரும் வந் திருந்தார்.

அவரும் தேசியவாதிதான். விஸ்வநாத தாசுக்கு நண்ப ரும் கூட! மேடைக்கு வந்து கும்பலை விலக்கி மேடையில் படுத்திருந்த விஸ்வநாததாஸ் நாடியைப் பிடித்து பார்த்து விட்டு ''எங்களை எல்லாம் விட்டுட்டு போயிட்டியே விஸ்வ நாதா'' என்று அலறினார். அவ்வளவுதான்!

விஸ்வநாத தாஸின் மரணச் செய்தி சென்னையில் காட்டுத் தீ போல் பரவியது. கொட்டகையின் உள்ளே யும் வெளியேயும் நின்று கொண்டிருந்த ஜனத்திரள் கவலை தோய்ந்த முகத்துடன் கண்ணீர் மல்க இறுதி மரியாதை செய்ய காத்திருந்தது.

வீரம், ஆண்மை, தயாளம், தேசப்பற்று, தெய்வ நம்பிக்கை நிறைந்த விடுதலை வீரர் தியாகச் செம்மல் விஸ்வநாததாஸ் தமிழ் மண்ணுக்குச் சொந்தக்காரராகி விட் டார். எம்.எம். கிதம்பரநாதன் அவர்கள் கூறியவை. (நன்றி)



"கலைவாணர்"
என்.எஸ். கிருஷ்ணன்



டி. ஏ. மதுரம்

குயிலே கொஞ்சம் கூவமாட்டாயா? என்று எவரும் கேட்பது இல்லை. மயிலே கொஞ்சம் ஆடிகாட்டு என்று ஆணையிடுவதில்லை. பச்சைக் கிளியே பேசு என்று உத்திரவு போடுவதில்லை. இந்த பறவைகள் இயற்கையாகவே காலங் கண்டு பாடுகின்றன. இடங்கண்டு ஆடுகின்றன. இச்சை கொண்டு பேசுகின்றன. அது நமக்கு பரவச மூட்டுகின்றது இது இயற்கை என்னும் சக்தியின் இன்பநாடகம். உலக மேடையில் ஒப்புயர்வற்ற கலை. காலமெனும் ஆசிரியன் கற்றுக்கொடுத்த காவியக்கலை.

மனித உருவிலே தோன்றி கலைச்சித்தராய் நம்மிடையே உலாவிக் கண்காணு வானத்தே உருவத்தை மறைத்துக் கொண்டு, உணர்வின் வடிவமாக வாழும் கலைவாணரைப் பற்றி எண்ணிப் பார்ப்பது மிகச் சிறந்தது.

உண்மை இதயங்களை தட்டிக்கேட்டால் உணர்ச்சி அலைகள் ஆயிரம் கதைகள் சொல்லும், அவர் யார், எப்படி வந்தார், என்ன செய்தார்? என்ன என்ன சாதிக்க இருந் தார் என்று!

அதை நம்மில் ஒவ்வொருவரும் எண்ணிப் பார்த்தால் உண்மை புலப்படும். 1908 நவம்பர் 29 ஆம் நாள் கலை அரசர் கலைவாணர் திரு என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள்

பிறந்தார். தந்தை சுடலை ஆண்டிப்பிள்ளை, தாயார் திருமதி இசக்கியம்மாள். நாகர்கோயிலையடுத்த ஒழுகின சேரி அவர் பிறந்த சிற்றூர். தமிழும் மலையாளமும் நான் காம் வகுப்பு வரை படித்திருக்கிறார். இளமைப் பருவத் திலேயே தனது வீட்டில் சேலையை படுதாவாகக் கட்டி சிறுவர்களை வைத்துக்கொண்டு ''வள்ளி திருமணம்'', ஹரிச்சந்திரா'' போன்ற நாடகங்களை நடத்தி நடிப்பதுண்டு.

தந்தையார் தபால் நிலையத்தில் பணியாளராக வேலை செய்து வந்தார். தாயார் தன் வீட்டிலேயே சோற்றுக் கடை நடத்தி வந்தார்கள். ஏழ்மையான குடும்பம், கஷ்டத்தை உணர்ந்து படிப்பை நிறுத்திவிட்டு அவர் வீட்டின் சமீபமாக இருந்த நாடக கொட்டகையில் சோடா கலர்களை விற்று வந்ததுடன் நாடகங்களை உன்னிப்பாக கவனித்து வந்தார். தாமும் மேடைகளில் நடிக்க வேண் டும் என்ற ஆர்வமுண்டாயிற்று. ஆனால் தாயார் அதை விரும்பவில்லை. படித்து பட்டம் பெறவேண்டும் தன்மகன் என்றுதான் விரும்பினாள்.

கலைவாணர் எதையும் தாங்கிக் கொள்வார். ஆனால் கஷ்டத்தை மட்டும் அவரால் தாங்கிக் கொள்ள முடியாது. பிறர் கஷ்டப்படுவதை பார்த்தாலோ அல்லது கேள்விப் பட்டாலோ உடனே உதவி செய்வார். ஒரு சமயம் அவ ருடன் நாடகக் கம்பெனியிலிருந்த நண்பனுக்கு ரூ.10000 கொடுத்துவிட்டு அவர் சொன்ன வார்த்தை 'போயிட்டு வா' என்பது. அப்போது அவர் சொன்ன வார்த்தை அந்த நடி கருக்குப் புரியவில்லை. அவர் கொடுத்த பணத்தில் கடை ஒன்று ஆரம்பித்து நஷ்டப்பட்டு கடனாளியாகி கலைவாணரை மறுபடியும் சந்திக்கும் போதுதான் ''போயிட்டுவா'' என்று அவர் சொன்ன வார்த்தையின் கருத்து புரிந்தது. ''என்னப்பா வந்துட்டியா? நான் தான் கொடுக்கும்போதே சொன்னேனே போயிட்டுவான்னு''! இப்படி காலத்தையும் உணர்ந்தவர் கலைவாணர்.

தனது 17ஆம் வயதில் வீட்டில் படும் கஷ்டங்களை உணர்ந்து தாய் தந்தையிடம் சொல்லாமல் திருவனந்தபுரம் நோக்கி புறப்பட்டார். அந்த ஊரில் டி.கே.எஸ். சகோ தரர்கள் நாடக கம்பெனி துவக்க ஏற்பாடுகள் செய்யப் பட்டு வந்ததை அறிந்து கம்பெனி வீட்டுக்குச் சென்று பெரியவர் டி.கே.சங்கரன் அவர்களைப் பார்த்து கம்பெனி

யில் நடிகராக சேர்ந்து கொண்டு முதல் நாடகமாக ''சத்திய வான் சாவித்திரியில்'' சாவித்திரியின் தந்தையாகவும், ''கோவலன்'' நாடகத்தில் பாண்டியனுகவும் இப்படிப்பட்ட வேஷங்களை ஓர் ஆண்டு வரை நடித்தார்.

காரைக்குடியில் நாடகக் கம்பெனி முகாமிட்டது. அந்தக் கம்பெனியின் நகைச்சுவை நடிகர், காலஞ்சென்ற எம்.ஆர்.சாமினுதன் அவர்கள் அடிக்கடி சொல்லாமல் எங்கேயாவது புறப்பட்டு விடுவார். அன்று ''மனோஹரா'' நாடகத்தில் அவர் வசந்தன் போட வேண்டும். சாமி னுதன் அவர்களைக் காணவில்லை. கம்பெனியில் குழப்பம் ஏற்பட்டது. யார் இந்த பாத்திரத்தை ஏற்று நடிப்பார் கள் என்று கலங்கி இருக்கும் போதுதான் ''கவலைப்படா தீங்கோ நான் நடிக்கிறேன்'' என்று தைரியக்குரல் கொடுத்து சிறப்பாக நடித்து மக்களின் நன்மதிப்பைப் பெற்ருர். அந்த நாள் முதல் கம்பெனியை விட்டு விலகும்நாள் வரை கம்பெனியின் நிரந்தர நகைச்சுவை நடிகராக தன்னைப் பதிவு செய்து கொண்டார்.

இடையில் கொஞ்காலம் ஜகன்னுத அய்யர் கம்பெனி, கோல்டன் சாரதாம்பாள் கம்பெனிகளில் நடிகராகவும் இருந்தார். 1931ல் திருமதி நாகம்மையை திருமணம் செய்து கொண்டார். பேசும்பட உலகம் இவரை வர வேற்றது. இவரது முதல்படம் 'சதிலீலாவதி' ஆனந்த விகடன் ஆசிரியர் திரு. எஸ்.எஸ்.வாசன் அவர்களால் எழுதப்பட்டது. (எம்.கே.ராதா, டி.எஸ். பாலையா, எம்.ஜி. சக்ரபாணி, எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள், டணுல் தங்க வேலு, எம்.வி. மணி இவர்கள் அனைவருக்கும் முதல் படம் 'சதிலீலாவதி' தான்). திரு. என்.எஸ். கே.க்கு, 'மேனகா' படம் வெற்றிப்படமாக அமைந்து திரைப்படத் துறையில் உன்னத அந்தஸ்தை அடைந்தார்.

1935ல் புனுவில் ''வசந்த சேனை'' என்ற படத்தில் நடித்துக் கொண்டு இருக்கும்போதுதான் டி.ஏ.மதுரம் அம்மையாருடன் தொடர்பு ஏற்பட்டு பின் ''தட்ச யக்ஞம்'' என்ற படத்தில் அது வளர்ந்தது. 1936 ல் ''கிருஷ்ணன் தூது'' என்ற படத்திற்கு லெ. செட்டியார் அவர்கள் என்.எஸ்.கே.யை ஒப்பந்தம் செய்தார்கள். எல்லா நடிகர்களும் கம்பெனி வீட்டில் தங்கியிருந்தார்கள்.

திரு.லெ.செட்டியார் அவர்களின் முயற்சியால் என். எஸ்.கே.க்கும் டி.ஏ. மதுரம் அம்மையாருக்கும் திருமணம் நடைபெற்றது. எப்படி? ஊரைக்கூட்டி, அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து, பந்தல் போட்டு, மேளம் வைத்து கச்சேரிகள் நடத்தி அல்ல !''ம'' என்ற மோதிரத்தை என். எஸ்.கே. அணிந்து கொண்டார் ''கி'' என்ற மோதிரத்தை மதுரம் அம்மையார் அணிந்து கொண்டார். இதுதான் அவர் செய்து கொண்ட சிக்கன திருமணம். பின் திரைப்படத்தில் உச்ச கட்டத்தை பிடித்து விட்டார் கலைவாணர்.

திரு.பம்மல் சம்பந்த முதலியார் அவர்களால் ''கலை வாணர்'' என்ற பட்டம் வழங்கப்பட்டது. என்.எஸ்.கே. நாடக சபையை துவக்கி வேலை இல்லா நடிகர்களுக்கு வாழ் வளித்தார். அப்போதுதான் லட்சுமிகாந்தன் கொலை வழக்கில் கைதாகி விடுதலை அடைந்தார்.

1951ல் ரஷ்யாவிலிருந்து வந்த அழைப்பை ஏற்று கே. சுப்பிரமணியம் தலைமையில் ரஷ்யா சென்று தமிழரின் புகழ்க் கொடியை ஏற்றிவைத்து திரும்பினார்.

1952 ல் நாடகக் கழகம் நிறுவப்பட்டது. (அது தற் சமயம் இயல், இசை, நாடக மன்றமாக விளங்குகிறது). அதன் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். நாடக வரியை ரத்துசெய்யவும் கலைஞர்களுக்கு ரயில் சலுகை டிக்கட் வழங்குவதற்காக ஏற்பாடும் செய்தார். 1956ல் தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டு புயல் நிவாரண நிதி திரட்டி அரசாங்கத்திற்கு வழங் கினார். நாகர்கோயிலில் 20000 ரூபாய் செலவில் காந்தி ஸ்தூபி கட்டினார். வாரி வழங்குவதில் கர்ணனையும் மிஞ்சி விட்டார். ராஜாபத்திரகிரி போல் எப்பொருளும் நம் முடையது இல்லை என்று வாழ்ந்து காட்டியவர் ஆவர்.

ஒரு விஷயத்தை நான் குறிப்பிடாமல் இருந்தால் உண்மையை மறைப்பதாகும். மலருக்கு எப்படி மணமோ நகத்திற்கு எப்படி சதையோ, உயிருக்கு எப்படி உடலோ அப்படித்தான் என்.எஸ்.கே.யிடம் நாராயண அய்யர் (பரந்தாமன்) பணியாற்றினார். அவர் கலைவாணரது நினைவு நாளை கையில் காசு இருக்கோ இல்லையோ வருடம் தவறாமல் கோயில் உற்சவம் போல் நடத்தத் தவறியது இல்லை. அதை இப்போது தமிழக அரசு ஏற்று நடத்திக் கொண்டு வரு

கிறது. அந்த நல்ல காரியத்தை செய்தவர் மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

என்.எஸ்.கே. அவர்கள் 1953 ஆகஸ்ட் மாதம் 30ந் தேதி நம்மைவிட்டு பிரிந்து விட்டார். அவர் நடிகர் மட்டும் அல்ல; எழுத்தாளர், வசனகர்த்தா, இசை அமைப்பாளர், பேச்சாளர், இலக்கிய விமர்சகர், பட இயக்குனர். அவரை நன்கு உணர்ந்துதான் அண்ணு அவர்கள் கலைவாணரின் சிலையை ஜி.என். செட்டி ரோட்டில் திறந்து வைத்தார். கடைசி விழாவும் அண்ணு அவர்களுக்கு அதுதான்! கலைவாணரின் ஆன்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுவோம்.



**எம். எஸ். முத்துகிருஷ்ணன்**

"**யா**மறிந்த புலவர்களிலே கம்பனைப்போல் வள்ளுவரைப்போல் பூமிதனில் யாரும் பிறந்ததில்லை'' என்ற பாரதியின் எண்ணப்படி திரு. எம்.எஸ். முத்துக்கிருஷ்ணன் அவர்கள் பழம் பெரும் நடிகர், ஆசிரியர்! தமிழகத்தில் பல பிரபல நடிகர் நடிகைகளை உறுவாக்கியுள்ளார். நாடகத் துறையில் இவரைப் பற்றி நீண்ட வரலாறுகள் உண்டு. நான் அவருடன் பழகிய நேரங்களை வீணுக்காமல் அவருடைய வரலாற்றை கேட்டு அறிந்திருக்கிறேன். அதை எழுதுவதை எனது தலையாய கடமை என்று எண்ணி இங்கு எழுதுகிறேன்.

திரு. முத்துகிருஷ்ணன் அவர்கள் சென்னை வண்ணையம்பதியில் 9-5-1905ல் திரு. சோலைமலைச் செட்டியாருக்கும், ஆவுடையம்மாளுக்கும் பிறந்து திண்ணைப் பள்ளியில் ஐந்தாவது வயதில் கல்வி கற்க துவங்கியுள்ளார். எழுதிக் கொண்டு படித்துக் கொண்டிருக்கையில் இசை, மேளம்' பாடல் சப்தம் கேட்டுவிட்டால் பள்ளியை விட்டு வாத்தியாருக்கும் தெரியாமல் ஒலிவரும் திசையை நோக்கிச் சென்று ஆடுவதும் பாடுவதும் வழக்கமாக வைத்திருந்தார். இதை எல்லாம் கண்ணுற்ற பெரியோர்களும் தாய்மார்களும் வியந்ததுண்டு.

'சார்ப்பட்டா' திரு. மாணிக்கனுர் (நடிகர் திருப்பதி சாமியின் தந்தை) சரஸ்வதி உடற்பயிற்சி நிலையத்தில்

சிலம்பு, புலி ஆட்டம் போன்றவைகளை சொல்லிக் கொடுக்கும் ஆசிரியராக இருந்தார். அங்கும் அடிக்கடி சென்று அவைகளை கவனித்து வந்தார் முத்துகிருஷ்ணன். இதை அறிந்த திரு. மாணிக்கனூர் திரு. முத்துகிருஷ்ணன் அவர்களுக்கும் சிலம்பாட்டம், புலியாட்டங்கள் சொல்லிக் கொடுத்து தயார் செய்தார். விஜயதசமி போன்ற பண்டிகைகளின் போது தெருக்களில் பெரியபுலி சின்னப்புலி ஆட்டங்கள் நடைபெறும், அதில் இடையில் குட்டிப்புலி ஆட்டம் ஆடுவார். இதை மற்ற ஆட்டக்காரர்களும் மக்களும் பாராட்டத் தவறவில்லை.

அவர் வீட்டுப் பக்கம் பல நாடக குழுக்கள் இருந்தன. இரவு நேரங்களில் டம்பாச்சாரி, சகுந்தலா, சத்திய வான் சாவித்திரி, இந்திரசபை, இராமயண நாடக ஒத்திகைகள் நடைபெறும். பாடல் சத்தம் கேட்டவுடன் தாய் தந்தைக்கு தெரியாமல் ஒத்திகை நடக்கும் இடம் சென்று இரவு பூராவும் விழித்துக் கொண்டு அவைகளை கேள்வி ஞானத்தால் பாடம் பண்ணிவிடுவார். தானும் நடிக்க வேண்டும் என்ற ஆர்வம் இவருக்கு அதிகமாயிற்று!

சர். பி. தியாகராயர் பள்ளி மைதானத்தில் பாலாமணி அம்மாள் சபை, லாவணி சுப்புராயலு நாயக்கர் போன்ற மேதைகளின் நாடகங்கள் நடைபெறும். ஒரு தடவை நாடகம் நடைபெறும்போது பள்ளியின் தர்மகர்த்தா திரு. பார்த்தசாரதி அவர்கள் நாடகத்தின் இடையில் முத்துக் கிருஷ்ணனுக்கு வேடமிட்டு மேடையில் ஏற்றி பாட வைத்தார். அன்று அவருக்கு பல பரிசுகளும் பாராட்டும் கிடைத்தன.

சுந்தர ஆச்சாரி, சாமினாத ஆச்சாரி பாட, கள்ள பார்ட் நடிப்பும் அரங்கேறினார்.

திரு. இராசேகர நவமணி அவர்கள் நவ நாடக அமைப்புகளையும், நடிப்பும் சொல்லிக் கொடுத்துள்ளார்கள்.

ஓரடி முத்துவேலு பிள்ளை, திருப்புகழ் ஜீவரத்தினம் மாள் இவர்களின் நாடகக் குழுக்களில் நடித்துக் கொண்டிருப்பார். மறுநாள் சிலம்பாடும் குழுக்களுடன் சேர்ந்து சிலம்பாட்டம், புலியாட்டம் ஆடுவார்.

ஆஞ்சநேயர் கோவிந்தசாமி குழுவில் நடிப்பார். இரண்டுநாள் சென்றபின், மூன்றும் வகுப்பில் பள்ளியில் படித்துக் கொண்டிருப்பார்.

கோல்டன் சாரதாம்பாள், விஸ்வநாத பிள்ளை நாடக குழுக்களில் நடித்துக் கொண்டிருப்பார். திடீர் என்று வீட்டுக்கு வந்து விடுவார்.

திரு. ஸ்ரீனிவாச பிள்ளை குழுவிலிருப்பார், மறுநாள் மாமன் வீட்டிற்கு வந்து விடுவார்.

திரு. சி. கன்னையா கம்பெனியில் சேருவார். பத்து நாள் சென்று, சௌராட்டிரா நாடகக் குழுவில் நடிப்பார். அங்கு சிலநாள் இருந்து விட்டு விலகி சிலோன் சாயபு கம்பெனியில் நடிப்பார். ஆலந்தூர் ஒரிஜினல் நாடக சபை, சங்கீதம் சாமி நாயுடு, திரு. கே. அரங்கநாயகி அம்மாள், திரு. ஜி.எஸ். முனுசாமி நாயுடு, திரு. வி. பி. ஜானகி அம்மாள், திரு. சின்னமஹாதேவய்யர், பபூன் வைகுண்டம் அய்யங்கார், அல்லி பரமேஸ்வரய்யர், கிருஷ்ணசாமி பத்தர், எம்.ஆர். கோவிந்தசாமி பிள்ளை, நடேச பத்தர், குரங்கு நரஸிம்ம நாயுடு, விகடம் நரஸிம்மாச்சாரி, முருகேச நாயக்கர், திருப்புகழ் குப்புசாமி, ராமச்சந்திரபிள்ளை, அரங்கசாமி நாயுடு, சி. எஸ். சாமண்ணு, வடிவாம்பாள், நம்மாழ்வார் ரெட்டியார், நாகரெத்தினம்மாள், மாணிக்க முதலியார், அஞ்சுகம் கிருஷ்ணவேணி, வேதவல்லி தாயார், ரெட்ட மண்டை இராமசாமி நாயடு, அச்சுத நாயர், 'கவாய்' தருமலிங்கம்பிள்ளை, போன்ற நடிக மேதைகளின் நாடகம் நடக்கும்போது இடையில் கள்ளபார்ட் நடனத்துடன் பாட்டும் பாடி புகழ் பெற்றதும் பலகலைஞர்களின் நட்பும் கிடைத்ததும் இவர் நடிப்பதற்கு அஸ்திவாரமாக அமைந்தது.

டப்பான் குத்தில் பலவகையுண்டு. அந்தப் பட்டியலை பாருங்கள்: கால் பெரு விரல் டப்பான், குதிகால் டப்பான், முட்டி டப்பான், தண்டால் டப்பான், ஒருகை டப்பான், இருகை டப்பான், பல்டி டப்பான், அந்தர் பல்டி டப்பான், ஒத்தக்கால், இரட்டைக்கால் டப்பான், இருகால் டப்பான், சம்மணக் கால் டப்பான்! இவ்வளவு ஆட்டத்தையும் ஆடி பல சான்றுகள் பெற்றுள்ளார்.

ஒரு சமயம் கள்ளபார்ட் நடராஜ ஆச்சாரியிடம் போட்டியிட்டு ஆடி அவரிடம் ஆசி பெற்றூர். அவர் அணிந்திருந்த வீரகண்ட மணியை கழற்றி முத்துக் கிருஷ்ணன் காலில் அணிவித்தார்.

இந்த போட்டியை மேடையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த தவத்திரு சங்கரதாஸ்சுவாமிகள் கூறிய

வார்த்தை என்ன தெரியுமா?'' ''கள்ளனுக்கு கள்ளன்'' தோன்றி விட்டான்.

''இராவணு'' திரு. திருவேங்கட ரெட்டியார் இவருக்கு நடிப்பு பயிற்சி அளித்தார். அதன் பயனுகத்தான் நடிப்புச் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியராக திகழ்ந்தார்.

கொஞ்சகாலம் அரங்கநாயகியம்மாள் கம்பெனியில் நடித்துக் கொண்டிருந்தார்.

அருப்புக்கோட்டை பாலையா, புதுவை, எம்.எம். சாமி, திருச்சி நடராஜ ஆச்சாரி, மோஹினி பாலகிருஷ்ணன், ருக்மணி அம்மாள், நாகரெத்தினம்மாள், இவர்களுடன் சரிசமமாக நடிக்க ஆரம்பித்தார்.

நாடகங்களில் அவர் வாங்கிய சம்பளத்தை ஆசான்களுக்கு கொடுத்து விடுவார்.

தந்தையாரோ, துறைமுகத்தில் நெல், அரிசி, பருப்பு, தானிய வகைகளை வினியோகம் செய்யும் வர்த்தகர். தன் மகன் ''கள்ளபார்ட்'' ஆடுவதை அவர் விரும்பவில்லை. ஆனுல் தாயும், மாமாவுந்தான் இவரின் கலை ஆர்வத்திற்கு முழு ஆதரவு அளித்தார்கள்.

தாயார் தன் கணவனிடம் தன் மகன் போக்குப்படி விட்டுவிடும்படி வற்புறுத்தினுர். அதற்கு அவர் கூறிய பதில், ''திருடன் வேஷம் போட்டு கூத்தாடுவது கூடாது, வேறு நல்ல ஆட்டம் ஆடட்டும்''

தந்தையின் எண்ணப்படி அண்ணனை துணைகொண்டு சுகுணவிலாஸ் சபை, ஆந்திர சபை, பாலிவாலா சபை, வேலு நாயக்கர் சபை நாடகங்களை பார்க்கச் சென்றுர்.

வேலு நாயக்கர் சபையில் சேர எண்ணினுர். சபையின் முக்கிய நடிகர் திரு. எம்.ஜி. நடராஜ பிள்ளையை அணுகி பாடிக் காட்டினுர், பாட்டைக் கேட்ட நடராஜ பிள்ளை அவர்கள் ''இவனை இங்கு சேர்ப்பதைக் காட்டிலும் பாய்ஸ் கம்பெனியில் சேர்த்தால் சீக்கிரம் முன்னுக்கு வந்திடுவான்'' என்று கூட்டி வந்த அண்ணனிடம் கூறினுர்.

சில மாதங்கள் சென்று மீண்டும் அண்ணனை அழைத்துக் கொண்டு ஆரிய கானசபையில் சேர புறப்பட்டார். காலை சுமார் 11 மணி அளவில் மேடையில் கூட்டமாக இருந்தது. பெரியவர்கள் கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள். யார்? யார்? உடுமலை முத்துச்சாமி கவிராயர், சங்கரலிங்கக்

கவிராயர், ஏகை சிவஷண்முகம் பிள்ளை, சங்கரதாஸ் சுவாமிகள், கந்தசாமிக் கவிராயர், வேலூர் நாராயண வாத்தியார், சந்தான கிருஷ்ண வாத்தியார், ஆகிய நாடகக் காவலர்கள் கூடி திரு. செல்லப்பா அனந்த நாராயண அய்யரைப் பற்றி கவிதை நடையில் உரையாடிக் கொண்டிருந்தார்கள். முத்து கிருஷ்ணன் அவர்களின் எண்ணம் அன்று கைகூடவில்லை.

பாய்ஸ் கம்பெனியில் சேர பல முயற்சிகள் செய்தார். அப்போது 'பால மீன ரஞ்சனி' சபை சைதாப்பேட்டையிலிருந்து சென்னைக்கு வந்தது. சங்கரதாஸ் சுவாமிகளுக்கு பிறகு திரு. கந்தசாமி முதலியார் வாத்தியாராக இருந்தார். அவரிடம் சென்று, தான் கம்பெனியில் சேரவேண்டும் என்று வேண்டினார். திரு. கந்தசாமி முதலியாரும் திரு. ஜெகன்னாத அய்யரிடம் சிபாரிசு செய்து மாதம், பத்து ரூபாய் சம்பளத்தில் மூன்று ஆண்டுகள் ஒப்பந்தத்தில் கம்பெனியில் நடிகராக சேர்ந்தார்.

அந்தக் கம்பெனியின் துணை ஆசிரியர் திரு. பி.டி. சம்பந்தம் அவர்கள் முத்துக்கிருஷ்ணன் அவர்களுக்கு, இராவணன், கம்சன், கீசகன், போன்ற பாடங்களை சொல்லிக் கொடுத்து நடிப்புத்துறையில் இவரை வல்லவனாகத் திகழவைத்தார்.

ஏழு ஆண்டுகள் இந்த கம்பெனியிலிருந்து கலையின் நுட்பங்களைத் தெரிந்து கொண்டு அந்த கம்பெனியின் முக்கிய நடிகரின் அந்தஸ்த்தைப் பெற்றார்.

1924-ஆம் ஆண்டிலிருந்து கள்ளபார்ட் நடனம் ஆடுவதை நிறுத்திக் கொண்டார்.

பின்னால் பல கம்பெனிகளில் ஆசிரியராகப் பணிகாற்றி பல நடிகர்களை உருவாக்கி, சொந்த கம்பெனி தொடங்கி, பின் என்.எஸ்.கே.யின் நாடகக் கம்பெனியின் ஆசிரியராக இருந்து, அதிலிருந்து விலகி, கே.ஆர். ஆர். துவக்கிய 'கிருஷ்ண நாடக சபையில்' ஆசிரியராக இருந்து, அறிஞர் அண்ணாவின் கதைகளை நாடகமாக ஆக்கி அறங்கேற்றம் செய்து அண்ணாவின் பாராட்டை பெற்று கலைக்காக வாழ்நாள் பூராவும் தன்னை அர்ப்பணித்து மறைந்தார். அவரது ஆன்மா சாந்தியடைய அவரது மாணாக்கர்கள் அவரை மறக்காமல் நினைத்து அஞ்சலி செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

அவர் ஏழை மாணவர்கள் கல்வி பயில பள்ளி ஒன்றை 6-7-54-ல் டி.கே. ஷண்முகம் அவர்களைக் கொண்டு துவக்கி வைத்தார். அதில் பல ஏழை மாணவக் குழந்தைகள் இன்றும் படித்து வருகின்றனர்.



**கே. சாரங்கபாணி**

பாய்ஸ் நாடக கம்பெனியில் வாழ்ந்ததை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அன்று பல நடிகர்களுக்கு உண்ண உணவு இல்லை, உடுக்க உடை இல்லை, படுக்க பாய் இல்லை. பெற்றோரையும் உற்றோரையும் மறந்து பிரிந்து பாய்ஸ் கம்பெனிக்கு வந்தோம். வந்த இடத்திலும் அல்லலும் அவஸ்தையும் உற்றோம். ஆனால் நாடகத்தில் வேல்பிடிக்கும் சேவகனாகவும், கூட்டத்தில் ஆடும் நடன மங்கையாகவும் வேடங்களை புனைந்து, கதாநாயகன் பாத்திரத்தில் நடிக்கும் வரை வளரும் குறிக்கோள் இருந்தது.

போட்டி பொறாமை அன்றும் இன்றும் இருந்து வருகிறது.

ஜாதி, மதம், பேதமில்லாமல் துன்பத்தின் எல்லையிலும் தனது திறமையை வளர்த்து நட்சத்திர வரிசையை பிடித்தவர்களும் உண்டு. அந்த வரிசையில் வந்தவர் கே. சாரங்கபாணி அவர்கள். 1906 ம் ஆண்டு கும்பகோணத்தில் பிறந்து ஏட்டு பள்ளியில் பயின்றார். இவர் படித்த பள்ளியில் தான் மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களும் படித்தார்.

முறைப்படி சங்கீதம் பயின்றார். நடிப்பில் எப்படி ஆர்வம் தோன்றியது என்று கேட்டதில் அந்த நாளில் கும்பகோணம்தான் நாடகக் கலையை வளர்த்த இடம். பாலாமணி அம்மையார் அவர்கள் நாடகங்களை நடித்து வந்தார்கள். அந்த நாடகங்களை அடிக்கடி சென்று பார்த்

தாராம். மேலும் பாலாமணி நாடகம் என்றால் தியேட்டர் நிறைந்து விடுமாம். ''பாலாமணி ஸ்பெஷல்'' என்ற ரயிலே விடப்பட்டதாம்! அந்த அம்மையாரின் இல்லந் தான் ஏழை எளியவர்களுக்கு வாழ்வளிக்கும் இடமாம்! தர்மம் செய்தே தனது சொத்துக்களை அழித்தாராம்.

(இன்னும் பல லட்சம் உள்ளது. சந்ததி இல்லாததால் யார்யாரோ அனுபவிப்பதாகவும் அதை கண்டு பிடித்து நடிகர் சங்கத்தில் சேர்த்தால் நன்மை என்றார்.)

அந்தக் கம்பெனியின் நடிகரும், நிர்வாகியுமான நகைச்சுவை மன்னன் திரு.சி.எஸ். சாமண்ணா அய்யரிடம் தொடர்பு கொண்டு நடிக்க வேண்டும் என்று சொன்னார். அவரும் ஆவன செய்வதாக சொல்லி இருக்கிறார்.

முதல் முதலாக பாய்ஸ் கம்பெனியை ஆரம்பித்தவர் த.பா.வெங்கடாசலம் அவர்கள் தான். அந்தக் கம்பெனி யில் தான் எம்.ஜி.ஆர். அவர்களின் நாடக ஆசான் காளி என்.ரத்தினம் அவர்கள் நடித்து வந்தார்கள். முதல் நாடக மாக ஒரு கனவான் வீட்டு சடங்கில் ''லலிதாங்கி'' என்ற நாடகம் நடைபெற்றதாம். அந்த கம்பெனியிலிருந்து பிரிந்த கம்பெனிகள்தான் ''மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம் பெனியும்'' ஜெகன்னாத ஐயர் கம்பெனியும். ஜெகன்னாத அய்யரின் கம்பெனியில் தான் முதல் முதலாக சங்கரதாஸ் சுவாமிகள் ஆசானாக இருந்து வந்தார்கள்.

அந்தக் கம்பெனியில்தான் சாரங்கபாணி அவர்கள் நடிகராகச் சேர்ந்து கொண்டு நடிப்பு கலையில் தேர்ச்சி யுற்றார். சுவாமிகளுக்குப் பல மாணக்கர் உண்டு. அவ ரிடம் அடிவாங்காத மாணக்கர் திரு. சாரங்கபாணி அவர்கள்.

சிலகாலம் நவாப் ராஜா மாணிக்கம் பிள்ளை அவர்களின் கம்பெனியில் நகைச்சுவை நடிகராகவும் பாகஸ்தராகவும் இருந்தார்கள். அப்போது தான் திரைப்படத்தில் நடிக்க சந்தர்ப்பம் கிடைத்தது. காந்தியவாதி தேசபக்தர் கதரைத் தவிர வேறு எதையும் உடுத்துவதில்லை.

'ரம்பையின் காதல்' 'சாந்த சக்குபாய்' என்ற படங் களின் மூலமாக நட்சத்திர வரிசையில் இடம் பெற்றார். நாடகக் கழகத்தில் பொருளாளராக பணியாற்றி உள்ளார். மகாத்மா காந்தியிடம் ஆசி பெற்றுள்ளார். காமராஜர் ராஜாஜி சத்தியமூர்த்தியிடம் அதிக ஈடுபாடு உள்ளவர்.

உண்மை காந்தியவாதி திரு கே. சாரங்கபாணி அவர்கள் சென்னையில் தன் இல்லத்தில் காலமானார். இவருடைய சேவையை பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடகமன்றம் திருஉருவப் படத்தைத் திறந்து வைத்துள்ளது.



**கே. ஆர். ராமசாமி**

**த**ஞ்சை மாவட்டத்தில் உள்ள அம்மா சத்திரத்தில் *14-4-1914* ஆம் வருடம் செட்டியார் குலத்தில் பிறந்து கும்பகோணம் பிடில் வித்வான் டி.எஸ். ராஜமாணிக்கம் பிள்ளையிடம் சங்கீதம் பயின்று, மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் நடிகராக சேர்ந்து, நல்ல வேடங்கள் போட்டு நன்மதிப்பை பெற்று வந்தார் திரு. கே. ஆர். ராமசாமி அவர்கள்.

ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியின் அதிபர் திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள். அந்த கம்பெனியின் ஆசிரியரும் நடிகரும் திரு. காளி என்.ரத்தினம் அவர்கள்! நாடகங்களை தயாரித்து வழங்குவது (திரு.எம்.கே. ராதாவின் தந்தை) கந்தசாமி முதலியார் அவர்கள். அந்த கம்பெனி நடிகர்கள்: திரு. கே.பி. கேசவன், எம்.கே. ராதா, பி.யு. சின்னப்பா, டி.ஆர்.பி. ராவ், கே.கே பெருமாள், எம்.ஜி. சக்ரபாணி இன்றைய முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள்.

ஈரோட்டில் ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி நாடகம் நடை பெற்றுக்கொண்டு இருக்கும் போது டி.கே. எஸ் சகோதரர்கள் ஈரோட்டில் நாடகத்தை முடித்துக்கொண்டு கோவைக்கு புறப்பட்டு விட்டார்கள். ஆனல் டி.கே.எஸ். சகோதரர்களின் தாயார் சீதையம்மாள் மட்டும் சிறிது காலம் ஈரோட்டிலே தங்கி இருந்தார்கள். ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி நடிகர்கள் சீதையம்மாளின் இல்லம் சென்று உடல் நலம் விசாரித்து வருவார்கள். அப்படி உடல் நலம் விசாரிக்க சென்றவர்தான் திரு. கே. ஆர்.ஆர்.

அவர்கள். தன்னையும் டி.கே.எஸ் குழுவில் சேர்த்து விடும் படி சிபாரிசு செய்யச் சொன்னார்.

'நான் என் மகன்களிடம் சொல்லி உன்னை கம்பெனியில் சேர்த்து விடுகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. நீ தற்சமயம் இருக்கும் கம்பெனியில் ஒரு கடிதம் வாங்கி வா'' என்று சீதை யம்மாள் சொன்னார்கள். காரணம் என்ன தெரியுமா? அந்த நாளில் ஒரு கம்பெனி நடிகரை மற்றொரு கம்பெனிக்கு கடத்திச் சென்று விடுவார்கள். இது வழக்கமாக நடந்து வந்தது. அந்த பழி நமக்கு வேண்டாம் என்று அம்மையார் நினைத்திருக்கலாம்.

ஒரு நாள் ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் சொல்லாமல் தன்னந்தனியாக கோவையில் நடந்து கொண்டிருக்கும் டி.கே.எஸ். சகோதரர் நாடக கம்பெனியில் பெரியவர் திரு. டி.கே. சங்கர அண்ணாச்சி அவர்களை பார்த்து ஈரோட்டி லிருந்து தங்களின் தாயார் என்னை இங்கு அனுப்பிவைத்தார் கள் என்று கே.ஆர்.ஆர். சொன்னார்.

''எனக்கு தெரியும். எங்கள் தாயார் கடிதம் எழுதி யிருந்தார்கள். நீ செய்த பணிவிடைகளைப் பற்றியும் குறிப்பிட்டு இருந்தார்கள். பாடுவியா?'' என்று கேட்டார் அண்ணாச்சி. ''பாடுவேன்'' என்று சொல்லி பாடிக்காட்டினார், கே.ஆர்.ஆர். அவர்கள். இவரது பாடல் சகோதரர்களுக்கு பிடித்து விட்டது. உடனே கம்பெனியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

சங்கரதாஸ் சுவாமிகள் எழுதிய நாடகமாகிய ''வீர அபிமன்யு' நாடகத்தில் கிருஷ்ண வேஷம் போட பாடம் கொடுத்து பயிற்சியும் கொடுத்தார்கள். முதல் நாடகத்தி லேயே நல்லபெயர் புகழ் சம்பாதித்து விட்டார். சகோ தரர்களின் நன்மதிப்பையும் பெற்றார் திரு கே. ஆர் ஆர். அவர்கள். ''இராமாயணம்'' நாடகத்தில் பாடல் அதிகம் ஆகையால் ஆஞ்சனேயர் வேடம் கொடுக்கப்பட்டது. அதையும் திறமையாக நடித்து முத்திரை பதிய வைத்து விட்டார். பிறகு சோஷியல் நாடகம் நடத்தப்பட்டது. ரங்கராஜுவின் நாவலாகிய 'மேனகா'வை நாடகமாக நடத்தி னார்கள். அதில் பெண் வேடம் போட்டார். (மேனகா) அதிலும் நல்ல பெயர் கிடைத்தது. முக்கிய நடிகர் பட்டி யலிலே திரு. கே.ஆர்.ஆர். அவர்கள் அக்குழுவில் விளங் னார்.

(1938ல் திரு எஸ்.வி. சுப்பையா அவர்கள் டி.கே.எஸ். குழுவில் நடிகராக சேர்க்கப்பட்டு சிறு சிறு வேடங்கள் போட்டு வந்தார். அந்த கம்பெனி நடிகர்தான் முன்னாள் மாண்புமிகு அறநிலைய பாதுகாப்பு அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள். எஸ்.வி.எஸ். ஆர். எம்.வீ. அவர்களும் கம்பெனியில் நெருங்கிய நண்பர்கள். இருவரது நெற்றியிலும் விபூதி இல்லாத நேரமே இல்லை! இவர்கள் இருவரையும் மற்ற நடிகர்கள் பண்டாரம் என்று தான் கூப்பிடுவார்கள். இதை எஸ்.வி.எஸ். அவர்கள் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். அவ்வை டி.கே. ஷண் முகம் அவர்களும் எழுதி உள்ளார்கள். திடீர் என்று ஒரு நாள் எஸ்.வி. சுப்பையாவும், கே.ஆர். ராமசாமி, பிரண்ட் ராமசாமி ஆகியோரும் வாய்ச் சண்டை போட்டார்கள். அது கைச் சண்டையாக மாறி கே.ஆர். ஆரும், பிரண்ட் ராமசாமியும் சேர்ந்து டி.கே. சங்கர அண்ணாச்சியிடம் போய் 'சுப்பையா எங்களை திட்டி அடித்துவிட்டான்' என்று சொன்னவுடன் பெரிய அண்ணாச்சிக்கு கோபம் வந்து சுப்பையாவை கூப்பிட்டு நன்றாக அடித்துவிட்டார். அன்று ''கிருஷ்ணலீலா'' நாடகத்தில் சுப்பையா வாசுதேவர் வேஷம் போடவேண்டும் ஆனால் அவர் வேஷம் போட மறுத்து விட்டார். டி.கே. பகவதி, டி.என். சிவதாணு ஆகியோர் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் நடிக்க மறுத்துவிட்டார்.

அந்த நாடகத்தில் டி.கே. ஷண்முகம் அவர்களுக்கு வேஷம் இல்லை. கம்பெனி வீட்டில் இருந்தார். எஸ்.வி. சுப்பையா கம்பெனி வீட்டுக்கு போய் ஷண்முக அண்ணாச்சியிடம் 'கே.ஆர்.ராமசாமியும் பிரண்டும் சேர்ந்து பெரியவரிடம் போய் பொய் சொல்லி என்னைப் பெரியவர் அடித்து விட்டார், நான் ஊருக்குப் போகிறேன்'' என்று சுப்பையா சொன்னார். ''டி.கே.பகவதி, எஸ்.எஸ். ராஜேந்திரன், டி.வி. நாராயணசாமி, சிவதாணு போன்றவர்களையும் பெரிய அண்ணாச்சி அடித்திருக்கிறார். ஆகையால் அதை மனதில் வைக்காமல் வேஷம் போடு' என்று ஷண்முகம் அவர்கள் சொல்லியும் கேட்கவில்லை சுப்பையா.

வேஷம் போடாமல் இருந்தால் மேலும் அடி பலமாக கிடைக்கும் என்று தெரிந்து சுப்பையாவுக்கு ரயில் செலவுக்கு பணம் கொடுத்து வருத்தத்துடன் சுப்பையாவை ஊருக்கு அனுப்பி வைத்தார் டி.கே.சண்முகம்.) டி.கே.எஸ். சகோதரர்கள் ''கிருஷ்ண லீலா'' முடிந்து ''இராமாயணம்'' நாடகம் நடத்தினார்கள்.

அந்த நேரத்தில் கே.ஆர்.ஆரின் தகப்பனுருக்கு உடல் நிலை மோசமாக இருக்கிறது, 'உடனே வரவும்' என்று தந்தி வந்தது. அன்று நாடகத்தில் அவர் ஆஞ்சனேயராக நடிக்க வேண்டும். வேறு நடிகர் இல்லாததால் நாடகத்தை அன்று நிறுத்துவது என்று யோசனை செய்து கொண்டு இருக்கும் போது, ''நான் பார்த்துவிட்டு வந்து விடுகிறேன் இரவு 11 மணிக்கு நாடகம் ஆரம்பிக்கலாம்'' என்று சொன்னுர். அதன்படி பக்கத்தில்தான் அம்மா சத்திரம் ஐந்து மைல் இருக்கும் அங்கு போய் பார்க்கும்போது காலமாகிவிட்டார். இறுதி சடங்குகளை முடித்துக் கொண்டு 11 மணி அளவில் அன்று தனது கடமையை செய்ய தவறவில்லை, கே.ஆர். ஆர். அவர்கள்.

(அரசியல் வாதிகள், கட்சிக்காரர்கள் தொழிலாளர் களுக்கு நன்மை தேடித்தரத்தான் மாநாடுகள் கூட்டுவார் கள். அப்படி கூட்டப்பட்ட கூட்டந்தான் ''முத்தமிழ் நாடகக் கலை மாநாடு' அதன் தலைவராக முன்னுள் நிதி அமைச்சர் ஷண்முகம் செட்டியார், செயலாளர் டி.என். சிவ தாணு இருந்தார்கள். முதல் மாநாடு ஈரோட்டில் சென்ட் ரல் தியேட்டரில் நடந்தது. (1944 பிப்ரவரி 11ந் தேதி) கொடி ஏற்றியவர் திரு. ராவ்பகதூர் சம்பந்த முதலியார் அவர்கள். மாநாட்டை திறந்தவர் திரு. எம்.கே. தியாக ராஜ பாகவதர் அவர்கள். பேச்சாளர்கள் முன்னுள் முதல்வர் திரு அண்ணுத்துரை அவர்கள், ராஜமாணிக்கம் பிள்ளை, பி.எஸ் சிவபாக்கியம், கலைவாணர் என்.எஸ். கிருஷ் ணன் அவர்கள், கி.ஆ.பெ. விஸ்வநாதன் அவர்கள், கே.டி. சந்தானம், எம்.வி.மணி, எம்.எம். சிதம்பரநாதன், டி.கே. பகவதி, கே.ஆர்.ஆர். ஆகியோர் கலந்து கொண்டனர்.

அந்த மாநாட்டுக்கு கடும் எதிர்ப்பு இருந்தது. இதை எதிர்ப்பதற்கு ''முத்தமிழ் நுகர்வோர் சங்கம்'' என்று ஒன்றை அமைத்து இச்சங்க செய்திகளை 'விடுதலை' குடியரசு' பத்தி ரிகைகளில் வெளியிட்டனர். பெரியார் அவர்கள் வாரம் தோறும் தனது ''குடிஅரசு'' பத்திரிகையில் மாநாட்டை பற்றி தலையங்கம் தீட்டி வந்தார். அதைக் கண்டித்து ''முத்தமிழ் நுகர்வோர் சங்கத்துக்காரர்கள்'' மாநாட்டுக்கு வருகிறவர்களுக்கு கருப்புக் கொடி காட்டுவது என்று தீர் மானித்தனர். போஸ்டர்கள் வேறு ஒட்டி இருந்தார்கள். மாநாடு நடத்துகிறவர்களுக்கு இது தலைவலியாக இருந்தது. பெரியார் அவர்களை சந்தித்து மாநாடு பற்றி விளக்குவது என்று தீர்மானித்து போனுர்கள். ஆனல் பெரியார்

சேலம் போய்விட்ட படியால் ஒன்றும் புரியாமல் மாநாட்டுக்கு முதல் நாளே வந்திருந்த அறிஞர் அண்ணாவிடம் யோசனை கேட்டார்கள்.

அண்ணா அவர்கள் ''ஒரு குழப்பமும் நடக்காது மாநாடு வெற்றிகரமாக நடக்கும். ஊர்வலம் போனால்தானே கறுப்புக் கொடி பிடிப்பார்கள். ஊர்வலம் வேண்டாம் மாநாட்டை துவக்குங்கள்'' என்று யோசனை கூறினர்.

ஊர்வலம் இல்லாமல் முதல் நாடக மாநாடு துவக்கப் பட்டது.)

1945ல் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், கே.ஆர். ராமசாமிக்காக சென்னையில் என்.எஸ்.கே. நாடக சபையை துவக்கி ஒற்றவாடை தியேட்டரில் முதல் நாடகமாக 'கிருஷ்ண லீலா' நடைபெற்றது. கிருஷ்ணனாக, கே.ஆர். ராமசாமியும், ருக்மணியாக கல்யாணி அம்மையாரும் கம்சனாக புளிமூட்டை ராமசாமியும் மற்றும் பி.டி. சம்பந்தம் எம்.எஸ். முத்துக் கிருஷ்ணன், எஸ்.வி. சகஸ்ரநாமம், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், எஸ்.எஸ். இராஜேந்திரன், டி.வி. நாராயணசாமி ஆகியோர் அதில் நடித்து வந்தார்கள்.

1946 ல் நடிப்பிசை புலவர் என்ற பட்டம் நாடகக் கலை மாநாட்டில் கே.ஆர்.ஆருக்கு வழங்கப்பட்டது. அண்ணா தமிழக முதல்வராக வந்த பிறகு எம்.எல்.சி. பதவிகொடுத்து பெருமைப்படுத்தினர்.

1968 ல், தென்னிந்திய நடிகர் சங்க தலைவராகவும் இயல், இசை நாடக மன்ற செயலாளராகவும் பணியாற்றினர். 1971ல் உடல் நலமில்லாமல் சிறிது நாள் வேலூர் ஆஸ்பத்திரியில் இருந்தார். பிறகு கே.ஜே.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு நன்கு கவனிக்கப்பட்டார். 5-8-71 அன்று அவரது பூதஉடல் மறைந்தது. இவரை பிழைக்க வைக்க அரும் பாடு பட்டார் இன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்கள். நான் நடிகர் சங்க கமிட்டி உறுப்பினராக இருந்தபோது கே ஆர்.ஆர். தலைவர். அவருடன் நான் அதிக தொடர்பு கொண்டு இருந்தேன். மேலும் கே.ஆர்.ஆர். நாடக சபையில் சிறிது காலம் நடிகனாகவும் பணியாற்றினேன்.

கே.ஆர்.ராமசாமியைப் பற்றி ஒரு வார்த்தை சொல்வது என் கடமை என்று நினைக்கிறேன். ஈவு, இரக்கம், பொறுமை, மரியாதை, இந்த நான்கும் அவர் கூடவே பிறந்தவை.

நடிப்பிசை புலவர் மறைந்துவிட்டார். அவர் செய்த சேவைகள் மறையவில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் திரு. கே.ஆர்.ஆர். பெயரால் வாரியம், ஆலைகளுக்டி பெயர் சூட்டி பெருமைப்படுத்தியதை கலைஞர்கள் பாராட்டக் கடமைப்பட்டுள்ளார்கள்.



**எஸ். வி. சுப்பையா**

உலகிலுள்ள பல்லாயிரக்கணக்கான ஜீவராசிகளில் அரிதான பிறவி மானிடப்பிறவி என்று திரிகாலத்தை உணர்ந்தவர்கள் கூறுவார்கள். அதனினும் அரிது, கூன், குருடு, செவிடு, ஊமை இல்லாமல் பிறப்பது. அப்படி முழு மனிதர்களாக பிறந்து வாழும் மக்களுள் கலைஞர்களும் ஒரு பகுதி! கலைஞன் ஒருவன் முன்னுக்கு வந்து பிரகாசமடைகிருன் என்ருல் அந்த வெற்றிக்கு அவன் பட்ட கஷ்டம் அவனுக்குத்தான் தெரியும். ஒவ்வொரு கலைஞனும் பல முறையில் பயின்று தேர்ச்சி பெற்ருல்தான் மக்கள் மத்தியில் நிலைத்து நிற்கமுடியும். தன்னிடம் இல்லாத ஒரு சக்தி, திறமை ஆகியவற்றை கொண்ட ஒருவனை மற்றவன் மதிப்பதும், மரியாதை செய்வதும், கிறுக்கன் போல் பார்ப்பதும், இயற்கை! எல்லா திறமைகளும் எல்லா நடிகர்களுக்கும் அமைவதில்லை. திறமைக்கேற்ப எல்லா கலைஞர்களும் பொன் பொருள், நிலம், வீடு ஆகியவற்றை அடைந்து விடுவார்கள் என்று கூறுவதற்கும் இல்லை.

நடிப்புத் துறையில் முன்னுக்கு வரவேண்டும் என்று ஆசைப்படுகிறவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய வழிகள்: நடிப்பையே தொழிலாக கொண்ட பழுத்த நடிகர்களிடம் பயிற்சி மேற்கொள்ள வேண்டும்; உள்ளத்தை தூய்மையாக வைத்திருத்தல்; பிறரை குறை கூருமல், கலை உலகில் பகைத்துக் கொள்ளாமல் கடமை கண்ணியம்

கட்டுப்பாட்டுடன் மல்லிகைப் பூப்போல் நல்ல மனமுள்ள வனுக திகழ்ந்தால் தானுக முன்னேறி விடுவான். இது இயற்கை. ஒருவன் அடுத்த கலைஞனை 'அவன் கெட்டவன்' என்று கூறும் வார்த்தை ஒலி அலைகளாக மாறி காற்றுடன் இரண்டறக் கலந்து வானில் தவழ்ந்து முடிவில் எவன் கெட்டவன் என்று கூறினுனே அவனையே வந்து அடையும்.

பிறரை புண்படுத்தாமலும் அன்பாகவும் பண்பாகவும் நடக்க பயிற்சி எடுத்துக் கொண்டால் அவன் மிகவும் உயர்ந்தவனுகி விடுகிருன்.

நன்மையே செய்து, நல்லதையே பேசுபவர் எவன் முன்னும் தலை தாழ்ந்த வேண்டியது இல்லை. மன்னனுக்கும், மந்திரிக்கும் பயப்பட வேண்டிய அவசியமும் இராது! உண்மை, பக்தி, பயம், நேர்மை, இவைகள் ஒரு கலைஞ னுக்கு பூரணமாக இருக்குமானுல் உலகத்தில் அவனுக்கு நிகர் அவன்தான்! நாடக கம்பெனியில் அடிபட்டு உதை பட்டு கஷ்டப்பட்டு நடிப்புத்துறையில் எதிர் நீச்சலடித்து வெற்றி கண்ட கலைஞன் புகழுடன் பொருளையும் அடை கிருன். பொருள் வந்ததும் அவனது முதல் கடமை தன் குடும்பத்தை வறுமையிலிருந்து விடுவிப்பது. இரண்டா வது ஆரம்ப நாட்களில் தனக்கு ஊக்கமளித்து சிறு உதவிகள் செய்து வாழ்வின் உச்சிக்கு ஏற ஏணியாக இருந் தவர்களுக்கு முடிந்த அளவுக்கு நன்றிக் கடன் தீர்ப்பது; மூன்ருவது தன் சுற்றத்தார்களுக்கு உதவுவது; நான் காவது தன்னுடைய பிறந்த ஊர் மக்களுக்கு, ஐந்தாவது, பொது மக்களுக்கு உதவி செய்வது, ஆருவதாக உலக மக்களுக்கு! இப்படியாக தனது வருமானத்தை பெட்டி யிலும் பூமியிலும் போடாமல் இல்லாதவர்களுக்குக் கொடுத்து அவர்களின் வறுமையை போக்கி வாழ ஒரு வழியை தேடிக் கொடுக்க வேண்டும். இனமாகக் கொடுத்து பழக்கப்படுத்தக் கூடாது. கலையை கற்றுக் கொடுக்கும் பள்ளி ஒன்று துவக்கி, இத் தொழிலை கற்றுக் கொடுக்க வாய்ப்பு அளிக்கலாம். தொழிலை கற்றுக் கொண்டவர்கள் வாழ்வது உறுதி!

ஒரு கலைஞன் வெற்றியின் உச்சிக்கு ஏறி விட்டால் தன்னுடன் இருந்த சக நடிகனின் வாழ்க்கையை வளரச் செய்வது மிகமிக முக்கியம். இரவும் பகலும் போலவே இறப்பும் பிறப்பும்! இறப்பு பிறப்பு என்பதற்கு இடை யில் ஒன்று இருக்கிறது. அதுதான் 'சிறப்பு.'

பூச்சி புழுக்களும் பிறந்து இறந்துதான் போகின்றன. ஆனால் நடிகன் இறந்தும் இறவாத நிலைதான். ஒரு கலைஞனுக்கு சிறப்பு வரும் போதுதான் பொருளும் நாடி வரும். இவை எல்லாம் வந்த பின் அவன் நல்லவனாகவே இருந்து மக்கள் அவனை போற்றிப் புகழ்ந்து வந்தால்தான் அவனது இறுதி ஊர்வலத்தைக் கண்டு அவனுடன் சம்பந்தம் இல்லாதவன் கூட "அடடா! போய் விட்டாரா?" என்று உள்ளமுருகக் கூறிச் சிந்தும் ஒருதுளி கண்ணீர்தான் மனித வாழ்வில் கிடைத்தற்கரிய சிறப்பு! கலைஞர்கள் வாழும் பட உலகின் ஒரு பாதி சிற்றின்பம்! மறுபாதி ஆடம்பரம்! சிற்றின்பமும் ஆடம்பரமும் சுழலும் கலை உலகில் மேற்காணும் குணங்களை உடையவர்கள் இல்லாமல் இருக்க முடியாது. ஆனால் எங்கே? ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மக்களின் இதயங்களில் அழியாமல் கொலுவிருக்கும் பல தெய்வப் பிறவிகளின் தாய்நாடு இந்தத் தமிழ்நாடு! இந்த நாட்டின் தொன்மை அளவிட முடியாதது; கலைகளின் சிறப்பு எழுத்துக்களில் அடங்காததது. இத்தகைய நாட்டின் கலைஞர்கள் புறவாழ்வை மட்டும் சிறப்புடன் நடத்தினால் போதாது. அகமும் புறமும் தூய்மையான வாழ்வு நடத்தி சிறப்பு தேடித்தர வேண்டும். வருங்கால சந்ததி பெருமை காணும் வகையில் பரிசுத்தமான கலைஞர்கள் எவரேனும் இருந்தால் அவர் வாழ்க்கை கலை உலக சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும்.

அந்த வாழ்வுதான் கலைஞனின் அமர வாழ்வு.

அப்படிப்பட்ட புனிதமான வாழ்க்கையை வாழ்ந்து காட்டியவர் அமரர் எஸ்.வி.சுப்பையா அவர்கள்.

ஒரு கலைஞன் எப்படி வாழ வேண்டும். அவன் செய்ய வேண்டிய கடமைகள் என்ன என்பதற்கு ஒரு முன்னுதாரணமாய்த் திகழ்ந்தவர் எஸ்.வி.எஸ். அவர்கள்.

பார்த்தால் புரிந்து கொள்ளக்கூடிய சினிமா படம் அல்ல. படித்து தெரிந்து கொள்ள வேண்டிய தத்துவ சாத்திரம் இது! கள்ளச் சாராயமல்ல கலை! காவியம் இது! மாலை தொடுக்க எடுக்கப்பட்ட பாரிஜாதமலர் இது! எடுத்தவனை காலம் என்னும் பாம்பு தீண்டியும் விடும்!

இந்த கலை உலகத்தில் கிட்டத்தட்ட 45 வருட அனுபவம் எனக்கு உண்டு. அந்தக் காலம் முதல் இந்த காலம் வரை கலைஞர்களை நான் நன்கு அறிவேன். அந்த காலத்து

கலைஞர்கள் தனக்கென வாழாமல் தனது குடும்பம் குழந்தை குட்டிகளை மறந்து வாழ்நாள் பூராவும் கலை உலகம் கை கொடுத்து இறுதிவரை வாழ வைக்கும் என்று தப்பு கணக்கு போட்டு வயோதிக காலத்தில் அவர்கள் கஷ்டப்படுவதை சொல்ல முடியாது! அந்திம சடங்குகள் செய்ய பிறரிடம் பொருள் வாங்கித்தான் இடுகாட்டுக்கு எடுத்துச் செல்லப் பட்டது.

உதாரணமாக, கே.பி. நம்பிராஜன் பூத உடலை அடக்கம் செய்ய முடியாமல் இருந்த நிலையில் டாக்டர் சிவாஜி கணேசன் அவர்கள் வந்து, எஸ்.ஏ. கண்ணன் மற்றும் சக நடிகர்கள் கூட இருந்து சவ அடக்கம் நடந்தது. இதே நிலைதான் தாம்பரம் லலிதா அவர்களின் மரணத்தின் போதும். கதாநாயகியாக நடித்து மக்கள் மத்தியில் புகழ் பெற்றூர். இவரது அந்திம சடங்குகளை நடத்தியவர்கள்: சட்டாம்பிள்ளை, எஸ்.என். கிருஷ்ணன், பி.ஏ. கிருஷ்ணன் பாலமுருகன் ஆகியோர்தான்.

இன்னும் ஒரு விஷயத்தையும் சொல்ல வேண்டும்: டி.கே.எஸ். சகோதரர்கள்கம்பெனியில் பாரதி கதிரேசன் நல்ல நடிகர். நாடகத்தில் பாரதி வேஷம் போடுவார். எனக்கு நண்பர். கப்பலோட்டிய தமிழன் படத்தில் எஸ்.வி. சுப்பையா அண்ணனை பாரதியாக பார்த்தோம். என்ன வீரம்! என்ன பேச்சு! என்ன முகபாவம்! என்ன பார்வை! என்ன மிடுக்கு என்ன தோற்றம்! அடடா! அப்படி நாடகத்திலே திரு. பாரதி கதிரேசன் பாரதியாக நடிப்பார்! இந்த இரு பாரதியும் எனக்கு ஆத்ம நண்பர்கள். ஒரு நாள் காலை 10 மணிஅளவில் என்.என். கண்ணப்பா அவர்கள் பாரதி கதிரேசனை ஒரு டாக்சி யில் போட்டு என் வீட்டுக்கு கொண்டு வந்தார். ''பார திக்கு ஜன்னி கண்டு விட்டது, மருத்துவமனையில் சேர்க்க வேண்டும் வாருங்கள்'' என்று என்னை கூப்பிட்டார்கள். பதறிப் போய் ராயப்பேட்டை மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தோம். வழியில் பாரதி பாட ஆரம்பித்தான்: "பாருக்குள்ளே நல்ல நாடு இந்த பாரத நாடு!'' அமைதியாக இருங்கள் என்றேன். விடவில்லை! ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணகிலேன்!'' மீண்டும் சொன்னேன், அவர் விட்டபாடில்லை! ''யாம் அறிந்த புலவர்களிலே கம்பனைப் போல் வள்ளுவரைப் போல் இளங் கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை!'' வியாழக்கிழமை சேர்த்தோம். வெள்ளிக் கிழமை காலை 4-30 மணிக்கு பாரதியின் மூச்சு நின்றுவிட்டது! ''சொல்லடி சிவசக்தி, சுடர்மிகும் அறிவுடன் படைத்து விட்டாய்.

வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற'' என்று பாடி நடித்த அந்த பாரதியின் மூச்சு நின்று விட்டது. ''காணி நிலம் வேண்டும், தூணில் அழகிய தாய் நான் மாட தூய நிறத்தினதாய் அந்த காணி நிலத்திடயே ஒரு மாளிகை கட்டித்தர வேண்டும்!'' என்று பாடி நடித்தானே அந்த பாரதியின் மூச்சு நின்று விட்டது. ''வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர் வாழிய பாரத மணித்திரு நாடு, வந்தே மாதரம்!'' என்று பாடி நடித்தானே, அந்த பாரதியின் மூச்சு நின்று விட்டது. ''ஓடிவிளையாடு பாப்பா; நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா!'' என்று பாடி நடித்தானே அந்த பாரதியின் மூச்சு நின்றுவிட்டது. என்.என். கண்ணப்பனுக்கும் எனக்கும் ஒன்றும்புரியாமல் ஒ! என்று புலம்பியவாறு இருந்தோம். அன்றைய தினம் தான் டி.கே.ஷண்முகம் அண்ணுச்சியை யார் என்று புரிந்து கொண்டேன். தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பாரதி கதிரேசன் இறைவன் திருவடி சேர்ந்த விபரத்தைச் சொன்னேன். உடன் வந்து வெள் ளிக்கிழமை என்று பாராமல் பாரதியின் பூத உடலை தன் வீட்டில் வைத்து தானே முன் நின்று சடங்குகளை செய்து அவர் வீட்டிலிருந்து இடுகாட்டுக்கு யாத்திரையாக எடுத்து சென்று தீ மூட்டப்பட்டது. எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்து தனி வாழ்க்கை நடத்தி சென்னையில் மறைந்த பார தியினுடைய ஆன்மா சாந்தி அடைய ஆண்டவனை பிரார்த் தனை செய்வோம். இரு பாரதியில் ஒரு பாரதி காலமானூர்.)

நிமிர்ந்த நன்நடையான்! நேர்கொண்ட பார்வையு டையான்! அச்சமில்லை! அச்சமில்லை! அச்சமென்பதில்லையே என்று பாரதியின் பாட்டின் பொருள்படி நடந்து காட் டியவர். தேசபக்தியும், தெய்வ பக்தியும் உள்ளவர். தோன்றிற் புகழொடு தோன்றுக! அஃதிலார் தோன்றலின் தோன்றுமை நன்று என்ற குறள் எப்படி மனதில் பதிந் துள்ளதோ அதைப்போல் அவருடைய நடிப்பும் தமிழ் மக்கள் மனதில் பதிந்துள்ளது. தமிழ் என்றவுடன் துள்ளி எழுந்தார்கள். தமிழன் என்றதும் தலைநிமிர்ந்து நின்றார். கள். தமிழ்நாடு என்றதும் தோள்தட்டி முன்வந்து நின்றார்கள். அவர்கள் தான் சுப்பிரமணிய பாரதி, பாரதி தாசன், நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை, மதுரை கருப்பையா, கவிபாஸ்கரதாஸ், விஸ்வநாததாஸ் ஆகியோர் அவர்கள் ஞாபகம் எப்படி நமக்கு இருக்கிறதோ அப்படித்தான் எஸ்.வி.சுப்பையாவின் நடிப்பும், பண்பும்!

பாட்டுக்கு ஒரு புலவன் பாரதியார் என்பதுபோல் நடிப்பிற்கோர் இலக்கணம் சுப்பையா என்று சொன்னால் அது மிகையாகாது.

திடீர் என்று ஒரு நாள் என் வீட்டிற்கு வந்து ''கப்பலோட்டிய தமிழன்'' படத்திற்கான வெளிப்புறக் காட்சி பம்பாயில் எடுக்கிறார்கள். அதற்கு நாம் போகிறோம். மூன்று டிக்கெட் முதல் வகுப்பில் பதிவு பண்ணியாகிவிட்டது. நாளை கார் வரும் புறப்படத் தயாராக இருங்கள்'' என்று கட்டளையிட்டார். நான் விடவில்லை, ''என்ன காட்சி எடுக்கப் போகிறார்கள்? என்று கேட்டேன்.

அதற்கு அவர் "வந்தே மாதரம் வந்தே மாதரம் பாட்டும் வ.உ.சி. முதன்முதலில் கப்பல் செலுத்திய காட்சியும் எடுக்கப்போகிறார்கள்'' என்றார்.

சுப்பையா அவர்கள் சொன்னது போலவே என் வீட்டிற்கு காரும் வந்தது. நானும் புறப்பட்டு ரயில்வே ஸ்டேஷனை அடைந்து முதல் வகுப்பு பெட்டியில் ஏறிக்கொண்டேன். எங்களுடன் தப்பளை என்று ஒருவர் வந்தார். பாரதி சொன்னது போல் நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய், பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேகவனாய் பணிகளைச் செய்பவர் அவர். திரு. எஸ்.வி.எஸ் அவர்கள் காலை 4 மணிக்குள் குளித்து விடுவார். அதுபோல் மற்றவர்களும் 4 மணிக்கு எழுந்து குளிக்க வேண்டும். என்று விரும்புவார். கேழ்வரகை கூழ் காய்ச்சி கடவுளுக்கு நெய்வேத்தியம் செய்வார். பிறகு தியானம். அதன் பிறகு உடற்பயிற்சி. அதன் பிறகு பூஜை. (கூடவே படமும் எடுத்து வருவார்) கூழ்காய்ச்ச அடுப்பு, சட்டி, கரி இவைகளும் எடுத்து வருவார்.

தப்பளை குளித்து கூழ்காய்ச்சத் துவங்கியபோது அடுப்பு பற்றாமல் அந்த முதல் வகுப்பு வண்டி பூராவும் புகை மண்டலமாக காட்சி அளித்தது. அந்த வகுப்பில் இருந்த இரண்டு சர்தார்ஜிகள் எங்களிடம் இந்தியில் சண்டை போட்டனர்.

எஸ்.வி.எஸ்.க்கு கோபம் வராது; வந்தால் அதை தடுக்க மும்மூர்த்திகள் அவதாரம் எடுத்தாலும் முடியாது. நல்லகாலம் பூஜை முடிந்துதான் அவர் பேசுவார். நான் பட்லர் இங்கிலீஷில் சர்தார்ஜிகளுக்கு பதில் சொன்னேன். அதற்குள் ஸ்டேஷனும் வந்துவிட்டது. சர்தார்ஜிகள் ஸ்டேஷன் மாஸ்டரை கூட்டி வந்து விட்டார்கள். வந்த ஸ்டேஷன் மாஸ்டரோ ஒரு தமிழன். அவர்

சுப்பையாவிடம் ''என்ன சுப்பையா நலமா, போன வாரம் தான் உங்க பழைய படம் ஒன்று பார்த்தேன்'' என்று சொன்னார்.

அதற்கு நான் அவரிடம் 'என்னபடம்' என்று கேட்டேன். அதற்கு அவர் ''வீர அபிமன்யு'' என்றார். மேலும் அவர் ''மஹா பாரதக் கதையிலே சகுனி இப்படித்தான் இருந்திருப்பானென்று உங்க நடிப்பை பார்த்த பிறகு புரிந்து கொண்டேன். நீங்கள் வசனம் எப்படி பேசவேண்டும் என்பதை அன்றே வகுத்துக் காட்டிவிட்டீர்கள். உங்கள் வீட்டில் குழந்தைகள் எல்லாம் நலமா'' என்று பழகியவர் போல் பேசினார். நான் உடனே இப்போது அவர் பேச மாட்டார். பூஜை முடிந்தவுடன்தான் பேசுவார் என்றேன். உடனே அவர், அப்படியா! சரி என்று சர்தார்ஜியிடம் ஆங்கிலத்தில் பேசிவிட்டு எங்களிடம் விடை பெற்று சென்று விட்டார்.

கூழ் காய்ச்சப்பட்டது. புகையும் அடங்கியது. சர்தார்ஜிகளும் அமைதியாக இருந்தார்கள். ரயிலும் புறப்பட்டது. பூஜையும் ஆரம்பமானது. பம்பாய் நகரம் வந்து சேர்ந்தோம்.

பம்பாய் விக்டோரியா ஸ்டேஷனில் வண்டி நின்றது. ஜனங்கள் நடமாட்டம் அதிகம்! பிரும்மாண்டமான ஸ்டேஷன்! பயணம் செய்த சர்தார்ஜிகள் நமஸ்தே என்று சொல்லி விடை பெற்றுக் கொண்டார்கள். நாங்கள் கீழே இறங்கி பார்த்துக் கொண்டிருந்தோம். எல்லாம் இந்தி மயம்! ஒன்றும் புரியவில்லை. அந்த நேரம் ஒருவர் வந்து ''கார் ரெடியாக இருக்கிறது, புறப்படலாமா'' என்றார். சாமான்களை எல்லாம் போர்ட்டர் எடுத்துக் கொண்டான். நாங்கள் புறப்பட்டோம்.

காரை வந்து அடைய 10 நிமிடங்கள் பிடித்தன. காரணம் அத்தனை கூட்டம் போய்க் கொண்டே இருந்தது. அகலமான தெரு. அதிக வேகத்தில் கார்கள் போய்க் கொண்டு இருந்தன. ரோட்டில் யாரும் நடக்கவில்லை. சிக்னல் வரும். பின்பு கார் புறப்பட 6 அல்லது 7 நிமிடங்கள் பிடிக்கும்.

ஜனங்கள் பிளாட்பாரத்தில் வேகமாக நடந்து செல்கிறார்கள். ஆனால் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டு நடப்பதில்லை. பிளாட்பாரத்தில் கடைகள் வைக்கப்படு

வதில்லை, ஜனங்களுக்கு மட்டும்தான் பிளாட்பாரம் என்பதை உணர்ந்தேன். ஒரு ஹோட்டலின் போர்டைப் பார்த்தேன். 'ஏர் லயன்ஸ்' என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டு இருந்தது. உடனே எஸ்.வி.எஸ். அவர்கள் என்னைப் பார்த்து 'இங்குதான் நம்ம ஊர் உணவு கிடைக்கும்' என்றார்.

நாங்கள் அந்த ஹோட்டலில் நுழைந்தோம். உள்ளே தேவலோகம் போல இருந்தது. கீழே நடந்தால் பஞ்சின் மேல் கால்வைத்து நடப்பது போல் இருந்தது. அங்கு ரூம் நம்பர் 8 ஐ எங்களுக்கு கொடுத்தார்கள். அதற்கு எஸ்.வி.எஸ். அவர்கள் ''அஷ்ட லட்சுமியும் வாழும் இடம் இது ரொம்ப பேருக்குத் தெரியாது. 8ம் நம்பர் என்றால் வேண்டாம் என்று சொல்லி விடுவார்கள். காரணம் 8ஆம் நம்பர் என்றால் எட்டிப்பார்த்த இடமெல்லாம் குட்டிச்சுவர் என்று சொல்வார்கள்.'' நான் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. உள்ளே ஒரு பாய் வந்தான். அவன் எஸ்.வி.எஸ். இடம், ''சார்! தங்களுடைய சினிமா நான் நிறைய பார்த்ததுண்டு. என்ன சார் வேணும்?'' என்றான். ''எனக்கு ஒன்றும் வேண்டாம், இவர்களுக்கு காபி கொண்டுவந்து கொடு'' என்றார். அவர் சொன்னதைப் புரிந்து கொண்டு போய் விட்டான். சரி இவனுக்கு தமிழ்தெரியும் என்று நான் எண்ணிக் கொண்டேன். மூன்று கட்டில்கள் இருந்தன. கட்டிலில் போய் உட்கார்ந்தேன்.

நான் உட்கார்ந்து இருப்பதாக தெரியவில்லை. அப்படிப்பட்ட மிருதுவான கட்டில்; காபி வந்தது. சாப்பிட்டோம். தப்பலை குளித்து கூழ் காய்ச்ச ஆரம்பித்தான். குமுட்டி அடுப்பில் கரியை போட்டு பேப்பரை பற்றவைத்து நெருப்பை மூட்டினான். கரி ஈரமாக இருந்ததால் லேசில் நெருப்பு பிடிக்கவில்லை. ரூம் முழுவதும் புகை மண்டலமாகி விட்டது. சர்வர் கப்பை எடுக்க வந்தான்.

வந்தவன் புகையைப் பார்த்துவிட்டு கியாஜி! கியாஜி! என்றான். நான் குச்சிபிநகி! குச்சிபிநகி! புகை! புகை! என்று தமிழிலும், இந்தியிலும் சொன்னேன். அவன் புரிந்து கொள்ள முடியாமல் அந்த இடத்தில் இருந்து போய் விட்டான். புகைக்கு இந்தியில் சொல்ல எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்த இந்தி: பானி, கானா, பைட்டியோ, உட்டோ, ஜாவ், கிதர்ஜாத்திகை!

இதற்கிடையில் புகை அடங்கி கூழ்காய்ச்சப்பட்டுவிட்டது. அவரும் வழக்கம் போல் உடற்பயிற்சி, பூஜை

எல்லாம் முடித்து கூழை குடிக்கச் சொல்லுவார். நான் மிகவும் சிரமப்பட்டு மருந்து குடிப்பது போல் கஷ்டப்பட்டு சாப்பிடுவேன். காரணம் எனக்கு கூழ் குடித்துப் பழக்க மில்லை. மேலும் அதில் உப்புகூட போட்டிருக்காது. ஆனல் எஸ்.வி.எஸ். அவர்கள் தினம் காலை 2 டம்ளர் கூழ் தான் சாப்பிடுவார். பின்பு எங்களிடம் ''கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். இந்த ஊரில் உள்ள முக்கிய மான இடங்களைக் காட்டுகிறேன்'' என்று சொல்லிவிட்டு சித்தர் புத்தகங்களை படிக்கலானுர்.

நாங்கள் தங்கி இருந்த ரூம் கலை அம்சமான ரூம். கழிவு அறையில் கூட ரேடியோ பாடுகிறது. நான் ரேடி யோவை போட்டு கேட்டுக் கொண்டிருந்தேன். இந்திப் பாட்டுக்கள்தான் கேட்டுக் கொண்டிருந்தேன். அதில் பேச்சு வந்ததும் நிறுத்தி விடுவேன். காரணம் எனக்கு இந்தி புரியாது. பாட்டு மட்டும் புரிந்ததா என்று கேட்கா தீர்கள். சங்கீதத்திற்கு மொழி முக்கியம் அல்ல, இனிமை, குரல் நயம், ஞானம் வேண்டும்.

ஏன் பாரதிகூட பாடி இருக்கிருரே! சுந்தரத் தெலுங் கினில் பாட்டிசைத்துத் தோணிகள் ஓட்டி விளையாடிடு வோம், என்று! சங்கீதத்திற்கு பாஷை தேவையில்லை. இப்போது கூட பல பாகவதர்கள் தியாகராஜ கீர்த்தனைகளை அதிகமாகப் பாடுகிருர்கள். நாம் புரிந்தா கேட்கிறோம்? 100ல் 25 பேர்தான் தெலுங்குப் பாட்டை புரிந்துகொண்டு கேட்கிருர்கள்.

சமயத்தில் சில பாகவதர்கள் தெலுங்கு அர்த்தத்தை புரிந்து கொள்ளாமல் மாற்றி பாடி வருகிருர்கள். சரி நாம் விஷயத்திற்கு வருவோம். எஸ்.வி.எஸ். அவர்கள் என்னைப் பார்த்து ''என்ன சட்டாம்பிள்ளை சாப்பிட போகலாமா'' என்ருர். நானும் போகலாம் என்றேன். ஒரு ஹாலுக் குள் நுழைந்தோம். அங்கு ஒரே இருட்டாக இருந்தது. ஒவ்வொரு டேபிளுக்கு மேல் மட்டும் ஜீரோவாட்ஸ் லைட் எரிந்து கொண்டு இருந்தது. நான் எஸ்.வி.எஸ். இடம் ''சாப்பாட்டில் பல்லி பாட்சை கிடந்தா கூட கண்ணுக்குத் தெரியாது போல இருக்கிறது'' என்று சொன்னேன். அதற்கு அவர் ''வேற வழி'' என்ருர். மேலும் அந்த ஹாலுக்குள் நுழையும்போது ஒரு மேடை தென்பட்டது. பாதி ஆடையில் ஒரு மைக்கை வைத்து ஆடிப்பாடிக்

கொண்டு இருந்தாள் ஒரு பெண். அந்த பாட்டிற்கு ஏற்றாற்ப் போல் ஆண், பெண் இருவரும் கட்டிப் பிடித்துக் கொண்டு ஆடினார்கள்.

இதையெல்லாம் பார்க்க எனக்கு வெறுப்பாக இருந்தது. ''இதைக் காட்டத்தான் உம்மை இங்கு கூட்டி வந்தேன்'' என்றார். எஸ்.வி.எஸ். வாரும் அந்த ரூமுக்குப் போகலாம் என்றார். அங்கு போய் உட்கார்ந்தோம். ஒரு பாலக்காட்டு ஐயர் வந்து ''என்ன சுப்பையா எப்ப வந் தாய்?'' என்றார். அதற்கு அவர், இப்பத்தான் என்றார். இலைபோட்டு சாப்பாடு பரிமாறப்பட்டது. எஸ்.வி.எஸ். என்னிடம், ''ஐயர் யார் தெரியுமா?'' இவர்தான் இந்த ஹோட்டல் முதலாளி என்றார். சாப்பாட்டை முடித்து இருவரும் ஊரைச் சுற்றிப் பார்க்க புறப்பட்டோம். பாஷை புரியாமல் எங்கே போவது, யாரிடம் கேட்பது எங்கே இறங்குவது இந்த பிரச்சினையால் நாங்கள் நடந்தே சென்றோம். அப்போது எஸ். வி. எஸ். அங்கு ஒரு தியேட்டரை காண்பித்து ''இந்த தியேட்டர் மிகவும் நன்றாக இருக்கும் நீ பார்த்ததில்லையே, வா! பார்ப்போம்'' என்று சொல்லி டிக்கட் வாங்கி வந்தார். அந்த தியேட்டர் தேவலோகம் போல இருந்தது. திரும்பி நடந்தே ஏர் லயன்ஸ்க்கு வந்தோம். இரவுதான் அங்கு பகலாக காட்சி அளிக்கிறது. சாப்பிட்டு சீக்கிரம் படுத்துக் கொண்டோம். ''காலை 6 மணிக்கு ஷூட்டிங் ஒரு தீவில் நடக்கிறது. மோட்டார் படகில் போய் அந்த தீவில் இறங்க வேண்டும். அங்குதான் வ.உ.சி. முதல் கப்பல் விடும் காட்சி எடுக்க வேண்டும்'' என்றார்.

பம்பாயிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் இருக் கும் ஒரு தீவில் தான் வ.உ.சிதம்பரனார் முதன் முதலில் கப்பல் செலுத்தும் காட்சி எடுக்கப்பட்டது. அந்தத் தீவில் வீரம் மிக்க சரித்திரப் புகழ் வாய்ந்த சிவாஜி பரம்பரையினர் வாழ்ந்து வருகின்றனர். அங்கு வசிக்கும் மக்கள் தங்கள் கலாசாரத்தை மாற்றாமல் வாழ்ந்து வருகிறார்கள்.

நாங்கள் அந்தத் தீவிற்கு படகில் சென்றோம். (மோட்டார் பொருத்தப்பட்ட படகு) தீவிலிருந்து சிறிது தூரத்தில் ஒரு கப்பலுக்கு கதர் கொடிகளால் அலங்காரம் செய்யப்பட்டு இருந்தது. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் வ.உ.சி.யாகவும், கலைமாமணி டி.கே. ஷண்முகம் சுப்பிர மணிய சிவாவாகவும், சுப்பையா சுப்பிரமணிய பாரதியாக வும் காட்சி அளித்தார்கள்.

''வந்தே மாதரம்! வந்தே மாதரம்'' என்ற பாட்டை படம் எடுத்தார்கள். இந்த பாட்டுக்கு நடிகர்கள் நடித்ததைப் பார்த்து எனக்கும் உணர்ச்சி வந்து கூட்டத்தில் நானும் சேர்ந்து பாடினேன்.

மூவரும் கப்பலின் விளிம்பின்மேல் நின்றுகொண்டு ''வந்தேமாதரம்! மகாத்மா காந்திக்கு ஜே!'' என்று வான் பிளக்க குரல் கொடுத்தார்கள்.

இன்றும் அதை என்னுல் மறக்க முடியவில்லை. இனி அந்த மாதிரி படங்களை யார் எடுக்க முன்வருவார்கள். பாட்டுக்கு எப்படி ஒரு பாரதியோ அப்படித்தான் இயக்குனர்களில் காலம் சென்ற பி.ஆர். பந்துலு. அவர் இரு மாபெரும் காவியங்களைப் படைத்து இருக்கிருர். ஒன்று கப்பலோட்டிய தமிழன்; மற்ருென்று வீரபாண்டிய கட்டபொம்மன்.

கலை உலகம் இவரை மறக்கவும் கூடாது. அப்படி மறந்தோமேயானுல் உண்மைக் கலை அழிந்து விடும். காமராஜ் பற்றி, வ.வே.சு. ஐயரைப் பற்றி, வாஞ்சி நாதனைப் பற்றி, சிவாவைப் பற்றி, மருது சகோதரர்களைப் பற்றி, யார் படம் எடுக்க முன் வருவார்கள். கலை உலகம் இப்போது போகும் போக்கைப் பார்த்தால்.....

நாங்கள் பின்பு பம்பாயை விட்டு சென்னை வந்தடைந்தோம். மறுவாரம் எஸ்.வி.எஸ்.ம் நானும் மைசூர் புறப்பட்டோம். அப்போது எஸ்.வி.எஸ். புதுகார் வாங்கியிருந்தார். தன் பழைய காரை சகஸ்ரநாமம் அவர்களிடம் கொடுத்து சர்வீசுக்கு விடச் சொல்லி இருந்தார். நாங்கள் மைசூர் புறப்பட்டோம். வண்டி கோடம்பாக்கம் பக்கமாய் போய்க்கொண்டிருந்தது. தனது பழைய கார் சாராயம் சாப்பிடும் இடத்தில் நின்றுகொண்டு இருப்பதை அவர் பார்த்துவிட்டார். உடனே அவர் என்னிடத்தில் ''நம்ம கார் ஏன் இங்கு நிற்கிறது. வெங்கட்ராமன் காரை திருப்புங்கள், சகஸ்ரநாமம் அண்ணன் வீட்டுக்கு'' என்ருர். அதற்கு நான், ''நாம் புறப்பட்டு விட்டோம், திரும்பி போவது நல்லதல்ல'' என்றேன்.

உடனே அவர், ''சுப்பையாவின் கார் சாராயம் சாப்பிடும் இடத்தில் நிற்பதா? திருப்புங்கள்'' என்ருர்.

8

பதில் பேசாமல் காரை சகஸ்ரநாமம் வீட்டுக்கு கொண்டுவந்து நிறுத்தினேன். எஸ்.வி எஸ். காரைவிட்டு வேகமாக இறங்கி அண்ணனிடம் சென்று மள மள வென்று கேட்க ஆரம்பித்தார். ''நான் காரை சர்வீசுக்கு விடச் சொல்லித்தானே உங்களிடம் கொடுத்துச் சென்றேன். என் கார் சாராயக் கடையில் நின்று கொண்டு இருக்கிறதே'' என்று பாஞ்சாலி சபதத்தில் திரௌபதி துயில் உரியப்படும் போது பீமன் எந்த நிலையில் கர்ஜித்தானே அந்த மாதிரி அண்ணனிடம் கேட்டார். அவரும் தருமன் போல் பதில் சொன்னார். ''காரை சர்வீசுக்குத் தான் அனுப்பி வைத்தேன் ஆனல் சாராயக் கடைக்கு போய் இருக்கிறது எனக்கு தெரியாது. வரட்டும் கேட்கிறேன். நீ புறப்படு'' என்றார். சுப்பையா அவர்கள் பிடிவாதமாக போகவில்லை.

சற்று நேரத்தில் கார் வந்தது. ஒரே பாய்ச்சல் பாய்ந்து கார் டிரைவரை கீழே தள்ளி அடி அடி என்று அடித்து நொறுக்கிவிட்டார். பிறகு அண்ணன் தலையிட்டு சமாதானம் செய்து ''சுப்பையா நீ புறப்படு. நான் பார்த்து கொள்கிறேன். இனி இப்படி நடக்காது. நானே காரை சர்வீசுக்கு விட்டு செல்கிறேன்'' என்றார். ''சுப்பையா கார் சாராய கடையில் நின்றால் என்னைப்பற்றி என்ன நினைப் பார்கள்'' என்றார்.

ஒரு வழியாக சமாதானம் அடைந்து புறப்பட்டு சென் றோம். கார் போய்க் கொண்டிருக்கும் போது வழியில் ஒரு சாமியாரைப் பார்த்துவிட்டார். அவரை கடந்து 25 மைல் வந்து விட்டோம். உடனே அவர் ''வெங்கட் ராமன், வழியில் ஒரு சாமியாரைப் பார்த்தோமே அவரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்'' என்றார். ''அவரைத்தான் கடந்துவிட்டோமே'' என்றேன். இல்லை. ''அவரை கடக்க வில்லை. காரைத் திருப்புங்கள்'' என்றார். சற்று யோசித் தேன். ''யோசிக்க வேண்டாம் காரை திருப்புங்கள்'' என்றார். திருப்பி சாமியாரிடம் வந்து காரை நிறுத்தினேன். எஸ்.வி எஸ். காரை விட்டு கீழே இறங்கினர்.

காரைவிட்டு இறங்கிய சுப்பையா நடுரோடு என்று பாராமல் சாமியாரின் காலில் விழுந்து கும்பிட்டார்.! அடர்ந்த சடை! நீண்ட தாடி! பத்து விரல்களிலும் நகங்கள் நீண்டு வளர்ந்து இருந்தன. கையால் சாப்பிடுவது சிரமம் என்று தோன்றியது.! கறுத்த மேனி. கட்டுமஸ்தான உடம்பெல்லாம் ரோமம் அதிகமாக காணப்பட்டது!

சப்பைமூக்கு! அகல நெற்றியில் திருநீறு! தோளில் ஒரு பை தொங்கிக் கொண்டு இருந்தது.

எனக்கும் கும்பிடத் தோன்றி விழுந்து கும்பிட்டேன்.

சுவாமிகளே ''எங்கே போகிறீர்கள்'' என்று சுப்பையா கேட்டார்.

பதில் எதுவும் சொல்லாமல் புன்னகையுடன் கீழே உட்கார்ந்து, மண்ணில் எழுதிக் காட்டினார். பஸ்ஸில் போவதோ, பசிவந்தவுடன் யாசிப்பதோ இல்லை! யார் எதை எப்போது கொடுக்கிறார்களோ அதை அப்போது சாப்பிடுவேன்! மலைப்பாம்பை பற்றி உனக்கு தெரியுமா? இறையை தேடிப் போகாது, வருஷமானாலும்! அதைப்போல் தான் நானும் திருவொற்றியூர் போய்க் கொண்டு இருக்கிறேன். என்றார்.

இதைகேட்ட எஸ்.வி.எஸ். ''காரில் ஏறுங்கள்'', என்றார். சாமியார் தயக்கத்துடன் ஏறி அமர்ந்தார்! மைசூருக்கு போய்கொண்டு இருந்த கார் சென்னைக்கு திருப்பப்பட்டது! எஸ்.வி.எஸ். பற்றி நன்கு புரிந்ததனால் அவரிடம் இதை விவாதிக்காமல் திருவொற்றியூர் வந்தடைந்தோம்! சுவாமிகளிடம் 50 ரூபாய் கொடுத்து மீண்டும் வந்து பார்ப்பதாக சொன்னார். ரூபாயை சுவாமிகள் வாங்க மறுத்ததனால் பழங்கள் வாங்கிக் கொடுத்துவிட்டு அவர் வீடு வந்து சேர்ந்தோம்! சாரதாமணியையோ வாசுகியையோ, அல்லது கஸ்தூரிபாயையோ நான் பார்த்தது இல்லை. கேள்விப் பட்டதுதான். அடக்கம்! ஒடுக்கம்! பண்பு! மரியாதை! பாசம்! பக்தி! அகிம்சை! தானம்! தருமம்! இவ்வளவும் ஒருங்கே அமைந்து கிழித்த கோட்டை தாண்டாதவர் எஸ். வி எஸ். துணைவியார் அவர்கள். ஏன் திரும்பினீர்கள்? என்றோ, 'ஷூட்டிங்' என்ன ஆச்சு என்றோ ஒரு வார்த்தை கேட்கவில்லை!

வந்ததும் ''இலையைப்போடு நானும் வெங்கட்ராமனும் சாப்பிடணும்'' என்றார். மைசூருக்கு தொலைபேசி மூலமாக தான் வரமுடியாத நிலையை விளக்கி அடுத்த வாரம் வருவதாக சொல்லிவிட்டார்! மறுநாள் காலை காரைச் சித்தரை பார்த்து வரலாம் வா என்று கூப்பிட்டார்! காரைச் சித்தரா அது யார்?'' என்று கேட்டேன்! ,'சொன்னால் புரியாது வந்து பார்த்தால்தான் தெரியும்'' என்று சொல்லியபடி 8 மணியளவில் காரில் பழம்பெரும் காங்கிரஸ் தியாகி சீனுவாச அய்யங்கார் வீட்டிற்கு போனோம்! வாசலில் அவருடைய

மகள் அம்புஜத்தம்மாள் வரவேற்று ''உள்ளே சுவாமி இருக்கிறார், போய்ப் பாருங்கள்'' என்று சொல்லியவாறு ''என்ன சுப்பையா உன்னை இரண்டு நாட்களாக காணவில்லை'' என்று கேட்டார். ''வேலை அதிகம்' வர முடியவில்லை'' என்று சொல்லிவிட்டு சுவாமிகள் இருப்பிடம் சென்று அவர் காலில் விழுந்து கும்பிட்டார்! நானும் தயங்கியவாறு கும்பிட்டேன்.!

காரணம், ரோடில் பார்த்த சாமியாருக்கும் இவருக்கும் ரொம்ப வித்தியாசம்! ஏ.பி. நாகராஜனையும் வி கே. ராமசாமியையும் எஸ்.டி. சுந்தரத்தை பற்றியும் சுப்பையாவிடம் விசாரித்தார். கூட்டம் ஹாலில் நிறைந்து காணப்பட்டது. வருகிறவர்கள் ஆப்பிள் பழங்களை அவரிடம் கொடுத்து வணங்கினார்கள். பெரிய இடத்து மனிதர்கள் தான் மிகுந்து காணப்பட்டனர். தத்துவப் பேச்சோ; பக்தியைப் பற்றியோ அவர் பேசவில்லை. சினிமாக் கலையைப் பற்றித்தான் அதிகம் உரையாடல் இருந்தது.

''வாங்க சாப்பிடலாம்'' என்று அழைத்தார்கள் அம்புஜம்மாள்! சித்தர் கூட எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தோம். எங்களுக்கெல்லாம் இலை போடப்பட்டது! சித்தருக்கு வெள்ளித்தட்டு வைத்து பரிமாறப்பட்டது! கத்தரிக்காய் பொரியல்! முருங்கக்காய் வெங்காய சாம்பார்! கீரை மசியல்! அப்பளம்! பாயாசம்! இதில் கீரையில் ஏன் தேங்காய் அறைத்துப் போடவில்லை என்றும் ரசத்தில் உப்பு அதிகம் என்றும் சித்தர் கேட்டார்! அந்த கேள்வி எனக்கு சுருக்கென்று பட்டது! சித்தர் ருசி பார்த்துத்தான் சாப்பிடுவார் போல இருக்கு என்று நினைத்துக் கொண்டேன். இனிப் பக்குவமாக சமைப்பதாக அம்புஜத்தம்மாள் சொன்னார்கள்.

உண்ட மயக்கம் தொண்டனுக்கும் உண்டு என்பதைப் போல் எனக்கு தூக்கம் கண்ணை சுழற்றியது. மதியம் தூங்கிப் பழக்கப்பட்டவன் நான்! வாருங்கள் ''வீட்டுக்கு போகலாம்'' என்றேன் எஸ்.வி.எஸ். யிடம். ''கொஞ்சம் இருங்கள் போகலாம்'' என்றார். நான் விடவில்லை ''தூக்கம் வருகிறது'' என்றேன்!

''வீட்டுக்குப் போயிட்டு 5 மணிக்கு வரும்போது ராஜா ஜி ஸ்பெஷல் பன்னீர் புகையிலை இரண்டு மட்டை வாங்கி வா! நான் கொஞ்ச நேரம் தூங்குகிறேன்'' என்று சொல்லி

விட்டு அவர் அறைக்கு சென்று விட்டார், சித்தர்! ''சித்தருக்கு பன்னீர் புகையிலையா? என்னடா இது அதிசயமாயிருக்கிறது'' என்று எண்ணினேன். சித்தருக்கு ''தூக்கம் வந்தாச்சு, இந்த பித்தன் தூக்கத்தை எப்படி தாங்குவான்'' வாங்க போகலாம் என்றேன்.! எஸ்.வி.எஸ். உடனே ''அவருக்கு தூக்கமில்லே, கூடுவிட்டு கூடுபாய்வார்! சித்து விளையாட்டு அது. உமக்கெல்லாம் தெரியாது, வாரும் போவோம்'' என்று சொல்ல, அம்மையாரிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டோம்.

மாலை 5 மணி அளவில் ஸ்பெஷல் புகையிலை சித்தரிடம் கொடுத்து இரவு 10 மணி வரை பேசிக் கொண்டு இருந்தார்! எனக்கோ பசியும், தூக்கமும் வந்துவிட்டது. சித்தரும் கொட்டாவி விட்டார்! ''சுப்பையா! இந்தா'' என்று அவர் கையில் ஏதோ ஒன்று கொடுத்து வீட்டில் போய் திறந்து பார் என்றார். எஸ்.வி.எஸ் கையை மூடியவாறு வீடு வந்து சேர்ந்தார். வீடு வரும் வரை கையை திறக்க வில்லை அவர்! என்ன அது என்றும் கேட்டும்விட்டேன்.! ''வீட்டில் போய் பார்க்கலாம் பேசாமல் இரு'' என்றார். வீட்டுக்கு வந்ததும் கையைப் பிரித்துப் பார்த்தார் எஸ்.வி.எஸ். எங்களுக்கு ஒரே அதிர்ச்சி.

சாமியார் கொடுத்தது என்ன என்று பார்க்க கையை திறந்தார் சுப்பையா. அதில் தங்கத்தால் செய்யப்பட்ட ஒரு சிறு பிள்ளையார் இருந்தது. ''எப்படி இருக்கிறது'' என்றார் எஸ்.வி.எஸ். ''அம்சமாக உள்ளது. ஆனால் எனக்கும் ஒன்று கொடுத்திருக்கலாம். சித்தர்களுக்கு இந்த ஓரவஞ்சனை இருக்கக் கூடாது'' என்றேன்.

எதற்கும் அதிர்ஷ்டம் வேண்டும். அது எனக்கில்லை; யார் எந்த துறையில் ஈடுபட்டாலும் திறமை, உழைப்பு மட்டும் இருந்தால் போதாது, நல்ல படிப்பு, நல்ல மார்க், முயற்சி இவ்வளவு இருந்தும் வேலை கிடைக்காது. அதிர்ஷ்டம் வேண்டும். ஆபீஸ் பையன் மரணம் அடையும் அன்று ஆபீஸ் மானேஜரும் மரணம் அடையக் கூடாது. அதிர்ஷ்டம் வேணும். பெயர், புகழ், திறமை, சிபாரிசு, இவ்வளவும் இருந்தும் கூட சில நடிகர்களுக்கு வேலை கிடைக்காது,

உதாரணம், நாடக உலகிலும் திரைப்பட உலகிலும் கொடி கட்டிப் பறந்தவர் காலஞ்சென்ற நடிகர் எம். இ. மாதவன். இறுதி நாளில் வறுமையைத்தான் நேசித்தார்.

இன்னும் சில நடிகர்களுக்கு குடி இருக்க சொந்த வீடு இல்லாமல், குடிசைகளிலும், சென்னை அருகே மலையடிவாரங்களிலும் வாழ்ந்து வருகிறார்கள்.

நல்ல எழுத்தாளனாக இருப்பார். அவரது புத்தகம் வெளியே விலை போகாது. நல்ல பேச்சாளனாக இருப்பான் மேடை கிடைக்காது; உண்மையான கட்சித் தொண்டனாக இருப்பான். பதவி கிடைக்காது. நாணயமான எம்.எல.ஏ வாக இருப்பார், மந்திரி பதவி கிடைக்காது. ஆக மொத்தத்தில் அதிர்ஷ்டம் தேவை. அந்த ரீதியில்தான், சாமியார் எனக்கு பிள்ளையார் கொடுக்கவில்லை என்று நினைத்துக் கொண்டேன். ''தப்பாக நினைக்காதீர்கள் தருவார்!'' என்றார்.

''காலை சீக்கிரமாக வந்து விடுங்கள். ஏ.பி. நாகராஜனையும். வி.கே ராமசாமியையும் பார்க்க வேண்டும் என்று சமாதானம் செய்தார்.

''என்ன விஷயம் எதற்காக பார்க்க வேண்டும்?'' என்றேன்.

''அவர்கள் படத்தில் நடித்ததற்கு எனக்கு பணம் தர வேண்டும். அதற்கு பதிலாக ஒரு கார் வாங்கிக் கொடுக்கச் சொல்லி இருக்கிறேன். அவர்களும் கார் வாங்கித் தருவதாக சொல்லி விட்டார்கள்!'' என்றார்.

''கார்தான் உங்களிடம் இருக்கிறதே?'' என்றேன். எனக்கில்லை. சித்தருக்கு ஒரு கார் வாங்கிக் கொடுப்பதாக வாக்குக் கொடுத்துவிட்டேன். அதைப்பற்றி அவர்களிடம் பேச வேண்டும். காலை 7 மணிக்கெல்லாம் வந்து விடுங்கள்'' என்றார்.

மறுநாள் காலை அவர் வீட்டிற்குச் சென்றேன். ''தோட்டத்துக்குப் போவோமா'' என்றார். ''கார் என்னாச்சு'' என்றேன். ''அனுப்புவதாக சொல்லிவிட்டார்கள்.'' இருவரும் காரில் ஏறிக்கொண்டு மாடவீதி பக்கமாக போய்க்கொண்டு இருந்தோம். சுப்பையா அவர்களுக்கு ஒரு நல்ல பழக்கம் உண்டு. தான் காரில் போய் கொண்டே இருக்கும்போது வழியில் நண்பர்களைப் பார்த்துவிட்டால், காரை நிறுத்தி நண்பர்களை ஏற்றிக் கொண்டு, நலம் விசாரித்து அவரை

வீட்டில் கொண்டு போய் விட்டுவிட்டுத்தான் தன் வேலையை கவனிப்பார்.

நான் பழகிய நடிகர்களிலேயே இந்த நல்ல பழக்கம் சுப்பையாவிடம் மட்டும்தான் இருந்தது. சில நடிகர்கள் வீட்டிலே இருந்து கொண்டு அண்ணன் இல்லை, அண்ணன் தூங்குகிருர் என்ற இருவார்த்தைகளேயே சொல்லிச் சொல்லி அண்ணனை மார்க்கட்டில் இல்லாமலும், அண்ணனை தூங்கவும் வைத்துவிட்டார்கள். (சில நடிகர்கள் சென்னைக்கு வந்ததிலே நியாயம் உண்டு. என்னைப் போன்ற நடிகர் கள், நடிப்பும் இல்லாமல், நடிப்பதற்கு சந்தர்ப்பமும் கிடைக்காமல் நண்பர்களின் அரவணைப்பும் இல்லாமல் ஏன் சென்னையை நோக்கி வந்தார்களோ புரியவில்லை. கெட்டும் பட்டணம் போய்ச் சேர் என்பார்கள், அது பொய்த்துவிட்டது என்றுதான் கருதுகிறேன். உங்களுக்குப் புரிந்தால் தயவுசெய்து பாய்ஸ் கம்பெனி நடிகர்களுக்கு சொல்லுங்கள்.)

போய்க் கொண்டிருந்த கார், ராஜாஜி சீவல் ஸ்டோரில் நின்றது. நகைச்சுவை நடிகர் எஸ்.வி. சண்முகம் நின்று கொண்டு இருந்தார்.

ஷண்முகத்தை, ''அண்ணு, அண்ணு வாங்க சார்லே ஏறுங்க'' என்ருர் எஸ்.வி.எஸ். அவரும் வாடிய முகத்துடன் தயக்கத்துடன் ஏறி உட்கார்ந்தார். என்ன ஷண்முகம் காலை நேரத்தில் இங்கு நின்று கொண்டு இருக்கிருய்'' என்று கேட்டார். எல்லாம் அம்பிக்குத் தெரியும் என்ருர். (நானும் ஷண்முகமும் ராமபால கான விநோத சங்கீத சபா என்ற நாடகக் குழுவில் பல வருஷங்களாக இணைந்து நகைச்சுவை பாத்திரமேற்று நடித்துக்கொண்டு இருந்தோம். நானோ பக்தி மார்க்கமுடையவன், ஷண்முகமோ பெரியாரின் தொண்டன். அரசியலில் பெரியாரும், ராஜாஜியும், எப்படி நண்பர்களாக இறுதிவரை இருந்து மறைந்தார்களோ அப்படித்தான் நானும் ஷண்முகமும் கலை உலகில் நண்பர் கள். அவர் அன்று முதல் இன்று வரை என்னை அம்பி! அம்பி! என்றுதான் கூப்பிடுவார். பெரியார் அவர்கள் ராஜ கோபாலா' என்று கூப்பிடுவது போல் ஷண்முகம் என்னை அம்பி அம்பி என்றுதான் அழைப்பார்.)

''அம்பி சொல்வது இருக்கட்டும்... நீங்கள் சொல்லுங் கள்'' என்று கேட்டார் எஸ்.வி.எஸ்.

''குருக்கள் ஷண்முகம் ரூ.10 தருவதாக சொன்னார். காலை பூஜை செய்ய கோயிலுக்கு வருவார். அவருக்காகத் தான் காத்துக் கொண்டு இருக்கிறேன்'' என்றார்.

''குருக்கள் கொடுத்தால்தான் வாங்குவீர்களோ? நான் கொடுத்தால் வாங்க மாட்டீரோ'' என்று சொல்லியவாறு100 ரூபாயை ஷண்முகத்திடம் கொடுத்து, வீட்டுக்குச் சென்று கொடுத்துவிட்டு வாருங்கள். நாங்கள் காத்துக் கொண்டு இருக்கிறோம், உங்களுக்காக என்றார். கண்களில் கண்ணீர் மல்க அவரும் வீட்டில் பணத்தைக் கொடுத்துவிட்டு வந்தார். புறப்படும் போது பழம்பெரும் நடிகர் (எங்கள் கம்பெனியில் எங்களுடன் இருந்த) எஸ்.எஸ். மணிநாதன் வந்தார். அவரையும் காரில் ஏற்றிக்கொண்டு அவர் தோட்டத்தை வந்தடைந்தோம். காலை 11 மணி ஆகி விட்டபடியால் சமையல் அறையை காட்டி சாமான்களை எடுத்துக் கொடுத்து என்னை சமையல் செய்யச் சொல்லி விட்டு சுப்பையா, சண்முகம், மணிநாதன் ஆகிய மூவரும் தலைப்பாகை கட்டிக் கொண்டு உழ ஆரம்பித்து விட்டார்கள். நடிகர்களுக்கு உழவும் தெரியும் என்று அன்று தான் தெரிந்து கொண்டேன்.

பகல் இரண்டரை மணிக்கு நால்வரும் சாப்பிட்டோம். 3 நாட்கள் இரவு பகலாக வீட்டை மறந்து தோட்டத்தில் தான் இருந்தோம். இரவு நேரத்தில் அங்கு தூங்குவதற்கு எங்களுக்கு பயம். பாம்புகள் அதிகம் நடமாடும். நான் காம் நாள் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் சென்னைக்கு வந்துவிட்டேன்.

மறுநாள் என்னைத் தேடி என் வீட்டிற்கு எஸ்.வி. ஷண்முகம் ''என்ன அம்பி சொல்லாமல் வந்து விட்டாய்'' என்று கேட்டுக் கொண்டே வந்தவர், ''உனக்கு விஷயம் தெரியுமோ, நானும் சுப்பையாவும் ஸ்பென்சருக்கு துப் பாக்கி வாங்க வந்தோம்'' என்றார். ''துப்பாக்கியா எதுக் கப்பா?'' என்று கேட்டேன். ''சுட'' என்றார். ''காமெடி பண்ணும சொல்லப்பா, தோட்டத்தில் மாங்காயெல்லாம் திருடு போகுதாம். மரத்தில் ஒரு காய் கூட இல்லையாம். இனிமே தோட்டத்துக்குள் திருடன் வந்தால் சுட்டு விடுவாராம்'' என்றார்.

'இவருக்கு சுட்டு பழக்கம் இல்லையே' என்றேன்.

'இனிமேல் பழகப் போகிறாராம்'. எப்படியோ அவரை சமாதானப்படுத்தி துப்பாக்கி வாங்கப் போவதை தடுத்து

வீட்டுக்கு கூட்டி வந்துட்டேன். உன்னை கையோடு கூடடிக் கிட்டு வரச்சொன்னார். என்றார். 'சரி நீ போ நான் பின்னால் வரேன்'' என்று சொல்லிவிட்டு ரேடியோவுக்காக ஏரியல் கட்ட என் வீட்டு மாடிக்குச்சென்றேன். அங்கு ஏரியல் போட்டுக் கொண்டு இருக்கும் போது சுவர் உடைந்து, கீழே தவறி விழுந்து கால் பாதம் முறிந்து கால் வீங்க ஆரம்பித்து விட்டது. உடனே பக்கத்தில் இருந்த நண்பர்கள் என்னை பெரிய ஆஸ்பத்திரியில் கொண்டு போய் சேர்த்தனர்.

எலும்பு சிகிச்சை நிபுணர் நடராசன் அவர்கள்தான், நல்ல முறையில் கவனித்து வந்தார். குணமாக ஒருவருஷம் ஆகிவிட்டது.

இதைக் கேள்விப்பட்டதும் திரு. சுப்பையா அவர்கள் ஆஸ்பத்திரிக்கு வந்து எனக்கு வேண்டிய உதவிகள் அனைத்தும் செய்தார். அப்போது வி.கே. ராமசாமி அவர்கள் டாக்டர் ரத்தினவேல் சுப்பிரமணியம் வார்டில் அட்மிட் ஆகி, சிகிச்சை பெற்று வந்தார்.

வி.கே.ஆர். அவர்கள் தினமும் மூன்று சக்கர வண்டியில் என் வார்டுக்கு வந்து, ஆறுதலான வார்த்தைகளாலும் அன்பான இனிய பேச்சினாலும் எனக்கு மன தைரியத்தை கொடுத்து வந்தார்.

ஒரு நாள் டாக்டர், 'ஒரு காலை எடுத்து விட வேண்டும், இல்லாவிட்டால் புறையோடி உயிருக்கே ஆபத்து ஏற்படும் ஆகையால் ஆபரேஷன் செய்து கொள்' என்று சொன்னார்.

கால் போய் வாழ வேண்டுமா? நடப்பது நடக்கட்டும், எல்லாம் கடவுள் செயல் என்று சொல்லி, காலை எடுப்பதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டேன். எப்படியோ இரண்டு மாதங்கள் ஓடிவிட்டன.

அந்த இக்கட்டான சூழ்நிலையில் டாக்டர் பஷீர் அவர்கள் வந்து ''உன்னுடைய இரத்தம் நன்றாக இருந்ததால் நீ தப்பித்துக் கொண்டாய். காலை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. கால் சரியாகிவிடும்'' என்று கூறினார்.

என் தாய் தந்தை செய்த புண்ணியம் ஒரு பக்கமும், ஐயப்பன் கருணையாலும் இன்று நான் நடந்து கொண்டு

இருக்கிறேன். இதிலிருந்து எனக்கொரு ஞானேதயம் உருவெடுத்தது. நாம் செய்யும் நல்லது, கெட்டது எது வாக இருந்தாலும் அது, நாம் பெற்ற பிள்ளைகளையே சேரும் என்பதையும் உணர்ந்து கொண்டேன்.

சுப்பையா அவர்கள் ஒரு நாள் என்னிடம் வந்து ''நீ கார் வாங்கின நாள் முதல் உனக்கு நல்ல நேரம் இல்லை. அதை முதலில் விற்றுவிடு' என்று யோசனை சொன்னார். அவர் கூறிய அறிவுரையை கேட்டு காரை விற்றுவிட்டேன்.

பூரண குணமடைந்ததும், குற்ருலம் போய் ஒருவாரம் இருந்துவிட்டு வரலாம் என்று என்னை, அவர் தன்னுடன் அழைத்துச் சென்ருர். அங்கு அவரது வீட்டில் தங்கி யிருந்தோம். அதே வீட்டில் தான் சுப்பையா அவர்களது தாயாரும் வசித்து வருகிருர். ஐந்து நாட்கள் குற்ருலத் தில் தங்கிவிட்டு, அங்கிருந்து பிறகு மைசூர் வந்தடைந் தோம். அங்கு ஆர்.ஆர். சந்திரன் படம் ஷூட்டிங் நடந்தது. போகிற இடங்களில் கூழ்காய்ச்சுவதை மட்டும் அவர் இறுதி வரை விடவில்லை.

சுப்பையா அவர்களுக்கு நல்ல சங்கீதஞானமும், கலா ரசனையும் உண்டு. லாட்ஜில் இரவு நேரங்களில் பாட ஆரம் பித்து விடுவார். இரவு நேரத்தில் பாடுவது பக்கத்து அறைகளில் உள்ளவர்களுக்கு தூங்குவதற்கு இடைஞ்சலாக இருக்குமே என்று நினைக்க மாட்டார். ஒரு சமயம் பக்கத்து ரூமில் தங்கி இருந்த ஒரு கன்னடக்காரரர் சண்டைக்கே வந்து விட்டார். சண்டை முற்றி ஓட்டல் மானேஜர் வரை போய் விட்டது. மானேஜர் பாடக்கூடாது என்று சொல்ல அப்ப டித்தான் பாடுவேன் என பிடிவாதம் பிடிக்க, கடைசியில் அந்த ஹோட்டலை காலி செய்துவிட்டு வேறு ஹோட்டலில் ரூம் எடுத்து தங்கினேம்.

இதற்கிடையில் 'காவல் தெய்வம்' என்ற படத்தை எடுத்து முடித்தார். இதனல் எனக்கும் அவருக்கும் ஒரு வருஷம் தொடர்பு இல்லாமல் போய் விட்டது. அடுத்த படமான ''குருவே தெய்வம்'' ஆருயிரம் அடிவரை எடுத்து பாதியில் நின்று விட்டது. பணமுடை.

இதற்கு மத்தியில் ஒரு நாள் வழியில் என்னைப் பார்த்து நகையைக் கொடுத்து மார்வாடியிடம் பணம் வாங்கி வரும் படி என்னை அனுப்பினர். நான் மார்வாடியிடம் போகாமல்

மயிலை பண்டாபீஸில் வைத்து பணம் வாங்கிக் கொடுத்தேன். அவர் மீது இருந்த கோபம் மட்டும் அடங்கவில்லை. என்றாலும் அவர் மீது உள்ள பாசம் குறையவில்லை. வீட்டுக்குச் சென்றோம்.

அங்கு நல்ல செய்தி கிடைத்தது. ''பி.ஆர்.பந்துலு அவர்கள் எடுக்கும் 'அம்பிகாபதி' படத்தில் நடிப்பதற்காக உடனே வரச் சொன்னார்'' என்று அவரது துணைவியார் கூறினார்.

சற்று நேரத்தில் என்னையும் கூட்டிக் கொண்டு பி.ஆர். பந்துலு ஆபீஸ் போனோம்.

போகும் வழியில் நான் சொன்னேன், ''பந்துலுவிடம் அதிகம் பேசாமல், படத்தை ஒத்துக் கொண்டு அட்வான்ஸ் வாங்கி வாருங்கள்'' என்று கூறி அனுப்பி விட்டு நான் காரில் உட்கார்ந்து இருந்தேன். சற்று நேரத்தில் சுப்பையா திரும்பி வந்தார்.

வந்ததும் 'புறப்படலாமா' என்றார். 'புறப்படுவோம்' என்று சொன்னேன். காரும் புறப்பட்டது. காரில் போய்க் கொண்டிருந்தோம். 'என்ன அட்வான்ஸ் வாங்கினீர்களா?' என்று கேட்டேன். அதற்கு அவர் சொன்ன பதில், என்னைத் திடுக்கிட வைத்தது.

''எம்.கே.தியாகராஜ பாகவதர் நடித்த 'அம்பிகாபதி' படத்தை பெரிய நடிகர்களை வைத்து மீண்டும் எடுக்கப் போகிறேன். அந்தப் படத்தில் 'கம்பராக' தாங்கள் நடிக்க வேண்டும். அதைப் பற்றித் பேசத்தான் அழைத்தேன். எவ்வளவு பணம் வேண்டும் என்று பி.ஆர். பந்துலு கேட்டார்'' என்றார்.

''அதற்கு நீங்கள் என்ன பதில் சொன்னீர்கள்'' என்று கேட்டேன். ''காலம் சென்ற சிறுகளத்தூர் சாமா அவர்கள் 'கம்பராக' நடித்து முத்திரை பதிய வைத்து விட்டார். அதை இன்னும் ரசிகர்கள் மறக்க வில்லை. அந்த வேடத்தை நான் போட்டால் கெட்ட பெயர்தான் கிடைக்கும். ஆகையால் நான் கம்பராக நடிக்க மாட்டேன்'' என்று சொல்லி விட்டேன்'' என்றார் எஸ்.வி.எஸ்.

''அவர் என்ன சொன்னார் அதற்கு?''

உங்களால் நடிக்க முடியும், முடியாது என்பது எனக்கு தெரியும். நடிக்க பணம் எவ்வளவு வேணும் என்று மட்டும் கேளுங்கள்' என்றார். ''மீண்டும் அந்த வேடத்தை நடிக்க

மறுத்துவிட்டு வணக்கம் சொல்லி அவரிடம் விடைபெற்றுக் கொண்டேன்'' என்ருர்.

''பணம் இல்லாமல் நகைகளை ஃபண்டில் வைத்ததை மறந்து விட்டீர்களா?'' என்று கேட்டேன். ''புலி பசித்தால் புல் திங்காது. பி.யு.சின்னப்பா, என்.எஸ்.கிருஷ்ணன், காளி என்.ரத்தினம், பாகவதர் இவர்கள் நடித்த படங்களை மீண்டும் எடுக்கும்போது யோசித்து படத்தில் நடிக்க ஒத்துக் கொள்ள வேண்டும். தயவு செய்து இந்த விஷயத்தில் நீங்கள் தலையிடாதீர்கள். எனக்கு கெட்ட பெயர் வருவதை நான் விரும்பவில்லை'' என்ருர்.

வாதத்திற்கு மருந்து உண்டு. பிடிவாதத்திற்கு? நான் வீட்டில் வந்து இறங்கிக் கொண்டேன்.

சபரிமலை போக வேண்டும் என்று நீண்ட நாள் ஆசை எனக்கு. விடிந்தால் கார்த்திகை 1 ம் நாள். மாலை அணியும் நாள்.

மறுநாள் காலை 7 மணி அளவில், திரு எம்.என். நம்பியார் அவர்களின் இல்லம் சென்று ''சபரிமலை போக மாலை போடுங் கள்'' என்று கேட்டேன். நம்பியார் சுவாமி பல வருடங்க ளாக போய்வரும் 'குரு சுவாமி'. மலையைப்பற்றியும், மாலை அணிந்து கொள்வது, விரதங்கள் இருப்பது இருமுடி கட்டுகள் பற்றிய முழுவிபரம் அறிந்தவர். பல நடிகர் களையும், முதலாளிகளையும் இயக்குனர்களையும் வருடா வருடம் சபரிமலைக்கு கூட்டிச் செல்பவர். எனக்கும் நீண்ட நாளைய நண்பர் என்ற முறையில் அவரை அணுகினேன். திரு எம்.என். நம்பியார் சொன்ஞர், ''என் குரூப்பில் இடமில்லை, வேறு யாரிடமாவது மாலை போட்டுக் கொண்டு மலைக்கு போய்வா'' என்ருர். எனக்கு ஒன்றும் புரியவில்லை.

நடிகர் சங்கத்திற்கு சோர்ந்து போய்வந்தேன். வி.கே. ராமசாமி அவர்கள் அங்கு இருந்தார். அவரும் நம்பியார் சுவாமி கூட மலைக்கு போவது வழக்கம். அவரும் இதுவரை மாலை போட்டுக் கொள்ளவில்லை. அவரிடம் நான் சபரிமலை போகவேண்டும். திரு எம்.என். நம்பியார் சுவாமியிடம் கேட்டேன். ''என் குரூப்பில் இடமில்லை என்று சொல்லி விட்டார். என்ன செய்வது?'' என்றேன்.

''யோசனை எதற்கு? நாளை காலை 7 மணிக்கு என் வீட்டுக்கு வந்து விடு. நான் மாலை போட்டு சபரிமலைக்கு கூட்டிக் கொண்டு போகிறேன்'' என்ருர்.

மறுநாள் காலை 7 மணிக்கு வி.கே.ஆர். வீட்டுக்குச் சென்றேன். அங்கு கிடைத்த செய்தி, நெருங்கிய சொந்தக் காரர் ஒருவர் விருதுநகரில் காலமாகிவிட்டபடியால் விடியற் காலை 4 மணிக்கு விருதுநகர் புறப்பட்டுவிட்டார் என்று. அதைக் கேட்டு கலக்கம் உற்றேன். சபரிமலை போய் வர நமக்கு இன்னும் நேரம் வரவில்லை போலிருக்கு என்று எண்ணினேன்.

முரட்டு தைரியம் வந்தது. கபாலி கோவிலுக்குச் சென்றேன். ருத்திராக்ஷ மாலை ஒன்று வாங்கினேன். அர்ச்சனை செய்து மாலையை நானே போட்டுக் கொண்டு வெள்ளை வேட்டி சட்டையுடன் விரதத்தைத் துவக்கினேன்.

பல ஐயப்ப பக்தர்கள் நாள் ஒன்றுக்கு ஒரு தத்துவ மாவது எனக்கு சொன்னார்கள்.! விரதத்தின் சட்டதிட்டங் களை ஓரளவு தெரிந்து கொண்டேன்.

## பிரண்ட் ராமசாமி

(டி.கே.எஸ். சகோதரர்கள் குழுவில் பல வருஷங்களாக நகைச்சுவை நடிகராக இருந்து, பல படங்களில் நடித்து இரு படங்கள் எடுத்து பெயர், புகழ், சம்பாதித்தவர்!

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் பொருளாளராக இருந் தவர்! நல்லவர்! வல்லவர்! நாயர் வகுப்பில் பிறந்து, ஒரு பிராமணரால் தத்து எடுத்துக் கொள்ளப்பட்டு பூணூல் கல்யாணமும் செய்து கொண்டவர். அவர்தான் ஃபிரண்டு ராமசாமி அவர்கள்.

டி.கே.எஸ். குழுவில் இரு ராமசாமிகள் இருந்தார்கள். கருப்பு ராமசாமி என்று கே.ஆர்.ஆர். அவர்களையும், சிவப்பு ராமசாமி என்று ஃபிரண்டு ராமசாமி அவர்களையும் அழைப் பார்கள். ஃபிரண்டு அவர்கள் அதிகம் பேச மாட்டார்! முடிந்த உதவி செய்ய நாள் சொல்ல மாட்டார். இல்லை என்று சொல்லத் தெரியாது. சொந்த ஊர் கொடுங்கல்லூர் பக்கம் சிறு கிராமம்.

மனைவி, வயதான மாமனார், இரு பெண்கள் இதுதான் அவர் குடும்பம். எஸ்.வி.சுப்பையா போல் இவரும் ஆப்த நண்பர் எனக்கு.

ஃபிரண்டுக்கு உடல் நலம் இல்லை என்று எனக்கு தகவல் கிடைத்ததும் ராயப்பேட்டை மருத்துவமனைக்குச் சென்று பார்த்தேன். ஜெனரல் வார்டில் சேர்க்கப் பட்டிருந்தார்.

என்னைக் கண்டதும் குழந்தைபோல் அழ ஆரம்பித்து விட்டார். என் கண்களும் கலங்கியது வசதியற்ற நிலையில் ஜெனரல் வார்டில் சேர்ந்திருக்கிறாரே என்று, ''யாரிடமாவது சிபாரிசு செய்யட்டுமா ஸ்பெஷல் வார்டில் சேர்க்க?'' என்று அவரிடம் கேட்டேன்.

'ஸ்பெஷல் வார்டில் சேர்த்தால் மட்டும் உயிர் கஷ்டப் படாது போகுமா?' என்று கேட்டார். வசதி இல்லை! தொழி லும் இல்லை! கடன் தான் இருக்கிறது. இதை நான் சாவதற்குள் கொடுக்க வேண்டும். கொடுக்க முடியுமா வெங்கட்ராமன்?'' என்று கேட்டார். ''முடியும். கவலைப் படா மல் இருங்கள்'' என்று சொல்லி விடைபெற்று சென்ற மறு வாரம் மாரடைப்பால் உயிர் பிரிந்த செய்தியை கேட்ட வுடன் நான் சபரிமலை செல்ல மாலை போட்டு இருப்பதை மறந்து ஒரு ரோஜா மாலை வாங்கிக் கொண்டு அவர் இல்லம் சென்றேன். வழக்கம் போல் நடிகர்களை அங்கு காணவில்லை. மறைந்த நண்பரின் முகத்தைப் பார்த்த வண்ணம் நின்று கொண்டு இருந்தேன். கலங்கிய என் கண்ணில் அவரது முகம் மங்கலாக தெரிந்தது.

அழுதவண்ணம் மரம் போல் நின்று இருந்தேன், 'வருவது போவது இரண்டு: பிறப்பும் இறப்பும்! வந்தால் நிற்காதது இரண்டு: செல்வமும், தரித்திரமும்.

எப்படி சாக்ரடீஸ் சாகுமுன் நண்பனை அழைத்து ''ஒரு கோழி கடன் வாங்கி இருக்கிறேன், அதை எப்படியாவது வாங்கி அவரிடம் நான் கொடுத்தாக கொடுத்துவிடு'' என்று சொல்லி மறைந்தானோ அதைப் போல் பிரண்டு அவர்கள் கடன் பட்டதை கொடுத்து விடுவேனு என்றுதான் கேட் டார். என்னைக் கொடுத்துவிடு என்று சொல்லவில்லை. காரணம் என் நிலை அவருக்கு புரியும். மேலும் வறுமை யும் தழுவ ஆரம்பித்து விட்டது. கடனும், வறுமையும் சேர்ந்தால் உயிர் பிரிவதை தவிர வேறு என்ன இருக்கும் கலைஞனுக்கு. அழுகை சத்தங்கள் அவ்வளவாக இல்லை. உற்றார் உறவினர்கள் யாரும் இல்லை. நண்பர்கள் தான் நிறைந்து இருந்தார்கள். மனைவி மக்கள் வரும்வரை பூத உடல் காத்து நின்றது. மாலை மரியாதைகள் செய்து இடுகாடு வரை சென்று அவருடைய ஆத்மாவுக்கு அஞ்சலி செய்து புறப்பட்டேன்.

பல ஐயப்ப பக்தர்கள் ''மாலை போட்டுக் கொண்டு சாவு வீட்டுக்கும் சுடுகாட்டுக்கும் போகலாமா?'' என்று கேள்விகளை எழுப்பினர்கள். ''இடுகாட்டிற்கு உண்மைப் பெயர் தெரியுமா? புண்ணிய பூமி! இதைத்தான் சுடலை ஆண்டி காவல் காக்கிருர். ஈஸ்வர புத்திரன்தான் ஐயப்பன். முதல் முதலாக சபரிமலை செல்லும் நான் தகப்பன் இருக்கும் இடமாகிய புண்ணியபூமிக்கு போனேன். அதில் தப்பு இல்லை. மாலையை போட்டுக் கொண்டு வீம்புக்காக விளக்கமும் சொல்லக்கூடாது'' என்றேன்.)

மறு நாள் நடிகர் சங்க விஷயமாக திரு. சிவாஜிகணேசன் அவர்களை ஏ.வி.எம். ஸ்டுடியோவில் பார்க்கச் சென்றேன். என் கழுத்தில் மாலை இருப்பதைப் பார்த்து ''மலைக்குப் போகப் போகிறீர்களா?'' என்று கேட்டார். 'ஆமாம்' என்று சொன்னேன்.

''வெள்ளை வேட்டி சட்டை போட்டு இருக்கிறீர்களே?'' என்று கேட்டார். அதற்கு நான் எதுவும் சொல்லவில்லை. டிரைவர் சிவாவை கூப்பிட்டு காவி வேட்டி சட்டை துண்டு வாங்கி வரச் சொல்லி உடன் அணிந்து கொள்ளும்படி கட்டளை இட்டார். சாஷ்சாத் ஈஸ்வர புத்திரன் கணேசரே இந்த வேட்டி சட்டையை வாங்கி கொடுத்ததாக நினைத்து கட்டிக் கொண்டேன். அங்கு எஸ்.வி.எஸ். வந்திருந்தார்.

என் உடையைப் பார்த்ததும் ''சுவாமி, மலைக்குப் போகப் போகிறீர்களா?'' என்று கேட்டார். 'ஆமாம்' என்று சொன்னேன். ''எப்போது? எப்படி?'' என்று கேட்டார். ''அதுதான் எனக்குத் தெரியாது. போகப் போவது உறுதி அதுவும் தனித்து'' என்றேன்.

''என்னுடன் வாருங்களேன்'' என்ருர். ''வருகிறேன்'' என்று சொன்னேன்.! ''நாளை காலை வீட்டில் இருங்கள். நான் வந்து கூட்டிப் போகிறேன்'' என்று முருகன் போல் சொல்லிப் போனுர். மறுநாள் காலை எனக்கு அவர் வீட்டில் இருமுடி கட்டி சுப்பையா என்ற சுப்பிரமணியன் கன்னி மலைக்கு கூட்டிப் போய்வந்தார். செலவு பூராவும் அவருடையது! அன்று அவர் கொடுத்த இருமுடி பையைத் தான் இன்றும் எடுத்துச் செல்கிறேன்.

எனக்கு சபரிமலை குருசாமி திரு. சுப்பையா தான். இன்றும் இருமுடி கட்டும்போது அவரை வணங்கி நினைத்துத் தான் இருமுடி கட்டி வருகிறேன். சபரிமலை போய் வந்த

பிறகு வாருங்கள் ஆஸ்பத்திரிவரை போய் வரலாம் என்ருர் ஆஸ்பத்திரியில் நான் பார்த்த காட்சி உடல் நடுங்கியது.!

## சாயிராமன்

ஜெனரல் வார்டில் நகைச்சுவை நடிகர் திரு. சாயிராமன் அவர்கள் நினைவை இழந்து படுத்த படுக்கையிலிருந்தார். அருகில் அவரது மனைவியார் இடுப்பில் மூன்று வயது குழந்தையை வைத்துக் கொண்டு குனிந்த தலை நிமிராமல் நின்று கொண்டு இருந்தார்கள்.

''சாயிராமனுக்கு என்ன உடம்பு?'' என்று அவர் மனைவியிடம் கேட்டார். ''மூளையில் சிறுகட்டி இருக்கிறது, அதை அறுவை சிகிச்சை செய்ய வேண்டும். மேலும் சர்க்கரை வியாதி வேறு இருக்கிறது. அறுவை சிகிச்சை செய்ய கொஞ்ச நாள் ஆகுமாம். திடீர் என்று நினைவு வருகிறது. திடீர் என்று நினைவு மறைகிறது. அவஸ்தைப் படுகிருர் பணக் கஷ்டம் வேறு! ஒன்றும் புரியாமல் இருக்கிருேம். அவரது நண்பர்களுக்கு தொலைபேசி மூலமாக தகவல் சொன்னேன் யாரும் வந்து பார்க்கவும் இல்லை'' என்று தேம்பித் தேம்பி அழுதபடி அந்த அம்மையார் சொன்ஞர்கள்.

ரூபாய் 200ஐ எடுத்து அந்த அம்மையாரிடம் கொடுத்து ''மேலும் தேவைப்பட்டால் வெங்கட்ராமனிடம் சொல்லி அனுப்புங்கள். உதவிகள் செய்கிறேன்'' என்று எஸ்.வி.எஸ். சொன்ஞர்கள். சாயிராமன் திருவாரூரில் பிறந்தவர். வயதான தாயும் ஒரு அண்ணனும் இருக்கிருர்கள். அண்ணன் ஓய்வு பெற்ற ரயில்வே அதிகாரி. சாயிராமன் சிறு வயது முதல் பல கம்பெனியில் இருந்து வந்தார். 1939ல் 'சதிமுரளி' என்ற தமிழ் படத்தை கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில் எடுத்தார்கள். உரிமையாளர் எம்.எஸ்.எம். ராமசாமி செட்டியார். நானும் அந்த படத்தில் சின்ன வில்லனுக நடித்தேன். அப்போது அந்த கம்பெனியில் சாயிராமன் ஆபீஸ்பாயாக வேலைபார்த்து வந்தார். அங்கு நண்பர் ஆனவர். எனக்கு 'சதிமுரளி' படம் முடித்து 1943ல் ஸ்ரீராம பாலகான விஞேத சங்கீத சபா என்ற நாடக கம்பெனி காரைக்குடியில் துவக்கப்பட்டது. அப்போது அங்கு எஸ்.வி.எஸ். அவர்கள் நாடக கம்பெனி வாத்தியாராக பணியாற்றி வந்தார்கள். (ஒரு வருஷம் இருந்து, பிறகு சக்தி நாடகசபா நாகப்பட்டினத்தில் துவக்கப்பட்டது. முதல் நாடகம் ''கவியின் கனவு!'' அங்கு நடிப்

பதற்காக சென்றுவிட்டார்கள்.) அப்போதே திரு. சாய் ராம் அவர்கள் எங்கள் குடும்ப நண்பராகி விட்டார்கள். எங்களது நாடக கம்பெனி திருச்சி தேவர் ஹாலில் ஒரு வருடம் நடந்தது. பாலக்கரையில் எங்கள் கம்பெனி வீடு, குறைந்தது 100 நடிகர், நடிகைகள் இருந்தார்கள்.

(பிரபல இசை அமைப்பாளர் திரு. எம்.எஸ். விஸ்வ நாதன் சிறு தகரப் பெட்டியுடன் என்னிடம் வந்து என்னையும் நாடகக் கம்பெனியில் சேர்த்து விடும்படி கேட்டுக் கொண்டார். அதன்படி அவரை முதலாளியிடம் சொல்லி கம்பெனியில் 5 ரூபாய் சம்பளத்தில் சேர்த்து என்றாவது ஒரு நாள் இவரை மேடையில் ஹார்மோனியம் வாசிக்க வைத்து விடவேண்டும் என்று கங்கணம் கட்டினேன். அதன்படி இவரை மேடையில் ஹார்மோனியம் வாசிக்க வைத்துவிட்டேன். அவருடைய மாமா திருச்சியில் ரயில் வேயில் பணியாற்றிக் கொண்டு இருந்ததால் வாரம் ஒரு நாள் அவர் வீட்டுக்குப் போவோம். வீட்டு சாப்பாடு சாப்பிடுவோம். அப்போதே நன்றாக ஹார்மோனியம் வாசிப்பார். என்றாவது ஒரு நாள் பிரபல இசை அமைப் பாளராக வருவார் என்று அன்றே எனக்குத் தெரியும். இன்றைக்கு பெரிய இசை அமைப்பாளராக விளங்குகிறார்.)

ஹோட்டல் அதிபர் ஒருவர் என்னை பார்க்க வந்திருப் பதாக எம்.எஸ்.விஸ்வநாதன் வந்து சொன்னார். ''ஹோட்டல் அதிபரிடம் நான் போய் ''என்ன வேண்டும்'' என்று கேட்டேன்.

''சாயிராமன் என்ற நபர் எங்கள் ஹோட்டலில் 3 ரூபாய்க்கு டிபன் சாப்பிட்டு கொடுக்க முடியாமல் உங்கள் விலாசத்தை கொடுத்து உங்களிடம் பணத்தை வாங்கிக்க சொன்னார்'' என்றார்.

ஹோட்டலுக்கு விரைந்தேன். சாயிராமன் என்னைக் கண்டதும், ''அம்பி உன்னைப் பார்க்கத்தான் வந்தேன். பசி தாங்க முடியவில்லை. உன்னை பார்த்து பணத்தை வாங்கிக் கொடுப்பதாக சொன்னேன். நம்பவில்லை இவர். உன் விலாசத்தைக் கொடுத்து பணம் வாங்கிக்கச் சொன்னேன்'' என்றார்.

பணத்தை அதிபரிடம் கொடுத்துவிட்டு சாயிராமனை எங்கள் முதலாளியிடம் சொல்லி மாதம் 15 ரூபாய் சம்பளம் போட்டு நாடக கம்பெனியில் சேர்த்து விட்டேன்.

நண்பனுக நல்ல நகைச்சுவை நடிகராக 7 ஆண்டுகள் உடன் இருந்தார். திருச்சியில் இருந்து கம்பெனி திருவாரூர் வந்து 2 ஆண்டுகள் நடந்தது. (எம். எஸ்.விஸ்வநாதனுக்கு உடல் நலம் சரியில்லாததால் என்னிடம் சொல்லிக்கொண்டு அவரது தாத்தா கோவையில் இருப்பதால் கோவை சென்று ஜூபிட்டரில் மாத சம்பளத்தில் சேர்ந்துவிட்டார். அங்குதான் திரு எஸ்.எம்.சுப்பையா நாயுடு அவர்களின் இசைக் குழுவில் பணிபுரிந்தார்.)

சென்னை சுகுண விலாஸ் சபாவில் 3 ஆண்டுகள் பல நாடகங்கள் நடந்தன. ஜூபிட்டர் பிக்சர் அதிபர் திரு. சோமு அவர்கள் நாடகம் பார்க்க அடிக்கடி வருவார்கள். அவரை நானும் சாயிராமனும் சந்தித்தோம். ''திரைப் படத்தில் நடிக்க கோவை வருகிறீர்களா?'' என்று கேட்டார். நான் 5 வருடம் நாடக கம்பெனியில் ஒப்பந்தம் செய்து கொண்டதால் போக முடியாத நிலை! கம்பெனியில் சொல்லாமல் சாயிராமன் அவர்கள் கோவை சேன்று ஜூபிட்டர் படத்தில் ஒப்பந்தம் செய்து கொண்டார்.

மோகினி படத்தில் நடித்து பெயர் புகழ் கிடைத்தது. தொடர்ந்து பல படங்களில் நடித்து பிரபலமாக விளங்கினுர். பணத்தின் அருமை தெரியாமல் செலவுகள் செய்தார். வீடு ஒன்று வாடகைக்கு எடுத்து நடிகர்களுக்கு சாப்பாடு போட்டு வந்தார். பிறகு கல்யாணம் செய்து கொண்டு குழந்தையும் பிறந்தது. திரைப்படத்தில் வாய்ப்புகள் குறைய ஆரம்பித்தது. வியாதியும் வந்தது. பிறகு கேட்க வேண்டுமா? தென்னை மரத்தில் ஏறிய குரங்கு கள்ளையும் குடித்து தேளும் கொட்டியது போல் ஆகி விட்டது அவரது நிலை.

சாயிராமன் துணைவியாரிடம் ஆறுதல் சொல்லிவிட்டு கார் சூளையை நோக்கி புறப்பட்டது. போகும்போது சொன்னுர். இந்தக் காரைச் சித்தருக்கு நாடகம் நடத்தி ரூபாய் 5000 கொடுத்தேன். அதற்கு நன்றிக் கடிதம் கூட எழுதவில்லை. அதைக் கேட்டுவரத் தான் போகிறேன்' என்ருர் சுப்பையா அவர்கள்.

சூளை பகுதியில் ஒரு தனி வீட்டில் கார் போய் நின்றது. இருவரும் காரைவிட்டு இறங்கி வீட்டுக்குள் சென்ருேம். வாசலில் ஒருவர் நின்றுகொண்டு எங்களை உள்ளே செல்ல விடாமல் தடுத்தார். எஸ்.வி.எஸ். எவ்வளவோ சொல்லியும் உள்ளே விட மறுத்தார். உடனே ருத்திரதாண்டவம்

தான். நின்றவரை தூக்கி எறிந்துவிட்டு என் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு உள்ளே சென்ருர். சாமியார் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். எதிரில் ஒரு டேபிளில் ஒரு பிராந்தி பாட்டில், கிளாஸ் இருந்தது. அதில் பாதி குடித்துவிட்டு பாதி இருந்தது. இருவருக்கும் வாக்கு வாதம் நடந்தது. இறுதியில் கோபித்துக்கொண்டு அங் கிருந்து புறப்பட்டார். சிலநாள் சென்று சித்தர் தற்கொலே செய்து கொண்டார்.

இரண்டு நாள் கழித்து ஆஸ்பத்திரியில் இருந்து தகவல் வந்தது. சாயிராமனே வந்து பார்க்கும்படி. நான் போய் பார்த்தேன். சாயிராமன் தெளிவாக காணப் பட்டார். ''அம்பி எனக்கு பூரண குணமாகிவிட்டது. நான் வீட்டுக்கு போகலாம் என்று டாக்டர் சொல்லி விட்டார். ஆஸ்பத்திரிக்கு ரூ.275 கட்ட வேண்டும். கட்டினல்தான் போகலாம் என்று சொல்லிவிட்டார். பல நண்பர்களுக்கு தொலேபேசி மூலமாக தொடர்பு கொண் டேன். பலன் இல்லே. என்னே வீடு சேர்க்க வேண்டிய பொறுப்பு உன்னுடையதுதான்'' போர்க்களத்தில் கர்ண னிடம் ஸ்ரீகிருஷ்ணன் தருமம் கேட்பது போல் இருந்தது!

உடனே நான் யாரிடம் போய் கேட்டால் இந்த உதவியை செய்வார்கள் என்று யோசித்தேன். யோசனே யில் வந்து நின்றவர் கவிஞர் எஸ்.டி.சுந்தரம் அவர்கள்தான். ஒரு மணி நேரத்தில் திரும்பி வருவதாக சொல்லிவிட்டு இயல் இசை நாடக மன்றம் சென்று திரு. எஸ்.டி சுந்தரம் அவர் களிடம் சாயிராமனின் நிலேயை எடுத்துச் சொன்னேன். சற்றும் சிந்திக்காமல் 300 ரூபாயை கொடுத்து ''ஆஸ்பத்தி ரியில் பணத்தைக் கட்டி அவரை வீட்டில் விட்டுவிடுங்கள் என்று சொன்ஞர்.

காலத்தால் செய்த உதவி சிறிது எனினும் ஞாலத்தின் மானப் பெரிது என்ற திருக்குறளின் வாக்கியம் பொய்க்க வில்லே. மனிதத்தன்மையுள்ள நண்பனே அடைவது மிகவும் சிரமம். (இங்கு இன்னொன்றையும் குறிப்பிடுவது நலம் என்று கருதுகிறேன். எஸ்.டி.சுந்தரம் அவர்களின் மகள் கல்யாணம் செய்ய நிச்சய தாம்பூலம் செய்து ஒரு ஆண்டு கடந்துவிட்டது. கல்யாணம் முடியாமல் தவித்தார்கள். அந்த நேரத்தில் நான் பல நடிகர்களிடம் பணம் கேட்டு சுந்தரம் அவர்களுக்கு வாங்கிக் கொடுத்தேன்.

எல்லா நடிகர்களேயும் பார்ப்பது போல் எஸ்.டி. எஸ். ஐ-கூட்டிக்கொண்டு மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.

ராமச்சந்திரன் அவர்களை சந்தித்து சுந்தரம் அவர்களின் மகள் கல்யாண விஷயங்களை சொன்னேன்.

திரு எம்.ஜி.ஆர். கல்யாணத்திற்கு அவசியம் வருவதாக சொன்னார். எஸ்.டி.எஸ். அவர்கள் எம்.ஜி.ஆரிடம் என்னைப் பற்றி சொன்ன வார்த்தைகள் இன்றும் பசுமையாக இருக்கின்றன. ''கல்யாணத்தை வெங்கட்ராமன்தான் முன் நின்று நடத்துகின்றார்'' என்றார். அதற்கு பதில் சொன்னார் திரு. எம்.ஜி.ஆர் அவர்கள்: ''அவன் எல்லோருக்கும் ஏணியாக இருப்பான்.''

மறுநாள் காலை 7 மணி அளவில் ரூ.10,000 த்தை எஸ்.டி.எஸ் இடம் கொண்டு வந்து கொடுத்து விட்டு இதை எம்.ஜி.ஆர். அவர்கள் கொடுக்கச் சொன்னதாக கொடுத்தார்கள்.

மேலும் சாப்பாட்டில் பற்றாக்குறை வராமல் இருக்க காலம் சென்ற திரு. குஞ்சப்பன் அவர்களையும் பார்த்துக் கொள்ளும்படி கட்டளை இட்டார்கள். இதை பார்க்கும் போது தான் பழமொழிகளுக்கு உயிர் இருக்கிறது: ''தருமம் தலை காக்கும்.''

அன்று சாயிராமனுக்கு செய்த உதவிதான் இன்று எஸ்.டி.எஸ் மகள் கல்யாணத்திற்கு திரு. எம்.ஜி.ஆர் அவர்கள் உதவி புரிந்தார்கள். குறள் பொய்க்காது.

(எஸ்.டி.எஸ் கொடுத்த பணத்தை ஆஸ்பத்திரியில் கட்டிவிட்டு வந்தேன்.)

நான்கு நாள் சென்று சாயிராம் என்வீட்டுக்கு வந்து ''அம்பி பஞ்சபரமானத்துடன் சாப்பாடு போடு'' என்றார். சாப்பாடு போட்டு அனுப்பி வைத்தேன்.; போகும் போது அவர் சொன்ன வார்த்தை: ''அம்பி நான் அதிகநாள் இருக்க மாட்டேன். சீக்கிரம் செத்துவிடுவேன்.'' ஒரு ரூபாய், 50 காசு கடன் கேட்கும் நிலை வந்துவிட்டது நண்பர்களும் வீட்டில் இருந்துகொண்டே, இல்லை என்று சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். தொழிலும் செய்ய முடியாத நிலை வந்துவிட்டது. இதுதான் கடைசி சந்திப்பு என்று நினைக்கிறேன்'' என்றார். ''துக்கிரித் தனமாகப் பேசாதே'' என்று சொல்லி அனுப்பி வைத்தேன்.

ஒரு நாள் இரவு 12 மணி இருக்கும் சாயிராம், காலமான செய்தியை கே. ஏ. தங்கவேலு அவர்கள் தொலைபேசி

மூலமாக எனக்கு தெரிவித்தார்கள். உயிர் இருக்கும்போது ஒரு அடிநிலம் கூட வாங்கமுடியவில்லை. இப்போது 6 அடி நிலத்துக்கு சொந்தக்காரனாகி விட்டார்.

காலை அவரது இல்லத்திற்குச் சென்றேன். குல வழக்கப்படி கர்மாக்கள் செய்யப்பட்டது. வயதான தாய் அழமுடியாமல் உட்கார்ந்து இருந்தார்கள். துணைவியார் மட்டும் அடித்து அலறிக் கொண்டு இருந்தார்கள். அந்த காட்சியை பார்க்கும்போது இரட்டை புலவர்களின் பாடல்தான் நினைவில் வந்தது. ஒருவர் நொண்டி! மற்றொருவர் குருடர்! இந்தப் புலவர்கள் கவிகாளமேகம் மறைந்த செய்தி கேட்டு இடுகாட்டுக்குச் சென்று இடு காட்டில் ஒரு பாடலை பாடினார்கள்.

''ஆசுகவியால் அகில உலகெங்கும் வீசுபுகழ் காள மேகமே பூசுரா! விண்தின்ற செந்தணலில் வேகுதே! அய்யய்யோ! மண்தின்ற பாணம் என்ற வாய்!'' நான் அதிக நாள் இருக்கமாட்டேன், செத்துவிடுவேன் என்று சொல்லி அன்று போனாரே அந்த சாயிராமனின் வாயும் செந்தணலில் வெந்துவிட்டது. நானும் சுப்பையாவும் இறுதி மரியாதை செய்துவிட்டுப் புறப்பட்டோம்.

பல நாள் சென்று ஒரு நாள் வாஹினி மருத்துவமனையில் திரு எஸ்.வி. சுப்பையா அவர்களின் மரணச் செய்தி எனக்குக் கிடைத்தது. நானும், திரு மேஜர் சுந்தர்ராஜனும் மருத்துவ மனை சென்று பூத உடலை வாங்கி அவரது தோட்டத்தில் சகலவித சடங்குகளும் செய்து அடக்கம் செய்து சமாதியும் கட்டி பூஜைகள் நடைபெற்று வருகிறது. நான் ஒரு நல்ல நண்பரை இழந்து விட்டேன்.

## சி. வி. வி. பந்துலு

*8-7-1901* அன்று முகவை மாவட்டத்திலுள்ள திருச்சுழியில் சீத்தம்மாள் - வெங்கிட கிருஷ்ண பந்துலு தம்பதியர்க்கு மகனுக பிறந்தார். கல்வி கற்பதில் ஆர்வமில்லாமல் இளமையில் சங்கீதம் பயின்று கூத்து, சங்கீதக்கச்சேரி கதா காலட்சேபம் போன்றவையில் அதிகம் நாட்டம் கொண்டு, அவைகளில் பங்கு கொண்டு, தேர்ச்சி பெற்று திரு. சி.கன்னேயா அவர்களின் நாடக கம்பெனியில் சேர்ந்து நடிப்புக் கலேயிலும் இசைத் துறையிலும் தன்னே வளர்த்துக் கொண்டு திரு. எஸ்.ஜி. கிட்டப்பா அவர்கள் கன்னேயா அவர்களின் கம்பெனியை விட்டு விலகியதும் கதா நாயகன் அந்தஸ்தைப் பெற்று திரையுலகில் ஐம்பது, அறுபது, படங்களில் முக்கிய வேடங்களில் நடித்து மக்களின் மனங்களில் நினேவில் நின்று அந்திம காலங்களில் வறுமையில் வாடி கஷ்டத்தில் வதங்கி சமீபத்தில் சென்னேயில் இறைவனடி சேர்ந்தார்.

## எம். கே தியாகராஜபாகவதர்

புகழ் ஏணி ஒருவரிடம் நிலேத்து நிற்பதில்லே, பொருள் இருக்குமா? இருந்ததுவே! பக்குவ வயது! அனுபவம்! பக்தி! கண்ணியம்! கள்ளம் கபடமற்ற உள்ளம்! கருணே! நல்ல நோக்கம்! நன்றி மறவாமை! தானம்! தருமம்! இத்தனேயும் அமைந்தவர்தான் புண்ணியவான்' தமிழ் ஆண் அழகர், தாயிடமும், சுற்றத்தாரிடமும் பாசமுள்ளவர், சிறு வயதிலேயே சரஸ்வதியும், லக்ஷ்மியும் குடிகொண்டாள் திரு எம்.கே. தியாகராஜ பாகவதரிடம்.

*1910* ஆம் ஆண்டு பிறந்து முறையாக சங்கீதம் பயின்று அன்று பல பெரிய நடிகர்களுடன் போட்டியிட்டு பாட்டிலும் நடிப்பிலும் தனக்கு நிகர் தான் என்ற நிலேயை உருவாக்கி கொண்டவர். இசை அமையலாம், ஆனுல் அதற்கேற்ற இனிமையான குரல் அமைய வேண்டும். அவை அமையப் பெற்றவர் திரு எம்.கே. தியாகராஜ பாகவதர் அவர்கள்.

பத்தில் ஒன்று ஆ-பத்து, வி-பத்து, சம்-பத்து என்று வடலூர் வள்ளலார் கூறியதுபோல், இம்மூன்றையும் அவர் வாழ்ந்த காலங்களில் சந்தித்து நாடகத்திலும், திரைப்படத்திலும் கதாநாயகன் அந்தஸ்த்தை உயர்த்திவிட்டு புகழுடன் *1959* ல் சென்னேயில் மரணமடைந்தார்.



**கே. பி. சுந்தராம்பாள்**
(1908—1980)

கீலக வருடம் ஐப்பசி மாதம் 11 தேதியில் கொடுமுடி யில் திருமதி கே.பி. சுந்தராம்பாள் அவர்கள் பிறந்தார். இறைவனால் அளிக்கப்பட்ட இனிமையான குரல் வளம், ஆறு வயதிலேயே இருந்தது. போலீஸ் அதிகாரி கிருஷ்ண சாமி அய்யரிடம் பாடிக் காட்டும் சந்தர்ப்பம் கிட்டியது. பாட்டைக் கேட்ட அதிகாரி ஐம்பது ரூபாய் சன்மானமாக அளித்ததுடன் ஆண்டிப்பட்டி ஜமீன்தாருக்கும் சிபாரிசு செய்தார்.

பாட்டைக் கேட்ட ஜமீன்தார் ஒன்பது பவுன் செயின் ஒன்றை பரிசாக அளித்தார். சில நாள் சென்று பி.எஸ். வேலு நாயர், அனந்த நாராயண அய்யர் நடிக்கும் நாடகங் களில் குழந்தை பாத்திரங்களை தாங்கி நடித்தார். (நல்ல தங்காள், ஞான சௌந்தரி, கண்டிராஜா ஆகியவை).

ஹார்மோனியம் திரு. கோவிந்தராஜுலு, (இசை அமைப்பாளர் திரு. டி.ஜி.லிங்கப்பாவின் தந்தை) அவர்கள் சுந்தராம்பாள் அவர்களை ஸ்பெஷல் நாடகங்களில் நடிக்க வைத்தார். சிறிது காலம் சென்று தாணு அம்மாள் அவர் களின் கம்பெனியில் சேர்ந்து, ராஜபார்ட், ஸ்திரி பார்ட் களில் தேர்ச்சி பெற்று அங்கிருந்து விலகி ஸ்பெஷல் நாடகங் களில் நடிக்க இலங்கை சென்று ஒரு மாதம் நாடகங்களில் நடித்தார்.

இலங்கையில் இவருடன் நடித்த கதாநாயகர்கள், அத்துணை பேர்களும் மேடையில் இவருடன் பாட முடியாமல் தோல்வி கண்ட போது திரு.எஸ்.ஜி. கிட்டப்பா அவர்களுடன் நடிக்க வைத்தார்கள். திரு. கிட்டப்பாவின் சகோதரர் திரு. காசி அய்யர் அவர்களின் ஹார்மோனியத்துடன் கழுகாசலக்காட்சியில் ''சம்போ மகாதேவா' என்ற பாடலை கிட்டப்பா பாடி முடிப்பதற்கு ஒரு மணி நேரம் பிடித்ததாம். அந்தப் பாட்டில் மயங்கியவர்தான் திருமதி. கே.பி.சுந்தராம்பாள் அம்மையார்.

திரு. கே.பி.எஸ். அவர்களுக்கு 17 வயது நிரம்பி பருவப் பெண்ணாக இருந்த நேரத்தில் இருவருக்கும் காதல் பிறந்து திருமணமும் செய்து கொண்டு ஒரு குழந்தையும் பெற்றெடுத்தார். குழந்தையும் இறந்து, 1933 ல் திரு கிட்டப்பா அவர்களும் மரணமடைந்தபின் துறவறம் பூண்டார் திருமதி கே.பி.எஸ். அவர்கள்.

கிட்டப்பா அவர்களின் மறைவுக்குப் பிறகு சங்கீதக் கச்சேரிகள் செய்தார். திரு 'இந்து' சீனுவாச அய்யங்கார், திரு. சத்திய மூர்த்தியுடன் தொடர்பு கொண்டு தேச விடுதலைக்கு பாடுபட்டார்!

திரு காமராஜ் அவர்களால் எம்.எல்.சி. பதவி அளிக்கப்பட்டது. சென்னையில் நோயினால் சிறிது காலம் படுத்த படுக்கையாக இருந்து ஆள்வார்பேட்டையிலுள்ள அவரது இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார். அவருடைய பூத உடலை தென்னிந்திய நடிகர் சங்கத்தில் வைத்து இறுதி மரியாதை செய்து கண்ணம்மாப் பேட்டையில் தகனம் செய்யப்பட்டது. இந்த ஏற்பாடுகளையும் செலவுகளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் முன் நின்று செய்தார்!

இவருடைய கலை உலக சேவையைப் பாராட்டி தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம் இவரது திரு உருவப் படத்தை திறந்து வைத்துள்ளது.



**எஸ். வி. சகஸ்ரநாமம்**

*29-11-1913* அன்று சிங்காநல்லூரில் பிறந்த சகஸ்ர நாமம் அவர்கள் பள்ளி நாடகங்களில் தனது நடிப்பைத் துவக்கி அத்துடன் பாட்டுகள் பாட தன்னை ஈடுபடுத்திக் கொண்டு சங்கீத ஞானத்தை வளர்த்துக் கொண்டார்.

அத்துடன் நாடகங்களில் நடிக்கவேண்டுமென்ற ஆர்வம் பெருகியது. அன்று பல நாடகக் கம்பெனிகள் புகழுடன் நடந்தன. அதில் 'மதுரை ஸ்ரீ பாலஷண்முகானந்தசபா'' வும் ஒன்று. இதன் உரிமையாளர்கள்; டி.கே. சங்கரன், முத்துச்சாமி, ஷண்முகம், பகவதி ஆகியோர்.

டி.கே.எஸ்.குழுவில் நடிகராக சேர்ந்து நடிப்புத்திறனை வளர்த்துக் கொண்டார். கம்பெனியில் நகைச்சுவை நடிகரான திரு. என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் கிடைத்தது. நாடக கம்பெனியிலிருக்கும் போதே இவருக்கு தேசீய உணர்வு அதிகமாயிற்று. காந்தியார் கூறியபடி கதர் ஆடையைத் தவிர வேறு எதையும் உடுத்தமாட்டார்.

நாடகக் குழுவில் முக்கிய பாத்திரங்கள் ஏற்று நடித்ததில் திரைப்படத் தயாரிப்பாளர்களின் பார்வை பட்டு கலைவாணர் என்.எஸ்.கே.யின் சிபாரிசில் திரைப்படங்களில்

அடியெடுத்து வைத்து வெற்றி கண்டதுடன் தனது புகழை யும் நிலை நிறுத்திக் கொண்டார்.

திரைப்படத்துறைக்கு வந்த பிறகும் கலைவாணருடன் நெருங்கிய தொடர்பு கொண்டார். சென்னை ஒற்றை வாடை தியேட்டரில் ''மங்கள கான சபை'' நாடகங்களை நடத்திக் கொண்டிருந்தார்கள். அந்த நாடக சபையை விலைக்கு வாங்கினுர் கலைவாணர். வியாபார நோக்கத்தில் நாடக சபையை விலைக்கு வாங்கவில்லை கலைவாணர் அவர்கள்; நடிகர்களுக்கு வாழ்வு அளிக்கத்தான் சபையை வாங்கி பொறுப்புகளை திரு. எஸ்.வி. சகஸ்ர நாமம் அவர்களிடம் ஒப்படைத்தார். (அப்போது மவுண்ட் ரோட்டிலுள்ள சுகுணவிலாஸ் தியேட்டரில் எங்கள் கம்பெனி ''திருமழிசை ஆழ்வார்'' நாடகம் நூறு நாட்களைத் தாண்டி நடை பெறுகிறது.)

என்.எஸ்.கே. நாடக சபை நன்கு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் லட்சுமி காந்தன் கொலை வழக்கில் கலைவாணர் அவர்கள் தண்டனை பெற்று சிறை சென்ருர். பின், என்.எஸ்.கே. குழுவில் சலசலப்புத் தோன்றி நாடகக் கம்பெனி இரண்டாக பிரிந்தது. ''கிருஷ்ணன் நாடக சபா'' தஞ்சையில் உதயமாயிற்று.

என்.எஸ்.கே. குழுவில் நடித்துக் கொண்டிருந்த முக்கிய நடிகர்கள், கே.ஆர்.ஆர். துவக்கிய கிருஷ்ணன் நாடக சபா வில் நடிக்க வந்து விட்டார்கள். திரு. பி.டி. சம்பந்தம், எம்.எஸ்.முத்துக் கிருஷ்ணன், நடிகர் திலகம் சிவாஜி கணே சன், காக்கா ராதா கிருஷ்ணன், இலட்சிய நடிகர் எஸ்.எஸ். இராஜேந்திரன், டி.வி. நாராயணசாமி, ஆர்.எம். வீரப்பன் (முன்ஞள் அமைச்சர்) கே.பி. காமாட்சி, தட்சணு மூர்த்தி, டி.என். கிருஷ்ணன், இராமகிருஷ்ணன், மற்றும் பலர் இதில் அடங்குவர்.

என்.எஸ்.கே. நாடக சபாவில் டி.கே. ராமச்சந்திரன், வி.கே. ராமசாமி, புளிமூட்டை ராமசாமி போன்ற நடிகர் களை வைத்துக் கொண்டு நாடகங்களை நடத்திவந்தார், எஸ்.வி.எஸ்.. அவர்கள். நாடகம் நடத்துவதை விட சிறையி லிருக்கும் கலைவாணர் அவர்களை வெளியில் கொண்டுவரு வதற்கு டி.ஏ. மதுரத்தம்மாளும், திரு எஸ்.வி.எஸ். அவர் களும் தூக்கமில்லாது விடா முயற்சியால் பணத்தட்டுப் பாடுகளை, சமாளித்து தன் சொந்த வீட்டை அடமானம்

வைத்து வி.எல். எத்திராஜ், கே.எம். முன்ஷி போன்ற வழக்கறிஞர்களின் இரவு பகல் பாராத கடின உழைப்பால், கலைவாணர் அவர்களும், எம்.கே. தியாகராஜ பாகவதர் அவர்களும் விடுதலை ஆனார்கள்!

விடுதலை அடைந்த திரு. என்.எஸ்.கே. அவர்கள் எஸ். வி.எஸ். அடமானம் வைத்த வீட்டை முதலில் பணத்தை கட்டி அதை மீட்டு அவரிடம் ஒப்படைத்தார்.

1952 ஆம் ஆண்டில் ''சேவா ஸ்டேஜ்'' நாடகக் குழுவை துவக்கினர். அதில் பங்குகொண்டவர்கள்: நடிகர் திலகம் டாக்டர் சிவாஜி கணேசன், பண்டரிபாய், ஆர். முத்து ராமன், மைனவதி, தேவிகா, விஜயன் (இயக்குனர்) ஜெயராமன், வீராச்சாமி, முருகன், எஸ்.எஸ். மணி நாதன், காந்திமதி. (சேவா ஸ்டேஜில் முக்கியப் பங்கு கொண்டிருந்தார் திரு. கோமல் சுவாமிநாதன் அவர்களும்).

நேரத்தை அனுவசியமாக வீணக்கமாட்டார். சகல கலா வல்லவர். பட்டங்களையும் பரிசுகளையும் பெற்றதுடன் அறிஞர்களிடமும் தேசிய தலைவர்களிடமும் அதிக தொடர்பு கொண்டவர் திரு. கலைமாமணி எஸ்.வி. சகஸ்ரநாமம் அவர்கள்.



**சதாவதானம் தெ. பொ. கிருஷ்ணசாமி பாவலர்**

செங்கை மாவட்டத்தில் பிறந்து வளர்ந்து 20, 21 வயதில் தமிழில் புலமையும் ஆங்கில அறிவும் அதிகம் பெற்று சதாவதானம் செய்து பல பட்டங்களையும் பரிசுகளை யும் பெற்றதுடன் கற்ற புலமையால் தினசரி ஏடுகளை நடத்தி, தேசீய போராட்டங்களில் பங்கு கொண்டு சிறை சென்று தியாகி பட்டியலில் இடமும் பெற்றுள்ளார்.

சமூகத்தில் நடக்கும் அநீதிகளையும் அக்கிரமங்களையும் மையமாக வைத்து சீர்திருத்தக் கருத்துக்களுடன் பல நாடகங்களை எழுதி மேடையில் அரங்கேற்றம் செய்துள்ளார். குறிப்பாக எம்.ஆர். ராதா அவர்கள், எம்.எம். சிதம்பர நாதன் போன்றவர்கள் தெ.பொ.வின் மாணவர்கள். தமிழ் நாடகங்களை தயாரித்து ஆங்கிலேயர்கள் பார்க்க சந்தர்ப் பங்களை எதிர் நோக்கிக் கொண்டிருந்தார். லண்டனில் நடக்கும் பொருட்காட்சியில் அந்த வாய்ப்பு கிடைத்தது. ''கதரின் வெற்றி'' ''தேசீயக் கொடி'' இரு நாடகங்களை நடத்தி தமிழன் பெருமையை உயர்த்தியுள்ளார். நாடக கம்பெனி நடத்தி எண்ணற்ற நடிகர்களை உற்பத்தி செய்துள்ளார். அவர் மறைந்தாலும் கலை உலகம் அவரை மறக்கவில்லை. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் இவருடைய கலைச் சேவையை பாராட்டி திருஉருவப் படத்தை திறந்து வைத்துள்ளது.



## "வைரம்" அருணசலம் செட்டியார்

(அதிபர்: ஸ்ரீராம பால கான விநோத சங்கீத சபா.)

செட்டிநாட்டிற்கும், காரைக்குடிக்கும் இடையிலுள்ள சிற்றூர்தான் பள்ளத்தூர். அங்கு தனவந்தர் குடும்பத்தில் 1904 ஆம் ஆண்டு பிறந்து வளர்ந்து ஏட்டுப் பள்ளியில் தமிழை கற்றறிந்தவர் 'வைரம்' அருணாசலம் செட்டியார்

தந்தையின் வழியில் வியாபாரத்தில் ஈடுபட்டு நாளடைவில் வைர வியாபாரம் செய்யத் தொடங்கினர். வியாபாரம் செய்து கொண்டிருக்கும்போதே கலை ஆர்வங் கொண்டு நாட்டியம், நாடகம், சங்கீதம் போன்றவைகளை ரசித்து வந்தார்.

காரைக்குடியில் மிகப் பழமையான நாடகக் கொட்டகை ஸ்ரீஷண்முக விலாஸ் தியேட்டர். இதன் உரிமையாளர் ''பங்களா சின்னையா அய்யர் அவர்கள்'. அந்த நாளில் இசைக் கலைஞர்கள், நாட்டியக் கலைஞர்கள் கதாகாலஷேப விற்பன்னர்கள், நாடகக் கலைஞர்கள் காரைக்குடி வந்தால் சின்னையா அய்யர் பங்களாவில் தான் தங்குவார்கள்!

ஒரு சமயம் செட்டியார் அவர்களுக்கு காரைக்குடி ஷண்முகவிலாஸ் தியேட்டரில், எஸ்.ஜி.கிட்டப்பா, கே.பி. சுந்தராம்பாள் நாடகத்திற்கு டிக்கட் கிடைக்கவில்லை. மறுவாரம் அந்த தியேட்டரையே விலைக்கு வாங்கி விட்டார் செட்டியார் அவர்கள். கலை ஆர்வம் அப்படி!

1941-42 ஆம் ஆண்டுகளில் யுத்த நிதி கொடுப்பதற்காக தன் தியேட்டரில் கணக்குப் பிள்ளையாக வேலைபார்த்து வந்த, நாஞ்சில் டி.என். ராஜப்பா அவர்களைக் கொண்டு ''தாகசாந்தி'' என்னும் நாடகத்தை நடத்தி இரண்டு லட்ச ரூபாய் நிதி திரட்டி, சென்னை கவர்னர் சர். ஆர்தர் ஹோப்பிடம் காசோலையாக வழங்கினார்! அந்த நாடகத்திலே நான் நகைச்சுவைப் பாத்திரம் ஏற்று நடித்தேன்.

''தாக சாந்தி'' நாடகத்திற்கு மக்களின் ஆதரவு பெருகியதன் விளைவாக ''ஸ்ரீராம பால கான வினோத சங்கீத சபா'' என்ற நாடக கம்பெனி துவக்கப்பட்டது. முதல் வாத்தியார், காலம் சென்ற எஸ்.வி. சுப்பையா அவர்கள்.

திரு. கன்னையா, நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை, டி.கே. எஸ்.சகோதரர்கள், இவர்களைப்போல் நாடக உலகில் தம் கம்பெனியும் திகழவேண்டுமென்று சொந்தப் பணத்தை வாரி வாரி இறைத்து நாடகக் கம்பெனியின் அந்தஸ்தைப் பெருக்கினார். குறிப்பாக மற்ற கம்பெனியில் போட்ட நாடகங்களை இவர் போட்டதில்லை. இக்குழுவில் பங்கேற்ற தொழில் விற்பன்னர்களும், கலைஞர்களும் வருமாறு: குருசாமி அய்யர், கரும்பையய்ங்கார், வீரப்பச் செட்டியார் டி.என். ராஜப்பா, நான்கு ஆசிரியர்கள், சிங்காரம் பிள்ளை, வெங்கடாசல ஆசாரி (கன்னையா கம்பெனி மேஸ்திரி) கோவிந்தன், பழனி, ஆர்.எம்.வி. யின் தமையனார், டெக்னிக் அட்வைசர்; திரு. விஸ்வேஸ்வரன், மற்றும் நடிகர்கள், கலைமாமணி கே.ஆர். ராம்சிங், கலைமாமணி எம்.கே. முஸ்தபா, கலைமாமணி எம்.எஸ்.விஸ்வநாதன் (இசையமைப்பாளர்) கலைமாமணி ஆர். முத்துராமன், கலைமாமணி எஸ்.எம். ராமனாதன், கலைமாமணி என்னத்தே கன்னையா, கலைமாமணி அழகப்பன், கலைமாமணி குஞ்சிதபாதம், கலைமாமணி (சட்டாம் பிள்ளை,) கே.என். வெங்கட்ராமன், கலைமாமணி குலதெய்வம் ராஜகோபால், கலைமாமணி ஷண்முகசுந்தரி, கலைமாமணி யோகவதி, (வைரத்தின் சார்பில்) கலைமாமணி மனோரமா, கலைமாமணி கவிஞர் வாலி, பெரியவர் கிருஷ்ணமூர்த்தி அய்யர், எஸ்.எஸ். மணிநாதன், எஸ்.வி. ஷண்முகம், கே. சாயிராமன், சந்திரஹாசன், ஏ.எல்.ராகவன், (இயக்குனர்) ராகவன் கே.டி. ராஜ கோபால், சம்பந்தன், செல்லப்பா, கரளை சுப்பையா, இராமகிருஷ்ணன், சதா, நாராயண அய்யர், மணிவண்ணன், டி.கே. கபாலி, குமரப்பா, தங்கவேலு, சொர்ணப்பா, ஏகாம்பரம், வள்ளியூர் முத்து, மோஹன் ராவ்,

ஆறுமுகம், (இந்த இருவரும் பெண்வேடமணிந்து கம்பெனிக்கு தூணாகத்திகழ்ந்தார்கள்) நடிகைகள்: எம்.எஸ். பாக்கியம், முத்துலட்சுமி, ஜி. ரத்தினமாலா, பார்வதி, சொக்கம்மாள், சுலோச்சனா (ஆர். முத்துராமனின் மனைவி) தடிச்சுப்பு, தேனாம்பேட்டை சுப்புலட்சுமி, நீலாம்பாள் சக்கு, மற்றும், ஹரிஹர அய்யர். ராமாச்சாரி, (ஆர்மோனியம்). நடிக்கப்பட்ட நாடகங்கள் ''தாகசாந்தி'' ''குடும்ப வாழ்க்கை'' சாருகதாசர், செயின்ட் பிலோமினாள், விஜய நகர சாம் ராஜ்யம், திருமழிசை ஆழ்வார், எதிர்பார்த்தது, ராணி, 'யார் விதவை?'' வைரம் அருணாசலம் செட்டியார் அவர்கள் நாடக வரலாற்றில் தனக்கென்று ஒரு சரித்திரம் படைத்துவிட்டு பள்ளத்தூரில் மாரடைப்பால் இறைவனடி சேர்ந்தார். செட்டியாரின் கலை உலகசேவையைப் பாராட்டி அவரது திரு உருவப் படம் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.



**திரு. கே. பி. கேசவன்**

1904 ஆம் ஆண்டு ஏப்ரல் 2 ம் தேதி ஒலவக் கோடு சமீபத்தில் கல்லேக்குளத்தில் பிறந்தார் கேசவன். இளமை யில் சங்கீதம் பயின்ருர். 1918 ல் அல்லிபரமேஸ்வர அய்யர், வள்ளி வைத்திஞதைய்யர் அவர்களின் கம்பெனி யில் சேர்ந்து நடிப்பு கலேயை கற்றுணர்ந்து 1921 ஆம் ஆண்டு மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் கதா நாயகன் வேடங்களே ஏற்று கம்பெனியில் முக்கிய நடிகராகத் திகழ்ந்தார்.

நாடகத்தின் வாயிலாக, திரைப்படங்களில் நடித்து புகழ் பெற்ருர். 'பதிபக்தி', ''இரு சகோதரர்கள்'' ''பம்பாய் மெயில்'' போன்ற படங்கள் குறிப்பிடத்தக்கவை.

திரு. அமிர்தலிங்கம் பிள்ளே அவர்களின் நாடக கம் பெனி நாகபட்டணத்தில் மூடப்பட்டவுடன் திரு. கே.பி. கேசவன் அவர்கள் சென்னேயில் திரு.எம்.ஜி.ஆர். அற வணேப்பில் சிறிது காலம் தங்கி இருந்து பின், உடல் நிலே பாதிக்கப்பட்டதும், தமது சொந்த ஊருக்கு சென்று இறை வனடி சேர்ந்தார். கலேயுலகில் அவரின் சேவையைப் போற்றி பாராட்டி அவரது உருவப்படத்தை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் திறந்து வைத்துள்ளது.



**காவிரி என். ரத்தினம்**

**த**ஞ்சை மாவட்டத்திலுள்ள மலையப்ப நல்லூரில் ராமசாமி படையாச்சி அவர்களுக்கு மகனாக பிறந்தார். 1911ல் தாப்பா வெங்கடாசல பாகவதர் அவர்கள் ஆரம்பித்த பாய்ஸ் கம்பெனியில் சேர்ந்தார்.

(தென்னகத்தை பொறுத்த வரையில் திரு. ராஜப்பா கவிராயர் அவர்கள் பள்ளு, குரவஞ்சி முதலியவைகளை தொகுத்து இசை நாடகமாகநடத்த பாடுபட்டார். இது, 15 ஆம் நூற்றாண்டில்! 17, 18 ஆம் நூற்றாண்டில் அருணாசல கவிராயர் அவர்கள் ''இராம நாடக''த்தை எழுதி வழங்கினார். அதன்பின் 19 ஆம் நூற்றாண்டில், மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை, ஏகை சிவ ஷண்முகம் பிள்ளை, சூர்ய நாராயண சாஸ்த்திரி, தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள், முத்துச்சாமி கவிராயர், சம்பந்த முதலியார், தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலர், கந்தசாமி முதலியார், சங்கரலிங்க கவிராயர் ஆகியோர் நாடகக் கலையை வளர்க்கப் பாடு பட்டவர்கள்!

இவர்கள் காலத்தில்தான் நாடகக்கலை வளரத் தொடங்கியது. சங்கீத நாடகம், வசன நாடகமாக மாறியது! இதில் முக்கியமாக, ஸ்பெஷல் நாடகக்காரர்கள்தான் இசையை முக்கியமாகக் கொண்டு நாடகங்களை நடத்தி வந்தார்கள்.

இடையில், பார்ஸி கம்பெனி வந்து காட்சி ஜோடனையுடன் நாடகங்களை நடத்தினார்கள்.)

முதல் பாய்ஸ் கம்பெனி தாப்பா வெங்கடாசல பாகவதர் கம்பெனிதான்! ''லலிதாங்கி'' என்ற நாடகம் கும்ப கோணத்தில் ஒரு தனவந்தர் வீட்டு சடங்கில்தான் அறங் கேற்றம் செய்யப்பட்டது! சிறிது நாள் சென்று மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் சேர்ந்தார், திரு. காளி என். ரத்தினம் அவர்கள்.

மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் வாத்தியார் ஸ்தானத்தில் இருந்தவர்கள் பலர். அதில் திரு. டி.சி. வடி வேலு நாயக்கர், கந்தசாமி முதலியார் ஆகியோர் முக்கிய மானவர்கள்.

திரைப்படங்களிலும் நடித்து தனக்கென்று ஒரு தனிப் பாணியை அமைத்துக் கொண்டு மக்களின் அன்பைப் பெற்ற நகைச்சுவை நடிகராக திகழ்ந்தார்!

திரு. காளி என் ரத்தினம் அவர்களிடம் கலைவாணர் மிக மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார். ''வாயாடி போலிப் பாஞ்சாலி'' என்ற படத்தின் மூலமாக, திரு. காளி என். ரத்தினம் அவர்களை நான் அறிவேன்.

திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களின் மறைவுக்கு பின் அவருடைய மருமகன், திரு. அமிர்தலிங்கம் பிள்ளை அவர்கள் மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியை நடத்தி வந்தார். பழைய நடிகர்களும் நடித்து வந்தார்கள். சில நடிகர்கள் திரைப் படத்தில் நடிக்கச் சென்றுவிட்டார்கள். அந்த நடிகர்களும் அவ்வப்போது வந்து நடிப்பார்கள். ஒரு கடமையாக கருதி திரு. காளி என். ரத்தினம் அவர் களும் வந்து ஊதியம் எதுவும் வாங்காமல் நடிப்பாராம்!

கலை உலகில் பெரும்புகழை அடைந்து நோயினால் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாய் இருந்த இவரது ஆவி பிரிந்தது. அன்னாருடைய சேவையை பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் இவருடைய திரு உருவப் படத்தை திறந்து வைத்துள்ளது!

———*———



**டி.கே.எஸ். சகோதரர்கள்**

திரு. டி.எஸ்.கண்ணுச்சாமி பிள்ளை திருமதி சீதையம்மாளுக்கு பிறந்த மகன்கள்தான் திரு. தி.க. சங்கரன், தி.க. முத்துச்சாமி, தி.க. ஷண்முகம், தி.க. பகவதி; ஒரு சகோதரியும் உண்டு.

இந்த நால்வரையும் மிகவும் சிரமத்திற்கிடையில் நாடக சம்பளத்தில் படிக்க வைத்து வளர்த்து நாடக உலகிற்கு அர்பணித்துள்ளார்கள். திரு. ஷண்முகம் அவர்கள் ''எனது நாடக வாழ்கை'' என்ற நூலில் விவரமாக எழுதிவிட்ட படியால் அவர்களுடைய வரலாற்றை நான் எழுத முற்படவில்லை. இவர்கள் கம்பெனியிலிருந்தவர்களையும் பயின்றவர்களையும், கலைஉலகிற்கு இவர்களின் சாதனைகளைப் பற்றியும் எழுதுவது எனது கடமை ஆகும்.

திரு. தி.க. சங்கரன் அவர்கள் நாடக கம்பெனியை நிர்வகிப்பதில் திறமையுடையவர் என்பது, குழுவை நடத்தியதிலிருந்தே தெரியவருகிறது. திரு. முத்துச்சாமி குறிப்பாக பெண்வேடம் தாங்கி நடிப்பதில் பெண்ணாகவே மாறிவிடுவார். திரு. தி.க. ஷண்முகம், ஆணுக்கு ஆண்! பெண்ணுக்குப் பெண், கிழவிக்குக் கிழவி, திருடனுக்குத் திருடன் ராஜாவுக்கு ராஜாவாக மாறி நடிப்பதில் சாதனை புரிந்துள்ளார்! இதே போல் திரு பகவதியும்.

திரு. தி.க. ஷண்முக அண்ணச்சியுடன் அதிகம் தொடர்பு கொண்டவன் நான். எந்தவித கெட்ட பழக்கமும் இல்லாத ஒரு சிறந்த நடிகர். கலைமாமணி விருது, பத்மஸ்ரீ, எம். எல்.சி. இப்படி பல விருதுகளைப் பெற்றவர். மேலும், அவருடைய பெயரால், ஔவை. தி.க. ஷண்முகம் சாலை என்றும் பெயரிட்டு மரியாதை செய்துள்ளனர்.

திரு எம்,ஆர். சுவாமிநாதன், கலைவாணர், கே.ஆர் ராமசாமி, பிரண்ட் ராமசாமி, டி.என். சிவதாணு, எஸ்.எஸ் இராஜேந்திரன். டி.வி. நாராயணசாமி, நாராயண பிள்ளை, திரு. டி.வி. வேதமூர்த்தி, கே.ஆர். சீத்தாராமன், முன்னாள் அமைச்சர் திரு ஆர்.எம்.வீரப்பன், திரு எஸ்.வி.சகஸ்ரநாமம், புளிமூட்டை ராமசாமி, வளையாபதி முத்து கிருஷ்ணன், டி.டி. சீனுவாசன், அப்பா வெங்கடாசலம், குண்டு கருப் பைய்யா, திரு. எஸ்.வி. சுப்பையா, திரு. டி.கே.எஸ். கருப் பைய்யா, டி.என்.கிருஷ்ணன், சொக்கலிங்கம், இராம கிருஷ் ணன், என். ஆர். ராமலிங்கம், ஆர்.ஆர். திவாகர், தில்ரூபா ஷண்முகம், டி.கே.எஸ். சந்திரன், தட்சிணாமூர்த்தி, டி.என். கருணாகரன், நடிகவேள் இராதா அவர்கள், இன்னும் பலர் குழுவில் இருந்து வளர்ந்தார்கள். திரௌபதி, கல்யாணி ராமசாமி, எம்.என். ராஜம், ராகவன், ஹேமலதா போன்ற வர்களும், டி.கே. எஸ். குழுவிலிருந்து தங்களுக்கென்று முத்திரை பதித்தவர்கள். டி.கே.எஸ். நாடகக் குழுவின் பல நாடகங்களை நான் கண்டு களித்துள்ளேன்.

டி.கே.எஸ். சகோதரர்கள் நாடக உலகிற்கு பெரும் தொண்டினை செய்து வரலாற்றில் இடம் பெற்று, இறை வனடி சேர்ந்தார்கள். இவர்களின் சேவையை பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் இவர்களின் உருவப் படங்களை திறந்துவைத்துள்ளது.



**கே. எஸ். அனந்த நாராயணன்**

திரு. சுவாமி நாத அய்யர் அவர்களுக்கும், பர்வதம் மாளுக்கும் மகன்களாக புதுக்கோட்டையில், 1889ல் திரு. கே. எஸ் செல்லப்பா அவர்களும், 1890ல் திரு. கே. எஸ். அனந்த நாராயணனும் பிறந்தார்கள். இரு வரும் 9, 10 வது வயதில் ரங்கசாமி அய்யங்கார் நாடக குழுவில் சேர்ந்து பாடி நடிக்க ஆரம்பித்தார்கள். நடிப்பிலும் பாடுவதிலும் தேர்ச்சி பெற்று, 1910 ல், ஆரியகான சபையை துவக்கினர்கள். இந்தக் கம்பெனியின் ஆசிரியர், திரு. சரபகவி உடுமலை முத்துச்சாமிக் கவிராயர் அவர்கள். (கவிராயர் அவர்களைப் பற்றியும் கூறுவது நலம் என்று எண்ணுகிறேன். இவருடைய தாய் மொழி தெலுங்கு. சிறுவயதிலேயே தமிழ், ஆங்கிலம் கற்று தேர்ச்சி பெற்று ஐம்பெருங் காப்பியங்களை படித்து கவிதைத் துறையிலும் கலைத்துறையிலும் தமக்கு நிகர் தாமே என்று விளங்கினர். அத்துடன் புதிய சந்தங்களோடு வண்ணம், ஓரடி, காவடிச் சிந்து, வெண்பா, அறுசீர், எண்சீர் விருத்தம், ஆகியவை களை புதிய பாணியில் எழுதினர். கவிராயரிடம் மாணுக்க ராகவும் நண்பர்களாகவுமிருந்தவர்கள் ஆரம்பித்ததே ''ஆரிய கான நாடக சபா'' கவிராயரின் மாணுக்கர்களின் பட்டியல் வருமாறு:-

குடந்தை திரு. சந்தான கிருஷ்ணநாயுடு, கே.எஸ்.செல் லப்பா, அனந்த நாராயணன், முத்துச்சாமி, பட்டுக் கோட்டை நாராயணராவ், சின்ன கோபால்ராவ், பெரிய

சாமா அய்யர், சின்ன சாமா அய்யர், திருநாகேஸ்வரம் ராமசாமி பாகவதர், சூரி ஜெகதீசன், ஜாலிகிட்டு அய்யர் நெல்லை சூர்ய நாராயண பாகவதர், பமூன் குப்புசாமி சாஸ்திரிகள், எல். நாராயணராவ், நாஞ்சில் ராமசாமிப் பிள்ளை, தென்காசி ஆவுடையாப்பிள்ளை. பாடலாசிரியர்கள் பட்டியல்:

திரு. பூமிபாலகதாஸ், கோவை முத்துலிங்கக் கவிராயர், திருப்பூர் ரங்க சாமிதாஸ், பொள்ளாச்சி பிருத்விசிங், திண்டுக்கல் சுப்பையா செட்டியார், சென்னை சா.சு. சங்கரலிங்கக் கவிராயர், உடுமலை நாராயண கவிராயர் ஆகியோர்!

ஆரிய கான நாடக சபைக்கு முதல் ஆசிரியர் திரு. சந்தான கிருஷ்ண நாயுடு. அதன்பின், முத்துச்சாமி கவிராயர். இடையில், நாடகங்களை எழுதிக் கொடுப்பதற்காக தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் அடிக்கடி வருவார். திரு. சுவாமிகளும், கவிராயரும் ஆப்த நண்பர்கள். கவிராயர் இருக்கும் போதே சுவாமிகள் காலமாகிவிட்டார்.)

அண்ணன் தம்பிகளுக்குள் பிளவு ஏற்பட்டு திரு. கே.எஸ்.அனந்த நாராயண அய்யர் அவர்கள் கன்னையா கம்பெனியில் சேர்ந்து திரு. கிட்டப்பா அவர்களுடனும், வி.ஏ. செல்லப்பாவுடனும் இன்னும் பலருடனும் நடித்தார். (குறிப்பாக பெண் வேடம்). சிறிது நாள் சென்று கன்னையா கம்பெனியை விட்டுவிலகி பி.எஸ். வேலுநாயருடன் ஸ்பெஷல் நாடகங்களில் நடித்தார். அண்ணன் தம்பிகள் சண்டை நீதிமன்றம் வரை சென்றது.

திரு. அனந்த நாராயண அய்யரின் உடல் நிலை பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாக இருந்தார் நண்பர் இல்லத்தில். 'பெற்றமனம் பித்து பிள்ளை மனம் **கல்லு**' என்ற பழமொழிப்படி, தாயார் பர்வதம்மாள், தன் மூத்தமகன் கே.எஸ்.செல்லப்பாவிடம், 'இளையமகன் அனந்தன் நோயினால் கஷ்டப்படுகிறான். ஏண்டா சண்டை?? என்னடா நீதிமன்றம்? உடனே போய் உன் தம்பியை பார்த்து வீட்டில் வைத்து வைத்தியம் செய் போ!'' என்று அன்புக் கட்டளையிட்டு அழுதுபுலம்பினார்கள்.

தாயார் அழுததைப் பார்த்த திரு செல்லப்பா அய்யர் அவர்கள், தம்பி இருக்குமிடம் சென்று தம்பி அனந்த நாராயண அய்யரை வீட்டிற்கு அழைத்து வந்து வைத்திய

சோதனைகளைச் செய்தார். ஆனால் பலன் இல்லை. 1924ல் இறைவனடி சேர்ந்தார். இறுதிக் காரியங்களை அண்ணனே முன் நின்று செய்தார். திரு. அனந்த நாராயண அய்யர் அவர்கள் நினைவு இழந்த நிலையிலிருக்கும் போதே திரு. செல்லப்பா அவர்கள் நீதி மன்றத்திலிருந்த வழக்கை திரும்பப் பெற்றுக் கொண்டார்.

திரு. செல்லப்பா அவர்களின் குடும்பம் திருச்சியில் உள்ளது. அவரது மகனிடம் அய்யரின் பரிசுகளையும் பதக்கங்களையும் உடைகளையும் சிவகெங்கை மன்னர் கொடுத்த விஷவாள் ஒன்றையும் நான் பார்த்து அசந்து விட்டேன். நாடகப் பொருளை வீட்டில் காட்சிப் பொருளாக வைத்திருக்கிறார்கள். திரு. செல்லப்பா அவர்களுக்கு லைசன்ஸ் பெற்றுள்ள துப்பாக்கியும் இருந்ததாக கூறினார் மகன். அன்று அவர்கள் நாடகக் கலைக்காக போட்ட அஸ்திவாரம் தான் நாடகக்கலை வான்முட்ட வளர்ந்துள்ளது என்று சொன்னால் மிகையாகாது.

❋❋❋❋❋



**சந்திரபாபு**

ஒரு நாள் காலை பல நண்பர்கள் வெளியூரிலிருந்து வந்து 'சந்திரபாபுவை பார்க்க வேண்டும்' என்று கேட்டார்கள்.

தயக்கத்துடன் அவர்களுடன் புறப்பட்டு சந்திரபாபு வீட்டிற்கு சென்றோம். கீழே நம்பிராஜன் (நடிகர்) நின்று கொண்டு இருந்தார். ''என்ன மாப்பிள்ளை எங்க வந்தே'' என்று கேட்டார். 'பாபுவை பார்க்க வேண்டும்' என்று சொன்னேன். 'சரி இரு வருகிறேன்' என்று சொல்லி மாடிக்கு சென்று திரும்பி வந்தார்.

பாபு 'உங்களை மாடிக்கு வரச் சொன்னார்' என்றும் பத்து நிமிடம் பேசுவதற்கு அனுமதி அளித்தார் என்றும் நடிகர் கே.என். நம்பிராஜன் சொன்னார்.

நானும் நண்பர்களும் மாடி சென்று சோபாவில் உட்கார்ந்திருந்தோம். ''என்ன விஷயம் வெங்கட்ராமன்'' என்று கேட்டுக் கொண்டு பாபு வந்தார். ''நண்பர்கள் உங்களை பார்க்க விரும்பினார்கள், அவர்களை கூட்டிவந்தேன்'' என்று சொன்னேன்.

காபி கொண்டு வந்து கொடுக்கச் சொன்னார். காபியும் வந்தது. சாப்பிட்டோம். என் எதிரில் ஒரு ஏசுநாதரின் படம் மாட்டப்பட்டு இருந்தது. அதை உற்று நோக்கினேன்.

மலையிலிருந்து இறங்கி வரும்போது திரளா ஜனங்களுக்கு மத்தியில் இரண்டு அப்பங்களையும் மீன்களையும்

கொடுத்து காப்பேன் என்று சொல்வது போல் இருந்தது அந்தப்படம்.

அந்த அறை மேலே நாட்டுப் பாணியில் அமைக்கப்பட்டு இருந்தது. ஆங்கிலப் பாடல் ரேடியோ கிராமில் ஒலித்துக் கொண்டு இருந்தது. அதனுடன் பாபுவும் சேர்ந்து பாடிய வண்ணம் இருந்தார். அவர் கொடுத்த பத்து நிமிஷம் தாண்டி விட்டது. நான் பாபுவை பார்த்த வண்ணம் இருந்தேன். பழைய நினைவுகள் என் கண் முன் வந்து நின்றன.

சுகுண விலாஸ் சபாவில் (மவுண்ட் ரோட்டில்) எங்கள் நாடக கம்பெனி அப்போது நடைபெற்றுக் கொண்டு இருந்தது. பாபு நாடகம் பார்க்க அடிக்கடி வருவார். நாங்கள் இருவரும் நண்பர்களாக பழகி வந்தோம். ஆங்கிலப் படங்களுக்கு பகல் காட்சிக்கு கூட்டிச் செல்வார்.

பால்முனி 'லாரன்ஸ்' ஒலிவியர், 'ருனுல்ட்கால்மென்', எட்வட்ஜி ராபின்சன், பிரடிரிக் மார்ச், கிளார்க்கேபிள் போன்ற ஆங்கில நடிகர்கள் எப்படி நடிப்பார்கள் எப்படி பேசுவார்கள் என்பதை என்னிடம் நடித்துக் காட்டுவார்.

அவருடைய நடிப்பை பார்த்து நான் வியப்புற்றது உண்டு. நான் நாடக கம்பெனியில் இருக்கும்போது தாய் தந்தையருடன் திருவல்லிக்கேணி ஹைரோடில் வசித்து வந்தேன். அதே வீதியில்தான் ஸ்டார் டாக்கீஸ் சமீபத்தில் சந்திரபாபு வசித்துவந்தார்.

திருவல்லிக்கேணி ஹைரோட்டில் உள்ள ஒரு முஸ்லீம் நண்பர் கடையில் தான் பாபு எப்போதும் இருப்பார். அங்குதான் நாடகம் முடிந்து சந்திப்பது வழக்கம். அந்த முஸ்லீம் நண்பர் இவருக்குப் பல உதவிகள் செய்து இருக்கிறுர். மவுண்ட்ரோட்டில் உள்ள எம்.என்.சன்ஸ் பேக்கிரி நண்பர் குபா, எனக்குப் பல உதவிகள் செய்து வந்தார்.

அப்போது சந்திர பாபு 'தன அமராவதி' என்ற படத்தில் நடித்துக் கொண்டு இருக்கிறுர்.

இயக்குனர், திரு.கே. சுப்பிரமணியம் நடத்திக்கொண்டு இருந்த 'கலைவாணியில்' மாத சம்பளத்திற்கு சேரப்போவதாக பாபு சொன்னுர்.

லஸ்ஸிலிருந்த நவசக்தி பத்திரிகை ஆபீஸில்தான் அப்போது கலைவாணி பிக்சர் இருந்தது.

அங்கு வழுவூர் ராமையா பிள்ளை, போலோநாத், கோபிநாத்தங்கமணி, குல்கர்ணி, மாதவன் போன்ற மா மேதைகள் மாத சம்பளத்திற்கு நாட்டிய பயிற்சி அளித்துக் கொண்டு இருந்தார்கள்.

நாட்டியத்தில் பாபுவும் பங்கு கொண்டார். அங்கிருந்த போது பல படங்களில் வாய்ப்பு கிடைத்தது. நகைச்சுவை நடிகராக ரசிகர்களில் நன்மதிப்பை பெற்று புகழ் ஏணியில் ஏறி ஒன்றரை லட்ச ரூபாய் வரை ஊதியம் வாங்கினர். பிறகு ஒரு ஆங்கில மாதுவை கிருஸ்துவ முறைப்படி மணந்து கொண்டார். மணம்முடித்து பதினேந்தாம் நாள் இருவருக்கும் கருத்து வேறுபாடு வந்தது. இருவரும் பிரிந்து வாழ்ந்தார்கள். இவர்களை இணைக்க திரு. கே.சுப்பிரமணியம் அவர்கள் பெரும்பாடு பட்டார்கள். முடிவில் தோல்வியைத்தான் கண்டார்.

தண்டிலிருந்து பூ பிரிந்து போகலாம், 'செடியிலிருந்து காய் பிரிந்து போகலாம்'' வேறில் இருந்து பழுத்த பலா பிரிந்து போகலாம், என்ன கஷ்டங்கள் வந்தாலும் சரி, ஆசையாக பிரியமுடன் வந்த மனைவியை விட்டு ஒரு நாளும் பிரியக்கூடாது. இது சான்றோர் வாக்கு. மனைவியை விவாகரத்து செய்த பிறகு அவருக்கு நேரமும் சரி இல்லை.

கடன்வாங்கி கிரீன்வேஸ் சாலையில், கார் மாடி வரை செல்ல ஒரு மாடல் பங்களா கட்டினர். (அது இன்று வரை முடியவில்லை) அவருடைய மார்க்கெட் மங்க ஆரம்பித்தது. கஷ்டங்கள் தொடர்கதை போல் வளர்ந்தன.

பீமண்ண கார்டனில் குடி இருந்ததை காலி செய்து சீத்தம்மா காலனிக்கு குடி புகுந்தார். மேலும் கஷ்டங்கள் படர ஆரம்பித்தன. நண்பர்கள் விலக ஆரம்பித்தார்கள். அண்ணன், தங்கை, சுற்றத்தார்கள் வருவதை நிறுத்திக் கொண்டார்கள்.

அவர் புகழ் ஏணியில் இருக்கும் போது ஓரிரு முறை சந்தித்திருக்கிறேன். ஒரு நாள் ஏ.பி. என். தியேட்டருக்கு டப்பிங் (குரல்) கொடுக்கப் போயிருந்தேன். அங்கு பாபு வந்தார் என்னை கண்டதும் கட்டி அணைத்து ''வாடா நம்ம வீட்டுக்கு போகலாம்'' என்று கூப்பிட்டார்.

10 மணி அளவில் வருவதாக சொல்லி டப்பிங்கை முடித்து அவர் வீடு சென்றேன். அவர் வீட்டை பார்த்து

வருத்தப் பட்டேன். ரேடியோ கிராமை காணேம் பிரிஜ்ஜைக் காணேம். காரைக் காணேம். சமையல்காரனைக் காணேம். பாபுவே உள்ளே சென்று டீ போட்டுக்கொண்டு வந்து கொடுத்தார்.

''இன்று இரவு இங்கே தங்கு. உன்னிடம் மனம் விட்டு பேசி அதிகநாள் ஆகிவிட்டது.'' என்றார். நானும் அன்று அவருடன் தங்கினேன். ''தட்டுங்கள் திறக்கப்படும்'' என்ற படம் எடுத்து வெளியிட்டேன். பரவாயில்லை! மேலும் படம் எடுக்க முயற்சிகள் செய்தேன், முடியவில்லை. இப் போதெல்லாம் முதலாளிகள் என்னை கண்டு பயப்பட ஆரம் பித்து விட்டார்கள். நான் என்ன புலியா? சிங்கமா? உடல் நிலையும் சரியில்லை''...திடீர் என்று பாதிரியாரைப் போல் பேச ஆரம்பித்து விட்டார். அன்றுஇரவு பூராவும் பேசி தீர்த்தோம். மறுநாள் காலை பாபுவுக்கு ஆறுதல் சொல்லி விடை பெற்றுக் கொண்டேன்.

10 நாள் சென்று ஒரு நாள் மேஜர் சுந்தரராஜன் அவர் களின் கார் வீட்டுக்கு வந்தது. உடனே உங்களை கூட்டி வரச் சொன்னர் என்றார் டிரைவர்.

நான் உடன் புறப்பட்டு நடிகர் சங்கம் வந்தேன். மேஜர், ''வாங்க வெங்கட்ராமன் சந்திரபாபு காலமாகி விட்டார்'' என்றார்.

''வீட்டுக்கு போன் வந்ததாம் என்னை கூப்பிட்டு அவரை நல்லடக்கம் செய்ய ஏற்பாடுகள் செய்ய சொன்னர்' என்றார். இடிவிழுந்தது போல் இருந்தது!

மேஜர் சுந்தரராஜனும் நானும் பாபு வீட்டுக்கு புறப் பட்டு சென்றோம். கதவு திறந்து கிடந்தது. பாபு தினசரி படுக்கும் கட்டிலில் அவரது பூத உடல் தூங்குவது போல் காணப்பட்டது. அருகில் யாரும் இல்லை.

வீட்டுக்கார அம்மாள் மட்டும் நின்று கொண்டு இருந் தார்கள். ''எப்போது எப்படி இறந்தார் பாபு?'' என்று மேஜர் அவர்கள் அந்த அம்மாளிடம் கேட்டுக் கொண்டு இருந்தார்.

உடனே மேஜர் அவர்கள் ஒரு வேன் கொண்டு வரச் சொல்லி பாபுவின் பூதஉடலை எடுத்து தென்னிந்திய நடிகர் சங்கத்தில் மக்கள் பார்வையில் வைத்து இறுதி மரியாதை கள் செய்தார்கள் கலைஞர்கள். கிறிஸ்துவ மந்திரங்கள்

ஓதி அலங்காரங்கள் செய்து பூத உடலை ஊர்வலமாக எடுத்து சென்று பட்டினப்பாக்கம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்தனர்.

கடைசியாக பூத உடலை குழியில் இறக்கும்போது மேஜர் சுந்தர்ராஜனும் நானும் ஒருபிடி மண்ணை குழியில் போட்டு அவர் ஆத்மா சாந்தியடைய பிராத்தனை செய்தோம். இந்த செலவுகளை திரு சிவாஜிகணேசன் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

மறுநாள் அவர் இல்லம் சென்றோம். வீட்டுவாடகை பாக்கி 1700 ரூபாய், மூல்தாணி கடன் 2000 ரூபாய் ஆகிய வற்றை கொடுத்து விட்டு ரசீதை மேஜர் வாங்கி பாபுவுக்கு கடன் இல்லாமல் தீர்த்து விட்டு வந்தோம்.

ஆனால் அவர் கட்டிய பங்களா மட்டும் பாழ் அடைந்து பாம்பு, பல்லி, எலி, பெருச்சாளி, தேள் இவைகள் குடி புகுந்துவிட்டன. இன்னும் யாரும் அதை வாங்கவில்லை. குடியும் போகவில்லை.

அவர் எப்படி இருந்தார்? எப்படி வாழ்ந்தார்? எப்படி மறைந்தார்? என்பவை வருங்கால கலைஞர்களுக்கு ஒரு பாட மாக அமையும் என்று எண்ணுகிறேன்.

பலதடவை என்னிடம் சொல்லி இருக்கிறார் பாபு காசிக்கு போக வேண்டும் என்று.

எதற்கு என்று கேட்டேன்?

''நாம் செய்த பாவத்தை தீர்க்கும் ஒரே இடம் காசி தான்!அந்த புனித நதியில் ஒருதரம் நீராடினால் தான் செய்த பாவம் தீரும்'' என்பார்.

அவர் சொன்ன கருத்தை நான் இப்போதுதான் புரிந்து கொண்டேன். அவர் கடைசிவரை காசிக்கு போனதாகத் தெரியவில்லை.

ஆனால் நான் காசிக்குப் போனால் அவரை நினைத்து ஒரு தரம் அஞ்சலி செய்வேன்.

❋❋❋❋

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

* * * *



**ஆர். முத்துராமன்**

முத்துராமனின் பூர்வீகம் தஞ்சை மாவட்டம். அவ டைய தகப்பனரும், என்னுடைய தகப்பனரும் நெருங்கிய நண்பர்கள். எங்கள் வீட்டுக்கு பக்கத்தில் தான் இவர்கள் வீடும். அந்த வீட்டில் முத்துராமனின் அத்தை இருந்தார்கள். அவருக்கு ஒரே மகன் ராமையா. அவர் எங்கள் கம்பெனி யில் நடிகராக இருந்து வேஷங்கள் போட்டு வந்தார். ஒரு நாள் முத்துராமனை கூட்டி வந்து நாடக கம்பெனியில் சேர்க்கும்படி கேட்டுக் கொண்டார்.

நானும் அந்த அம்மையாரிடம் குழந்தை போல் வளர்ந் தவன். அவர்கள் கோரியபடி எங்கள் முதலாளி வைரம் அருணசலம் செட்டியாரிடம் சொல்லி முத்துராமனை நாடகக் கம்பெனியில் சேர்த்து விட்டேன். மாதம் 7 ரூபாய் சம் பளம். முதலில் சிறு சிறு வேடங்களை செய்து வந்தார். எஸ். வி.ஷண்முகம் தன் பக்கத்தில் வைத்து நாடகங்களை பற்றி யும் நடிப்பைப் பற்றியும் தினமும் சொல்லிக் கொடுத்து வந்தார். அதன் பிறகுதான் நடிப்பதற்கு தைரியம்வந்தது அவருக்கு. திருச்சி தேவர் ஹாலில் ''செயிண்டு பிலோமினுள்' நாடகம் அப்போது நடை பெற்றுக் கொண்டிருந்தது. கம் பெனியின் வாத்தியாராக எஸ்.குருசாமி அய்யர் அவர்கள் இருந்தார்கள். கம்பெனி நாடகங்களுக்கு பயிற்சி கொடுத்து அரங்கேற்றம் செய்வார்.

(என் வாழ்க்கையில் பல நாடக ஆசிரியர்களை நான் சந்தித்தது உண்டு. ஆனல் குருசாமி அய்யரைப் போல் திறமை

யான ஆசிரியரை நான் சந்தித்தது இல்லை. கதாநாயகன், வில்லன், நகைச்சுவை அய்யர், பட்டிக் காட்டான், ரவுடி, திருடன், குடிகாரன் இந்த வேஷங்களை சொல்லிக் கொடுத்து நடிக்க வைப்பார். அவரது திறமையை நான் எப்போதும் மறக்க மாட்டேன். பல தொழில் நடிகர்களுக்கு அவரைப் பற்றி நன்கு தெரியும். பள்ளி - ஆசிரியராக இருந்து பிறகு விலகி எங்கள் கம்பெனிக்கு வாத்தியாராக வந்து சேர்தார்.

திருச்சி அமெச்சூர் ஆர்டிஸ்டு குழுவில் எப்.ஜி. நடேச அய்யர் கூட வேஷம் போட்டார். இதைத்தவிர அவர் ஓர் ஆங்கில நாடகத்தில் 'ஹாம்லட்' வேஷம் போட்டு நடித்தார். பல தொழில் நடிகர்கள் இவரிடம் பயிற்சி பெற்றுள்ளனர்.) ''செயின்ட் பிலோமினு'' நாடகத்தில் கே.ஆர்.ராம்சிங், எம்.கே. முஸ்தபா, ஜி. ரத்தினமாலா முக்கிய வேடத்தில், சாயிராமன், எஸ்.வி. சண்முகம், குல தெய்வம் ராஜகோபால் மற்றும் நான் நகைச்சுவை பாத்தி ரத்திலும் நடிப்போம். நாடகத்திற்கு திருச்சியில் நல்ல பெயர். 50 நாளை கடந்துவிட்டது. திடீர் என்று கே.ஆர். ராம்சிங் அவர்கள் கம்பெனியை விட்டு விலகி விட்டார்கள். அவர் போட்ட வேஷத்தை யாரைப்போட்டு நடிக்க வைப்பது என்று சர்ச்சை செய்து கொண்டு இருந்தார் கள். முடிவில் முத்துராமனை கூப்பிட்டு காலை 7 மணிமுதல் மாலை 4 மணிவரை எப்படி பேசுவது, எப்படி நடிப்பது எப்படி நிற்பது, என்று பயிற்சி கொடுத்து அன்று மேடை யில் நடிக்க வைத்த பெருமை எஸ்.குருசாமி அய்யர் அவர் களைத்தான் சாரும்.

முத்துராமனும் தன்னுடைய ஆர்வத்தால் அந்த வேஷத்தை நன்கு நடித்து எங்கள் முதலாளியின் நன் மதிப்பைப் பெற்று 7 ரூபாய் சம்பளத்திலிருந்து 15 ரூபா யாக உயர்த்தப்பட்டார். முத்துராமன் அதிகம் பேச மாட்டார். தன் அடக்கம் உள்ளவர். கெட்ட பழக்கங்கள் எதுவும் அவரிடம் இல்லை. இறுதிவரை என்மீது அண்ணன் என்ற மரியாதை குறையவில்லை. அந்தக் கம்பெனியில் பெண் வேடம் போட்டுக் கொண்டிருந்தவர் தான் மோகன் ராவ். (இந்த மோகன்ராவ் யாரென்றால் அன்னக்கிளி இயக்குனர்களில் ஒருவர் தான் (தேவராஜ்-மோகன்). இவ ருக்கு இரு தங்கைகள், ஒரு தம்பி. இவர்களும் கம்பெனி யில் நடித்துக் கொண்டு இருந்தார்கள். இதில் பெரியவளின் பெயர்தான் சுலோசனு. நான் ஒருநாள் இரவு 12 மணிக்கு நாடக கம்பெனியில் இருந்து விலகி சென்னை வந்து அடைந்

தேன். நான் வந்த சில மாதங்களில் செட்டியார் கம்பெனியும் உடைந்து பல நடிகர்கள் சென்னைக்கு வந்தார்கள். அப்படி வந்தவர்களுக்கு சாயிராமன் ஆதரவு கொடுத்து வந்தார். சாயிராமன் ஒரு நாள் என்னிடம் வந்து ''அம்பி நம்ப கம்பெனி நடிகர்கள் வேலை கிடைக்காமல் அவஸ்தை படுவதால் நாடக கம்பெனி துவக்கினுல் என்ன?'' என்று கேட்டார். நானும் ஒப்புக்கொண்டு எஸ்.வி. ஷண்முகம் சாயிராமன், நான் மூவரும் சேர்ந்து 'வைர நாடகசபா' என்ற பெயரில் மயிலை ஆர்.ஆர். சபாவில் முதல் நாடகமாக ''புயலுக்குப் பின்' என்ற நாடகம் அரங்கேறியது.

அந்த நாடகத்தில் பங்கு கொண்டவர்கள்: ராமனுதன், முத்துராமன், குலதெய்வம் ராஜகோபால், கே.டி. ராஜகோபால், எஸ்.எஸ்.மணிநாதன், ஜி.ரத்தினமாலா, இவர்கள் கூட நாங்களும் சேர்ந்து நடித்து, நாடகத்திற்கு வரவேற்பும் நல்ல வசூலும் இருந்தது.

நாடகத்தை வால்டாக்ஸ் ரோடில் உள்ள ஒற்றவாடை தியேட்டரில் ஒரு மாதம் நடைபெற்று பின்பு வசூல் குறைந்து கம்பெனியை மூடுவிழா செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. உடனே கம்பெனியை குல்பாய் என்ற முதலாளியிடம் ஒப்படைத்தோம்.

அவர் மதுரைக்குச் சென்று வெற்றிகரமாக நடத்தினுர். ஒரு வருட இடைவெளியில் முத்துராமன் சுலோசனுவை மணந்து கொண்டார். ராமனுதன் மனோரமாவை மணந்து கொண்டு கம்பெனியை விட்டு இருவர் குடும்பமும் சென்னை வந்தன. ராமநாதனின் குடும்பம் திருவள்ளுவர் சாலையிலும், முத்துராமன் குடும்பம் கோடம்பாக்கம் சூளைமேட்டில் ரூ.25 வாடகைக்கு இருந்து கொண்டு பல வெளி நாடகங்களில் இருவரும் நடித்து வந்தார்கள். எங்கள் கம்பெனி நடிகர்களில் ஒருவரான கே.டி. ராஜகோபால், எஸ்.எஸ்.ஆர். குழுவில் இவர்களைச் சேர்த்து விட்டார். கொஞ்ச நாளில் அங்கிருந்து விலகி எஸ்.வி. சகஸ்ரநாமம் அவர்களின் சேவா ஸ்டேஜ் நாடக மன்றத்தில் எஸ்.எஸ்.மணிநாதன் சிபாரிசில் நடிகர் முத்துராமன் சேர்ந்து பல நாடகங்களில் முக்கிய வேடம் அணிந்து இயக்குனர் ஸ்ரீதரின் பார்வையில் பட்டு ''நெஞ்சில் ஓர் ஆலயம்'' படமூலமாக அறிமுகமாகி பல வெற்றிப் படங்களில் நடித்து 'நவரச நாயகன்'' என்ற பட்டத்தைப் பெற்று திரைவானில் ஒளிமயமாகத் திகழ்ந்தார்.

புதுமுகங்கள் நிறைய படங்களில் நடிக்க வந்தார்கள். இதனுல் பழைய நடிகர்களுக்கு தொழில் மந்தப் பட்டு விட்டது. அந்த நேரத்தில்தான் முத்துராமன் இரு படங்களை எடுத்து சரியாக ஓடவில்லை. அதில் அவருக்கு நஷ்டம் ஏற்பட்டது. முத்துராமனின் மகன் கார்த்திக்கை கலை உலகிற்கு பாரதிராஜா அவர்கள் அறிமுகப்படுத்தி இன்று முன்னணி நட்சத்திரமாக விளங்குகிருர்.

ஒரு நாள் தென்னிந்திய நடிகர் சங்கத்திலுள்ள தேவர் திரை அரங்கில் ''அலைகள் ஓய்வதில்லை'' என்ற படத்தை போட்டுக் காட்டினுர். அன்று முத்துராமன் என்னிடம் வந்து தனது மகன் 'அலைகள் ஓய்வதில்லை'' படத்தில் கதாநாயகனுக நடித்திருக்கிருன். படத்தை நீங்கள் பார்த்து ஆசீர்வாதம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அவர் கோரியபடி அந்த படத்தை பார்த்துவிட்டு கார்த்திக்கை வாழ்த்தினேன். அன்றுதான் முத்துராமனை கடைசியாகப் பார்த்துப் பேசினேன். அதன் பிறகு அவரது மரணச் செய்தியைத்தான் நான் கேட்டேன்.

கலை உலகமே திரண்டு இறுதி மரியாதை செய்தது அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சபரிநாதனை வேண்டினேன். பல வருடங்கள் தென்னிந்திய நடிகர் சங்க செயற்குழு உறுப்பினராக தொண்டாற்றி உள்ளார். சமூக சேவை முடிந்த அளவுக்கு செய்துள்ளார், அமரர் முத்துராமன்.

❃❃❃❃



**டணால் தங்கவேலு**

ஓங்கி வளர்ந்த மரச்சோலையில் ஆயிரமாயிரம் மரங்களும் தழைத்து நிமிர்ந்து நிற்கின்றன. அப்படி ஆயிரக் கணக்கான மரங்களின் நடுவே ஏதோ ஒரு மரத்தின் உச்சியில் மட்டும் திடீர் என்று பூத்துக் குலுங்கி மலர்கள் நறு மணம் வீசுகின்றன.

இந்த மலர்கள் மட்டும், இயற்கையின் வளர்ச்சியில் தனது வளமைக்கான ஊட்டத்தை அந்த மரத்திலிருந்து எடுத்துக் கொள்வதில்லை. மிதந்து வரும் தென்றலைத் தீண்டத்தானே தழைத்து வளர்கிறது. அந்த மலரைக் காக்கும் அடிவேருக்கும், கொடியை படரவிட்டு கொடிக்கு ஆதரவளிக்கும் மரத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. அந்த மலர்கள் தனித்தன்மை கொண்டவை. கலையினுடைய பிறப்பும் இப்படித்தான்.

பிறவிக் கலைத்தன்மை என்பது ஓவியர், எழுத்தாளர், நடிகர், ஆகியோருக்கு பொருந்தும் இதில் நடிகரை மட்டும் நான் எடுத்துக்கொள்கிறேன். பல ஆண்டுகளுக்கு முன் நாடக மேடையிலும் திரையிலும் தோன்றி, தோன்றிய இடத்திலெல்லாம் நகைச்சுவையை வெளிப்படுத்தி வரும் டணால் கே.ஏ.தங்கவேலு அவர்களை குறிப்பிடும்போது அன்னப் பஷியின் வளர்ச்சியைத்தான் எண்ணிப் பார்க்கிறேன். அந்தப் பறவை இனங்கள் சந்திரக்கிரணங்களை உண்டு வாழ்வதாக இந்திய இலக்கியச் சான்றுகள் கூறுகின்றன.

பிறவிக் கற்பனை வளம் பொருந்தியவருக்கு இது முற்றிலும் பொருந்தும். நடிப்புத் துறையில் பல்வேறு வேடங்களைப் புனைந்து பல்வேறு உணர்ச்சிகளை பல்வேறு முறையில் வெளிப்படுத்திய கே.ஏ. தங்கவேலு நகைச்சுவை ஊற்று என்பது தான் எனது கருத்து. அந்த ஊற்றிலிருந்து புதிய புதிய கற்பனைகள் தோன்றிஅவரை மேடையிலும், திரைப்படத்திலும் ஆட வைக்கிறது. அவரும் ஆடுகிறார். ரசிகப் பெருமக்கள் ஆட்டுவிக்கப்படுகிறார்கள்.

திருமலைராயன் பட்டினம் என்னும் சிற்றூரில் பிறந்து வளர்ந்து பள்ளிக்குச் செல்லும் பருவ வயதில் புளிய மரங்களை உலுக்கி அந்தப் புளியை உப்புப் போட்டு சூப்பு வைத்து வைத்து தானும் குடித்து மற்ற பையன்களுக்கும் கொடுத்து அந்தப் பையன்களையும் பள்ளிக்கு போகாமல் செய்த தொண்டை சொல்லி வருத்தப்பட்டார். கே.ஏ.டி. யின் தந்தையோ, நகை வேலை செய்யும் ஆசாரியார். சோம்பலே தெரியாமல் வேலை செய்பவர். மின்சாரம் வளர்ச்சி பெறுத காலம்! சீமை எண்ணெக்கு கடும் பஞ்சம். ஒரு பாட்டிலை கையில் கொடுத்து எண்ணெ வாங்கி வரச் சொல்லி தந்தை மகனை அனுப்பி வைப்பார்.! கிராமபோன் பெட்டி மவுசு அப்போது தான் உண்டாயிற்று. டீ கடைகளிலும் வீடுகளிலும் அதை போட்டிபோட்டுக் கொண்டு வாங்கி வைப்பார்கள். புனல் போல் இருக்கும் குழாய் வழியாக பாடல்கள் கேட்கும்! அதை அப்போது பெரிய புனல் என்று கூறுவார்கள். அந்த நாளில் எஸ்.வி.சுப்பையா பாகவதர், எஸ்.ஜி.கிட்டப்பா, பி.எஸ் சிவபாக்கியம் இவர்கள் பாடிய ரிக்கார்டுகளை அதிகமாக கேட்டு வந்தார்கள். எண்ணெ வாங்குவதை மறந்து டீக்கடையில் போடும் ரிக்கார்டுகளை கேட்டு விட்டு எண்ணெ கிடைக்கவில்லை என்று வீடு திரும்புவார். அடி, உதை, கிடைக்கும்.

சில வேளைகளில் அப்பா தூங்கிய பிறகு வீட்டுக்கு வந்து சேர்ந்து தூங்கிக் கொண்டு இருக்கும் பாட்டியை எழுப்பிச் சோறு போடச் சொல்வாராம்! அடி, உதை அவருக்கு தொடர்கதையாக இருந்தது. பசியிலே பலவகையுண்டு! இயல் பசி! நாடகப்பசி! குடல்பசி! உணவுப்பசி! விஞ்ஞானப் பசி! அஞ்ஞானப்பசி! மெய்ஞானப்பசி! இதிலே இசைப் பசியும் நாடகப் பசியும் அவரிடம் அப்போது மிகுந்து காணப்பட்டது. இளம் வயதிலேயே தாயை இழந்தார்.

தந்தையோ வியாபார விஷயமாக சிங்கப்பூர் செல்லும் முன் மாமனிடம் மகனை ஒப்படைத்து குலத்தொழிலைக் கற்றுக் கொடுக்கும்படி சொல்லிவிட்டார்.

இவர் மாமனோ, நாகப்பட்டினம் சென்று இவரை மாடுகளை மேய்க்கச் சொல்வது, அதை குளிப்பாட்டுவது பருத்திக் கொட்டை ஆட்டுவது, கடைச்சாமான்கள் வாங்குவது, இப்படிப்பட்ட வேலைகளைத்தான் கற்று கொடுத்தார்.

ஒரு நாள் வீட்டில் பின்புறத்திலிருக்கும் தென்னை மரத்திலிருந்து ஒரு தேங்காய் கிணற்றில் விழுந்துவிட்டது. இதை பார்த்தால் மாமா அடிக்கப்போகிறார் என்று பயந்து நீச்சல் தெரியாத தங்கவேலு கிணற்றில் குதித்து தேங்காயை கையிலே எடுத்தவர் மூச்சு திணறி தவித்துக் கொண்டு இருக்கையில் பக்கத்து வீட்டுக்காரர் கிணற்றில் குதித்து இவரை காப்பாற்றினர்.

மாமன்காரன் ஒரு முடிவுக்கு வந்து சிங்கப்பூரிலிருக்கும் அவருடைய தந்தைக்கு விபரமாக கடிதம் எழுதி விட்டார். அதைப் படித்த தங்கவேலுவின் தந்தை தாயகம் திரும்பி வந்து தங்கவேலுவை என்ன செய்தார் தெரியுமா?

சிங்கப்பூரிலிருந்து இவர் தந்தை வந்ததும் ஒரு பயில்வானிடம் சென்று தன் மகனது தொல்லை தாங்க முடியவில்லை இவனை எப்படியாவது சாகடித்தால் என்ன என்று யோசனை கேட்டார். இதை எப்படியோ தெரிந்த தங்கவேலு பொடி நடையாக காரைக்கால் வந்து சேர்ந்தார்.

மறுநாள் தன் மகனை தேடிக்கொண்டு காரைக்கால் வந்து அடி அடி என்று அடித்து தங்கவேலுவை தாத்தா வீட்டுக்கு அனுப்பிவைத்தார். அங்கு தினசரி ஒரு மூட்டை பழைய துணிகளை துவைக்க வேண்டும். துணி வெள்ளையாகாமல் இருந்தால் அவரது உடம்பு வெள்ளையாகிவிடும். அதன் பின், உமிஅடுப்பை இரவு 9 மணி வரை ஊதியவாறாக இருக்க வேண்டும். இங்கு வாங்கும் சாமான்களுக்கு கமிஷன் வாங்கியதாக அடிவிழும். இதன் பெயர் தொடர் அடி!

இவ்வளவு வேலையும் செய்துவிட்டு பாக்கு மட்டையில் சாப்பாடு போடுவார்கள். அதில் சாப்பிட்டுவிட்டு அதை கழுவி காயப்போட்டு மறுநாள் சாப்பிட வேண்டும். உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டு. அதைப்போல் கொஞ்சம்

அசந்து தூங்கிவிட்டார், ஒரு நாள்; அவ்வளவுதான்! ரத்தினசாமி என்ற சொந்தக்காரர் இரும்புக் கம்பியை பழுக்கக்காய்ச்சி தூங்கிக் கொண்டு இருக்கும் தங்கவேலு வின் தொடையில் சூடுபோட்டார். புழுப்போல் அலறி துடித் தெழுந்து ஓடினுர்.

ஒரு மூட்டை துணியை கொடுத்து துவைத்து வா என்று சொன்னுர். துணியை துவைத்து வாசல்படியில் வைத்து விட்டு நல்லவனுக்கு அடையாளம் சொல்லாமல் போவது, என்று சித்தி வீட்டுக்குப் போய் சரணடைந்தார். அந்த அம்மை யாரோ எங்கள் நாடகத்தில் வரும் மூளி அலங்காரி போல் முகத்தை சுளித்தவாறு பேசி அவருடைய தந்தைக்கு கடிதம் எழுதிவிட்டார்.

தந்தையார் வரும்போதே கையில் கம்புடன் வந்து கம்பு உடையும்வரை அடித்து தண்ணீரில் சர்க்கரையை கலந்து, தங்கவேலுவின் உடம்பில் ஊற்றினுர். ஈக்களுக்கும் எறும்பு களுக்கும் கொண்டாட்டம் பிறந்தது. இப்படிப் பல கஷ்டங்களை வாழ்க்கையில் சந்தித்தவர். சாயங்காலம் கட்டை அவிழ்த்துவிட்டு குளிக்கச் செய்து ஒரு கேள்வி கேட்டார், தந்தை! உனக்கு படிப்போ வரவில்லை, குலத் தொழிலை கற்றுக்கவும் மாட்டேங்கிறே, சொந்தக்காரர் களின் வீட்டிலும் உன்னை வைத்துக் கொள்ள மாட்டார்கள். இனிமேல் என்ன செய்வதாக இருக்கிருய்? என்று கேட் டார். அன்றுதான் துணிந்து தந்தையிடம் பேசினுர். நான் நாடகத்திலே நடிக்கப் போறேன் என்று சொன்னுர்.

தந்தையாரும் ஒரு முடிவுக்கு வந்து தன் நண்பரிடம் சொல்லி சென்னையில்-என்.வி. ஷண்முகம் பட்டணம் பொடி கம்பெனி உரிமையாளர் நாடகக் கம்பெனியை துவக்கி கோவலன் நாடகத்தை அரங்கேற்ற ஒத்திகைகள் நடந்து கொண்டிருந்தது. கன்னையாவின் (தசாவதாரம்) அண்ணன் மகன் கிருஷ்ணய்யாதான் அந்த கம்பெனியின் ஆசிரியர் அங்கு வந்து சேர்ந்தார். கோவலனில் மாதவி பாடம் கொடுக்கப்பட்டு ஒத்திகையும் நடந்து வரும்போது வசனங்களை பாடம் பண்ணவில்லை என்ருல் அடி விழும். இவ ருக்குத்தான் அடி தொடர்கதையாயிற்றே! பல காரணத்தை சொல்லி அந்தக் கம்பெனியிலிருந்து விலகி காரைக்கால் வந்தார்.

அந்த ஊரில் முக்கிய புள்ளி சம்பந்தம்பிள்ளை. அவரிடம் கூட்டிச் சென்று பையன் நன்றாக பாடுவான் அடிக்காத கம் பெனியில் இவனை சிபாரிசு செய்து சேர்த்து விடுங்கள் என்று கேட்டுக் கொண்டார் தந்தையார். காக்கா உட்கார பனம் பழம் விழுந்தது என்பது போல் அங்கு யதார்த்தம் பொன்னு சாமி பிள்ளை இருந்தார்கள். சம்பந்தம்பிள்ளை பொன்னுசாமி பிள்ளையிடம் சிபாரிசு செய்து ராஜாம்பாள் கம்பெனியில் சேர்த்துவிட்டார்கள். ராஜாம்பாள் கம்பெனியின் ஆசான் பொன்னுசாமி பிள்ளை என்று பின்னால் தெரிய வந்தது. தங்கவேலுவுக்கு புதுப்பெட்டி, புதுதலையணை, புது ஜமக்காளம், புதுப்போர்வை, வேட்டி, சட்டை எல்லாம் வாங்கிக்கொடுத்து நல்ல மனதுடன் தந்தையார் கே.ஏ.டி.யை கம்பெனிக்கு அனுப்பி வைத்தார். அந்தக் கம்பெனி நடிகர்கள் ஜாம் பவான், டி.பி.பொன்னையா, எம்.ஆர்.ராதா, எம்.எஸ்.முத்து கிருஷ்ணன், டி.எஸ். பாலையா, கந்தசாமி முதலியார் (ஆசிரியர்) ஆகியோர்.

அந்த கம்பெனிக்குப் போனதும் கொடுக்கப்பட்ட வேஷம் "பக்த ராமதாஸ்" நாடகத்தில் நவாப்பிற்கு ஸ்ரீராமச் சந்திரமூர்த்தி காட்சியளிப்பார், அந்தக் காட்சியில் ஆஞ்ச னேயனாக வேஷம் போட்டார். ஏ.பி.சி. என்று நடிகர்களில் மூன்று பிரிவு உண்டு. ஏ. குருப்புக்கு ரூ.15 சம்பளம், பி. குருப்புக்கு ரூ.3 சம்பளம், சி. குருப்புக்கு வாரத்திற்கு 3 கார்டு, சோப்பு 3 கொடுப்பார்கள். தங்கவேலு நாடகக் குழு திருவாரூரை விட்டு மன்னார்குடிக்கு வந்து முதல் நாடகமாக ''சத்தியவான் சாவித்திரி'' நாடகம் நடத்தப் பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை நாடகத்திலும் திரைப் படங்களிலும் தொடர்ந்து நடித்து வருகிறார், டணால் கே. ஏ. தங்கவேலு.

❋❋❋❋



தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள்



கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்



பரிதிமாற் கலைஞர்



டி. சி. வடிவேலு நாயக்கர்



ராஜா ஷண்முகதாஸ்



ராஜா எம். ஆர். கோவிந்தசாமி



''மனமோகன''
அரங்கசாமி நாயுடு



உடுமலை
முத்துசாமிக் கவிராயர்



பி. எஸ். வேலுநாயர்



டி. பி. ராஜலட்சுமி



வி. ஏ. செல்லப்பா



ஜெகன்னுதய்யர்



''கோல்டன்''
சாரதாம்பாள்



''யதார்த்தம்''
பொன்னுசாமி பிள்ளை



பி. டி. சம்பந்தம்



''நவாப்''
டி.எஸ். ராஜமாணிக்கம் பிள்ளை



சி. எஸ். சாமண்ணா



எம். ஜி. சக்கரபாணி



எம். கே. ராதா



“புளியமா நகர் புலிக்குட்டி”
பி. எஸ். கோவிந்தன்



டி. ஆர். மகாலிங்கம்



சாயிராம்

# இணைப்பு 1

திரு. முத்துசாமிக் கவிராயர் எழுதிய நாடகங்கள்: வீபீஷண சரணுகதி, பீஷ்மர் சபதம், ஞானசௌந்தரி, தயாநிதி, கண்ணுயிரம், லோபி, இராமாயணம்.

திரு. ஏகை சிவ ஷண்முகம்பிள்ளை எழுதிய நாடகங்கள்: சம்பூர்ண இராமாயணம், கண்டிராஜா.

திரு. பம்பல் சம்பந்தமுதலியார் எழுதிய நாடகங்கள்; மனோஹரா, லீலாவதி சுலோசன, கள்வர் தலைவன், விக்ரம ஊர்வசி, இரண்டு நண்பர்கள், சாரங்கதாரன், நற்குல தெய்வம், சத்ருஜித், யயாதி, மார்கண்டேயர், விஜய ரங்கன், காதலர் கண்கள், பேயல்ல பெண்மணியே, மகபதி மெய்க்காதல், பொன்விலங்கு, சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, வாணிபுர வணிகன், ராஜபுத்திரன், ஹரிச்சந்திரா, ரத்தினுவளி, புஷ்பவல்லி, கீத மஞ்சரி பிரஹசனங்கள், ஊர்வசியின்சபதம், அமலாதித்யன், சபாபதி, வெள்ளிமணம், வேதாள உலகம், புத்த அவதாரம், மனைவியாய் மீண்டவள், தாசிப்பெண், சுபத்திரா அர்ச்சுன, கொடையாளி கர்ணன், சகாதேவனின் சூழ்ச்சி, இடைச்சுவர் இருபுறம், ‘பிராமணனும் சூத்திரனும், சகுந்தலை, ஓர் ஒத்திகை, சந்திரஹரி, மாளவிகாக்கினி-மித்திரன். திரு. கந்தசாமி முதலியார் அவர்கள் திரு. ஜே. ஆர். ரங்கராஜுவின் நாவல்களை நாடகமாக்கியவர் இவர்: இராஜாம்பாள், இராஜேந்திரன், சந்திரகாந்தா அனந்த கிருஷ்ணன், மோஹனசுந்திரன், மேனகா, (ஒரிஜனல்பாய்ஸ் கம்பெனி & டி. கே. எஸ். நடத்தினர்கள்.)

திரு பெங்களூர் அய்யாபிள்ளை எழுதிய நாடகம்: ஹரிச் சந்திரா (ஸ்பெஷல் நாடக நடிகர்கள் நடித்தார்கள்.)

திரு. உடையார்பிள்ளை எழுதிய நாடகம்: சபரிமலை ஐயப்பன் (நவாப் ராஜமாணிக்கம்பிள்ளை நடத்தினர்).

திரு. கோபாலகிருஷ்ண பாரதி எழுதிய நாடகம்: நந்தனர் (ஸ்பெஷல் நாடக நடிகர்கள் நடித்தார்கள்.)

திரு. ராமசாமிராஜு எழுதிய நாடகம்: ‘பிரபலச்சந்திரா’ (நவாப் ராஜமாணிக்கம்பிள்ளை நடத்தினர்).

திரு ஆதிமூலம் எழுதிய நாடகம்: மனிதன் (டி.கே.எஸ். சகோதரர்கள் நடத்தினர்கள்)

திரு. கோவை அய்யாமுத்து எழுதிய நாடகம்: இன்ப சாகரன் (நவாப் ராஜமாணிக்கம்பிள்ளை நடத்தினர்).

திரு. அறிஞர் அண்ணு எழுதிய நாடகங்கள்: சந்திரோதயம், ஓர் இரவு, வேலைக்காரி, சந்திரமோஹன், நீதிதேவன் மயக்கம், (கே.ஆர். ஆர். நாடக மன்றம் நடத்தினர்கள்).

திரு. பி.எஸ். இராமய்யா எழுதிய நாடகங்கள்; பிரசிடெண்ட் பஞ்சாட்சாரம், மல்லியம் மங்களம், தேரோட்டி மகன், போலீஸ்காரன் மகள், பூவிலங்கு (எஸ்.வி. சகஸ்ரநாமம் நடத்தினர்கள்).

திரு. பி. எத்திராஜு எழுதிய நாடகம்: ஔவையார், (டி.கே.எஸ். சகோதரர்கள் நடத்தினர்கள்)

திரு. கலைஞர் கருணநிதி எழுதிய நாடகங்கள்: மந்திரி குமாரி, ஒரேமுத்தம், மணிமகுடம், தூக்குமேடை, காகிதப்பூ (எஸ். எஸ். ஆர். எம். ஆர். ஆர். நடத்தினர்கள்.)

திரு. சக்திகிருஷ்ணசாமி எழுதிய நாடகங்கள்: ''விதி ஜீவன், ஜஹாங்கீர், வீரபாண்டிய கட்டபொம்மன், பக்த லீலா (சிவாஜி நாடக மன்றம் நடத்தினர்கள்)

திரு. கு.சா. கிருஷ்ணமூர்த்தி எழுதிய நாடகங்கள்: அந்தமான் கைதி, என் காணிக்கை, கலைவாணன். (டி.கே.எஸ். சகோதரர்கள் நடத்தினர்கள்).

திரு. எஸ்.வி. சகஸ்ரநாமம் எழுதிய நாடகம்: பைத்தியக்காரன் (என்.எஸ்.கே. நாடக சபா நடத்தினர்கள்).

திரு. கவிஞர் எஸ்.டி. சுந்தரம் எழுதிய நாடகங்கள்: ''கவியின் கனவு'', மனிதனும் மிருகமும், கள்வனின் காதலி: தாய்மை, வீரமாசக்தி (இளங்கோ நாடகமன்றம் நடத்தினர்கள்).

ஏ.எஸ்.ஏ. சாமி எழுதிய நாடகங்கள்: பில்ஹணன், துளிவிஷம் (டி.கே.எஸ். சகோதரர்கள் நடத்தினர்கள்).

திரு திருவாரூர் தங்கராஜு எழுதிய நாடகம்:-ரத்தக் கண்ணீர் (எம்.ஆர். ராதா நடத்தினார்கள்)

திரு. சோலைமலை எழுதிய நாடகம்:-நீதிபதி, சந்திப்பு, உரிமைக்குரல் (பாய்ஸ் கம்பெனி நடத்தினார்கள்)

திரு. பா. நீலகண்டன் எழுதிய நாடகங்கள்:- நாம் இருவர்; முள்ளில் ரோஜா (டி.ஆர் மஹாலிங்கம் & டி.கே. எஸ். சகோதரர்கள் நடத்தினார்கள்).

ஐ. என். ஏ. தியேட்டர் திரு. வி. எஸ். ராகவன் எழுதியவை: ''தர்மயுத்தம்'' மற்றும் ''எங்கிருந்தோ வந்தாள்'', ''கௌரி கல்யாணம்''.

கவிஞர் வாலி எழுதிய நாடகம் கலியுக கண்ணன்.

திரு. சோ. எழுதிய நாடகங்கள்: சம்பவாமியுகே! யுகே!, யாருக்கும் வெட்கமில்லை, யாரிடமும் சொல்லாதே, ஏன் கூடாது, மனம் ஒரு குரங்கு, முகம்மது பின் துக்ளக், உண்மையே உன் விலை என்ன? என்று தணியும் இந்த சுதந்திர தாகம், சரஸ்வதியின் சபதம், ஜட்ஜ்மெண்ட் ரிசர்வ்ட், வந்தே மாதரம், நேர்மை உறங்கும் நேரம் (சோ குழுவினர் நடத்தினார்கள்).

திரு. துறையூர் மூர்த்தி எழுதிய நாடகங்கள்:- சூதாடி, இன்பநாள், இலங்கேஸ்வரன் (ஆர்.எஸ். மனோகர் குழு)

திரு மதுரை திருமாறன் எழுதிய நாடகங்கள்:- சாணக்கிய சபதம், காடக முத்திரையன், மாலிக்காபூர் (ஆர்.எஸ். மனோஹர் குழு)

திரு. வியட்நாம் வீடு சுந்தரம் எழுதிய நாடகம்:-வியட்நாம் வீடு, ஞான ஒளி (என்னெஸ்ஸென் தியேட்டர்ஸ்) (சிவாஜி நாடக மன்றம் நடத்தினார்கள்).

திரு. தஞ்சைவாணன் எழுதிய நாடகம்: களம் கண்ட கவிஞன். (சிவாஜி நாடக மன்றம் நடத்தினார்கள்).

திரு. திருச்சி பரதன் எழுதிய நாடகங்கள்:- அப்பாவின் ஆசை, பலாப்பழம் (டி.கே.எஸ். சகோதரர்கள் நடத்தினார்கள்).

திரு. கே. பாலசந்தர் எழுதிய நாடகங்கள்: சதுரங்கம், மேஜர் சந்திரகாந்த், நீர்குமிழி, சர்வர் சுந்தரம், மாசற்ற மனம், எதிர் நீச்சல், நவக்கிரஹம்.

திரு. தி. ஜானகிராமன் எழுதிய நாடகங்கள்: வடிவேலு வாத்தியார், நாலு வேலி நிலம், (சேவாஸ்டேஜ் எஸ்.வி.எஸ். நடத்தினர்கள்)

திரு. அரு. இராமனுதன் எழுதிய நாடகம்:- வானவில் சக்கரவர்த்தி அசோகன், இராஜ இராஜ சோழன்.

திரு.ரா. வெங்கடாசலம் எழுதிய நாடகம்:- 'தங்கை', இமயத்தில் நாம், முத்தமிழ் முழக்கம், தமிழனின் பெருமை, (பாய்ஸ் கம்பெனிகளில் நடத்தினர்கள்)

திரு. குருசாமி அய்யர் எழுதிய நாடகங்கள்:- திருமழிசை ஆழ்வார், விஜய நகர சாம்ராஜ்ஜியம், செயின்ட் பிலோமினுள், ஏழைப் பெண், குடும்ப வாழ்க்கை, தாக சாந்தி (வைரம் அருணுசலம் செட்டியாரின் ராமபால கான விேனுத சங்கீத சபா நடத்தினர்கள்).

திரு. நாஞ்சில் ராஜப்பா எழுதிய நாடகம்:- சாருக தாசா (ராமபால கான வினேத சபா நடத்தினர்கள்).

சட்டாம் பிள்ளை வெங்கட்ராமன் எழுதிய நாடகம்:- யார் விதவை, (ராம பாலகான விேனுத சங்கீத சபா நடத்தினர்கள்).

திரு. தாமரை மணாளன் எழுதிய நாடகம்:- சுயம்வரம்.

திரு கோமல் சுவாமி நாதன் எழுதிய நாடகங்கள்:- புதிய பாதை, தில்லை நாயகம், மின்னல் கோலம், தண்ணீர், தண்ணீர்! அச்சமில்லை அச்சமில்லை, செக்குமாடுகள், நவாப் நாற்காலி.

திரு. வெ. சாமிநாத சர்மா எழுதிய நாடகங்கள்:- தேசபக்தி, ஜீவபாலன், லவகுசா, அபிமன்யு, (பாய்ஸ் கம்பெனி நடத்தினர்கள்.)

திரு. கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் எழுதிய நாடங்கள், ஐம்பதும் அறுபதும், விலங்கு மனிதன், நெல்லம்மாள் (என்.எஸ்.கே. குழுவினர் நடத்தினர்கள்.)

திரு. பி.ஏ. கிருஷ்ணமூர்த்தி எழுதிய நாடகங்கள்:- பொம்மை வீடு, மூடுபனி.

திரு. அகிலன் எழுதிய நாடகம்:- புயல், வாழ்வில் இன்பம், உயிர்பலி.

திரு. எம்.ஆர். சுவாமிநாதன் எழுதிய நாடகம்:-ஜம்பு லிங்கம், (என்.எஸ்.கே. குழுவினர் நடத்தினுர்கள்).

திரு சிங்காரவேலன் எழுதிய நாடகங்கள்: தங்கத்தாய்— மரகதம், காணுத கண்மணி, கற்பகம், மகிழம்பூ.

திரு. ஏ.பி. நாகராஜன் எழுதிய நாடகங்கள்: 'தானம்' கொள்ளைக்காரன், நால்வர், அன்னை பவானி, பகடை, (ஏ.பி. நாகராஜனின் குழு நடத்தினுர்கள்).

திரு. புதுக்கோட்டை தம்புடு பாகவதர் எழுதிய நாடகம் பக்த ராமதாஸ், துருவன், (நவாப் ராஜமாணிக்கம் குழுவினர் நடத்தினுர்கள்.)

திரு தேவன் எழுதிய நாடகங்கள்:- மிஸ் ஜானகி, கோமதியின் காதலன், துப்பறியும் சாம்பு, சுதர்சனம், கல்யாணி,

திரு குகன் எழுதிய நாடகம்:- புகழ் வழி.

திரு தமிழ்வாணன் எழுதிய நாடகங்கள்:- 'புலித்தேவன்' 'பைத்தியங்கள் பலவிதம்', 'ராஸி பலன்', வழிகாட்டும் கை காட்டி, படிச்சா மட்டும் போதுமா?

திரு வடுவூர் துரைசாமி அய்யங்கார் எழுதிய நாடகம் வசந்தகோகிலம், மாணிக்க வாசகர்.

திரு நடராஜன் எழுதிய நாடகம்: என் தங்கை (பாய்ஸ் கம்பெனி நடத்தினுர்கள்).

திரு. மௌளி எழுதிய நாடகங்கள்; அந்தப்புரம், அவன் ஒரு தனி மரம், ஒரு புல்லாங்குழல் அடுப்பு ஊது கிறது, ஒரு வாரிசு உருவாகிறது, நன்றி மீண்டும் வருக, ஒரு காந்தி போதும், குருஷேத்திரம், பிராமணுள் காபி ஹோட்டல்.

திரு. விசு எழுதிய நாடகங்கள்: பாரதமாதருக்கு ஜே ஈஸ்வர அல்லா தேரே நாம், அவள் சுமங்கலிதான், மோடி மஸ்தான், குடும்பம் ஒரு கதம்பம், டைரக்டர் சார் ஒரு யு.கே..ஜி. டவுரி கல்யாண வைபோகமே, ஆண்டாள் அவள் ஆண்டாள், 'உறவுக்கு கை கொடுப்போம்'.

திரு. சாவி எழுவிய நாடகம்: வாஷிங்டனில் திருமணம்.

திரு. கண்ணன் எழுதிய நாடகம்: சுப முகூர்த்த பத்திரிகை

திரு. கர்மயோகி எழுதிய நாடகம்: புயலுக்குப் பின்

திரு. நாடோடி எழுதிய நாடகம்: வாழ்க்கை சக்கரம்:

திரு. எப்.ஜி. நடேசய்யர் எழுதிய நாடகம்: ஞான சௌந்தரி, சுபத்திரா அர்சுனு.

திரு.நா.சோமசுந்தரம் எழுதிய நாடகம்; இன்ஸ்பெக்டர், எதிர் பார்த்தது.

திரு. சாண்டில்யன் எழுதிய நாடகம்: ஜீவபூமி.

திரு. சுகி சுப்பிரமணியம் எழுதிய நாடகம்: விதி வழியே.

திரு. கோமல் சுவாமிநாதன் எழுதிய நாடகம் : தண்ணீர் தண்ணீர்.

திரு. பாரதியார் எழுதிய கவிதை நாடகம்: பாஞ்சாலி சபதம் (சேவாஸ்டேஜ் எஸ்.வி.எஸ். குழு நடத்தினுர்கள்)

திரு. இரா. பழனிசாமி எழுதிய நாடகம்: ஒட்டக்கூத்தர், சிவதாண்டவம், கம்பர், சூர்பனகையின் சபதம், குலப்பெண், நல்ல பிள்ளை, வரவேற்பு, காரைக்கால் அம்மையார்.

நாடகக் கலையில் ஈடுபட்ட மற்றவர்களின் பட்டியல்: அரு. அழகப்பன், கு. அழகிரிசாமி, அருண், ஆண்டி, இரணியன், இரத்தினம், இராதாமணுளன், எஸ்.எஸ். ராஜேந்திரன் இறை முடிமணி, டி.கே. கணபதி, ப. கண்ணன், அ.கயிலை ராஜன், டி.டி. கல்யாணம், ஜி. கிருஷ்ணமூர்த்தி, வாசவன், சித்த ராஜன், சின்னராஜா, நாரதர் சீனுவாச ராவ் புத்தநேரி சுப்பிரமணியன், கோமதி சுவாமிநாதன், செல்வராஜ், சேகர், சேதுராமன், சொர்ணம், குடந்தை சோமு, கே.பி தியாகராஜன், தூபம், நவமணி, நாகஷண்முகம், நாரண துரைக்கண்ணு, டி.எஸ்.சேஷாத்திரி, ப.நெடுமாறன், பட்டு, பட்டி வெள்ளையன், மதுரை பத்மனுபன், டி.கே. கோவிந்தன், நித்யானந்தன், பி.எஸ். பாண்டியன், நா. பாண்டுரங்கன், பாலமுருகன், மாயாவி, மா.ரா. மாஜினி, டி.கே. முத்துச்சாமி ஜே.முத்துச்சாமி, சிவசக்தி முத்துச்சாமி, என்.யூ. ராஜாமணி

பி.வி.ஓய். ராமன் டபிள்யூ ராமசாமி, மல்லியம் ராஜகோபால், ராஜமாணிக்கம், லட்சுமணன், விஸ்வம், விந்தன், லெனின், வேலவன், வேலன், சம்பத்குமார், ஜெயராமன், கா மு ஷெரிப், வேணுகோபாலன், ஆர்.கே. ராமன், சுஜாதா மெரினு, கிருஷ்ணு, காரைக்குடி நாராயணன், ஜெயகாந்தன், தேவநாராயணன், ரவீந்தர், கே. ரேணுதேவி, எஸ். நவராஜ் செல்லேயா, கே.கே. இராமன், வெங்கட்.

# இணைப்பு 2

## விடுதலைப் போரில் கலைஞரின் பங்கு

அன்று நாடக கலைஞர்கள் வாழ மாநாடு போட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தீர்மானங்கள் வருமாறு:—

1) நாடகக் கலையை வளர்க்க தமிழ்நாடு நாடகக் கலைக் கழகம் என்ற பெயரால் ஒரு கழகம் ஆரம்பிக்க வேண்டும்.

2) தமிழ் மொழியையும் தமிழரின் முன்னேற்றத்தையும் அடிப்படையாகக் கொண்ட சிறந்த நாடகங்களை எழுதுவதற்கு எழுத்தாளர்களை தூண்டுவது; எழுதிய நாடகங்களுக்குப் பரிசுகள் வழங்குவது. நாடகங்களை புத்தகமாக வெளியிடுவது.

3) நாடக கழகத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட நடிகர்களுக்கு பரிசுகள் வழங்குவது.

4) நாடகங்களை நடத்தத் தூண்டுவது.

5) கிராமங்களில் நாடகங்களை நடத்துவது, அங்கு நாடகக் கழகங்களை திறப்பது. அதன் வளர்ச்சிக்கு அறிஞர்களையும் அங்கத்தினர்களையும் நடிக்க வைப்பது.

6) ஒவ்வொரு ஊரிலும் நாடகத்தை பற்றிய மாநாடு நடத்துவது.

7) நாடகத்தைப் பற்றிய பத்திரிகை நடத்துவது:

8) நகரசபை, ஒன்றியம் இதனுடைய தலைவர்களை சந்தித்து நாடக கொட்டகைகள் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்தல்.

9) நாடக கழகத்தின் சார்பில் நாடக வளர்ச்சி நிதி என்று நாடகங்கள் நடத்துவது.

10) இந்த நோக்கங்களை, ஒப்புக் கொண்டவர்கள் மட்டும் இந்த நாடக கழகத்தில் உறுப்பினராக இருக்க உரிமையுடையவர்கள்.

11) அங்கத்தினர்கள் வருடத்திற்கு 6 ரூபாய் சந்தா செலுத்தல் வேண்டும்.

*12) நிர்வாகிகள் அங்கத்தினரால்தான் தேர்ந்தெடுக்கப் படுவார்கள்.*

தேர்ந்து எடுக்கும் வரை நாடக கழகக் காப்பாளராக நியமிக்கப்பட்டவர்கள்: தலைவர் சர். பி. டி. ராஜன், உப தலைவர் பம்மல் சம்பந்த முதலியார், செயலாளர் டி.கே. சண்முகம், பொருளாளர் திரு.டி.கே. பகவதி; செயற்குழு உறுப்பினர்கள்: டி.எஸ். ராஜமாணிக்கம் பிள்ளை, டி.பி. பொன்னுசாமி, வைரம் அருணசலம் செட்டியார், கே.பி. சுந்தராம்பாள், எம்.கே.தியாகராஜபாகவதர், என்.எஸ் கிருஷ்ணன், பி.எஸ். வேலு நாயர், சி.என். அண்ணதுரை (முன்னள் முதல்வர்) கி.ஆ.பெ.விஸ்வநாதன், போஷகர்கள்: ராஜா சர் அண்ணமலை செட்டியார், ஆர்.கே. ஷண்முகம் செட்டியார் (முன்னள் நிதி அமைச்சர்) ராஜா சேதுபதி, டாக்டர் அழகப்பச் செட்டியார்.

*11-2-1944* ம் வருடம் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

''நடிகர் கழகம் சார்பில் திரு. அண்ண அவர்கள் உரை நிகழ்த்தினர். சமூக சீர்திருத்த நாடகங்களை நடத்த வேண்டும், எழுத வேண்டும், நடிக்க வேண்டும்'' என்று கூறினர்.

*1943* ம் வருடம் சி.வி. ராஜகோபால், சி.வி.எம் அண்ணமலை போன்றவர்களை வைத்து அண்ணவே நடித்த ''சந்திரோதயம்'' நாடகம் செஞ்சியில் அரங்கேறியது.

ஈரோட்டில், தந்தை பெரியார், ஜி.டி. நாயுடு, குத்தூசி குருசாமி இவர்களின் முன்னிலையிலும் நாடகம் நடத்தப் பட்டது.

''*1922* ம் வருடமே சமூக நாடகங்கள் பாய்ஸ் கம்பெனிகளில் நடத்தப்பட்டு வந்தன. ''கதரின் வெற்றி'' ''கவர்னர்ஸ்கப்'' 'பதிபக்தி' பம்பாய் மெயில்' 'மேனகா' 'சந்திரகாந்தா' 'டம்பாச்சாரி' 'இன்பசாகரன்', 'இராஜாம்பாள்', 'இராஜசேகரன்', 'விமலா', 'இழந்த காதல்', முதலிய நாடகங்கள் புகழ் பெற்றன.

அன்று இந்திய நாடு விடுதலையடைய தேசீய பற்றுக் கொண்டவர்கள், கலைஞர்கள், அரசியல் தலைவர்கள், எழுத்தாளர்கள், தொழிலாளர்கள் அதிகம் காணப்பட்டார்கள் பாஸ்கரதாஸ், கருப்பையா வாத்தியார், தேசபக்திப் பாடல்கள் மேடையில் பாடி தீவிர பிரச்சாரம் செய்தார்கள். 1947 வரை நாட்டு விடுதலைக்குப் பாடுபட்டவர்களின் பட்டியலை எழுதுவது என்றால் கணக்கில் அடங்காது.

# முடிவுரை

இந்நூல் ஓர் ஆராய்ச்சி நூலல்ல! பல்வேறு காலகட்டங்களில் வாழ்ந்து தமிழ் நாடக உலகிற்குப் பெருந் தொண்டாற்றி, மறைந்த பெருமக்களை நினைவு கூர்வதுதான் இந்நூலின் முக்கிய நோக்கம்.

அதிலும் ஏற்கெனவே அச்சில் ஏறிய பல நூல்களிலும் விரிவாக எடுத்தாளப்பட்ட நாடக ஆசிரியர்கள், நடிக, நடிகையர் ஆகியோரைப் பற்றிய விபரங்களும், வரலாறுகளும் முடிந்த அளவு இந்நூலில் தவிர்க்கப்பட்டுள்ளன. இதுவரை அதிக அளவு வெளிச்சத்திற்கு வராத கலைக்கண் மணிகளைப் பற்றித்தான் அதிக அளவு விவரங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. அதனால்தான்' நடிகர் திலகம் சிவாஜிகணேசன், எம்.கே. ராதா, நடிகவேள் எம்.ஆர். ராதா, எம்.என். நம்பியார் போன்ற இன்னும் நூற்றுக்கணக்கானவர்களைப் பற்றி இந்நூலில் எதுவும் எழுதப்படவில்லை. இதற்குக் காரணம், அவர்களுடன் ஆசிரியருக்கு தொடர்பில்லையென் பதோ, அவர்களைப் பற்றித் தெரியாது என்பதோ இல்லை; அவர்களைப் பற்றி வேறு பல நூல்கள் விரிவாக எடுத்துக் கூறுகின்றன என்பதால் தான்!

இனி, நூலை முடிக்குமுன் தமிழ் நாடக உலகம் இன்று இருக்கும் நிலையைப் பற்றி வருத்தத்துடன் சில வாக்கியங்கள் சொல்லாமல் இருக்கமுடியாது:

பெரும்பாலும், நாடகத்தை இன்று கஷ்டப்படாமல் நடத்த, நடிக்க துணிந்து விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். முன்பெல்லாம் 6-30 மணி நாடகத்திற்கு 4 மணிக்கே மேக்கப் ரூமுக்கு வந்து மேக்கப் போட்டுக் கொண்டு, ஆடை அலங்காரங்கள் செய்து கொண்டு, பின்பு தான் நடிக்கப் போகும்பாத்திரத்தை ஒரு தரம் மனப்பாடம் செய்து கொண்டு தயாராக இருக்க வேண்டும். ஆனல் இப் போதோ 6-30 மணி நாடகத்திற்கு 6-15 க்கு வந்து, தான் போட்டிருக்கும் பேண்ட் சட்டையுடன் மேக்கப் கூட போடாமல் மேடையில் நடிக்கிறார்கள். 6-15 மணிக்கு முன் திரை பக்கம் எப்போதும் சாம்பிராணி புகை போட வேண்டும் ஆனல் இப்போதெல்லாம் அது இல்லை. (ஆனல் ஆர்.எஸ். மனோகர் அதை செய்யத் தவறமாட்டார்.)

மேக்கப்பை போட்டுக் கொண்டு ஆடிட்டோரியத்தில் போய் நடிகர்கள் நாடகம் பார்த்துக் கொண்டு தன் சீன் வரும்போது மேடைக்கு வந்து நடித்துவிட்டு வந்து மீண்டும் ஆடிட்டோரியத்தில் போய் அமர்கிருர்கள்.

மேக்கப்புக்களையும், உடைகளையும் அணிந்துகொண்டு ஆடிட்டோரியத்தில் உட்கார்ந்து நாடகத்தைப் பார்ப்பது டன் இடைவேளை விட்ட சமயத்தில் காண்டீனில் மக்களுடன் இவர்களும் சேர்ந்து காபி, டிபன் சாப்பிடுகிருர்கள்.

நாடகக்கலைக்கு பல கட்டுத் திட்டங்கள் இருந்து வந்தன. அதை இன்றைய கலைஞர்கள் தூக்கி எறிந்துவிட்டார்கள். நாடகக் கலை ஒரு ஜீவியக் கலை. நாட்டு வைத்தியரைப் போல் இயங்க வேண்டும். நாடகம் நடக்கும் போது அன்னியரை கண்டிப்பாக மேடைக்கு அனுமதிக்கக் கூடாது. அரிதா ரத்தை பூசிய பிறகு வெளியே வந்து அலையாமலும் அரட்டை அடிக்காமலும் இருக்க வேண்டும். தான் நடிக்க போகும் வரை தன்னுடைய பாத்திரத்தின் தன்மையைப் பற்றித்தான் சிந்தனை செய்ய வேண்டும்.

அன்று நாடக மேடையில் சிகரெட் கையில் இருக்குமே தவிர புகைக்க மாட்டார்கள். இதற்கு பல நடிகர்களை சான்று கூறலாம்: திரு அவ்வை டி.கே. ஷண்முகம், நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை, கே.பி. கேசவன், காளி—என். ரத்தினம், எஸ்.வி. வெங்கட்ராமன், மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர்., சிவாஜி கணேசன், எஸ்.எஸ்.ஆர். டி.வி. நாரா யணசாமி, வி.கே. ராமசாமி, கே.ஏ. தங்கவேலு, போன்ற வர்கள்.

நாடக மேடையை கோயிலாக மதித்து நடந்தவர்தான் தசாவதாரம் திரு. சி. கன்னையா அவர்கள். ஒரு சமயம் 'தசாவதாரம்' நாடகத்திற்கு தலைமை தாங்கிய சென்னை கவர்னர் திரு. ஆர்தர்பால் மேடைக்கு வரும்போது அவ ருடைய பூட்சை கழட்ட சொல்லி பின்புதான் கூட்டிச் சென் ருர் திரு. கன்னையா அவர்கள். வேலை படிப்பு இல்லாத வர்களும் சரீரம், சாரீரம் உள்ளவர்களும் நாடகக் கலையை தொழிலாக எடுத்துக் கொண்டார்கள். குடிகாரன், தாஸி லோலன், கூத்தாடி இப்படிப் பல பட்டப் பெயர்களை

சூட்டினார்கள் மக்கள். அவர்களுக்கு குடிப்பதற்கு தண்ணீர் கூட கொடுக்க மாட்டார்கள். அவ்வளவு நல்ல பெயர் உண்டு நாடக கலைஞருக்கு. வீடு வாடகைக்கு கொடுக்க மாட்டார்கள், அன்றைய கலைஞருக்கு. இயல், இசை, நாடகம் என்று தமிழ் மொழியை மூன்றாக பிரித்து வளர்த்த இந்த தமிழகத்திலேதான் அந்த அவல நிலை. இந்த நிலை இருக்கும் போதுதான் திரு. சி. கன்னையா திரு. நவாப்ராஜ மாணிக்கம் பிள்ளை, ஒளவை. தி.க. ஷண்முகம், சச்சிதானந்தம் பிள்ளை, ஜகன்னாத அய்யர், வைத்தியனாத அய்யர், அல்லி பரமேஸ்வர அய்யர், வேலு நாயர் போன்றவர்கள், நாடகக் கலையில் புகுந்து புத்துயிர் ஊட்டினார்கள். படித்த கலைஞர்களும் இவர்களுடன் இணைந்து கொண்டார்கள்: திரு.சதாவதானி கிருஷ்ணசாமிப் பாவலர், கந்தசாமி முதலியார், வி.சி. கோபால ரெத்தினம், ஓ.ஆர். பாலு, சூர்ய நாராயண சாஸ்திரி, பேராசிரியர், திரு. சுந்தரனார். ஆகியோர்.

இன்றைய நாடக மேடையில் சாம்பிராணி போடுவதற்கு பதிலாக சிகரெட்டின் புகை, மேடையை சூழ்ந்துகொண்டு உள்ளது. (குறிப்பாக) நாடகம் நடைபெற்றுக் கொண்டு இருக்கும்போது பக்கவாட்டில் நின்றுகொண்டு சிகரெட்டின் புகையை மேடையை நோக்கி ஊதுவார்கள் சிலர். அந்தப் புகை மேடையில் நடித்துக் கொண்டிருக்கும் நடிகையை தழுவிச் செல்வதுடன் நடிகைக்கு ஒரு மயக்கமும், தும்மலும் வந்து ஆனந்தமான காட்சி சோகமாக மாறிவிடுகிறது. அதற்கு காரணம் நடிகர்கள்தான். மேடையில் புகை பிடிப்பதை கண்டிப்பாக அனுமதிக்கக்கூடாது. சினிமா தியேட்டருக்குப் போனால் அந்த சட்டத்தை நாம் கடைபிடிக்கிறோம். ஆனால் நாடக மேடையில்?

நாடகங்களை ஏதோ துணுக்குத் தோரணங்களாக ஆக்கி விட்டார்கள். நகைச்சுவை என்ற பெயரில் அபத்தமான 'ஜோக்குகளை'யும், ஒன்றுக்கொன்று தொடர்பேயில்லாத காட்சியமைப்புகளையும் வைத்துக் கொண்டு நிஜமாகவே ''கூத்தடித்துக்'' கொண்டு வருகிறார்கள்.

முன்பெல்லாம் நாடகங்களில் ஒரு சில பாத்திரங்களே நகைச்சுவைப் பாத்திரங்களாக இருக்கும். ஆனால் இன்றோ நாடகத்தின் எல்லாப் பாத்திரங்களுமே 'ஜோக்' அடிப்பது என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மேடையின் முன்னோரத்திற்கு வந்து வரிசையாக ரசிகர்களைப் பார்த்து நின்று கொண்டு, ஆளுக்கொரு 'மைக்'கைப் பிடித்துக் கொண்டு மாறி மாறி 'ஜோக்' அடிக்கிறார்கள். இதுதான் நகைச்சுவை, இதுதான் நாடகம் என்றும், மக்கள் இதுபோன்ற நாடகங்களைத்தான் 'ரசிக்கிறார்கள்' என்றும் வேறு சொல்லிக் கொள்ளுகிறார்கள். இவர்களுக்கு வேறு எந்தவித 'சுவையை' யும் நடித்துக் காட்டத் திறமை இருக்காது போலும். ஆழமான கருத்துக்களும். அழுத்தமான கதையமைப்பும், அதற்கேற்றாற்போல் அழகான காட்சியமைப்புகளும் கொண்ட நாடகங்களைக் காண்பதே அரிதாகி விட்டது.

தொலைக்காட்சி, வீடியோ ஆகியவற்றால் திரைப்படத் துறை பாதிக்கப்பட்டிருக்கிறதோ, இல்லையோ நாடக உலகம் நிச்சயமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு கால கட்டத்தில் நூற்றுக்கணக்கான நாடகக் குழுக்களும், அதற்கு இணையான எண்ணிக்கையில் சபாக்களும் சென்னை நகரிலும், பிற ஊர்களிலும் நடந்து வந்தன, ஆனால், இன்றோ விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிற்கே நாடகக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. சுமார் ஒரு டஜன் எண்ணிக்கையிலான 'சபாக்கள்' மட்டுமே ஏதோ பெயருக்கு நாடகங்களுக்கு வாய்ப்பு அளித்து வருகின்றன!

இவ்வளவு மோசமான நிலைக்கு நாடக உலகம் தள்ளப் பட்டு விட்டதற்கான காரணத்தை சம்பந்தப்பட்டோர் எல்லோரும் ஆராய்ந்து உடனடியாகத் தேவைப்படும் நடவடிக்கைகளை எடுக்க முன்வர வேண்டும்.

விரைவில் தமிழ் நாடக உலகிற்கு ஒரு மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும்!

## தமிழில் நாடக நூல்கள் (Bibliography)


1. ''நாடக விருந்து'' —ஆறு. அழகப்பன்
2. ''தமிழ் நாடக வரலாறு'' —கு.சா. கிருஷ்ணமூர்த்தி
3. ''தமிழ் நாடக ஆய்வு'' —இரா. குமாரவேலன்
4. ''நாடகக் கலையின் வரலாறு'' —எஸ்.வி. சகஸ்ரநாமம்
5. ''எனது நாடக வாழ்க்கை'' —தி.க. சண்முகம்
6. ''நாடகக் கலை'' —தி.க. சண்முகம்
7. ''தமிழ் நாடக வரலாறு'' —சக்தி பெருமாள்
8. ''நாடகச் சிந்தனைகள்'' —தி.க. சண்முகம்
9. ''நாடகத் தமிழ்'' —பம்மல் சம்பந்த முதலியார்
10. ''நாடகவியல்'' —பரிதிமாற்கலைஞர்
11, ''தமிழ் நாடகம்''—ஓர் ஆய்வு —ஏ.என். பெருமாள்
12. ''தமிழில் நாடகம்'' —நாரண துரைக்கண்ணன்



**''சட்டாம்பிள்ளை'' வெங்கட்ராமன்**

காரைக்குடி நடேசன் வெங்கட்ராமன் 1925ஆம் ஆண்டு பிறந்தவர். தமது பத்தாவது வயதிலிருந்தே நாடகங்களில் நடிக்கத் தொடங்கியவர்.

''தூக்கு தூக்கி'' படத்திலிருந்து ''சட்டாம் பிள்ளை வெங்கட்ராமன்'' என்று அறியப்படுபவர்.

பல்லாயிரக்கணக்கான முறை நாடகங்களிலும் தொண்ணூறு திரைப்படங்களிலும் நடித்தவர்.